வில்லிபுத்தூரர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

இவ்விருபாவலர்களின் சரித்திரச் சுருக்கம்.

சென்னை

ஸென். தோம், கலாசாலைத்தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

தில்லையம்பூர் ஸோமயாஜி

வேங்கடராம ஐயங்காரியற்றியது.

இரண்டாம் பதிப்பு.

Madras:

SRINIVASA, VARADACHARI & CO.,

MOUNT ROAD.

1906.

MADRAS:
Printed by Srinivasa, Varadachari & Co.,
No. 4, Mount Road.

PREFACE TO THE SECOND EDITION.

THE first edition of the work having run out and the same having been prescribed as a Tamil Text for the B.A. Degree Examination, 1907, I now bring out a new edition with notes on important Sanskrit words and other phrases and also an English translation of Proverbs and other important expressions occurring in the work.

T. VENCATARÂMA IYANGAR.

15*th December* 1905.

INTRODUCTION.

IT gives me great pleasure to say a few words by way of introduction to my friend Mr. T. Venkatarama Iyengar's book on the lives of two such well known Tamil poets as Villiputturer and Pillaipperumal Aiyangar. Villiputturar's Tamil version of the Mahabharathum is a standard work, and, although the author lived in comparatively recent times, his work has attained the status of a classic. The other, who is said to have lived in the days of the greatest of the Nayak rulers of Madura, namely, Tirumalai Naik, is regarded as the one poet, whose works must be read by every Tamilian, who wishes to

obtain even a tolerable acquaintance with Tamil Literature. Both are Vishnava Brahmins and have falsified the common South Indian saying that the Tamil of the Brahmin and the Sanskrit of the Vellala are worthless. With regard to diction and rhythm, both were consummate masters. My friend the Pandit has done well to write the lives of these two representative writers, possessing marked features of their own.

The biographies are not of the old antiquated type, but are written on modern lines, and this noteworthy fact will, I hope, add to the value of book, which deserves to be read by students in colleges as well as the outside public. I also sincerely wish and trust that the author will use his undoubted talents in continuing this line of work and bringing out a larger work worthy to be treated as a valuable contribution to the Tamil prose literature, that is slowly but gradually forming now.

THÓTTAKKADU HOUSE, *Madras, 18-7-04.* T. RAMAKRISHNA PILLAI.

முதற்பதிப்பு.

முகவுரை.

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்று திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளியபடியே இச் சிறு சஞ்சிகையைப்பார்க்க நேரும் விவேகிகள் இதிலடங்கிய சரித்திரத்துள் பொதிந்துள்ள ஸாரத்தையும் நற்கருத்தையும் கல்விகற்கும் நமது நாட்டு மாணாக்கர்களுக்கு அறிவுறுத்திப் பயன்பெறச் செய்வார்களெனுந் துணிவுகொண்டு நந்தமிழ் நாட்டில் தமிழ்க்கலா வல்லபத்திற் சிறந்த இரண்டுபாவலர்களின் சரித்திரத்தை இனிதிற் பொருள் விளங்கத் தமிழில் வசனநடையில் எழுதி வெளியிடலானேன். முன்னோர் மொழிந்த பொருள்களையே யன்றி அவர்கள் மொழிந்த மொழிகளையும் போற்றுதல் மரபாதலின் இடையிடையே சில பழமொழிகளும் வழங்கலாயின.

2. கல்விமலியும் இக்காலத்தில் அச்சியந்திர வழியாய் அளவற்ற சஞ்சிகைகளும் புத்தகங்களும் தமிழில் வெளியாகி நடைபெறினும் நமது தேய சரித்திரங்களும் நமது நாட்டுப் பெரியோர் சரித்திரங்களும் அதிகம் வெளிவருவனவாய்க் காணப்படவில்லை. அறிவையும் நன்னடக்கையையும் விருத்தி

செய்துதவும் மாண்பினால் நம்மவர்க்குப் பெரும்பயனளிப்பன பெரியோர் சரித்திரங்களும் நம் தேயசரித்திரங்களுமேயாம். படிப்பவரை இச்சரித்திரங்கள் எளிதில் பொருள்களை அறிவித்துக் களிப்பையும் உண்டாக்குகின்றன. கல்விகற்கும் நெறிகள் பலவுளவாயினும் அவைகளிலெல்லாம் பெரும் பயனளிப்பது இவ்வகைச் சரித்திர ஆராய்ச்சியே யாம்.

திருவள்ளுவர் குறள்

"கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."

என்கின்ற நியாயத்தின்படியே கல்வியின் கசட்டைப் போக்கித் திடப்படுத்தி அத்திடங் குறையாமல் நன்னடையில் நடைகொளச் செய்வது இவ்வகைச் சரித்திர ஆராய்ச்சியேயாம். முக்கியமாய் இவ்வழிக்கொளார் கல்வியும் போலியேயாம். நல்வழிப் போக்கிற்கு வழிகளைத் தொகுத்தும் வகுத்தும் காட்டும் விதிநூல்கள் முக்கியமே யாயினும் அவ்விதிகளின்படி வழுவாது நடந்துள்ள பேரியோர்களின் சரித்திரம் வெகு முக்கியமாம். ஏனெனில் விதிவாக்கியங்களைக் காட்டிலும் அவைகளை யனுட்டித்தவர்களின் திருட்டாந்தம் சிறந்ததாம்.

3. பெரியோர்களின் சரித்திரம் எழுதுந் தொழிலில் எளியேன் பழக்கமில்லேனாயினும் இவ்வகைச் சரித்திர நூல்கள் தமிழ்நாட்டில் நிலைபெறில் நமது வாலிபர்களின் நடைசீராகித் தெய்வபத்தியும் ஜீவகாருணியமும் ஒருவாறு இக்கலிநாளில் திடப்படுமெனும் ஆசையினாலெழுதி வெளியிடத்

துணிந்தேன். ஆம்பல் தாமரை முதலிய மலர்கள் மிகுந்த தடாகத்தில் கொட்டியும் முளைத்தல்போலச் சரித்திரமெழுதுங் காரியத்திற் றேர்ந்தவர்களின் நடுவில் எளியேனும் முன்வரலானேன். குற்றம்பார்க்கிற் சுற்ற மில்லையாதலின் விவேகிகள் "குணமதுகைவிடேல்" எனும் ஔவையின் முது மொழியைப் பரிபாலிப்பாரென்று துணிகின்றேன். லிகித வழியாயும் கர்ணபரம்பரை வழியாயும் எளியேன் ஆராய்ச்சியில் கிடைத்த வுண்மைகளைக் கொண்டே இவ்விரண்டு பாவலர்களின் சரித்திரங்களை ஒருவாறு எழுதி முற்றுவித்தேன். இவ்விருகவிகளின் சொன்னயம் பொருள் நயங்களை நிதானித்துணரச்சிற்சில பாடல் மாதிரிகளும் சரித்திர முடிவிற் சேர்க்கப்பட் டொளிர்தல் காண்க.

4. தோட்டக்காடு ஸ்ரீராமகிருஷ்ண பிள்ளையவர்கள் B. A. ஆங்கிலேய பாஷையில் எழுதி யுபகரித்த பாயிரம் இச்சஞ்சிகையின் முகப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

தமிழைப் பல்வகையாலும் போற்றிப் பரிபாலிக்க நோக்கங்கொண்ட மேலோர் கால மிடமறிந்து அளிக்கும் பாயிரத்திற்கு வந்தனந்தந்தனமென்று மட்டும் சில மறுமொழி பகர்ந்துவிடுவது நம்மவரில் இயற்கையா யிருக்கின்றது. இதனுள் தந்தன முண்டாதலன்றிப்போந்த கைமாறுமாவதில்லை. யானோ இந்நெறியிற் செல்லாது நன்னோக்கங்கொண்ட ராமகிருஷ்ணர்க்கு மேன்மேலும் சரீர திடத்தையும் இசையையும் ஆயுளையும் அடியார்க் கிரங்கும் ஸ்ரீராமகிருஷ்ணமூர்த்திகள் கொடுத்தருள்புரிய அவர்களைப் பிரார்த்திக்கின்றேன்.

அறுசீராசிரிய விருத்தம்.

மூத்தமிழாற் பத்திமிகு முத்தனையார் சரித்திரமு மூரிய தேச, பத்தநிசேர் சரித்திரமும் பலித்துலகிற் கத்தியங் கள் பலவு மோங்கிற், சித்தசித்தாற் பகுத்தறிவுக் கொத்தபடி சிரத்தைபத்தி சிறக்கு மப்போழ், துத்தமர்சேர் புத்தமுத ரூற்றதொண்டன் வேங்கடவன் வேத வாக்கே.

இங்ஙனம்,

சென்னை, 16-7-04. } தில்லையம்பூர் ஸோமயாஜி, வேங்கடராம ஐயங்கார், தமிழ்ப்பண்டிதர்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
7	29	தறுவார்	தருவார்
13	13	ரையர்	ரையா
15	12	வகக	வக்க
17	12	யாள்	யாள்)
19	5	சதத்து	சத்து
,,	17	குறிய	குரிய
24	7	தேணி	தெணி
,,	18	தக்கவி	தககவி
27	10	தக்கவி	தககவி
47	18	ஆடங்க	ஆதங்க
56	17	வழூ	வழு
65	24	த்கின்ற	த்துகின்ற
71	11	மான	மான்
,,	11	நல்தூ	நல்லூ
95	1	திப்பம்	திப்பும்

விஷய அட்டவணை.

பிள்ளைப்பெருமாள்.

பாடலகராதி.



வில்லிபுத்தூரர் சரித்திரச் சுருக்கம்.

குருவணக்கம்.

காப்பு வெண்பா.

மாமறையோன் வில்லிபுத்தூர் மாண்புலவன் றன்சரித
மாமதனைக் கத்தியமா யாக்குவிப்பன்—தூமறைக
ளாக்கி தமிழ்மாறன் அன்பரறி மாமுனிவன்
வாக்கின் மனந்தனிலே வந்து.

நிலமகட்கு நேத்திரம்போன்றொளிர்வது தமிழ்நாடு. அந்நாட்டில் சந்தனமலயமெனப் பெயர்கொண்ட மலய பருவதத்திலிருந்து இழிந்தோடும் வைகை, தாம்பிரபர்ணியெனும் நதிகள், குடகுமலை, நந்தி மலைகளிலுதித்துப்பாயும் காவேரி, பெண்ணை நதிகள் முதலிய தீர்த்தங்களும், திருமால், சிவபிரான் முதலிய மூர்த்திகளும், அவர்களுக்குரிய அரங்கம், தில்லை, மதுரை முதலிய தலங்களும் விளங்குகின்றன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தோன்றிப் பத்திமார்க்கத்தை நிலைநிறுத்திய புண்ணிய பூமியாயுள்ளதுமித்தமிழ்நாடே. சேர, சோழ, பாண்டியராம் மூன்று தமிழ் வேந்தர்களும் அரசாண்டநாடுமிந்நாடே. வடக்கிலுள்ள ஆரியாவர்த்தமாம்

புண்ணிய பூமிபோலவே தெற்கிலும் தலையெடுத் தோங்கிய புண்ணிய பூமியுமிதுவே.

பெயர்.

இந்நாட்டில் தமிழிற் புலமை வாய்ந்த புலவர் சிகாமணி யொருவர் முன்னாளிற் பேரிசைகொண்டு விளங்கினர். வில்லிபுத்தூரர் என்பது அவர் பெயர். வில்லிபுத்தூராழ்வா ரென்பதும் அவரது மற்றொருபெயர். தமிழில்நாலாயிரப் பிரபந்தம் பாடியருளிய ஆழ்வார்களுள் வழங்கப்படும் வில்லிபுத்தூராழ்வார் வேறொருமகான். இங்குக்காட்டிய வில்லி புத்தூராழ்வார் தமிழிற் பாரதம்பாடிய மற்றொருமகான். இப்பிரதியவரின் சரித்திரத்துளெல்லாம் இவரை நன்குபகுத் துணர வில்லிபுத்தூரரென்றும். கவிதாசார்வபூமனென்றுமட் டும் குறிக்கப்பட்டுள்ளது. கவிதாசார்வபூமனென்பது கவி பாடுவதிற்றலைமைபெற்று விளங்கியதால் வந்தபெயர். ஆழ் வாரெனும் பெயரைத் தமிழ்வேதம் பாடியவர்களுக்கன்றி ஏனையோர்களுக்கும் பெயருடன் சேர்த்துவழங்குவது உப சாரவழக்கு. "கோமின்துழாய்முடியாதியஞ் சோதிகுணங் களே" என்கின்றபடியே திருமாலின்குணக்கடல்களிலே அழு ந்தி நெஞ்சுருகிக் கரைந்து தம்மைமறந்து தியானகோசரமாகிய அவ் வெம்பெருமானது வடிவத்திலே ஈடுபடுபவரென்பதே ஆழ்வாரெனும் பதத்தின் பொருள். பரதாழ்வான், சத்துருக்கி னாழ்வான், பிரகலாதாழ்வான், கஜேந்திராழ்வான், சுதரிச னாழ்வான் எனவழங்கிவருதல் காண்க. கம்பநாட்டாழ்வா ரென வழங்குவ தெப்படியெனிலோ? கூறுதும். திருவரங்க நகரில் கம்பர் தாம்பாடிய இராமாயணத்தை அழகிய சிங்கர் சந்நிதியில் ஸ்ரீநாதமுனிகள் முதலிய பத்தர் சிகாமணிகளி டையில் அரங்கேற்றியபின்பு ஸ்ரீநாதமுனிகள் கட்டளைப்படி

கம்பர் பாடிய மூன்றுபாடல்கள் நாலாயிரப்பிரபந்தத்துள் சேர்க்கப்பட்டன. அப்பாடல்களாவன :—

கலித்துறை.

இடங்கொண்ட நெஞ்சத்*தடங்கிக் கிடப்பன வென்றும் பொன்னித், தடங்கொண்ட தாமரை சூழு மலர்ந்ததண் பூங் குடந்தை, விடங்கொண்ட வெண்பற் கருந்துத்திச் செங் கட் டழலுமிழ்வாய்ப், படங்கொண்ட பாம்பணைப் பள்ளி கொண்டான் திருப்பாதங்களே. (க)

இஃது திருமங்கை மன்னன்பாடிய எழுகூற்றிருக்கையின் அந்தத்தில் காணப்படுகின்றது.

வெண்பா.

ஊரா தொழியே னுலகறிய வொண்ணுதலீர்
சீரார் முலைத்தடங்கள் சேரளவும்—பாரெல்லாம்
† மண்ணோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர்
‡ மண்ணோங்க வூர்வன் மடல். (உ)

இதுவும் மங்கை மன்னன்பாடிய சிறிய திருமடலின் கடைசியில் தோன்றுகின்றது.

வெண்பா.

என்னிலைமை யெல்லா மறிவித்தா லெம்பெருமான்
றன்னருரு மாகமுந் தாரானேற்—பின்னைப்போய்
ஒண்டிரை நீர்வேலை யுலகறிய வூர்வன்னான்
வண்டறைபூம் பெண்ணை மடல். (ங)

இதுவும் மங்கை மன்னன்பாடிய பெரிய திருமடலின் முடிவில் விளங்குகின்றது.

---

* இணங்கி நல்லபாடம்.
† அன்றோங்க நல்லபாடம்.
‡ மன்றோங்க நல்லபாடம்.

புலவர் கோமானென்பது கவிதாசார்வ பௌமன் எனும் வடமொழித்தொடர் மொழியின் தமிழ்ப் பெயர்ப்பால்வந்த தமிழ்த்தொடர் மொழி. சடகோபர்பாடிய திருவாய் மொழியையும் சடகோபரையும் சிறப்பித்து அழுதொழுகும் நூறு கலித்துறை யந்தாதி யொன்றையும் கம்பர் பாடியுள்ளார். பரதன்போல் இராமனிடத்துக் கம்பருக்குத் திடபத்தியுண்டாதலின் அவரையும் ஆழ்வாரென உபசாரவழக்காற் கூறப்பட்டது.

சடகோபர் விஷயமாய்க் கண்ணிநுண் சிறுத்தாம்பெனும்பதினொரு பாடல்கள் பாடித் திருமால் தன்னையும் பாடாதொழித்துச் சடகோபரிடத்துப் பத்திகொண்ட மதுரகவியார் ஆழ்வார்களுள் வைத்தெண்ணப்படுகின்றனர். கம்பரும் புலமையும், பத்தி மேலீடும் கருதி ஆழ்வாரெனப்பட்டனர். இந்நயங்கருதாது சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் வீரசோழியப் பதிப்புரையில் பின்வருமாறு கூறியுள்ளார். "வஞ்சகச்சூதினால் வடவேங்கடத்தைக் கைப்பற்றியது போலவும், விக்கினேசுரரைத் திருமண்சாத்தித் தும்பிக்கை யாழ்வாரென்று கொண்டதுபோலவும், தமிழ் நூலுடையார் தஞ்சமயத்தாரில் யாருமில்லாத குறையை நிவிர்த்திக்க முயன்று வல்லடி வழக்காக வைணவர்கள், சாதியில் ஓச்சனுஞ் சமயாசாரத்தில் பிடாரிபூசகனுமாகிய கம்பருக்கு ஆழ்வார் நாமஞ்சாத்தியும், அடிப்பட்ட சிவாசாரிய குலத்துப் பிறந்து சாம்பரியந்தும் சிவார்ச்சனையே செய்த பரிமேலழகரை அரிமேலழகுறாஉம் அன்பமை யந்தணன் பரிமேலழகனென வாய்ப்பகட்டுப் பேசியும் யாது பயன்? ஊரை உலைமூடியால் மறைக்கவா!! வைணவருட் டமிழ்க்காப்பியஞ்செய்தார் வில்லிபுத்தூராழ்வார் ஒருவரே. இவர் அருணகிரியிற் சிவநிந்தைசெய்து கண்

ணிழந்து அச்சாபம் நீங்கும்பொருட்டுச் சிவபரமாக ஓர் நூல் செய்ய ஆஞ்ஞாபிக்கப்பட்டும், கொடியவைணவராதலிற் றன் மதாபிமானத்திற்குப் பங்கம்வராது சிவஸ்துதி றிடை இடை விரவிவரவும், வெளித்தோற்றத்திற் கண்ணன் சரிதையாகவும், பிறர் மயங்கப் பாரதத்தைச் சாபநிவிர்த்திக்காகவே செய்தன ரென்றுணர்க. இதனுண்மை அருணகிரியார் சரித்திரத்தால் நன்கு வெளிப்படும்."

இப்பிள்ளையவர்கள் தமது வாழ்நாளில் தமிழ்மொழியை அழிய விடாது காக்கத்தொல்காப்பியம் முதலிய பல பழைய நூல்களை விடாமுயற்சியுடன் பரிசோதித்து அச்சியந்திரவழி யாக வெளிப்படுத்தித் தமிழர் என்றும் கொண்டாடப் பேருப காரம் செய்தவர். இவரிடத்துச் சைவாபிமானம் மிகுந்தமை யால் தம்மை மறந்து ஆதாரமற்ற சில சங்கதிகளை நிசம் போற் கூறினர். பரிமேலழகரை இவர் சிவாசாரியகுலத்துப் பிறந் தவரென்றனர். யாழ்ப்பாணத்தில் 1902ஆ அச்சிடப் பெற் றுள்ள அபிதானகோசத்துள், பரிமேலழகர் காஞ்சீபுரத்திலே வைணவப்பிராமணகுலத்திலே அவதரித்து வடமொழி, தென் மொழியிரண்டிலும் வல்லுனராய் விளங்கினரென்று ஆதாரத் துடன் தெளிவாகவிளக்கப்பட் டிருக்கின்றது. திருநாளைப்போ வார் எனும் பிரதிநாமங்கொண்ட சண்டாளகுலத்தில் பிறந்த நந்தனைச் சிதம்பரத்திலுள்ள தில்லை யந்தணர்கள் நடராஜனின் மூலஸ்தானத்திற் கொண்டுபோய் விடுத்தமையையும், பஞ்சம குலத்தில் வளர்ந்த திருப்பாணாழ்வாரை அந்தணர்குலத்திற் பிறந்த லோகசாரங்க முனிவர் தோள்மேலேற்றிச்சென்று திரு வரங்கரின் மூலஸ்தானத்தில் விடவே தமது பாஞ்சபூதிக தேகத்தை மறைத்து அவர் அரங்கன் வடிவிற் கலந்ததையும் மறந்து கம்பருக்கு ஆழ்வார் நாமஞ்சாத்தினர் என்று வாளா கூறினர். விநாயகருக்குத் தும்பிக்கையாழ்வார் எனும் பெய

ருண்டென்பதை இப்பிள்ளையார், பிள்ளையார் நாமங்களுள் எந்த நிகண்டிற் கண்டனரோ யாம் அறியோம். பிள்ளையெனும் அடைமொழி தாமோதரத்தைச் சார்ந்திருப்பதால் அவரையும் பிள்ளையார்என வழங்குவாரெங்குளரோ யாம் அறியோம். வடவேங்கடத்திற்கு நெடியோன் குன்றமெனும் பெயர் பழைய நூலாம் சிலப்பதிகாரத்து வேனிற் காதையில் இராமானுஜரின் தோற்றத்திற்கு முன்காலத்திலேயே வழங் மறந்து இவர் வஞ்சகச்சூதினால் வடவேங்கடத் க் கைப்பற்றியது போலுமென்றனர். இது நிற்க, வில்லிபுத்தூரர் சிவநிந்தனைசெய்து கண்ணிழந்து அச்சாபம் நீங்கும் பொருட்டுப் பாரதத்தைத் தமிழில் பாடினரென்பதை இவர் எந்நூலுட்கண்டனரோ அறியோம். ஆண்டான் பிள்ளை அல்லது ஆட்கொண்டானெனு மரசன் வேண்டுகோளின்படி வில்லிபுத்தூரர் பாரதம்பாடியிருக்க, இவர் சிவநிந்தனைசெய்து கண்ணிழந்து மறுபடி முன்போற் கண்பெறத் தமிழ்ப்பாரதம் பாடியுளாரெனப் பிள்ளை கூறுவது பிள்ளைப்பேச்சா மத்தனையே. அருணகிரிநாதர் புராணத்திலும், புலவர் புராணத்திலும் இப்பிள்ளையார் கூறுவதுண்மையாயின் அவ்வுண்மை காணப்படாமை வியப்பே. கர்ண பரம்பரையாற் கேட்டு வாயில் வந்தபடி கூறுவார் விசாரணையிலும் புராணங் கூறுவாரினாராய்ச்சி திடமுள்ளதா மன்றோ.

ஊர்.

வில்லிபுத்தூரர் பிறந்தவூர் "சனியூர்." இது பெண்ணைநதிபாயும் திருமுனைப்பாடி நாட்டிலுள்ளது. சேரர்பூபதியாம் ஆட்கொண்டான் பிறந்த ஊரும் இதுவே. இப்பூபதி சோழபாண்டிய அரசர்களுடன் போர்புரிந்து வெற்றிபெற்று அவர்களுக்கு எல்லைகுறித்து நாட்டைப்பகுந்து கொடுத்துவிட்டுத் தனதெல்லையை இமயவரைக் கப்புறத்தும் பர

வச்செய்தனன். அதற்குமுன்பு சேரன் எல்லை கொங்கு நாட்டளவிலே தங்கலாயிற்று. பிறகு வடகொங்கெனும் நாட்டிற் பரவியது. திருமுனைப் பாடி நாட்டைச் சார்ந்துள்ளதே வடகொங்கு. இதிற்றான் திருக்கோவலூர் முதலிய விஷ்ணுத் தலங்களும் திருவெண்ணெய் நல்லூர் முதலிய சிவத்தலங்களும் விளங்குகின்றன இதற்கு நடுநாடெனும் மற்றொரு பெயருமுண்டு. முன்னாளில் ஆட்கொண்டானைக் கொங்கர் கோனென்று வழங்கி வந்தமையால் சனியூரைக் கொங்குநாட்டெல்லையுளடங்கிய கோயன்புத்தூர்ப் போக்கிலுள்ளதென்று பலர் மயங்க இடமுண்டாயிற்று. கொங்கு நாட்டின் எல்லைகளைச் சுட்டும் தமிழ்க்கவியொன்று கோயன்புத்தூர் ஜில்லாக் கையேடு எனும் புத்தகத்தில் (Dt. Manual of Coimbatore) காணப் படுகின்றது. அக்கவியாவது :—

வெண்பா.

வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்குக்
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று—கிழக்கு
குழித்தண் டலைசூழுங் காவிரிநன் னாடா
குழித்தண் டலையளவுங் கொங்கு.

குழித்தண்டலை யென்பது இக்காலத்துக் குழித்தலை என்று வழங்கப்படுகின்றது. இதுகிழக்கெல்லை. வடக்கெல்லை தலைமலை. தெற்கெல்லை வைகாவூர். மேற்கெல்லை வெள்ளியங்கிரி. இந்த நான்கெல்லைகளுக்குள் பெண்ணைநதி ஓடுவதாகக் காணப்படவில்லை. வடகொங்கு நாட்டைச்சார்ந்தே பெண்ணைநதி செல்லுகின்றது.

“பண்ணைசூழ்ந்திலங்குந் திருமுனைப்பாடிப் பழையநாடனைத்தையு மொருதன்—பெண்ணையே கொண்டுபோக முய்த்திடுமாறு புய லெனும் பெயருடைப் பெரியோன் ”என்று வில்லிபுத்தூரரின் குமாரர் வரந்தருவார் பாயிரத்துட் கூறியிருக்

கின்றனர். இதனால் பெண்ணை நதிபாயும்நாடு கொங்குநாட்டி லில்லை யென்பது வெளியாகின்றது. வடகொங்கெனும் நாடு எங்குளதோ வெனிற் கூறுதும். இன்றைக்கு 630வருடங்க ளுக்கு முன் காஞ்சிபுரத்திலே தூப்புல் குலத்தில் தோன்றி வடமொழி, தென்மொழியா மிரண்டு கடல்களின் கரைகண்டு விளங்கிய கவிதார்க்கிக சிங்கமாம் வேங்கட நாதாசாரியர் தாம் பாடியபரமத பங்கமெனும் தமிழ்ப்பிரபந்தத்தில் 53-வது செய்யுளில் வடகொங்கில் திரு அகிந்திரபுரத்தில் தாம் அப்பிர பந்தத்தைப் பாடியதாகக் கூறியிருக்கின்றனர். அது வருமா று :—முதலிரண்டடிக ளொழிய மற்றைய 2 அடிகள் :—"மா தவனூர் வடகொங்கில் வானியாற்றின் வண்ணிகைநன் னடங் கண்டு மகிழ்ந்து வாழும்—போதிவைநாம் பொன்னயிந்தை நகரின் முன்னாட் புணராத பரமதப்போர் பூரித்தோமே"

சமயம்.

வில்லிபுத்தூரர் சமயாசாரத்தால் வைணவர். மாதவன் சரணகமலங்களில் பத்திமிகுந்தவர். இவர் பத்திக்கு விஷய மாம் பரம்பொருள் யாதெனிலோ இவர் முதற்போர்ச் சருக் கத்தில் பாடியுள்ள காப்புச்செய்யுள் அதனை இனிது விளக் குகின்றது அச்செய்யுள் வருமாறு :—

"மேவரு ஞான நந்த வெள்ளமாய் விதித்தோ னாகி
மூவரு மாகி யந்த மூவர்க்கு முதல்வ னாகி
யாவரும் யாவு மாகி யிறைஞ்சுவா ரிறைஞ்சப் பற்பல்
தேவரு மாகி நின்ற செங்கண்மா லெங்கள் கோவே"

இதனால் இவர்க்கு வழிபடுகடவுள் திருமாலென்பது மலைமேல்வைத்த தீபம்போல் விளங்குகின்றது. இவர் பாடி யுள்ள மற்றைய 35 - காப்புச் செய்யுள்களும் இக் கொள் கையையே விளக்கு வனவாம். இவர் பிராமணஜாதியிலே

வைணவ குலத்திலே வீரராகவாசாரியருக்குத் திருக்குமாரராய்த் தோன்றியவர். "விளையும்பயிர் முளையிலே" என்கிற பழமொழிப்படி இவர் பாலியத்திலேயே நல்லாசிரியரை யடுத்துக் கல்வி பயின்று முத்தமிழிலும் வல்லவராய்த்தமக்கொப்பாரும் மிக்காரும் இல்லை யென்னலாம்படி வல்லவரானார். வடமொழியிலும் அவ்வாறே சிறப்புற்றார். நான்கு வகைக் கவிகளையும் மிகவெளிதில் அமிழ்தினு மினியவாகப் பாடும் வல்லமையால் தமிழ் நாட்டு மூவேந்தர்களா லாவலுடனழைக்கப் பெற்றுக்குடை, சாமரை, குதிரை, யானை, சிவிகை முதலிய பரிசுகளும் பெற்றுப் புலவர் சிகாமணியாய் விளங்கினர். சோழநாடு, பாண்டிநாடு, மலைநாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டைநாடு எனப் பல பிரிவுகளையுடைய தமிழ் நாடெங்கும் சஞ்சரித்துத் தமது புகழைப் புறநாட்டின் எல்லைக் கப்புறத்தும் பரவச்செய்தார். அக்காலத்தில் ஆட்கொண்டான் திருமுனைப்பாடி நாட்டில் பாகை எனும் நகரைத் தன் தலைநகராகக் கொண்டனன். நான்காஞ்சங்கமுமுண்டெனலாம்படி எப்பொழுதும் தமிழ்க் கலாவிநோதர்களாம் புலவர்களுடன்கூடித் தமிழைப் பலவகையாலும் பெருக்கியும் புதுக்கியும் அழகுபெறச் செய்தனன் வில்லிபுத்தூரார் தமிழ்நாட்டிற் கப்புறத்தேசென்றதாய்க் காணப்படவில்லை. பெரும்பான்மையாய் மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் காஞ்சி முதலிய இடங்களிலும் அக்காலத்தில் தமிழ்க்கல்வியை ஓங்கச்செய்தா ரிடங்களிலுமே சஞ்சாரம் செய்துவந்ததாய்க் காணப்படுகின்றது. "பத்தியுண்டானல் முத்தியுண்டாம்" எனும் பழமொழிப்படி திருமாலிடம் பத்திமிகுந்தவர். இவ்வில்லிபுத்தூரார் வீரவைஷ்ணவரல்லர். இது அருச்சுனன் தவநிலைச் சருக்கத்தாலும் பதின்மூன்றும்போர்ச் சருக்கத்தாலும் இனிது விளங்கும். அகத்தியபட்டரென்பவர் வடமொழியில் பாலபாரத

மென ஒரு சுருக்கப்பாரதநூல் செய்துள்ளார். அதன்போக்கைச் சார்ந்தே வில்லிபுத்தூரார் தமது பாரதத்தில் கதைகளைச் சுருக்கிக் கூறியுள்ளாரென்பது சிலர் கொள்கை. சிற்சில கருத்தமைதிக்குமட்டும் இந்நியாயம் பொருந்தும். சந்தவின்பத்தையும் சொன்னடையையும் நோக்குங்கால் வில்லிபுத்தூரார் போக்கு சுயமான போக்கென்றே கொள்ளவேண்டும்.

செய்த நூல்கள்.

வில்லிபுத்தூரார் தமிழ்ப் பாரதமொழிய வேறுநூல்கள் செய்ததாய்ப் புலப்படவில்லை. கந்தரந்தாதியின் உரை இவர் செய்ததேயாம். மூலஞ்செய்தார் காலத்திலே அவர் கருத்துக் கிணங்கப் பாடிய உடனே பொருள் கூறியவர் இவர் ஒருவரேயாம். இவர் அப்போதைக் கப்போது பாடிய தனிப் பாடல்களைத் தொகுத்து வைத்தாரில்லை. அதிக காலஞ்சென்றதாலவைகள் அழிந்தனபோலும். தமக்கு ஏராளமாகச் செல்வமும் பரிசும் கொடுத்து நெடுகிலும் ஆதரித்து வந்த வரபதி ஆட்கொண்டானெனுமரசனைத் தாம் பாடிய பெருங்காப்பியமாம் பாரதத்துள் இடையிடையே புகழ்ந்துள்ளார். இதனை நரஸ்துதி எனக்கொள்ளாது உபகாரஸ்மிருதியெனக் கொள்ளலே சிறப்புடைத்தாம். மகாகவியும் தான் பாடிய இராமாயணத்துள் தமக்குப்பேருபகாரஞ்செய்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பமுதலியாரைத் திருவபிஷேகப் படலத்தும் வெகுசிறப்போங்கப் பின்வருமாறு புகழ்ந்துளார் :—

" அரியணை யனுமன் றாங்க வங்கத னுடைவா ளேந்தப், பரதன்வெண் குடைகவிக்க விருவருங் கவரி வீச விரைசெறி குழலி யோங்க வெண்ணெயூர்ச் சடையன் றங்

கள், மரபுளோர் கொடுக்க வாங்கி வகிட்டனே புனைந்தான் மௌலி."

த் தம்மைக் கொண்டு பாரதம் பாடுவித்தோன் பாகை வேந்தனென்பதையும் அவன் முன்பு கொங்கர் கோனுயிருந்தமையையும், பாகை பெண்ணை நதிபாயுமிடத்துத் திருக்கோவலூர்க் கருகிலுள்ளதையும் வில்லிபுத்தூரார் முன்னுகப் பின்னுக ஆட்கொண்டானைத் துதித்துள்ள விடங்களில் விளக்கி யுள்ளார். தருமபுத்திரரது சேனையிலுள்ள வீரர்கள் ஜயம் பெற்றுக் களிப்புடன் படைவீடுகளுக்குத் திரும்பி வருதலை ஆட் கொண்டானிடம் வெகுமதி பெற்றோர் தமதில்லிடம் திரும்பி வருதலுக்கு உவமையாக்கிக் கூறினர். அக்கவி வருமாறு :—

" நாகையாப் புகழான் பெண்ணை நதிவளஞ் சுரக்கு நாடன், வாகையாற் பொலிதிண் டோளான் மாகதக் கொங்கர் கோமான், பாகையாட் கொண்டான் செய்கை பரிசுபெற் றவர்நெஞ் சென்ன, ஓகையாச் செருக்கி மீண்டா ருதிட்டிரன் சேனை யுள்ளார் "

அருச்சுனன் துரியோதனன் கிரீடத்தை ஒருபாணத் தாற் கீழேதள்ளி, வடபுலத்திலுள்ள கோக்களைக்கவரச் சென்றுழி, அவமானப்படுத்தியதை ஆட்கொண்டானை மேற்கொண்டு போர்க்களம் செல்கின்ற குதிரைகளின் கால்களால் வடக்குத் திக்கிலுள்ள அரசர்களை அவன் பங்கம் செய்ததற்கு உவமை கூறியுள்ளார். அக்கவி வருமாறு :—

" கொடிமதிற் பாகை வேந்தன் கொங்கர் கோன் புரவிக் காலால், வடதிசை யரசர் தங்கள் மாமணி மகுடம்போல, அடலுடை விசய னெற்றை யம்பினுல்மீண்டுஞ்

சென்று, படவர வுயர்த்த கோவைப் பண்ணினுன் மகுட பங்கம்."

போர்க்கள நாடிச்செல்லுங் கர்ணன், நண்பர், பகைஞரெனும் பேதமின்றி யார்க்குந் தானங்கொடுத்து மீளுதற்கு ஆட்கொண்டான் ஈகையை ஒப்புக்கூறி யுள்ளார். அக்கவி வருமாறு :—

" சேரவல்சூழ் பெண்ணை நாடன் கொங்கர்கோன் பாகை வேந்தன், பாவலர் மானங் காத்தான் பங்கயச் செங்கை யென்ன, மேவல ரெமரென் ருமல் வெங்களந் தன்னில் நின்ற, காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனக மாரி."

தமக்குப் பேருபகாரம் செய்தாரை உலகோர் வாயாரப் புகழ்வதை யாருமறிவர். வாயாற் பற்பலர் தினமும்புகழ்வது வரிவடிவேலாததாலன்றோ நேரிற்கேட்டார்க்கன்றி மற்றையோர்க்குப் புலப்படாது ஓடி ஒளித்து விடுகின்றது. வரிவடிவாற் புலவர்கள் தாம் செய்நூல்களிற் கூறப்பட்டுள்ளது அந்நூல் வழங்கும் நாட்டிடத்தும் புறநாட்டிடத்தும் பரவிப் பலர்க்கும் புலப்படுவதால் அப்பற்பலரிற் சிலர் உபகாரஸ்மிருதியென்பதைமறந்து நரத்துதி கூறியுள்ளானென்று குற்றம் கூறுவர். இவ்வாறு கூற்றங் கூறுவாரிடத்துப் பேருபகாரம் பெற்றாரிடத்துள்ள வுணர்ச்சியின்மையாலும் குற்றங் கூறுவோர் முதலில் வறுமைமுதலிய விடர்ப்பாடுற்றுப் பிறகு நற்பதமும் கல்வியும் பெற்றிலராதலாலும் இவ்வகைத் தோஷாரோபணம் நடைபெறுகின்றது.

வில்லிபுத்தூரர்க்குப்பெயர் வாய்ந்தவழி யாதோவெனில் : வைணவப் பிராமணர்களுள் ஓர் புராதன வழக்கமுண்டு : அதாவது, விஷ்ணுவின் பல நாமங்களில் ஒரு நாமத்தைத் தமக்குப் பெயராகக்கொள்வது. சில தலங்களில் கோவில் கொண்ட

மூர்த்திகளின் பெயரை ஆண்பிள்ளைகளுக்கும்,அத்தலங்களின் பெயுரைப் பெண்பிள்ளைகளுக்கும், நாமங்களாகக் கொள்ளும் விசேஷ வழக்கமுண்டு. அத்தலங்களில் வரம்பெறுங்காரணத் தால் இவ்விசேஷ வழக்கம் நடைபெறுகின்றது. காரியெனும் சிற்றரசன் திருக்குறுங் குடியில் வரங்கிடந்து நம்மாழ்வாரைப் பெற்றதால் நம்மாழ்வார்க்கு அத்தலத்தின் மூர்த்தியாம் நம்பி யெனும் நாமமும் உண்டு. அந்நம்பி குருகூரில் வந்து பிறந்த தால் குருகூர் நம்பியென்று பெயருதித்தது. "கண்ணிநுண் சிறுத்தாம்பெனும்" மதுரகவியார் பாடிய பிரபந்தத்தில் இப்பெ யர் காணப்படுகின்றது. ஆழ்வார்கள் பெயரை வைணவர்கள் தம் பெயராக வழங்குதலுமுண்டு. ஆழ்வாரையங்கார், ஆழ் வார்செட்டி, ஆழ்வாரையர் என்று வழங்கப் படுதலுங்காண்க. நம்பியென்பது ஆடவர்களிற் சிலர்க்கும், குறுங்குடியென்பது மகளிரில் சிலர்க்கும் இன்றும் குறுங்குடியில் பெயர் வழங்க லுண்டு. இப்பெயர்கள் காரணம்பற்றிவரும் பெயராம். பெரி யாழ்வாரென்றும் முப்பெயர்கொண்ட வில்லிபுத்தூராழ்வா ரின் வரப்பிரசாதத்தால் தோன்றியகாரணத்தால் வில்லிபுத் தூரார் என்பது தகப்பன் வைத்த பெயராம். பெற்றோர் பல நாள் அவ்விடம் சென்று வசித்ததினாலும், தலவாசம் செய்ததி னாலும், அல்லது தம்பந்துக்கள் அங்கிருந்தமை கருதியவ்வி டம் வதியுநேர்ந்ததாலும் வில்லிபுத்தூரார் எனும் பெயர்வாய்ந் தமைக்கு நியாயம் உண்டாகும்.

வெண்பா.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

என்கிறபடியே மதுரையில் ஸ்ரீ-வல்லபதேவனெனும் பாண்டியன் கொண்டாடும்படி, பரம் பொருள் இன்ன தென்பதைத் தாபித்து, அதற்கென்று அவன் கட்டித்தூக்கிய பொன் முடிப்பை யறுத்துக் கைப்பற்றியவர் பட்டர் பிரானென்பது பெறப்பட்டது. இவர் ஆணையின்பேரில் மதுரையை வலம் வருகையில் பாடியதிருப்பல்லாண்டின் தலைக்கட்டுப் பாட்டில், "வில்லிபுத்தூர் விஷ்ணுசித்தன் விரும்பியசொல்" என்று காட்டி யிருப்பதால் வில்லிபுத்தூராழ்வார் எனும் பெயரும் விஷ்ணுசித்தன் எனும் பெயரும் பெறப்பட்டன. வில்லிபுத்தூராழ்வார் வரப் பிரசாதத்தால் தோன்றிய காரணத்தால் விஷ்ணுசித்தன் எனும் வடமொழிப்பெயரைப் பிதா நாமகரணம் செய்திருக்கின்றனர். ஏனெனில் வில்லிபுத்தூராழ்வார் தோன்றிய வெகுகாலத்திற்குப் பிறகே வில்லிபுத்தூரார் பிறந்துள்ளார். சர்மா விஷ்ணுசித்தர் என்பது. அழைக்கும் பெயர் வில்லிபுத்தூரார் என்பது. வில்லிபுத்தூரார் என்பது ஒருவரையே மரியாதையாய்ச் சுட்டும் தமிழ்ப்பெயர். வில்லிபுத்தூராரின் தம்பியின் பெயர் யாதோ விளங்கவில்லை. தகப்பன் பெயரோ வீரராகவன். "வீரராகவனருள்" வில்லிபுத்தூரன் என்றிருப்பதால் வீரராகவன் என்பது ஆசாரியன் பெயராகாதோவெனில், பிரமோபதேசம் செய்யும் முதலாசாரியர் பிதாவாதலின் அவரே குருவாகத் தடையில்லை. வேங்கடேசன் என்பது சர்மாவாகத் திருமலை என்பது அழைக்கும் பெயராகலாம். இது தமிழ்நாட்டு வழக்கு.

இது காறும் வில்லிபுத்தூராரின் ஊர், பெயர், சமயம் முதலியவைகளைப் பற்றிக் கூறப்பட்டன. இனி அவர், பாரதம் பாட நேர்ந்த காரணங் கூறப்படும்.

2-வது பாகம்.

வில்லிபுத்தூரர் பாரதம் பாடியது.

வட கொங்கைச் சார்ந்த திருமுனைப்பாடி நாட்டின் அரசனாகிய ஆட்கொண்டான் மூன்று தமிழ்ச் சங்கங்களிலு மோங்கிய தண்டமிழ் நூலாராய்ச்சியுள்ளவனாய்த் தமிழ்க்கலா விநோதனெனப் பலரும் புகழும்படி விளங்கினன். நான்காஞ் சங்கமும் இவன் நாளில் விளங்கிய தென்னலாம்படி தமிழா ராய்ச்சி தலையெடுத்தோங்கியது. இவன் நாட்டின்வரை, நந்தி மால்வரை. அதிலிருந்து பெருகியோடும் நதி பெண்ணை. அக் காலத்தில் இம்மன்னனுக்கு இந்நாட்டில் தலை நகராய் விளங்கி யது "வக்கபாகை." இவ்வரசனுக்கு ஆண்டான்பிள்ளையெ னப் பிறிதொரு பெயரும் நடை பெறுகின்றது. இவன் பிறந் தவூர் சனியூர். இதுவே வில்லிபுத்தூரருக்கும் பிறப்பிடம். இவ்வரசன் தமிழ்க் கலாவிநோதனாதலின், பரத வம்சத் தர சர்களின் சரித்திரமாம் பாரதமெனும் வடமொழி இதிகா சத்தை அமுதொழுகும் இனிய தமிழ்ப் பாவாகப் பாடுவிக்க வேண்டு மெனும் அவாவுடன் பல புலவர்களையும் கலாவிநோ தர்களையும் பன்முறையும் மன்றாடிக் கேட்டுக்கொண்டனன். இனியகவி பாடும் புலவர்கள் யாரினும் தலைமை பெற்ற பாவ லவர் சனியூர் வில்லிபுத்தூரரென்று அவர்கள் கட்டுரைகூறி னர். அட்டாக்கரமோதித்திருமாலைவழிபடும் பத்தர் சிகாமணி யென்றும், பிறப்பொழுக்கமும் அந்தண்மையும் குடி கொண் டதுபோல அவரிடத்துக் கல்வியுஞ் செல்வமுங் குடிகொண் டன வென்றும், இலக்கண இலக்கியப்பாராவாரங்களைக் குடித் துச் சொரியுங் காளமேகம்போன்ற புலவரென்றும் அவர்கள் புகழ்ந்தனர். வில்லிபுத்தூரரின் குமாரர் வரந்தருவார் கூறிய

பாயிரத்துள்ள 2-செய்யுள்களும் அவரது கல்வித்திறத்தை இனிது விளக்குகின்றன. அவை வருமாறு :

ஐந்து பாவுடை நாலவகைக் கவிககந் பதியாய
வந்து வட்டமா மணியினன் மணிமுடி புனைந்து
பைந்து மாய்முடிப் பரமனை பலகவித் துறையுஞ்
சிந்தை யான் மொழிந் தன்பர்தந் திருவுளம் பெற்றோன்.
தென்னர் சோளர் செம்பிய ரெனப்பெயர் சிறந்த
மன்னர் மூவரும் வழங்கிய வரிசையா லுயர்ந்தோன்
முன்ன ரெண்ணிய முத்தமிழ்ப் பாவல ரெவரும்
பின்னர் வந்தொரு வடிவுகொண் டனரெனப் பிறந்தோன்.

இத்தகைச் சிறப்புவாய்ந்த அந்தணர்பிரான் நம்மை யொரு பொருட்டாக வெண்ணி நமது கோரிக்கையை முற்றுவிப்பது எங்ஙனம். அது எளிதில் முடிவுபெறுவ தொன்றல்ல வென்று ஆட்கொண்டான் ஆலோசித்து ஒருதந்திரம் செய்தனன். இஃதிவ்வாறாக, வில்லிபுத்தூரரும் அவர் தம்பியும் ஒரே குடும்பவாழ்க்கையராய்ச் சகோதர வாஞ்சை அடக்கம் ஒடுக்கம் முதலிய நற்குணமுடையவராய்க் கல்வி செல்வங்களிலும் சிறந்தவர்களாய் வாழுநாளில் கல்விநயம் பாராட்டிக் களிக்கச் சின்னாள் பாண்டியனிடம் சென்று வதிந்தனர். இதுதான் நல்ல சமயமெனக்கொண்டு வில்லிபுத்தூரர் குலத்தாளாம் ஓர் கிழவியாகிய கைம்பெண்ணை வருவித்து, ஆட்கொண்டான் அவளை நோக்கி, நீ வில்லிபுத்தூரர் மனையிடம் சென்று, அவர் மனைவி அவர் தம்பி மனைவிமாருடன் உறவு பாராட்டி அவர்களை உன் வசம் செய்துகொண்டு அவர்களுக்குள் மித்திரபேதஞ்செய்து, அவர்கள் புருடன்மார் வந்தவுடன் அவர்களுக்குள் பாக வழக்கொன்று வரும்படி செய்வித்து உபகாரம் செய்யவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்

கொண்டு பலவகை யுபசாரணையுஞ்செய்து கைநிறையக் காஞ் சனமுங் கொடுத்து வில்லிபுத்தூரார் மனைக்கேகெனக் கட்டளை யிட்டனுப்பினன். அக்கிழவியும், அவ்வாறே புரிவிப்பேன் என உறுதிமொழி பகர்ந்து போயினள். அரசனும் வழக்குவ ரின் நமது கோரிக்கை நிறைவேறுமெனக் களிப்புற் றிருந் தனன்.

கபடமும் வஞ்சனையும் குடி கொண்ட

தான் அரசனுக்குக் கொடுத்த உறுதிமொழியை நினைந்து கொண்டு, சனியூரில் வில்லிபுத்தூரார் மனைக்கேகி, அவர் தம்பி மனையாளுடனும் அவள் ஓரகத்தி (வழக்கத்தில் ஓரிற்புடை யாள் யுடனும் முதலில் நயவஞ்சகம் பேசி அவர்களைக் கை வசம் செய்துக்கொண்டு, பிறகு தம்பிமனையாளை நோக்கி, நீயும் புருஷனும் சுதந்திரமில்லாமல் வில்லிபுத்தூராருக்கும் அவர் மனையாளுக்கும் வேலை யாட்களைப்போல் வாழுதல் அழகோ. பேருங் கீர்த்தியும் சுருவை சுதந்திரமும் அவர்களுக் காக்கி நீங் கள் குடத்தில் வைத்த விளக்குப்போல் பிரகாசமின்றி இருப் பது அழகோ. நீங்களும் பாரி பாகஸ்தர்களன்றோ. உங்கள் வாழ்வும் சுதந்திரமும் பிரிந்திருந்தாலன்றோ உங்களை ஊரார் சம்பத்துள்ளவர்கள் சுகபோகிகள் என்று கொண்டாடுவார் கள். என்றிவ்வாறு பலமுறை எடுத்துக் கூறி, அவளுக்கும் ஓரகத்திக்கும் சண்டை யுண்டாக்கி விட்டுத் தான் ஒன்றும் அறியாள்போல் அவர்களுக்கு ஆறுதல்கூறி வந்தனள். இவ ளோ, "மனதிலே பகை உதட்டிலே உறவு" என்கிற பழமொ ழிப்படி புருஷர்கள் வந்த மேல் நடப்பதைப்பற்றிப் பெண் டுகள் தினச்சண்டை போடுவது கூடாதென்றும் கூறினள். சிலநாட்சென்ற மேல் புருஷர்கள் மனைக்குத் திரும்பிவரவே கிழவி முன்னிலும் பதின்மடங் கதிகமாகத் தம்பி மனைவி

யைத் தூண்டிவிட்டுப் பாகம்பிரிய வழக்கு அரண்மனை ஏறும் படி தந்திரஞ்செய்துவிட்டு விலகிப்போனாள்.

சகோதர ரிருவரும் தம்மனைவியர் போராட்டங்கண்டு பொறாராகி "வல்லடி வழக்கைச் சொல்லடிமாமி" என்கிற படியே குடும்பத்திற் பாகம் பிரிந்தாலன்றிக் கலகம் நீங் காதென் றெண்ணி வழக்குத்தொடர மன்னனிடம் போந்தார் கள். மன்னனும் கிழவியின் தந்திரம் பலித்ததென்று களிப் புற்று, அதுவே நல்லநாளென் றெண்ணி சகோதரராம் நீவிரிரு வரும் இனிய தமிழ்பாடும் புலவர்களாதலின் பாரதத்தில் நான் பகுந்தளிக்கும் பாகங்களைச் செந்தமிழ்ப்பாவாக்கித் தரு வீரேல் அதின் பிறகு உங்கள் பாக வழக்கை நான் தீர்த்து வைப்பேனென்று அரசன் கூறி அவ்விருவர்களையுந் தன் பக் கல் சின்னாள் வதியும்படி நிறுத்திக்கொண்டனன். இதுவும் நாராயணன் பணியேயென வெண்ணி அவ்விருவரும் அரசன் கோரிக்கைக்கு உடன்பட்டனர்.

முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கு
மென்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்.

ரரர் கூறியது. இவர் பாரதம் பெரும் பரப்புள்ள நூலென்பதையும் அது தேவராலும் முனிவராலும் தேவபாஷையின் வாயிலாகப்போற்றப் படுவதையும் இவ்வா றாக வதற்குள்ள பெருமையையும் நாடிக்கலங்காது மாதவனும் திருமாலின் சரிதம் இடையிடை அதிற்கலந்துளா தென்னுமா சையாற் தமிழிற்பாடத் தாம் உடன்பட்டதாய்க் கூறுகின்ற னர். இவர் திருமாலிடம் பத்தி மிகுத்தவராதலின் இவ்வாறு

கூறினர். பரதனது வமிசத்தவரைப் பற்றியநூல் பாரதம். பரதனென்பவன் சந்திரவமிசத்துத் துஷியந்த மகாராசனுக்குச் சகுந்தலையினிடந் தோன்றிப் பிரசித்திபெற்ற ஓரரசன். அவன் வமிசதத்துதித்தவர் பாரதர். அவராவர் பாண்டவரைவரும் திருதராஷ்டிரன் புத்திரர் துரியோதனன் முதலிய நூற்றுவருமாம். இவர்கள் சரிதம் பாரதமாயினும் பாரத யுத்தத்தில் மாதவனும் கண்ணன் சரிதமும் இடையிடையே நிகழ்வதாதலின் அச்சரித சம்பந்தமுடைமையையே தமக்குப் பற்றுக்கோடாகக் கொண்டு பாரதர் சரித்திரத்தை வில்லிபுத்தூரர் தமிழ்ப்பாவாகச் சுருக்கிக் கூறினர். மாதவனென்பது இங்கு வடசொல். இதற்கு ஸ்ரீ சங்கராசாரியர் கமலை காந்தனென்று பொருள் செய்தனர். யதுவின் மூத்தகுமாரன் மது. அவனுடைய வம்சத்திற் பிறந்தவராதலின் திருமாற்கு மாதவனென மற்றோர் காரணங்கருதியும் அப்பெயரே யாமென்மை யறிக. திவாகரத்திலும் சூடாமணி நிகண்டிலும் பிங்கலந்தை நிகண்டிலும் மாதவன் எனும் பெயர் திருமாற்குறிய பெயர்களுக்குள் காணப்படுகின்றதே யன்றிச் சிவபிரான் பெயர்களுள் காணப்படவில்லை. இங்குள்ள மாதவனெனும் மொழியைச் சிவனைச்சுட்டும் மொழியெனக்கொண்டு சிவ ன்சரிதை இடையிடைபாரதத்துள் வருதலுண்மையின் வில்லிபுத்தூரர் பாரதம் பாட வுடன்பட்டாரென்பர் சிலர். திருமாலிடத்தில் நாம் காட்டியபடியே திடபத்தியுள்ளவர் இவ்வாறு கூறுதல் தகுதியோ வென்பதை அச்சிலர் கருதாது விடுத்தமை சமயவாசனையை இடமறியாது நிலைநிறுத்த முயன்றதாமத்தனையே. இதுமட்டோ திருமால் துவாபரயுகத்தின் கடைசியில் துட்டராகியக்ஷத்திரியர்களைக் கொன்று சிட்டராயினரைப் பரிபாலிக்கத் திருவவதாரம் செய்தமையைத் தாமுரைத்த பகவற்கீதையிற் றாமே விளக்கி யிருக்கின்றனர். தாம் திருவவதாரம் செ

ய்து பாரதயுத்தத்தை நிறைவேற்றிப் பல நற்போதனைக்குரிய நூல்களை நிலை நிறுத்தித் தம்மடிச்சோதிக்கேகினர். சங்காரமூர்த்தியின் சரிதமும் இடையிடையே நுழைந்துளதேனும் உலக சம்ரக்ஷணையையே தந்தொழிலாகக்கொண்ட திதிகர்த்தாவின் காரியம்போற் சங்காரகர்த்தாவின் காரியம் உலககாரியங்களில் தலைமைபெருது. அந்தணர் மனையிடந்தினந்தோறும் புரியும் கன்மகாரியங்களி லெல்லாம் இராமனையும், கிருஷ்ணனையும், விஷ்ணுவையும் தாம் செய்யுஞ் சங்கற்பத்தில் முதலிற் கூறி வணங்கிவிட்டே தேவகாரியம், பூதகாரியம், பிதிரர் காரியங்களைப் புரிவதே இங்குக் கூறிய தலைமைக்குச் சான்ருகும் விரிக்கிற் பெருகும்.

மாதவனெனு மொழி சிவனை யுணர்த்தும் மொழியாகாதோ வெனிற் கூறுதும். இதனைத் தமிழ் மொழியாக்கினலன்றிச் சிவபிரானை யுணர்த்தும் மொழியாகாது. மாது + அவன் இவ்விருமொழியுஞ்சேர்ந்து மாதையுடையவன் எனப்பொருள் தரும். அது அர்த்த நாரீசுவரன் எனும் வடமொழி அபிதானத்தின் பொருளைச் சுட்டியதாகின்றது. மா + தவன் இவ்விருமொழியுஞ்சேர்ந்து வடமொழித் தற்பவமாய் அரிய தவத்தையுடயவன் எனப்பொருள் தந்து பார்த்தனையும், சிவபிரானையும் உணர்த்தும் மொழியுமாம். இங்கெடுத்துக்கொண்ட கவியில் மாதவனெனுமொழி திருமாலை யுணர்த்தும் மொழியே யாம்.

இதல்லாமலும் அருச்சுனன் தவநிலைச் சருக்கம் 110-ம் செய்யுளில் அருச்சுனனும் சிவபிரானும் விற்சண்டையின் பிறகு மற்போர் புரிந்ததைக் கூறுமிடத்து அவ்விருவரையும்

மாதவனெனும் பெயரால் வில்லிபுத்தூரர் கூறியுள்ளார். அது வருமாறு :—

"வள்ளலெனையாளுடைய மாதவனு மாதவனு மல்லமர் தொடங்கி யுறவே."

இங்கு முதல் மாதவன் அருச்சுனனையும் 2-வது மாதவன் சங்கரனையும் சுட்டிநிற்கின்றது. சிலர் முதல் மாதவன் சங்கரனையும் மற்றையது அருச்சுனனையும் சுட்டுவதாய்க் கொண்டு வில்லிபுத்தூரர் சிவபிரானை வள்ளலெனையாளுடைய மாதவனென்று உயர்த்திக் கூறியுள்ளாரென்பர். இவ்வுரை போலியுரையேயாம். திருமால் சரணங்களில் முன்பு காட்டியபடி இவர் திடபத்தியுள்ளாராதலாலும் தாம்பாடியுள்ள துதிகவிகளிலெல்லாம் திருமாலையே காரணமூர்த்தியாகக்கூறியிருப்பதாலும் இவர், தன்னை ஆளுடையவன் எனக்கூறுதல் பொருத்த முள்ளதாகாது. மற்றுப் பொருத்தமுள்ள பொருள் யாதோவெனிற் கூறுதும். என் ஐயனாகிய வள்ளலை ஆளாகவுடைய மகாதவமுடைய அருச்சுனன் என்பதேயாம். கண்ணனை அருச்சுனன் தேர்ப்பாகனாகக்கொண்டமை கருதியே இவ்வாறு வில்லிபுத்தூரர் கூறினர். இதனால் முந்திய மொழியாகிய மாதவன் அருச்சுனனைச் சுட்டுவதாம். பிந்தியதோ சிவபிரானைச் சுட்டுவதாம். பழைய ஏட்டுப்பிரதியில் மூலபாடம் "வள்ளலினை யாளுடைய மாதவனென்றே" எழுதப் பட்டிருக்கின்றது. ஆறுமுகநாவலர் பதிப்பித்த வில்லிபுத்தூரர் பாரதத்தில் பிழைதிருத்தம்போடாமையால் "லி" எனற்பாலது "லெ" என நின்று பிழைபட்டுள்ளது. இது சமயப்பற்றினால் நுழைந்துள்ள எழுத்துப்பிழையென்பதை விவேகிகள் மூலபாடத்தைப் படித்துப்பார்க்கின் நன்குணரலாம். பழைய

ஏட்டுப் பிரதிக்குமாறாக வேறுபிழைகளும் வேறிடங்களில் காணப்படுகின்றன.

இவ்வாறு வில்லிபுத்தூராரும் அவர் சகோதரரும் அரசனிடம் சிலகாலம் வாசம் செய்தபோது பாலுமமுதும் பழச்சாறும் கைக்குமெனலாம்படி செம்பாகமமைந்த கவிமாரியாகிய தமிழ்ப்பாடல்களை வண்ணச் சந்தத்தோடும் மிகு நயங் காட்டி 6,000 பாடல்களாகப் பாடிமுடித்தனர். ஆறாயிரம் பாடல்கள் பாடினரென்பதற்குக் கர்ண பரம்பரையாய் நடைபெறும்பாடலுமொன்றுண்டு. அது வருமாறு :—

அறுசீராசிரிய விருத்தம்.

கலியுக வியாதன் சொல்லக் கணபதி யெழுது பாடல்
பொலிவுறு தமிழி னாறா யிரமென விருத்தம் போற்றிச்
சலிவற வில்லி புத்தூ ரிறைவனும் சார்வ பௌமன்
ஒலிகெழு மறையோர் கோமா னுயர்ந்தவ ருவப்பச் சொன்னான்.

இப்பாடல், பாரதம் ஆதிபருவத்தாதி யெனும் பாடல்களுக்குமுன் ஏட்டுப்பிரதியிற் கண்டெடுத்தது. இதனால் வில்லிபுத்தூரரொருவரே 6,000 பாடல்களையும் பாடியுளாரென்பது வெளியாகின்றது. ஆறுமுகநாவலர் பதிப்பித்த தமிழ்ப் பாரதத்துள் 4,351 செய்யுள்கள்மட்டும் காணப்படுகின்றன. எஞ்சிய 1,649 செய்யுள்கள் அச்சியந்திர வாயிலாக இன்னும் வெளிப்படவில்லை. ஏட்டுப் பிரதியேனும் எங்குளதோ புலப்படவில்லை. சிலர், வில்லிபுத்தூரார் குமாரர் வரந்தருவார் மகாபாரதத்தின் பிற்பகுதியை தமிழ்க் கவிகளாகப் பாடியுள்ளாரென்றும், அது வரந்தருவார் பாரதமென்று வழங்கப்படுகின்றதென்றும், அச்சிற் பதிப்படையாம லிருக்கிறதென்றும்

கூறுகின்றனர். பாரதம் ஆதிபருவத்தில் சந்தனு மகாராஜன் சரித்திரமுதல் சௌப்திக பருவத்தில் பதினெட்டாம்நாள் இரவில் நடந்த பாசறையுத்தம் வரையில் செந்தமிழ் விருத்தப்பாவாகப் பாடப்பெற்று அச்சிற் பதிப்படைந்துள்ளதுதான் வில்லி பாரதமென்று தமிழ்நாடெங்கும் விளங்குகின்றது பிற்பகுதியை அவர் பாடாமைக்குத் தக்க காரணம் புலப்படவில்லை. அவருடன் அவர் தம்பியையும் பாடும்படி அரசன் நியோகித்ததாக முருகதாசர் புலவர் புராணத்துக் கூறியிருப்பதாலும், இருவரும் சேர்ந்தே 6,000 பாடல்கள் பாடியுளாரெனவும் அவர் கூறியிருப்பதாலும் வில்லிபுத்தூரார் பிற்பாதியைப் பாடாது விடுத்தெனரென்பது தெளிவாகின்றது.

காவியம்பாடும் புலவர்கள் பலராணுலும் கவிசக்கிரவர்த்தி ஒருவர் நீங்கலாக மற்றையோருள் வில்லிபுத்தூரரோடு ஒப்புரைக்கத்தக்கார் யாருமில்லை. நூல்களிலெல்லாம் உத்தரவேதமாம் குறள் சிறந்தது போலும், பல தேவர்களிற் றிருமால் சிறந்தமைபோலும், பிற்காலத்தைய புலவர்களுள் சிரோமணிபோன்றவர் வில்லிபுத்தூரர் ஒருவரேயாம். தேவசேனுபதியாம் கந்தனும் யானே என்று கண்ணன் கீதையுட்கூறிய துணர்க. இவர் பாட்டின் நயமும், சொல்லின்பமும், இசைக்கட்டும் வேறொருவரிடத்திலும் கிடைப்பனவல்ல. ஔவை அம்மையும் "திருமாலுக் கடிமை செய்" "தெய்வமிகழேல்" என்று கூறியிருத்தல் காண்க. கவிதா சார்வபௌமன் எனப்பெயர் நிலைத்தமையால் வில்லிபுத்தூரர் புலவர் திலகராதல் கூறுதேயமையும். இவர் காலத்திற்குப் பிறகு, திவ்ய கவியெனப் பெயர்கொண்ட தென்கலை வைணவரும் ஒருவருளர்; அழகிய மணவாளதாசர் எனும் பெயரும் அவரைச் சுட்டுவதாம். அவர் சரித்திரத்துள் அவரைப்பற்றி விரிவாய் விளக்கப்படும்.

பிறகு அரசனும் ஆண்டான்பிள்ளை பாரதம் பாடிய சகோதர ரிருவரையும் நோக்கி: நான்பாரதம் தமிழ்ப்பா வாக நேரும்பொருட்டு உங்கள் குலத்திற்றோன்றிய கிழவி யொருத்தியை உசாவித் தீமை புரிவித்தேன். என் கோரிக்கை யின்படி நீவிரிருவரும் பாரதம்பாடிப் பேருதவி புரிந்தீராத லின் உமது வேண்டுகோள் யாதேனினும் அதை நிறைவேற்று வே னென்று கூறினன். வில்லிபுத்தூரார் இதனைக் கேட்டு, இனித் தமக்கென்றும் தம்பிக்கென்றும் பொருள்கள் யாவும் சொந்தமுள்ளன வல்லவென்றும், தாம் இனித் தமிழ்ச் சந்தக் கவிபாடி நாடெங்கும் தமிழ்ப்புலமை நாட்டிடுவே மென்றும், தம்மெதிரிற் சந்தம்பாடச் சம்மதித்துத் தவறுவோர் செவிக ளைக் கொய்தெறிய ஓர் வாளாயுதம் உதவும்படி வேண்டிக் கொண்டனர். அரசனும் மிகக்களிப்புடன் தமிழ்ப் புலமை க்கு ஓர் பிருது (அரிகுறி) எனும்படி வாளாயுதமுதவினான். வில்லிபுத்தூராரும் பலர் காதுகளைக்கொய்து வெற்றிகொண்டு விளங்கினர். புலவர்களில் பிற்காலத்தைய இழிநிலையைச் சுட்டி அந்தக்கவி வீரராகவ முதலியார் பின் வருமாறு தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

எண்சீராசிரிய விருத்தம்.

குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டிய னிங்கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றா முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
பாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தேகோ வறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே.

இதனால் தமிழ்ப் புலமை பிற்காலத்தில் கேவலமான நிலையை அடைந்தமை இனிது விளக்கப்பட்டது. பிறகு வில்லி புத்தூராரும் அவர் சகோதாரரும் தம் மூர்க்கேகினர். இவர் குடும்பத்தில் முன்பு மித்திரபேதஞ்செய்த விதவையாகிய பாட்டியும் உடனேகி அக்குடும்பத்தில் முன்போல் நட்புண்டாக்கி அக்குடும்பத்தை முந்தியநிலையில் நிறுத்தினள். இவள் செய்த மாயம் நாடெங்கும் பரவியமேல் "மோட்டச்சி யொருத்தியாலே பாரதம் முடிந்தது" என்று பழமொழி நாடெங்கும் பரவலாயிற்று. இப்பழமொழி வில்லிபுத்தூரர் பாரதம் பாடியதைச் சுட்டியதேயன்றி வியாசர் செய்த வடமொழி இதிகாசத்தைப் பற்றி வந்த தன்று. இதுதான் பாரதம் தமிழிற் காவியமாக வமைந்ததற்குள்ள சரித்திரம். அஷ்டாவதானம் அரங்கநாத கவிராயரென்பவர் பாரதத்தின் பின்பகுதியைச் சொர்க்காரோகணச் சருக்கம் சேர்ந்த 46 சருக்கங்களாக 2,477 செய்யுட்களாய்ப் பாடினர். அது சுபகிருது (1902) ஹ்மல் சென்னையில் பண்டிதமித்திர யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வரந்தருவார் பாடியதென்று சொல்லும் மற்றொரு புத்தகத்திலுள்ள 8 செய்யுள்களை எடுத்துக்காட்டி, அவைகள் வரந்தருவார் பாடிய நடையாகாதென்று அதின் முகவுரையிற் காட்டப்பட்டிருக்கின்றது. வில்லிபுத்தூரரின் சகோதரர் பிற்பகுதியைப் பாடியிருப்பரெனலும் சம்பாவிதமாம். பிற்பகுதியின் பாடல்கள் முற்றும் வெளிவந்தாலன்றி அதை வற்புறுத்திக் கூறுதல் கூடாது.

அறுசீராசிரியம்.

பைந்தமிழி னலஞ்சிறந்த முனைப்பாடித் திருநாட்டிற்
பாகை வேந்தன், சுந்தரஞ்சேர் பாரதமாம் வடகலையைத் தென்
கலையாற் சொல்க வென்னச், சந்தனுவின் சரிதைமுதற் பதி

னெட்டா நாட்போரின் சரிதங் காறும், புந்திமகிழ் தாவில்லி புத்தூராழ் வான்முன்பு புகன்றிட் டானே.

இச்செய்யுள் அரங்கநாத கவிராயர் பாடிய பாரதம் பிற்பாதியின் பாயிரத்திலுள்ளது. இதனால் பாரதம் முன்பாதியை வில்லிபுத்தூரார் பாடினாரென்பது விளங்குகின்றது. வரந்தருவார் கூறுவதோ இதற்கு மாறாக உள்ளது. அவர் செய்யுள் :—

அறுசீராசிரியம்

பிறந்துய்யக் கொண்டவனிப் பேருலகம் பெருவாழ்வு கூறு நாளி, னிறைந்தபுகழ்ச் சனிநகர்வாழ் வில்லிபுத்தூ ரனை நோக்கி நீயு நானும், பிறந்ததிசைக் கிசைநிற்பப் பாரதமாம் பெருங்கதையைப் பெரியோர் தங்கள், சிறந்தசெவிக் கமுதமெனத் தமிழ்மொழியின் விருத்தத்தாற் செய்க வென்றான்.

இதனால் ஆட்கொண்டான் வில்லிபுத்தூரரொருவரையே பாரதம் பாடும்படி வேண்டிக்கொண்டமை புலப்படுகின்றது. பாரதம் முழுமையையும் பாடியவர் ஒருவரோ இருவரோ, அவ்விருவர், வில்லிபுத்தூராரும் அவர் குமாரர் வரந்தருவாருமோ வென்பதைத் திட்டமாய்க் கூறப்போதுமான சாதனங்கள் இதுகாறும் வெளிப்படவில்லை. வெளிப்பட்டமேல் இதனை ஐயமறக்கூறுதல் சாத்தியமாம். வரந்தருவார் கருத்தும், புலவர் புராணங்கூறிய முருகதாசர் கருத்தும் ஒருவழிக்கொள்ளாது மாறுபடுதலை இங்கு நாம் விளக்கியிருக்கின்றோம். வில்லிபுத்தூரார் காலத்தில் விளங்கிய புலவர்களைப் பற்றியும் அவர்களோடு வில்லிபுத்தூரார் வாதம் செய்தமை முதலிய விஷயங்களைப் பற்றியு மினிக்கூறப்படும். இப்பாடலால் ஆட்கொண்டானும் வில்லிபுத்தூராரும் ஓரிடத்திற் பிறந்தமை வெளியாகின்றது.

3-வது பாகம்.

வில்லிபுத்தூரார் காலத்திருந்த பாவலர்களைப் பற்றியது.

வில்லிபுத்தூரார் புலவர்கோனாக விளங்கித் தன்னோடு வாதுக்கு வந்தவர்களின் செருக்கை யடக்கி அவர்கள் காதுகளைக் காதணிகளோடு கொய்துவந்தனர் பற்பலர் காதுகளைக் கொய்து பேரிசை பெற்றுக் கவிதா சார்வபௌமனெனப்பெயர் கொண்டனர். காதறுப்புண்டோர்களின் தொகையும் பெயரும் இப்பொழுது புலப்படவில்லை. முன்காட்டிய அந்தக் கவிவீரராகவ முதலியாரின் தனிப்பாடலினால் பற்பலர் காதறுப்புண்டமை தெளிவாகின்றது. இவர் காலம், பாண்டி நாட்டில் தமிழ்ப்புலமை நடைபெற்ற காலமாகி நெடுங்காலம் சென்றிருப்பதால் இவரால் தோல்வியடைந்த புலவர்களின் சரித்திரம் கிடைப்பதரிதாய்விட்டது.

அரசராற் கவிபாடுவதில் சிறப்பு வாய்ந்த அநந்தனெனு மாண்புடையானொருவன் வில்லிபுத்தூரார் காலத்தி லிருந்தனன். வில்லிபுத்தூரார் அவனிடம் சென்று வாது செய்தும் அவன் தன்னிலை சற்றும் குலையாது நிற்கக்கண்டு, பலவகையினுஞ் சிறந்து விளங்கும் நீண்ட குழிப்பொன்றெடுத்துக்கொடுத்து அதன்படி பாடும்படி கேட்கவே அநந்தனும் ஒருவாறு கூறினான். அதில் பிழைகண்டு அவன் தோல்வியை விளக்கிவிட்டு அவன் தோற்செவியை வில்லிபுத்தூரார் கொய்யப்போங்

கால் அநந்தன் ஓர் தந்திரஞ்செய்து தன் செவியறுபடாது காத்துக்கொண்டனன். அத்தந்திரமாவது, என் பெயர்கொண்ட அநந்தனெனும் ஆதிசேடனுக்குச் செவியில்லை யாதலின் அவனோடு யான் இணையாம்படி என் செவியைக் கொய்யீரென வில்லிபுத்தூரரை நோக்கிக் கூறியதேயாம். சமயோசிதமாகவும் புத்திக் கூர்மையாகவும் இவ்வாறு மொழிந்தமை கண்டு களிப்புற்று, நீ மொழிந்த வார்த்தையின் சீர்மைக்கு ஓர் வெகுமதியாக உனது செவியைக் கொய்யாது விடுத்தேனென்று வில்லிபுத்தூரர் கூறிக் கருணை பாராட்டினர். புலவர்களிடத்து விகற்பம் நேர்ந்தபோதும் சிற்சிலபோது அது வியப்புக்கிடமாகின்றது. வில்லிபுத்தூரர் காலத்துவிளங்கிய வேறிரண்டு புலவர்களுமுள்ளார். அவர்களுள் வில்லிபுத்தூரரோடு வாதம் செய்தவர் ஒருவர். அவர் அருணகிரிநாதர்; மற்றொருவன் சம்பந்தாண்டான் என்பவன். இவன் சமணசமயத்திலிருந்துகொண்டு சத்திபூசையிற் சிறந்த சாக்தேயன். மந்திரம் பெரிதுங் கற்றவன். தமிழ்ச் சொன்னயம் பதியாத உள்ளத்தவன். இவனுக்குச் சம்பந்தாண்டானெனும் பெயர் நேர்ந்தது, உள்ளிக்கு மருக்கொழுந்தெனப் பெயர் சூட்டி அதன்மேல் சவ்வாதினைப் பூசியதுபோலும். இவன் அருகனுக் கடிமையானோன். மன்னென்று துவக்கி மலுக்கென்று முடிவுபெறும் ஓர் கவிதை கூறுமென்று இரட்டையர்களை அதட்டிப்பேசியவன் இவனே அருணாசலத்திலே வாசம் செய்தவன் அருணகிரி நாதரோடு விரோதங்கொண்டு அவருடன் வீண்வாதஞ்செய்து தோற்று அவ்வூரைவிட்டு அகன்று சென்றவன். சமணரைக் கழுவேற்றி மதுரையிற் சைவத்தை நிலை நிறுத்திய சீர்காழிச் சம்பந்தமூர்த்திகளின் பெயரை இத்தீயன் வகித்தது கொடிது கொடிது.

வெண்பா இரட்டையர் பாடியது.

மன்னுதிரு வண்ணா மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னுந் தலைச்சவரம் பண்ணுவதேன்—மின்னின்
இளைத்தவிடை மாத ரிவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.

இதனைக் காளமேகப் புலவன் பாடியதெனச் சிலர் மயங்கிக் கூறுவர்.

4-வது பாகம்.

வில்லிபுத்தூரர் அருணகிரிக்கேகியதும் அவ்விடம் அருணகிரிநாதருடன் வாதுசெய்து பின்பு நட்பாகியதும்.

கச்சிமா நகரிலுள்ள ஓர் வைணவப் பிராமணன் தென்னாட்டுத் திருப்பதிகளில் கோயில்கொண்ட திருமால் திருமங்கையர்களைத் தரிசித்துவரத் தலயாத்திரை செய்தனன். சில தலங்கள் மூர்த்திதீர்த்தங்களில் தங்கித் தரிசித்து ஆடியபின் திருமாற்குத் தான் சூடிக்களைந்த மாலைகளையுதவிய கோதையின் சீர்விளங்கிய வில்லிபுத்தூரை யடைந்தனன். கோயிலிற் சென்று வழிபாடுகள் செய்து உணவருந்தியபின்பு சார்வபௌமன் சிறப்பையெல்லாஞ் செவியாரக் கேட்டுணர்ந்து அவர் மனைக்கேகி அவரைத் தண்டன் சமர்ப்பித்துக் குசலம் வினவியபோது வாளாயுதமொன்று அவர் பக்கத்திலிருப்பக் கண்டு, அது யாது பயன் கருதிவைக்கப்பெற்றதென்று வினவினன்; சந்தம்பாடுவதில் தோல்வியடைவோர் செவிகளைக் கொய்வதற்

காகவுளதென்று வில்லிபுத்தூரார் விடையளித்தனர். இதைக் கேட்டவுடன் எங்கள் நாட்டில் சுதரிசனுசலமாம் அருணகிரியில் விபூதிபூசும் சிவபிரானது இளையகுமாரனுங் கந்தன்பேரில் பல சந்தக்கவிபாடும் நாவலன் ஒருவன் உளன். அவன் காஞ்சியில் குமரகோட்டத்தில் வந்திருந்தபோது பலர் பார்த்துளாரென்றும், அவன் உடலெல்லாம் விபூதி யணிந்து கோவணமொன்றையே யுடையாக்கொண்டு இரந்துண்ணக் கையில் திருவோடும் வைத்துள்ளவனென்றும் தலயாத்திரைக்கு வந்த வைணவர் தெரிவித்தார். அவனிடம் சென்று வாது செய்து வெற்றிகொள்ள வல்லீரோவென்றுங்கூறினர். வில்லிபுத்தூரார், நீங்கள் அதனை நேரிற் பார்த்துவிட்டுப் போகலாம், எம்முடன் அங்கு வரல்வேண்டுமென்று வேண்டினர். திருக்குருகை, குறுங்குடி முதலிய தலங்களை நான் தரிசிக்கவேண்டும், எனை விடுத்தருளவேண்டுமென்று கூறி விடைபெற்றுக் கொண்டு அவ்வைணவனுஞ் சென்றனன்.

அருணகிரியில் வாழும் புலவனையடக்க அங்குப் போவதற்கு வில்லிபுத்தூரார் ஒரு நன்னாள் குறித்தனர். யாரும் நன்று நன்றென்று சம்மதித்தனர். சதுரங்கசேனையுடன் செல்லும் மன்னவன் இவன் யாரோவென்று கண்டவர் அச்சுறும்படி வடதிசைநோக்கிப் பரிவாரங்களுடன் அவர் சென்றனர். அப்போது சிவிகை தாங்குபவரும் மற்றவரும் நற்சகுனம் கிடையாமைகண்டு வெல்லுபவன் அருணகிரிப்பாவலனே யாமெனப்பேசிக்கொண்டனர். பிறகு ஓர்நாள் பகற்பொழுதில் அனைவரும் அருணகிரியை யடைந்தனர். ஆனை, தேர், குதிரை, ஆட்பெருக்கம் அங்குச் செல்லவே, இவை அயலரசர் சேனையென வெண்ணிப் பிரபுடதேவ அரசனது தானைகளும் ஆர்த்து எழுவதற்குமுன் ஒற்றர்கள் அவ்வரசனிடம் சென்று

வந்த காரணந் தெரிவித்தனர். அருணகிரியில் விளங்கும் வேலவனுக்கு அடிமைபூண்ட புலவனும், இன்று இந்நகர்வந்தவன் தோல்வியுற்றால் இவ்வூர்க்கு ஏற்றமாமென்று மனதில் எண்ணினன். அரசன் வந்த வேதியருக்குச் செங்கை குவித்துத் தக்க பல உபசாரமும் செய்தான். அரசர்கள் கொடுத்துள்ள பல விருதுகளையும் பார்த்தான். பொருத்தமாகிய விடுதியும் அமைத்தான். அரண்மனையிலிருந்து புசிப்பவை அனுப்பக் கட்டளையிட்டான். வேண்டுமவைகளை உடனுக்குடன் உதவத்தக்கோரையும் நியோகித்தான். இடங்கொண்ட பாவலருக்கு இடியேறு போன்ற வில்லிபுத்தூரார் இவைகளை யெல்லாம் பார்த்துக் களிப்புற்று அரசனிடம் வந்தகாரிய மீதெனத் தெரிவித்தனர். அரசன் இதைக் கேட்டு மனதிற் சற்று வருத்தமுற்றாலும் முன்னோர் வழக்கம் எனக்கேட்டு அதற்கஞ்சி, நாட்டரசர்க்கொத்தபடி தானும் நடப்பதாய் ஒருப்பட்டான். வில்லிபுத்தூராரும், இன்று அல்லது மறுநாளில் உமதூர்க்கூட்டத்தாருடன் புலவனையும் வைத்துக்கொண்டு எமது கல்விக் கொற்றம் அறிவீராகவென்று அரசனுடன் கூறினர். அரசனும் உடன்பட்டு அவருடன் சொற்பதூரம் சென்று வழியனுப்பிவிட்டு மீண்டனன். ஒருவரையும் துணையாகக்கொள்ளாது வீடுதோறும் ஓட்டிற் பிச்சையெடுத் துண்பவனுக்கு இவ்வாறு இடுக்கண் வந்ததெனவெண்ணி அரசனும் மனந் தளர்ந்தான். தனதரண்மனைப் புலவனொருவனைத் தனித்தழைத்து, வந்த பாவலன்றன்மையாது? உனக்கெட்டியமட்டில் உரைப்பாயாகவென்று அரசன் கேட்கவே, வந்த புலவன் பலருந் துயருறும்படி நாடெங்கும் செவி யறுத்து வருதலை நெடுநாளாக யான் கேட்டுள்ளேன் என்று விடை கூறினன். நம்மூர்ப் புலவன் றன்மை எவ்விதம் என்று பின்னும் அரசன் வினவவே, நம்மூரோனுஞ் சொல்நயமுதலிய பொருந்தப் பாடித்

திறமுள்ளவன்முன். ஆனால் தோல்வியும் வெற்றியும் தெய்வ பலத்தால் நேருமாதலா லதனைக்கூறுதல் முடியாதென்றும் பகர்ந்தனன். உனது திறம் எத்தன்மைத்து என்று கேட்கவே இரண்டு யானைச் சண்டைக்கு நடுவிலகப்பட்ட கொசுகோடு ஒப்புமையுடையேன் என்முன். அரசன் அவனால் உண்மை யை யுணர்ந்துகொண்டு, அவனுடன் சில அமைச்சர்களையும் அருணகிரி நாதனும் புலவனிடம் அனுப்பி நடந்ததனை அறி வித்துத் தன்னாலாகவேண்டிய உதவி யாதெனக் கேட்டுணர் ந்து வரும்படி அனுப்பிவிட்டு அரசன் தன் அரண்மனைக்குள் ஏகினன். வேந்தன் மொழிந்ததனைக் கேட்டுத் தனக்குதவி செய்பவனாகிய கந்தனுக்கும், அவன் தமயனுக்கும், அவர் கள் தாய்தந்தையர்க்கும், பரிவாரத்தினர்க்கும் போந்த உப சாரங்கள் புரிவித்து, ஓரம் புகலாமல் பொதுவாக விருத்தல் போதுமென்று அருணகிரிப் புலவன் கூறினன். இதனை யரச னுணர்ந்து அடுத்தநாளில் ஆகமவிதிப்படி மலைமேல் ஆலயத் தில் அபிஷேகம் முதலியன செய்வித்தான். தெய்வசகாயங் கருதி இது செய்யப்பெற்றது. அந்தரங்கத்தில் அரசன் அரு 'ப் புலவனுக்குச் சார்பா யிருந்தான்.

அரசன் இதுவே நல்ல தருணமென்று தக்கவரையனுப் பிச் சார்வபௌமனுக்குரைத்தான். சரபத்தை ஓர் கைக்களி றென்று எண்ணிய சிங்கத்தைப்போல் வில்லிபுத்தூராரும் கடுகி வந்தனர். வழியுள் நேர்ந்தார் முருகனையும், அவன் அடி த்தொண்டனும் அருணகிரிப் புலவனையும், அரசனையும், வந்த புலவனையும், வினையையும், காலத்தையும் கருதிப் பலவாறு மொழிவதானர். வில்லிபுத்தூரார் வந்தவுடனே அரச னமைச்சராதியோர் அந்தணனென்றிடும் முறைமை யால் உபசரித்தனர். துறவியாகிய அருணகிரி நாதனெனும்

உணரப் படுமாயினும் மாதிரிக்காகப் பின்னுமிரண்டு கட்டளைக்கலித்துறைகள் இதிற் சேர்க்கப்பட்டன :—

தனிப்பாடல்கள்.

கட்டளைக் கலித்துறை

கானேந்து தாமரை வாவியு ளானை கராவினயர்ந்
தானேந்தி மூலமென் றோதிய நாட்சென் றுதவுகையால்
தேனேந்து சோலைய ரங்கனல்லாற் றெய்வ மில்லையென்றே
மானேந்து கையன் மழுவேந்தி நாணிந்த மாநிலத்தே. (க)

மத்தக் கரியைக் கராப்பற்றி நின்றதோர் வாவியுள்ளே
சித்தந் தெளிந்து முறையிடும் போது செழுந்துளவக்
கொத்துக் கிளர்முடிக் கோவிந்த வென்றது கூப்பிட்டதோ
செத்துக் கிடந்தன வோகெடு வீருங்கள் தெய்வங்களே. (உ)

பிள்ளைப் பெருமாளின் வீர வைணவ மனோநிலை இத்தன்மைத் தென்று காட்ட இம்மூன்று கவிகளே சான்றாம். இங்கு சமயவாதத்தை யொழித்து வீரத்தன்மையை யுணர்த்தும் மனோநிலைமட்டும் காட்டப்பட்டது. வைணவரின் வீரத்துச்சத்துவம் தலையெடுத்துநிற்கும். சைவரின்வீரத்து மற்றைய இருகுணங்களும் தலையெடுத்து நிற்பனவாம். பிள்ளையவர்களின் மனோதிடத்தின் சீரிதுவே. இதனைக்கொண்டேயவரை வீரவைணவரெனக் கூறப்பட்டது. பிள்ளைப்பெருமாள் என்பது கண்ணன் பெயரென்பதும் ஓர் நன்னயப் பொருளாம். மணவாளதாசன் என்பதும் மணவாள னருளினாற் றாசனானவன் எனும் பொருள்கொண்டு பிள்ளைப் பெருமாளுக்கு மற்றோர் பெயராம். பிள்ளைப் பெருமாளின் நாமகரணப்பெயர் யாதோவெனில் கூறுதும். அது "ரங்கநாததாசன்" என்பதுவே. மணவாளன் என்பது அரங்கன் பெயராதலால்,

மணவாளதாசன் ரங்கநாத தாசன் என்பன ஒரு பொருள் கொண்ட மொழிகளாம். வைணவ அந்தணர்களி லெல்லாம் ஐயங்கொண்டோங்கும் சிங்கம்போன்றவராதலின் பிள்ளைப் பெருமாளெனப் பெயராயதென்பாருமுளர். பிள்ளையெனும் மொழி க்ஷேத்திரபாலனுக்கும் பெயராம். வித்தகன் என்பதும் அவன் பெயரேயாம். வீரவைணவராதலின் நாராயணனை யன்றி வேறியாரையும் போற்றுவ திவரிடத்தில்லை. யமககவி பாடுவதிற் சிறந்தவர். வேறுவகைக் கவிபாடுவதிலும் பாகுந் தேனுமமுதும் கைக்கும்படி பாடும் வல்லவராதலிற் கல்விநய முணர்ந்த புலவர்களெல்லாம் இவரைத் திவ்யகவியென்றேத் தும் சிறப்புவாய்ந்தவர். தாம் வழிபடுகடவுளிடத்துப் பூனை போல் வஞ்சனையின்றி உள்ளன்பு பாராட்டி யொழுகும் பத்தர் சிகாமணி இவர். அரங்கனையன்றி மற்றொரு தேவரை நாவி னாற் றுதியேனென்று பல கவிகள் பாடியுள்ளார். அத்துணிவு அரங்கக்கலம்பகத்திலும் யமகவந்தாதியிலும் காணப்படுகின் றது. அத்துணிபுக் கவி ஒன்று வருமாறு:—

திருவரங்க யமகவந்தாதிச் செய்யுள்-54.

ஆகமதிக்கு முகமேன் முகமுடையா னயன்வாழ்
ஆகமதிக்கு நவநீதக் கள்வ வவனிகொள் வார்
ஆகமதிக்குளஞ் சேசரங்காவுன்னை யன்றித்தெய்வம்
ஆகமதிக்கு ளெண் ணேனடியேன்பிற ராரையுமே..

இச்செய்யுளில் சொல் நயம் பொருள் நயத்துடனே வீர வாதமும் குடிகொண்டிருத்தல் காண்க.

தமது வழிபடுகடவுள் எவ்விடத்தும் எப்பொருளிடத் தும் கலந்துளா னென்பதைப் பொதுநோக்கால் இப்பிள்ளை எண்ணுவிடினும் கருணைக் கடலாகிய நாரணன் ஒருவனே

யெனுந் திடத்தோடு கூடியவராதலினால் பூதலத்துள்ள வேறு பல தலங்களுக்கும் சென்றிலர். சீரிற்குறைந்த பல தேவர்களுளரெனுந் துணிபுள்ளவர். இவர் இவ்வாறொழுகுதலை மாற்றி இவரைச் சீருறும்படிசெய்யக் கருதித் திருமால் ஒரு நாளிரவில் உலகம் உண்டுமிழ்ந்ததிருமால் தானென்பதை அவருக்குக் கனவில் தெரிவித்து ஒப்பற்ற திருவேங்கடமுடையார் திறத்தும் சில கவி நீ புகல்வாயாகவென்று பிரியத்துடன் மொழிந்தனர். உடனே அப்பணியைச் சிரமேற்றுக் கவிசெய்திடாது, அரங்கனைப்பாடிய என தருமைவாக்கினாற் குரங்கனைப் பாடமாட்டேனென்று கூறினர். திருப்பாணாழ்வார் பாதாதி திருமுகபரியந்தம் அரங்கன் வடிவத்தைப் பாவனைசெய்ததை நாட்டிப்பாடிய அமலனாதிப்பிரான் எனும் பதிகத்தில் மந்திபாய் வடவேங்கடமாமலையென்று கூறியிருத்தலாலே பிள்ளைப் பெருமாள் திருவேங்கடமுடையானை குரங்கனெனக் கொண்டனர் போலும். குரங்கன் என்பதற்கு மற்றொரு பொருளுமுண்டு. அதாவது இழிவான அரங்கத்துள்ளான் என்பதாம். அப்படிக்கொள்ளுங்கால் அரங்கத்தினும் வேங்கடம் இழிவுள்ளதென்று பொருள் படுகின்றது. தாம் இட்ட கட்டளையை எட்டுணையும் சட்டைசெய்யாமையைப் பார்த்துத் திருமால் பிள்ளைப்பெருமாளுக்குக் கண்டமாலைப் புண்ணைத் தோற்றுவித்தனர். பிறகு முன்கொண்ட ஆண்மைகுலைந்து திருவேங்கடம் உடையார்க்குச் சிலேடை வெண்பாமாலை யொன்றும் கலித்துறைத் திரிபந்தாதி யொன்றுங் கூறியபின் கண்டமாலைநோய் மறைந்துவிட்டது. பிள்ளைப்பெருமாள் செய்த, பிரபந்தங்கள் ஒன்பது. அவையாவன :—

1.	திருவரங்கக் கலம்பகம் பாடல்கள்	105.
2.	திருவரங்கத் தந்தாதி பாடல்கள்	105.
3.	திருவரங்கத்துமாலை பாடல்கள்	112.

4.	திருவேங்கடமாலை பாடல்கள்	103.
5.	திருவேங்கடத் தந்தாதி பாடல்கள்	101.
6.	அழகரந்தாதி பாடல்கள்	101.
7.	சீரங்கநாயகர் ஊசற்றிருநாமம் பாடல்	32.
8.	நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி பாடல்கள்.	114.
9.	திருநறையூர் நம்பி மேகவிடு தூது கலிவெண்பா 1, காப்பு வெண்பா 2,	3.

(கண்ணிகள்-205.)

ஆக பாடல் 776.

இவ்வாறாகப் பிள்ளைப்பெருமாள் பல தலங்களிலும் கோயில்கொண்ட திருமால் விஷயமாய்ப் பிரபந்தங்கள் பாடினார். தமது வீரவைணவ நிலையைச் சுட்டி இவர் பல சமயங்களிற் பாடிய 35 பாடல்களுக்குப் பரப்பிரம விவேகமெனப் பெயர் வழங்கிவருகின்றது. இதனையும் சேர்த்துக் கணக்கிட்டால் இவர் செய்த நூல்கள் ஈரைந்தாகின்றன. இவர் செய்தன அட்டப்பிரபந்தங்களெனச் சிலர் கூறுவர். தலைமையாய் நிற்பன எட்டெனக் கொள்க. இப்பிள்ளைப்பெருமாளைச் சிவநிந்தனை செய்துளாரெனச் சிலர் கூறுவர். தனது இஷ்டதெய்வத்தை நன்றென்று ஏத்துதல் சன்மார்க்கமென்பது ஞானிகள் சம்மதமாகையால் அதன்படிக்கே இவர் நடைகொண்டனர். அரனைத் திருமாலின் வடிவினிற் பாதியென இப்பிள்ளைப்பெருமாள் பாடிய கவிகளுமுண்டு. சைவரை வைணவரும் வைணவரைச் சைவரும் இங்குக்காட்டிய நயங்கருதாது பற்பலவிதமாய்த் தூஷிப்பதை இக்காலத்தி லறியாதார் யாருமில்லை. சமயப்பேய் பிடித்தவர்கள் கண்ணில் "திருமாலுக்கடிமைசெய்" "தேய்வமிகழேல்" என்று ஔவைகூறிய நீதி

வாக்கியங்கள் புலப்படவில்லைபோலும். விரிக்கிற்பெருகும். திருக்குறுங்குடி, சிதம்பரம், பேரூர், திருச்செங்கோடு முதலிய பல தலங்களில் ஒரே ஆலயத்தில் திரிசங்கார மூர்த்திகள் கோயில்கொண்டிருப்பதை நாம் இன்றும் காண்கின்றோம். உஷ்ண சீதங்கள் நிலைமாறில் பிராணனும் ஆன்மாவும் உடலும் நிலை பெறுமோ. திதித்தொழில் புரிவார்க்கு நீர் சாதனமாதலிற் கடலிலவர் துயில்கொள்கின்றார். சங்காரத்தொழில் புரிவார்

ரமாம. ஆதலின அவா த்வடிவினராய

தையு முட்கொண்டு மயானத்தில் தந்தொழில் புரிகின்றார். விரிக்கிற்பெருகும்.

2-வது பாகம்.

இனிப் பிள்ளைப்பெருமாள் மதுரையைவிட்டுத் திருவரங்கம் வந்து தலவாசம் செய்தகாரணமும் அவர் ஜீவித்திருந்த காலமின்ன தென்பதையும் கூறுவோமாக:—

வடநாட்டிலிருந்து தென்னாட்டிற் குடியேறிய நாயகர்களின் குடும்பத்தார் மதுரையிலும் திருச்சிறுப்பள்ளியிலும் தங்கி கி. பி. 16, 17-வது நூற்றாண்டுகளிலும் 18-ம் நூற்றாண்டின் முன்பாகத்திலும் பாண்டி நாட்டை யாண்டுவந்தார்கள். சிலகாலம் மதுரையைத் தலைநகராகக்கொண்டு திருநெல்வேலியையும் சேர்த்து ஆண்டுவந்தார்கள். இப்பொழுதுள்ள மதுரையில் பாண்டியர்கள் கி. மு. 600ஆ முதற்கொண்டு கி. பி. 6ம் நூற்றாண்டின் முன்பாகம்வரை அரசாண்டு வந்தார்கள். இக்காலத்திற்கு முன்னிருந்த பாண்டியர்கள் கொற்கையில் அரசாண்டார்கள். நாயகன்மார் குடும்பத்தில் 15 நாயகன்மார் கி. பி. 1559 முதல் 1736-ம் ஆவரை அதா

வது 177-வரு காலம் மதுரை திருநெல்வேலி நாடுகளை யாண்டு வந்தார்கள். அவர்களுள் சிறந்தவர் திருமலைநாயகர். இவர் கி. பி. 1623-வரு முதல் 1659-ம் வருவரை அதாவது 36-வரு காலம் மதுரையில் அரசாண்டார். இவரிடத்தில் தான் பிள்ளைப்பெருமாள் இராயசம் வேலையிலமர்ந்திருந்தார். தமது வருணாச்சிரமதர்மத்தில் வழுவாது ஆசாரியபத்தி தெய்வ பத்திகளிலுங் குறைபாடிலராய்த் தேகயாத்திரை நடத்திவரும் நாளில் ஒரு நாள் ராஜசபையில் உத்தியோக நடாத்திவருபவர்க ளிடையே தாமுங்கூடவிருந்து காரியம் செய்துவந்தார். திடீரென்றெழுந்து தமது உத்தரீயத்தை இரண்டு கைகளினாலும் கிருஷ்ண கிருஷ்ணவென்று தேய்த்தார். இதைப்பார்த்து அங்குள்ளார் ஐயங்காரை நோக்கி இவ்வாறு செய்யக் காரணம் யாதென வினவினார்கள். நம்பெருமாள் திருவரங்கத்தில் திருத்தேரில் எழுந்தருளித் திருவீதி உற்சவம் கண்டருளுகையில் அருகில் எரிந்துகொண்டிருந்த கைத்தீவர்த்தியின் சுவாலை தேர்ச்சீலையில் பற்றியதை அவித்தேன் என்றனர். இதைக்கேட்டோர் விலாப்புடைக்க நகைத்துவிட்டு ஐயங்கார் சித்தப் பிரமையினால் இவ்வாறு செய்தனரென்று திருமலை நாயகரிடம் அறிவித்தனர். நாயகர் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு ஒற்றரை உடனே யனுப்பித் தீரவிசாரித்த போது அங்குள்ள அர்ச்சகர்கள் முதலியோர் தேரின் திரைச்சீலையில் தீப்பற்றிய துண்மையென்றும் அருகில்நின்று பெருமாளைச் சேவைசெய்துகொண்டிருந்த பிள்ளைப் பெருமாளையங்கார் அத்தீயை அவித்தன ரென்றும் நடந்த விருத்தாந்தத்தை அறிவித்தனர்.

இந்த ஆச்சரியத்தைக் கேட்டுணர்ந்த திருமலைநாயகர் ஆனந்த பரவசராய் ஐயங்காரை அழைப்பித்துத் திருவரங்கத்தில் நம்பெருமாள் ரதோற்சவம் கண்டருளுகையில் தேவ

ரீர் அங்கிருந்து அழகிய மணவாளனைச் சேவைசெய்துகொண் டிருந்ததாகச் சொல்கின்றார்களே தேவரீர் அங்கு எழுந்தரு ளியதுண்டோ வென்று கேட்க, ஐயங்கார் நான் இங்கிருந்த படியே மனோபாவனை வழியால் நம்பெருமாளின் ரதோற்சவ சேவை செய்தேனென்று கூறவே அருகிருந்தோர் ரதோற் சவ தினத்தில் இவரிங்கிருந்தே தமது உத்தரீயத்தைக் கிரு ஷ்ண கிருஷ்ணவென்று தேய்த்தனர் ரத்தனையே என்றார்கள். திருமலைநாயகர் இவரது பக்தி விசேஷத்தைக் கேட்டு ஆநந்த பரவசராய் மெய்மறந்து சொற்பகாலம் நிதானித்துத் தெளிந்த மேல் ஐயங்காரைச் சுற்றி வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து தோத்திரஞ் செய்துவிட்டு அரண்மனைக் கேகினர். அன்றிரவு திருமலை நாயகர் திருவரங்கத்திற்குப்போய் அங்கு, திருக்காவேரியில் நீராடிக்கொண்டிருந்த ஐயங்காரைக் கண்டு ஸேவித்துவிட்டு அவருடன் நம்பெருமாள் சந்நிதிக்குட் செ ன்று ஸேவைசெய்துவிட்டுத் திரும்புகையில் ஐயங்கார் காணா மற்போனதாகக் கனவுகண்டு உடனே விழித்துக்கொண்டு மனம் வருந்திச் சஞ்சலக் கடலிலாழ்ந்து விடியுமட்டும் நித் திரை கொள்ளாது தத்தளித்தனர். விடிந்த பின்பு ஐயங் காரை வரவழைத்து அரசன் சாஷ்டாங்கமாகத் தெண்ட னிட்டுத் தேவரீர் மகிமையை இதுவரையிலும் அறியாது தேவரீரிடத்தில் அடியேன் வேலைவாங்கிவந்த பெருங்குற் றத்தை க்ஷமித்தருளி இனி அடியேன் உஜ்ஜீவிக்கும்படி அடி யேனை அடிமைகொள்ளவேண்டுமென்று வெண்டிக்கொண்டு இனித் தேவரீர் லவுகிக சம்பந்தங்களை யொழித்து விட்டு வைதிக காரியங்களிலேயே நோக்குடையராய் நடை பெறு வதற்கு அடியேன் செயற்பாலது யாதென்பதை நியமித் தருள வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டனன். திருவரங்கத் திருப்பதியில் பெரியகோயிலில் தலவாசம் நிரந்

தரமாய் நடக்கும்படிச் செய்விப்ப தொன்றே போதுமென்று ஐயங்கார் மறுமொழி பகர்ந்தனர். இவ் விருப்பத்தின்படி யே திருமலை நாயகரும் சலைவைக்கல் மண்டபவீதியில் வட மேற்குப் புறத்தில் ஒரு மாளிகையுண்டாக்கி அங்கு யாதொரு குறைவுமின்றி ஐயங்கார்க்குத் தளிகைப்பிரசாதம் தினந்தோ றும் செவ்வனே நடந்துவரும்படி தக்க ஏற்பாடுகள் செய்வித் து ஐயங்காரவர்களை நரவாகனத்தில் மதுரையினின்று அரங்க நகர்க்கனுப்பி அடிக்கடி தாமும் அங்குச்சென்று தான் செய்வித் த உபசரணைகள் சரிவர நடந்தேறிவருகிறதாவென்று நேரிற்பா ர்த்தும் கேட்டும் ஐயங்காரை உபசரித்து வந்தனர். இதற்குப் பிறகுதான் பிள்ளைப்பெருமாள் அழுதொழுகு மின்பப்பா டல்கள் நிரம்பிய பல பிரபந்தங்கள் பாடித் திவ்யகவியெனப் பெயர்பெற்று விளங்கினர். இவர் தமது புலமையாற் பார்ப் பான் தமிழும் வெள்ளாழன் கிரந்தமும் வழவழவென்று வழங்கும் பழமொழியைப் பழிமொழியாக்கிப் பார்ப்பான் றமிழ் வழுவிழ என்று தம்மைத் திருட்டாந்தமாக்கிய மகான். வில்லிபுத்தூரர் இவருக்கு முந்திய காலத்து விளங்கியவர். அவரும் பார்ப்பான் றமிழ் சிறப்புள்ள தென்பதைத் தாம் பாடிய பாரத கவிகளால் விளக்கினர். இவ்வாறாகப் பிள் ளைப்பெருமாள் பகவத் பாகவத ஆசாரிய கைங்கரியங்களில் வழுவாது பல்லாண்டு திருவரங்கநகரில் வாசம்செய்து வந் தனர். நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் பார்ப்பாரே யாம். தெற்கில் பார்ப்பார் குடியேறுமுன் பார்ப்பார்கள் தமிழ் கற்றிலர் போலும்.

இவர் புரிந்த அற்புதச் செய்கையே காரணமாய் இவர்க் குத் தலவாசமும் அமுதவாக்கும் நற்பதப் பேறும் என்று மழியாத இசையும் சேர்ந்தன. இவர் காலத்திற்குப் பின்பும் இவ்வகை யற்புதம் நடத்தினாருமுண்டு. தமிழ்நாட்டிற் கரு

லூருக் கடுத்த நெரூரில் சமாதியடைந்து அவ்விடத்தில் புதுக்கோட்டை அரசரால் ஆலயமெடுப்பித்துப் பூசை கொள்ளும் சதாசிவப்பிரம மென்னும் ஓர் மகான் நெரூரில் வதிந்தபோது ஓர்நாள் மாலைப்போது சிறுபிள்ளைகளுக்குப் பொரி கடலை பழம் முதலியன கொடுத்துக் களிப்பித்து விளக்குவைத்தமேல் அவர்களை யெல்லாம் ஒரு வீட்டுத் திண்ணையி லழைத்து உட்காருவித்து அவர்க ளெல்லோரையும் ஒரேகாலத்தில் கண்களை மூடிக் கொள்ளும்படி செய்து அவர்களையெல்லாம் ஒரு நொடியில் மதுரைக்குக் கொண்டுபோய் கண்களை விழிக்கச்சொல்லி அங்குநடந்த சப்பரம் வாணவேடிக்கைகளைப் பார்க்கும்படி செய்து, உடனே சிறுவர்களைக் கண்மூடும்படிசெய்து முன்னிருந்த திண்ணையிற் கொண்டுபோய்க் கண்விழிக்கச்செய்து பிறகு அவர்களின் தாய் தந்தையரிடம் சேர்ப்பித்தனர். அப்பிள்ளைகள் மறுநாட்காலையில் முன்னிரவில் தாம் கண்டதிருவிழாக் காட்சியைத் தம் பெற்றோரிடமும் மற்றோரிடமும் தெரிவித்தார்கள். மகான்கள் மகிமையை அளவிடல் யார்க்கும் முடியாதகாரியம். நெரூரிலிக்கதை இன்றும் வழங்கி வருகின்றது. இவர்களின் அருளால்தான் இக்கலிநாளில் இம்மட்டிலாவது தெய்வபக்தியும் நன்னடையும் ஜீவகாருண்ணியமும் நம்மவருள் சிலரிடத்து நிலைபெற் றோங்குகின்றன.

3-வது பாகம்.

பிள்ளைப் பெருமாளின் வயது.

இப் பிள்ளைப்பெருமாள் அரங்கநகரில் தொண்டு கிழமாம் வரை ஜீவித்திருந்தனர் என்பதற்கு ஓர் பழைய விருத்தாந்த முள்ளது. இவர் வீரவைஷ்ணவராய்ச் சைவர் கூறிய

பாடல்களுக்கெல்லாம் எதிரிடையாய்த் திருமாலின் சிறப்பை நிலைநிறுத்திப் பாடல்கள் செய்தமைக்குப் பொருளாகித் தில்லை வாழந்தணர்கள் வீரவைஷ்ணவக்கிழம் ஜீவித்துளதோ வென் றுணர ஒரு ஓலைப்புறத்தில் "அழிபிரமர் வாழ்நக ரரங்கமல்ல தில்லையே" என்றெழுதிக் கிழப்பிள்ளைப்பெருமாள் இருக்கு மனையில் கொடுத்துவரும்படி ஒரு ஆளிடம் கொடுத்தனுப்பி னர். அவ்வோலையை அந்தக்கூலியாள் ஐயங்கார் வீட்டிடங் கொண்டுவரவே ஐயங்கார் அதை வாங்கிப் படித்துவிட்டு எழு த்தாணி கொண்டுவரச் சொல்லி அதனால் "அரங்கமல்ல-தில் லையே" என மொழிகளின் நடுவில் அல்ல என்பதற்குப் பின் னும் தில்லையே என்பதற்கு முன்னும்புள்ளிக்குறிவைத்து அவ் வோலையைக் கொண்டுவந்தவ னிடமே திருப்பிக் கொடுத்துத் தில்லை யந்தணர்களுள் யாரனுப்பினர்களோ அவர்கள் கை யில் கொடுத்து விடும்படி அனுப்பினர். அதை அத்தில்லையில் வாங்கிப் பார்த்த ஓரந்தணர் கிழப்பிள்ளைப் பெருமாளின் சாதுரியத்திற்கு மெச்சி அவருயிருடன் வாழ்ந்துளாரென்று தேர்ந்துகொண்டு வாயடங்கி நின்றனர். "நடையழிந்த பிரா மணர் வாழும் நகரம் அரங்கமல்லது இல்லையே" எனும் பொ ருளை நாட்டியெழுதிய சீட்டிற்றனே "அரங்கமல்ல.தில்லையே" என்று ஓர் புள்ளிக்குறியிட்டு அவ்வகை யந்தணர் வாழ்நக ரம் அரங்கமல்ல, தில்லையேயென்று விளக்கியதுதான் புத்தி சாதுரியம். இவர் 80-வருஷத்தின் மேலும் ஜீவித்திருந்தன ரென்பது கர்ணபரம்பரை.

பிள்ளைப்பெருமாள் இப்படி நரைதிரையுற்று வாழும் நாளில் தமக்குத் தம்மைப்போல் கிழமாகிய ஒரு பசுவினால் மரணம் நேரிடுமென்று தமதன்பர்களிடமும் சிடர்களிடமும் அறிவித்திருந்தார். ஒருநாள் வைகுண்டநாதன் சந்நிதியில்

கோயிலில் பிள்ளைப்பெருமாள், பெருமாளைச் சேவித்துக்கொண்டுநிற்கையில் ஒருநொண்டிப் பசுவந்து காலிடறி அவர்மேல் விழ அதனைப்பொறுமலே கீழெழுதப்படும் பாடலை யுச்சரித்துக்கொண்டே திருநாட்டுக் கெழுந்தருளினார்.

வெண்பா.

துளவ துளவவெனச் சொல்லுஞ்சொற் போச்சே
அளவில் நெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும் பஞ்சாச்சே
இரங்கா யரங்கா யினி.

இவ்வாறாக வைகுண்டநாதன் சந்நிதி முன்பே சேவை செய்துகொண்டு நிற்கையில் கிழப்பசுவாற்றள்ளுண்டும் துளவ துளவ வெனத் துவக்குமோர் வெண்பா வாயிலுதிக்கவும் அந்திய காலத்தில் அரங்கன் திருவடிகளிலே மனத்தைப் பதித்துக் கொண்டே திருநாட்டிற் கெழுந்தருளினர். இம்மகான் நமக்கு வைத்துப்போன குலதனமாம் பிரபந்தங்களில் ஈடுபட்டார்க்கே 4000-மாம் ஆழ்வார்களின் பிரபந்தச்சீரும் பொருளுமினிது விளங்கும். இவர் வீரவைணவரானலும் வலுவிற் சண்டைக்குப் போனவரல்லர். தமது காதிற்புலப்படும் படி யாரேனும் சைவர், திருமாலை நிந்தித்துப்பேசினும் பாடினும் அதனை இவர் பொறுரென்பதுதான் இவரிடத்துள்ள வீரம். ' கலியுகத்திறுதிநாளில் வைணவருக்குத் தமிழ்வேதம் செய்தார் நம்மாழ்வார். இவர் 4-வது வருணத்திற் பிறந்தோர் இவர் திருமாலை யோக நிஷ்டைவழியாய் நேரிற்கண்டு அவர் குணக்கடலில் ஆழ்ந்தவர். பிறகு தென்னவன் பிரமராயனும் மாணிக்க வாசகரும் திருவாதவூரில் சிவபிரானல் ஞானோபதேசம் பெற்று ஆலயத்திருப்பணிசெய்து சைவர்களுக்குத்

திருவாசகமாந் தமிழ்வேதம் முதலிய நூல்கள் பாடிவைத்தனர். இவ்வாறாகச் சகுணபிம்பத் தியானத்தால் நம்மாழ்வாரும் மாணிக்கவாசகரும் நற்பதம் பெற்றார்கள். "தீராக்கோபம் போராய் முடியும்" என்கின்றபடி வைணவர்கள் தமக்குள்ளே ஆலயவழக்கில் தலையிடுகின்றார்கள். இவர்களினிப் பொறாமை பாராட்டாது சமரசபாவனை யுள்ளவர்களாய்த் தத்தம் வழிபடுகடவுள்களைப் போற்றி வழிபடில் நற்பதம் பெறலாம். இக்காலத்தில் கல்வி பயிலும் மாணாக்கர்களும் அரசர்பாஷை தேசபாஷைகளிற் பற்றுள்ளாராய்ப் பெரியோர்களின் சரித்திரங்களையும் தேசசரித்திரங்களையும் மனதாரப் படித்துணர்ந்து நன்னடை கொள்ளில் நம் தமிழ்நாடு கல்வியிலும் செல்வத்திலும் நன்னடக்கையிலும் சிறப்படைந்தோங்கும். சமயச்சண்டைகளும் ஓயும்.

இப்பிள்ளைப்பெருமாளின் தமிழ்க்கலா வல்லபத்தைக் காட்டும் கவிகளுள் சில இதிற் சேர்க்கப்பட்டன. இப்பிள்ளையவர்களின் பிரபந்தம், நளவெண்பா இவ்விரண்டினையேனும் படித்துணர்ந்துகொண்டு ஆழ்வார்களின் 4000-ப் பிரபந்தத்தில் வைணவர்கள் ஈடுபடாது வயிறுவளர்க்க மூலபாடத்தை மட்டும் ஓதிக் காலங்கழிக்கின்றார்கள். இதுகலிகாலரின் கொடுமையால் நிகழ்வதுபோலும். சென்னை முதலிய இடங்களில் ஆழ்வார்களின் பிரபந்தப் பொருளுணர்வோர் மிகில் கலிக்கொடுமை தணியும். இது நிச்சயம் நிச்சயம். தருமவழியும் சீராகும்.

உ

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி.

வெண்பா.

தானே படைத்துலகைத் தானே யளித்துநீ
தானே யழிக்குந் தளர்ச்சியோ—வானில்
திருமகுடந் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெருமகுடந் தைக்கிடந்தாய் பேசு. (க)

பொருள் வெளிப்படை - திருமகுடம் - பெருமகுடம் எனத்திரிபு நயங்காண்க.

அரங்கக் கலம்பகம்.

ஆறுசீராசிரியம்.

இரும்புவனம் விரும்புவன மணியரங்கர் பணியரங் கரிமய நண்ப, வருங்கொடியின் மருங்கொடியின் மனங்குழைக்குங் கனங்குழைக்கு மனங்கன் சாபக், கரும்புருவம் பொரும்புருவ முத்தநகை யொத்தனைகை காந்தள் பூந்தேன், மருங்குழலுங் கருங்குழலு முருகுவளை யிருகுவளை மழைக் கண் டாமே(உ)

இது பாங்கன் செவ்வி செப்பலெனுந்துறை இதிற் சொன்னயங்காண்க. பொருணயமும் குடிகொண்டுளது. ()

கலிச்சந்த விருத்தம்.

சருகருந்தியைம்பொறிவருந் தருந் தவர்களண்டர்குஞ் சரமுகன்குகன், பரிதிசந்திரன் சிவனயன்புரந் தாநிரந்தரம் பரவுமெந்தையூர், குருகை தஞ்சைதென் கணபுரங்குறு குடி

குடந்தைவண் டுவரை யிந்தளூர் திருவை குந்தமஞ் சன
சிலம்பயிந் திரபுரஞ் செழுந் திருவரங்கமே. (௯)

இதனுட்டுள்ளி யெழுஞ் சந்தவின்பங் காண்க. மேனின்று கீழும் கீழ்நின்று மேலும் குதிரைமுகப் போக்கென ஓசையின் உயர்வு தாழ்வு காண்க.

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

மண்டலமும் விண்டலமு நின்றவட குன்றமும் வளைந்த மலையுங் கடலுமூ, தண்டமு மகண்டமு மயின்றவர் துயின்றரு ளரும்பதி விரும்பி வினவில், கொண்டல்குழு றுங்குடகிழிந்துமத குந்தியகில் கொண்டுநுரை மண்டிவருநீர், தெண்டிரை தொறுந்தரள மூங்கனக முஞ்சிதறு தென்றிரு வரங்க நகரே.

இதிற் பொன்னிநதிச் சிறப்பும் நடுவிற்றுயில் அரங்கன சிறப்பும் சொல்லின்பம் பெறநிற்றல் காண்க.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேடு கின்றனை யைம்பொறிக ளுக்கிரைதேடியுங்கிடையாமல், வாடு கின்றனை வீடுசென் றென்றினி மருவுவை மடநெஞ்சே, ஆடு கின்றிலை யழுகிலை தொழுகிலை யாங்கணைக் கரங்கூப்பிப், பாடு கின்றிலை நினைகிலை பதின்மர்தம் பாடலின் படியாயே. (௫)

இதனுள் மாந்தரிழி நிலையும் பக்திமிகும் வகையுங்

இரங்கல் எழுசீ ரிரட்டை யாசிரியம்,

மானையெய்தவ ரின்னமென்மட மானையெய்திலர் கேடியால், மாலைதந்தவர் பைந்துழாய்மது மாலைதந்தில ரிந்திரன்

சோணைமாரி விலக்கிவிட்டவர் சொரிகண்மாரி விலக்கிலார், சுரர்களுக்கமு தங்கொடுத்தவர் சோதிவாய முதங்கொடார், தானையைவர் கொடிக்களித்தவர் தானைகொண்ட தளிக்கிலார், சங்கரர்க்கிர வைத்தடுத்தவர் தையலுக்கிர வைத்தடார், ஆனை முன்வரு மன்புளார்முலை யானைமுன்வரு மன்பிலார், அணி யரங்கர் நடாத்துநீதி யநீதியாக விருந்ததே. (சு)

இது தலைவி தலைமகனது பிரிவாற்றாது வருந்திய நிலை யைத் தாய் கூறியது. இதில் சொல்லின்பம் பொருளின்பங் களின் சிறப்பும் இசைக்கட்டும் காண்க.

மடக்குக் கட்டளை மண்டலக் கலிப்பா:

தொழப்பெருதந்த வாரணத்தந்தமே
தொட்டிறுத்ததும் வாரணத்தந்தமே
வழுத்துதாள்முன்பு வனங்கடந்ததே
மலர்ந்தவுந்தி புவனங்கடந்ததே.
ஒழித்ததுங்குழைச் சங்கரன்சாபமே
யொசித்ததுங்குழைச் சங்கரன்சாபமே
அழித்ததும்பொருதானவரங்கமே
அரிதனூரினிதானவரங்கமே. (எ)

இதனுள் காக்குங் கடவுளாம் பரம்பொருளின் வல்ல மை கூறியதுணர்க. சொல்லும் பொருளுஞ் சிலேடை மொழி களிற் பொதிந்து நிற்றலறிக.

திவ்யகவி பிள்ளைப்பெருமா ளையங்காரின்

சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

EXPLANATORY AND OTHER NOTES.

அரும்பதவிளக்கமும் விசேஷக் குறிப்பும்.

வில்லிபுத்தூரர்.

அகராதிமுறைப் பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
	பக்கம் 1.	
ஆரியாவர்த்தம்.	இமயவரைக்கும் விந்தவரைக்கும் நடுவிலுள்ள புண்ணிய பூமி.	வட சொல். தொடர் மொழி. The country extending from the Eastern to the Western sea and bounded on the North and South by the Himalaya and Vindhya mountains.
ஆழ்வார் ...	விஷ்ணுபத்தியி லழுந்தியவர்கள் இவர்கள் பன்னிருவர்.	The twelve devoties of the Vaishnava sect. The authors of the Tamil Vedas of Vaishnava brahmins.
சந்தனாலயம் ...	மலயம் என்பதைப் பார்க்கவும்.	வடமொழித் தொடர் சொல். தீர்க்கசந்தி.
தலம் ...	தெய்வம் கோயில் கொண்ட இடம்.	ஸ்தலம். வடசொல். Holy place.
தீர்த்தம் ...	சுத்தம். இங்கு சுத்த முடையதை யுணர்த்தின்றது.	வடசொல். Sacred rivers or waters at a place of pilgrimage or as brought from such place.

அகராதி முறைப்பதம்	பொருள்.	விசேஷக்குறிப்பு.
நாயன்மார் ...	சைவர்களின் பக்த சிகாமணிகள். தேவாரம் பாடியவர்கள்.	The devotees of Saiva sect.
மலயம் ...	பொதியமலை. அகத்தியர் வசிக்கும் மலை.	வடசொல். The mountaneous range near Cape Comerin famed as the abode of Agastya. This is also known as சந்தனாலயம். An abode of sandal tree சந்தன + ஆலயம் = சந்தனாலயம். Called also சந்தனாசலம். Sandal mountain from the superior sandal trees. சந்தன + அசலம் = சந்தனாசலம். தீர்க்கசந்தி.
மூர்த்தி	தெய்வ வடிவம்.	வடசொல். A form of deity.
வில்லிபுத்தூரார்.	பாலாற்றின் தீரமாகிய திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் வைஷ்ணவப் பிராமணகுலத்திலே பிறந்தவர். பாரதம் பத்துப் பருவத்தையும் தமிழ்க்கவியாகப் பாடியவர்.	Translator of the first ten purvas of Bharata into Tamil verse.

பக்கம் 2.

சிகாமணி	முடியிலே தரிக்கும் மணி இங்குச்சிறப்பெனும் பொருள்கொண்டது.	தொடர்மொழி. வடசொல். The chief gem in a crown as worn on the head.
தியானகோசரம்	தெய்வ சிந்தனையில் தோற்றப்படுவது.	வடமொழித் தொடர்சொல். தியானம். Fixed attention to an object. கோசரம் = விடயம். An object of sense.

அகாரதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
கள் ...	வைணவர்களின் ஆசாரியர்களில் முக்கியரான் ஒருவர்.	யோக தசையில் இவர்க்கு சடகோபர் ஆசாரியரானார்.
	ஈசுவர முனிகளின் பிள்ளை இவர் பிராமணர்.	

பக்கம் 3.

எழுகூற்றிருக்கை.	ஓர்வகைச்சித்திரகவி. தமிழிலேயுளது.	A peculiar Tamil poem :—

திருமங்கைமன்னன் அருளிச்செய்த திருஎழு கூற்றிருக்கை.

தனியன் நேரிசைவெண்பா.

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

நேரிசை ஆசிரியப்பா.

ஒருபே ருந்தி யிருமலர்த் தவிசி
லொருமுறை யயனை யீன்றனை யொருமுறை
இருசுடர் மீதினி லியங்க மும்மதி
ளிலங்கை யிருகால் வளைய வொருசிலை
யொன்றிய வீரெயிற் றழல்வாய் வாளியி
லட்டனை மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலொடு மானுரி யிலங்கு
மார்பினி லிருபிறப் பொருமா ணாகி
யொருமுறை யீரடி மூவுல களந்தனை
நாற்றிசை நடுங்க வஞ்சிறைப் பறவை

யேற்றி நாலவாய் மும்மதத் திருசெவி
ஒருதனி வேழத் தந்தையை யொருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை முத்தி
நான்மறை யைவகை வேள்வி யறுதொழி
லந்தணர் வணங்குந் தன்மையை யைம்புல
னகத்தினுட் செறித்து நான்குட னடக்கி
முக்குணத் திரண்டவை யகற்றி யொன்றினி
லொன்றி னின்றுங் கிருபிறப் பறுப்போர்
அறியுந் தன்மையை முக்கண் நாற்றோ
ளைவா யரவொ டாறுபொதி சடையோன்
அறிவருந் தன்மைப் பெருமையு ணின்றனை
எழுல கெயிற்றினிற் கொண்டனை கூறிய
யறுசுவைப் பயனு மாயினை சுடர்விடு
மைம்படை யங்கையு ளமர்ந்தனை சுந்தர
நாற்றோள் முந்நீர் வண்ணநின் றீரடி
யொன்றிய மனத்தா லொருமதி முகத்து
மங்கைய ரிருவரு மலரென வங்கையில்
முப்பொழுதும் வருட வறிதுயி லமர்ந்தனை
நெறிமுறை நால்வகை வருணமு மாயினை
மேதகு மைம்பெரும் பூதமு நீயே
யறுபத முரலுங் கூந்தல் காரண
மேழ்விடை யடங்கச் செற்றனை யறுவகைச்
சமயமு மறிவரு நிலையினை யைம்பா
லோதியை யாகத் திருத்தினை யறமுத
னால்வகை யாய மூர்த்தி மூன்று
யிருவகைப் பயனு மொன்றாய் விரிந்து
நின்றனை குன்று மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை வருபுனற் பொன்னி
மாமணி யலைக்குஞ் சென்னலொண் கழனி
திகழ்வன முடித்த கற்போர் புரிசைக்
கனகமா ளிகைநிவர் கொடிவி சும்பினி
ளிளம்பிறை துடைக்குஞ் செல்வ மல்குதென்

றிருக்குடந்தை யந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க வாடரா வமளியிலறி துயிலமர்ந்த
பரமனின் னடியிணை பணிவன்
வருமிட ரகல மாற்றுவோ வினையே. 46.

எழுகூற்றிருக்கை.

					௧	௨	௧					
				௧	௨	௩	௨	௧				
			௧	௨	௩	௪	௩	௨	௧			
		௧	௨	௩	௪	௫	௪	௩	௨	௧		
	௧	௨	௩	௪	௫	௬	௫	௪	௩	௨	௧	
௧	௨	௩	௪	௫	௬	௭	௬	௫	௪	௩	௨	௧
௧	௨	௩	௪	௫	௬	௭	௬	௫	௪	௩	௨	௧

தமிழ்ப் பிரபந்தங்களுள் இது ஒன்று. ஒரு மூர்த்தியைச் சிறப்பித்துப் பாடுகையில் அக்கடவுளின் வெற்றி முதலிய வற்றை நாட்டி எண்முறை வழுவாது பொருள் சிறக்கப்பாடு வது. ஒன்றுமுதல் ஏழளவாயுள்ள லக்கங்கள் பன்முறை மாறி மாறிவந்து பொருள் சிறக்கவேண்டுதலின் எழுகூற்றிரு க்கையெனப்பெயர்வைக்கப்பட்டது. திருஎன்பது சைவர் வைணவர்களால் சொற்களின் முதலில் மங்கலமாக வழங்கப் படும் மொழி. பாடலில் வல்லவர்க்கே இப்பிரபந்தம், இனிது முடியும். சைவநாயன்மார்களுள் சிறந்த சீர்காழிஞானசம் பந்தமூர்த்தியவர்களும் இப்பிரபந்தம் பாடியுள்ளார். அது "ஓருரு - வாயினை - மானாங்-காரத்து" என்று ஆரம்பமாகி "நினைய - வல்லவ-ரில்லை நீ ணிலத்தே" என்று பூர்த்தியாகின்

றது. 47-வரிகள் கொண்டது. இது அகத்தியர் தேவாரத் திரட்டி லுள்ளது. மங்கைமன்னனும், ஆழ்வாரும் இஞ்ஞான சம்பந்தரும் சீர்காழியில் ஒருகாலத்திலிருந்த மகான்கள். இவர்களின் பாடல்களின்நயம் இவ்விரண்டு எழுகூற்றிருக் கைப் பிரபந்தங்களால் விளங்குதலன்றி மற்றைய அமுத வாக்காய பல பிரபந்தங்களாலும் இனிது விளங்குகின்றது. இலக்கங்களின் வரிசை இங்கு விளக்கப்பட்டுள்ளது,

முத்துவீரியம் சூத்திரம்.

கோதிலேழுறையாக்கிக் குறுமக்கள்
முன்னின்றும்புக்கும் போந்தும்விளையாடும்
பெற்றியால்வழுவாமை யொன்று
முதலாக வேழீறாய் முறையானே
யியம்புவதெழுகூற்றிருக்கையாகும்.

என்பது. கோதிலேழறையாக்கிக், குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமை ஒன்று முதலேழிறுதியாக முறையானே பாடுவது எழுகூற்றிருக்கை யாகும்.

"இடங்கொண்ட + பாதங்களே" எனுங்கலித்துறை கம்பர் பாடியது. பள்ளிகொண்டான்றிருப்பாதங்கள் நெஞ்சத்தடங் கிக் கிடப்பனவென்று முடித்துக்கொள்க.

அகராதி முறைப்பதம்.	பொருள்	விசேஷக்குறிப்பு.
	திருமடல்.	
திருமடல் ...	ஓர் பிரபந்தம். பனை மடலாற்செய்த குதிரையின்மேற் செல்லுதலை மடலூர்தல் என்பர். அகப்பொருளிலக்கணப்படி முன் னாளில் இது தமிழ்நாட்டில் நடை பெற்ற மார்க்கம். பெரும்பாலும் புருடர்களும் சிறுபான்மை மக	A poem figuratively describing a disappointed lover riding on a palmyra stem.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
	னிரும் காமம் ஆற்றுமற் புரிவது. மாணிக்கவாசகர், சடகோபர், திருவள்ளுவர் நூல்களிலிதன் நெறியைப் பார்த்துணர்க.	
மங்கைமன்னன்.	வைணவர்களின் ஆழ்வார் பன்னிருவரில், ஒருவர், நான்காவது வருணத்தர். நாலுகவிப்பெருமான.	இத்தொடர்மொழிக்கு மங்கையெனும் ஊரின் தலைவர் என்பது பொருள். இவ்வூர் இக்காலத்து மங்கைநல்லூரென்று வழங்கிவருகின்றது திருவாலிக்கருகிலுள்ளது. இவ்வாழ்வார் பிறந்தவூர் இதுவே.

பக்கம் 4.

உபசாரம் ...	மரியாதை ...	வடசொல். Civility. Politeness.
சடகோபர் ...	வைணவர்களின் ஆழ்வார்களில் நாலாமவர். நம்மாழ்வாரிவரே. சடமெனும் அஞ்ஞானத்தைக்கோபித்துத்தள்ளினவர்.	வடசொல். The fourth among the Vaishnava Saints.
பத்தி ...	பிறப்பொழுக்கத்தாலும் ஞானத்தாலும் வைராக்கியத்தாலும் அடையப்படுவதாம். இடையறாத நினைவு வடசொல்.	வைணவர்களுக்குமுத்தியையடைய வகுத்துள்ள பத்தி பிரபத்தி (அடைக்கலம்)எனும் இரு மார்க்கங்களில் முதலாமது Devotion to deity.
பரிமேலழகர்...	காஞ்சிபுரத்துப்பிறந்த வைணவப்பிராமணர். குறளுக்குச் சிறந்த உரை செய்தவர். வடமொழி தென்மொழி யிரண்டினும் வல்லவர்.	A Brahmin poet who wrote a commentary on the குறள்.

அகாராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
பூசகன்	பூசைசெய்வோன் ...	வடமொழி. தற்பவமாய் வந்தது.
மதுரகவியார் ...	சடகோபரிடத்து பத்திமிகுந்து அவர் விஷயமாய்ப் பதினொரு பாடல்கள் பாடியவர். ஆழ்வார்களி லொருவர்.	One of the devotees of Vishnu. ஆர் பலர்பால் விகுதி. மதுரகவி, தற்சமமாய் வந்த வடமொழி.

பக்கம் 5.

அந்தணர் ...	பார்ப்பார் ...	ஜீவகாருணிய முடையவர். காரணப்பெயர். வேதாந்தப்பொருளை யறிந்தோர்
அபிமானம் ...	நேசம், சம்மானம் ...	வடசொல். High esteem.
அருணகிரியார்.	திருவண்ணாமலையிற் றுறவுபூண்டு விளங்கிய புலவர். திருப்புகழ், கந்தரந்தாதி முதலிய பலதோத்திரப்பாக்கள் பாடியவர்.	அருணாசலம், அருணகிரி இவ்விரண்டும்வடமொழித்தொடர்மொழிகள்திருஅண்ணாமலைக்குப் பெயர்கள். ஆர், படர்க்கைவிகுதி
சண்டாளகுலம்.	பறையர்ஜாதி ...	வடசொல். தொடர்மொழி.
சாபநிவர்த்தி ...	சாபந்தொலைதல், சாபநிவாரணம், சாப விமோசனம், என்பன ஒரு பொருள்கொண்ட மொழிகள்.	வடமொழித் தொடர்சொல். சாபம் = கோபத்தால் சபித்தல், நிவிர்த்தி = நீங்குதல்.
சிதம்பரம் ...	சைவர்களின் முக்கிய ஸ்தலம். ஆகாச லிங்கமுள்ள தலம்.	வடமொழித் தொடர்சொல். சித்.=wisdom அம்பரம்sky. Compare ஞானாகாசம். The spiritual vacuum of the ஞானி by which he affects to perceive, at once, everything in the universe.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
திருநாளைப்போவார்.	நந்தனார். ஆதனூரில் பறைச்சாதியிற் பிறந்து சிதம்பரத்தில் ஐக்கியமானவர். அறுபத்துமூவரில் ஒருவர்.	One of the sixty-three devotees of Siva. தினந்தோறும் சிதம்பர தரிசனங்காணப் போகவேண்டுமெனும் கவலைகொண்டமையால் அக்காரணம்பற்றி இவர்க்குத் திருநாளைப்போவார் என நாமம் போந்தது. அழைக்கும்பெயர் நந்தன் சாம்பான். சாம்பான் என்பது பறையர்க்கு வழங்கும் பெயர்.
திருப்பாணாழ்வார் ...	பறைச்சாதியில் வளர்ந்த ஓர் ஆழ்வார்.	திரு = மேன்மை. பாணர் = துதிபாடுவோர். இங்கு துதிபாடும் பறையரை யுணர்த்துகின்றது.
மூலஸ்தானம் ..	ஆலயத்தின்மூர்த்தி விளங்கும் கர்ப்ப கிரகம்.	வடசொற்றொடர். மூலத்தானமுமாம். The interior of a temple. That part of a temple in which the idol is placed.
லோகசாரங்கர்.	அரங்கநகரிலிருந்தஓர் அந்தண முனிவர்.	இவர்தான் பாணாழ்வாரைத் தோள்மேலேற்றி அரங்கர்வடிவில் ஐக்கம்பெறக் கொணர்ந்துவிட்டவர்.

பக்கம் 6.

இமயம் ...	கங்காநதி உதிக்கும் மலை.	இது இந்தியா தேசத்தின் வடவெல்லையாய் நிற்பது. கைலாயவரை இதன்மேலுள்ளது.
இராமாநுஜர் ...	ஸ்ரீ பெரும்பூதூரிலவதரித்த யதித்தலைவர். பிரமசூத்திர முதலியவைகளுக்குப் பாஷியஞ்செய்து, விசிட்டாத்துவித சமயத்தைத் தாபித்தவர். அந்தணர்.	இம்மண்ணுலகில் இவர் 120௵ ஜீவித்திருந்தார். இவர் தமிழ்வேதத்தை வைணவருள்நடைபெறச்செய்து, மடந்தையரும் சூத்திரர்களும் அவ்வேதவழியால் ஞானம்பெற்று முத்

அகராதி முறைப்பதம். பொருள். விசேஷக் குறிப்பு.

தி பெறலாமென்று நிர்ணயஞ்செய்தவர். The name of one of Vishnu's followers who propagated his religion. He was born in 939. Salivahana-Saka and he died in S. 1059.

சனியூர் .. | பாரதம்பாடிய வில்லி புத்தூரார் பிறந்து விளங்கிய ஊர். | திருமுனைப்பாடி நாட்டிலே யுள்ளது. ஆட்கொண்டான் எனும் அரசன் பிறந்த ஊருமிதுவே. திருமுனைப்பாடி நாட்டை ஔவைமாது சேதிநாடென்று கூறுகின்றனள்.

தனிப்பாடல்.

திருக்கோவலூர்ச் சிறப்பு. வெண்பா.

பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோவ லூர்.

நெடியோன் ... | திருமால் ... மாபலியிடம் மூன்றடி நிலத்தை வாமனனாய்ச் சென்று வேண்டித் திரிவிக்கிரமனாய் நீண்டுவளர்ந்து அளந்தவன்.

பாரம்பரை ... | முறைமுறையாய்வருவது. தகப்பன், மகன், குரு, சீஷன் எனும் முறையாய் வழிக்கொள்வது. | இது வடசொல். பரம்பராஎன நிற்பது தமிழில் பரம்பரை என வந்தது. ஆவீறுஐயும். நன்னூல் பதவியல் சூத். 20. இச்சொல் பாரம்பரை எனவும் வழங்கி வருகின்றது.

பிள்ளைப்பேச்சு. | சிறுபிள்ளையினது வார்த்தை. | பிள்ளை ஆறும் வேற்றுமைத் தொகை.

பூபதி | பூமியை ஆள்பவன் பூ + பதி. அரசன். | வடசொல். பூ. நாலாம் வேற்றுமைத்தொகை.

அகராதி முறைப்பதம்	பொருள்.	விசேஷக் குறிப்பு.

பக்கம் 7.

அகராதி முறைப்பதம்	பொருள்.	விசேஷக் குறிப்பு.
கொங்கு ...	ஓர்நாடு இது சேரர் எல்லையுளடங்கியது.	The ancient country governed by the Séran dynasty on the Western Coast.
திருக்கோவலூர்.	பாடல் பெற்ற ஒரு விஷ்ணுஸ்தலம். பாடல்பெற்ற சிவஸ்தலமு மிதுவே.	இது பெண்ணை ஆற்றின்கரையிலுள்ளது.
திருவெண்ணெய் நல்லூர்.	பெண்ணை நதிதீரத்திலுள்ள தலம்.	மெய்கண்டதேவர் அவதரித்த தலம். சுந்தரராற் பாடப்பெற்ற தலம்.

பக்கம் 8.

அகராதி முறைப்பதம்	பொருள்.	விசேஷக் குறிப்பு.
அகீந்திரபுரம்...	திருஐந்திரபுரம் அயிந்தைமாநகரம் என்று வழங்கப்படுகின்றது.	வடசொற்றொடர். இது நடுநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்பெற்ற தலம், திருப்பாதிரிப் புலியூருக்கு அருகில் மூன்றுமயில் தூரத்திலுள்ளது. வேங்கடநாதாசாரியர் மந்திரசித்திபெற்றவூர்.
பரமதபங்கம்...	ஸ்ரீ வேங்கடநாதாசாரியர்பாடிய தமிழ்ப் பிரபந்தம். இதில் புறச்சமயங்கள் கண்டிக்கப்பட்டுள்ளது54-பாடல்கொண்டது.	வித்தியாரணியர் வடமொழியிற் செய்துள்ள சருவதர்சன சங்கிரகம்போன்ற நூல்.
வேங்கட நாதாசாரியர்.	காஞ்சிநகரில் தூப்புற்குலத்தில்தோன்றிய மகான். அந்தணர் திலகர், கவிதார்க்கிகசிங்கம், வேதாந்ததேசிகர் தூப்புற்பிள்ளை எனும் பெயர்கள் பூண்டவர். தென்மொழி வடமொழிகளில் பற்பல நூல்கள் செய்தவர். ஸ்ரீஇராமாநுஜரின் சமயமாம் விசிட்டாத்துவித சித்தாந்தைப்	இவர் ஜநநம் சாலிசகம் 1191 (கி. பி. 1268) விபவ௵ புரட்டாசி மாதம் கலி௵ 4370. பரமபதம் பெற்றது சாலிசகம் 1293க்கு சவுமிய௵ கார்த்திகை௴ (கி. பி. 1370) இம்மண்ணுலகில்

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
	பலபடியாயும் நிலைநிறுத்தியவர். இராமாநுஜ பாஷியத்தைத் துருக்கர் கலாபத்தில் அரங்கநகரில்காப்பாற்றித் தந்தவர்.	வீற்றிருந்த காலம் 102ளு ஸ்ரீரங்கநகரில் பரமபதம் அடைந்தார்.

பக்கம் 9.

அகத்தியபட்டர்	வடமொழியில் பாலபாரதம் செய்தவர். அகத்திய பண்டிதர் என அபிதான கோசத்திற் கூறப்பட்டுள்ளது.	The author of Bala Bharatam in Sanskrit verse.
அமிழ்து ...	தேவருணவு. இனிமை. அமிருதம் எனும் வடசொல் மருவி வந்துளது. அதன்பொருள் சாவின்மை, அல்லது அழியாமையைத் தருவது என்பது. Ambrosia. The elixer of life.	
கலாவிநோதர் ..	நூலாராய்ச்சியிலே யே வேடிக்கையாகக் காலத்தை உயயோகிப்பவர்.	வடசொற்றொடர். கலை தற்பவமொழி. வித்தையெனும் பொருள்கொண்டது.
காஞ்சி	முத்திதரும் ஏழுநகரங்களில் முக்கியமானது, நகரங்களுக்கு ளெல்லாம் தலைமை பெற்றது. சைவர் வைணவர்களின் முக்கியத்தலம்.	(க) என்று சொல்லப்படுகிறபிரமன் (அஞ்சு) என்கின்ற பூஜையை நாராயணன்பொருட்டு இவ்வூரில் செய்ததால் காஞ்சி யெனப்பட்டது. வடசொல். காரணப் பெயர்.
முத்தமிழ்	இயல், இசை நாடகம என வழங்கிவருமமூன்றுதமிழ்.	இயற்றமிழ் Classical-prose and poetry in Tamil. இசைத்தமிழ் Tamil as used in music. நாடகத் தமிழ் Dramatic Tamil. தமிழ்ச் சிலப்பதிகாரம் மூன்று

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
	தமிழுக்கும் இலக்கியம். இராமநாடகம் நாடகத் தமிழ்க்கு இலக்கியம். இசைமற்றிரண்டிலும்வரும்.	
ம் பயிர் முளையிலே.	இது ஓர் பழமொழி. வயதிலேயே பின்வரும் வல்லபம் விளங்கு மெனும் நியாயம.	The nature of the harvest is known by the young shoot as "the child is father of the man."

பக்கம் 10.

சந்தஇன்பம ...	அழகின்பொலிவு. இங்கு அழகு பாட்டில்சொல்லின்கண் நிகழும் பொலிவை யுணர்த்துகின்றது. இது சொல்லோசையாலும் சொற்கட்டாலும் நிகழ்வதாம்.	Musical flow or harmony in verse resembling the metre of the Greeks and Romans.
ம. முடிசூட்டல் ...		To crown another.
நரஸ்துதி ...	மனிதர்களைப் புகழ்வது. மானிடப் புகழ்ச்சியுமாம்.	Adulation of great men.
நியாயம் ...	கூறும்விதி அல்லது	Reason. Propriety.

பக்கம் 11.

தருமபுத்திரா ...	பஞ்ச பாண்டவர்ல்மூத்தவன் பெயர், யுதிட்டிரன்.	The eldest of the five Pandava princes.
பங்கம்செய்தல்.		To destroy.
படைவீடு ...	பகை மேற்சென்றோர் உறையுமிடம். பாசறை.	Soldiers quarters in an encampment.
பாணம் ...	அம்பு, எறிபடை....	Arrow, dart. வடசொல்.
மகுடம் ...	முடி, கிரீடம். ...	வடசொல். A crown.
வசிட்டன் ...	தசரதனுடைய குலகுரு.	A Rishi of the first order. Son of the mind of Brahma.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.

பக்கம் 12.

உபகாரஸ்மரணம்	செய்த உதவியை	வடமொழித் தொடர் சொல் opp. to அபகாரம். Remembering the help rendered, gratitude.
கனகமாரி பொழிதல்.	பொன்னைப் பொழிதல் ஏராளமாகப் பொருளை உதவுதல.	To bestow liberally, lit.: to rain gold.
கன்னன	அங்கநாட்டரசன். குந்திக்கும் சூரியனுக்கும்பிறந்தவன். பாண்டவர்களின் அண்ணன்.	One of the seven famous liberal princes of the medium class.
தோஷாரோபணம்.	குற்றம் சாட்டல்	Throwng blame.

பக்கம் 13.

காரி	ஓர்சிற்றரசன், சடகோபாழ்வாரின்தந்தை.	The father of the Vaishnava Saint—Sada-Cópar.
கிழி	பணப்பை, நிதிப்பொ பொன்முடிப்பு.	A prize, reward, or treasure tied up in a cloth and exposed to public view to invite competition in any work of skill.
நம்பி	நக்குறுங்குடியில் கோயில் கொண்ட திருமாலின் பெயர்.	Vishnu—as god of the sacred temple at குறுங்குடி in Tinnevelly District.
வரப்பிரசாதம்..	தெய்வ அருளால் கிடைப்பது.	Divine grace, spiritual gifts. A Sanskrit compound—வரம் a boon and பிரசாதம் favour.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
	பக்கம் 14.	
ஆசாரியன்	மந்திரோபதேசம் செய்யும் குரு. நல்வழியில் நடப்போன்.	The Guru who initiates the disciples into the mysteries of his religion.
சமயம்	பத்திமார்க்கம் கொள்கை	வடசொல் any religious system.
சர்மா	பிராமணர்களின் பெயரோடு சேர்த்துவழங்கும் மொழி.	A word, affixed to brahmin names.
பிரமோபதேசம்.	பிரமத்தைப் போதித்தல்.	வடசொற்றொடர். A compound of பிரமம்—the supreme being and உபதேசம்—spiritual instruction.
வல்லபதேவன்.	மதுரையில் அரசாண்ட ஓர் பாண்டியன்.	இவ்வரசன் முன்னிலையில் பரம்பொருளிதுவென்று நிர்ணயம் செய்தவர் விஷ்ணுசித்தரெனும் பெரியாழ்வார்.
	பக்கம் 15.	
இதிகாசம் ...	கிளைக் கதைகளோடு சேர்ந்த முக்கியகதை.	பாரதம், ராமாயணம் இவை இதிகாசங்கள். Ancient heroic history. வடசொல். பழங்கதை இவ்வாறுள்ள தென்பது பதப்பொருள்.
கட்டுரை	உறுதிச்சொல்	Infallible expression.
காளமேகம்	இருண்டமேகம்	வடசொற்றொடர். An emblem of fertility. A dark or heavy cloud.
	பக்கம் 16.	
தந்திரம் ...	உபாயம் ...	வடசொல் Stratagem, devise.
ரபேதம் ..	பஞ்சதந்திரத்திலொன்று, சிநேகிதர்களைப் பிரித்துவிடல்.	வடசொற்றொடர். Sowing discard among friends.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
	பிரியம்	வடசொல் தற்பவம். Affectionate and great desire.
	பக்கம் 17.	
உபசரணை	வழிபாடு, உபசாரம்..	உபசாரம் எனும் வடசொல்லடியாய் வந்தது.
	ஓர்ப்பிடியாள்	The wife of the husband's brother.
காஞ்சனம்	பொன். இங்கு திரவியம் எனக்கொள்க.	Literally gold but here used for money.
சுகபோகிகள்	சரீரசுகம்போகங்களை பவிப்பவர் ...	People of sensual or luxurious enjoyments.
மனதிலே பகை உதட்டிலே உறவு	இது ஓர் பழமொழி. உள்ளும்புறம்பும்மாறுபட்ட நடத்தை.	Enmity at heart, friendship on the lips.
	பக்கம் 18.	
	சம்ஸ்கிருதம் சுத்தபண்ணப்பட்ட பூரண பாஷையென்பது இதன் தாற்பரியம், தேவாகள வழங்கிவருமபாஷை.	வடமொழி ஆரியம், ஆதிபாஷை, கீர்வாணம் என்பன பரியாயப் பெயர்கள்.
வல்லடிவழக்கைச் சொல்லடி மாமி.	பழமொழி. கலகமுண்மையை உணர்த்துவது.	Mother-in-law, give an account of the violent quarrel.
	பக்கம் 19.	
சமயவாசனை....	சொந்தமான சமயப் பற்று.	வடசொற்றொடர். Attachment to one's own religion.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
சிட்டர் ...	பெரியோர் ...	Eminent or pious persons.
திடபத்தி ...	சலியாத மனத்தியானம்.	Undaunted devotion.
துவாபரயுகம் ..	நான்குயுகங்களில் மூன்றாவது யுகம். தருமம் இருபாகங் கொண்டயுகம் அதருமம் இருபாக முள்ளது.	The third yuga or age of the world consisting of 864,000 years. வடசொற்றொடர்.

பக்கம் 20.

சங்கற்பம் ...	வைதிக கருமஞ் செய்கையில் திதி வாரம் முதலியன கூறி இக்கருமத்தைச் செய்கிறேனென்று ஆரம்பத்தில் கோருதல். மனோநிச்சயம்.	Mental resolve or determination.
தம்மடிச்சோதி .	சோதிவடிவமான தமது நிலையிடம்.	கலங்காப் பெருநகரம் Streak or pillar of light.
திதிகர்த்தா ...	காக்குங்கடவுள் ...	வடசொற்றொடர். தற்பவம். ஸ்திதி என்பது திதியாயிற்று.

பக்கம் 21.

ஐயன் ...	வணங்கத்தக்கவன் ...	ஆரியன் எனும் வடசொல் பிராகிருதத்தில் ஐயன் என்றாயது.
கண்ணன் ...	நந்தகோபன் மகன்...	கண் என்பது இங்கு கருணையை யுணர்த்தி அதனை யுடையவன் கண்ணனென்றாயது. திதி கர்த்தாவிடம் கருணை இன்றியமையாமை காண்க.
சரணம் ...	திருவடி ...	வடசொல் Foot of a great person.
விவேகி ...	பகுத்தறிவுள்ளவன் .	A man of discernment. A sharp clever person.

அகராதி முறைப்பதம்	பொருள்.	விசேஷக்குறிப்பு.
	பக்கம் 22.	
கர்ண பரம்பரை	செவிப்புலனால் கேட்டறியும் முறை.	Traditional information.
செம்பாகம் ...	செம்மையான சொல் நடை.	Peculiarity in the style of language.
	பக்கம் 23.	
கீதை ...	இவ் வுலகத்தவர்க்குக் கிருஷ்ணன் அருச்சுனனை வியாஜமாகக்கொண்டுஉபதேசித்த சிறந்த தத்துவநூல். பாரதத்தி லடங்கியுள்ளது.	The song celestial.
சந்தனு ...	சந்திர வம்சத் தரசன். பிரதீபனுக்குச்சுநந்தை இடத்துப் பிறந்த புத்திரன். இவன்முதற்பாரி கங்காதேவி. அவளிடத்தில் பீஷ்மரைப் பெற்றான். இரண்டாவது பாரி பராசரருக்கு வியாசரைப் பெற்ற சத்தியவதி.	A famous king of the lunar race, the 21st sovereign in the line and father of Bhishma.
திருமாலுக் கடிமைசெய்.	இது ஔவையின் நீதி சூத்திரம். கமலை காந்தனை வழிபடு என்பது பொருள்.	Serve Vishṇu the preserver.
தெய்வமிகழேல்.	பிறதெய்வங்களை இகழ்ந்து பேசாதே. இதுவும் ஔவை கூறிய நீதிசூத்திரம்.	Do not blaspheme god.
நியோகித்தல் ...	கட்டளையிடல் ...	To give direction.
மணவாளதாசர்.	பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் இயற்பெயர். ரங்கநாத தாசர் என்பது மிதுவே.	Proper name of the Poet. Literally மணம் marriage + ஆளன் = மணவாளன். Bridegroom. அன் is changed into அர் as a mark of respect.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
பக்கம் 24.		
ஆண்டான் பிள்ளை.	நடுநாட்டில் வக்க பாகையில் இருந்த அரசன். தமிழ்ப்பாரதம் பாடுவித்தவன்.	இவன்பெயர் ஆட்கொண்டானென்றும் வழங்கப்படுகின்றது.
ஒட்டக்கூத்தன்.	இவன் கம்பன் காலத்திருந்த தமிழ்ப்புலவன். ராமாயணத்தில் உத்தரகாண்டம் பாடியவன். புகழேந்தியோடு முதலிற்பகைகொண்டு பிறகு நட்பானோன். கைக்கோளர் மரபுள்ளோன்.	இவன் குலோத்துங்கன். காலத்திலிருந்தவன். குலோத்துங்கன் கோவை, ஈட்டி எழுபது, கலிங்கத்துப்பரணி, முதலிய நூல்கள் செய்தோன். கம்பராமாயணத்தோடு இவன் பாடிய உத்தராராமாயணம் சேர்க்கப்பட்டுள்ளது.
வில்லி ...	இது வில்லிபுத்தூரருக்குச்சுருக்கமாக ஏற்பட்டபெயர்.	Short name of the Poet. ஐயங்கார் என்பதுமுண்டு.
பக்கம் 25.		
கேவலமானநிலை.	மிகவும் இழிவான ஸ்திதி.	A poor or mean status. கேவலம் வடசொல்.
சம்பாவிதம் ...	நடக்கக்கூடியது.	வடசொல். Probability, Likelihood.
தென்கலை ...	தமிழ், தென்னாட்டில் வழங்கிவருங்காரணத்தால் தென்கலையெனக் காரணப்பெயர் கொண்டது,	Southern literature. Tamil literature. கலா எனும் வடசொல் கலை என்றாயது. Learning, erudition, literature philosophy.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
வடகலை ...	ஸம்ஸ்கிருதம் அல்லது தேவபாஷை ஆரியாவர்த்தமாம் வட திக்கில் வழங்கியதால் இப்பெயர் நேர்ந்தது.	Sanskrit literature. It literally means the northern literature.

பக்கம் 26.

சாதனங்கள் ...	உதவிகள் ...	Means.
பாயிரம் ...	முகவுரை ...	Preface or foreword.
வாதம்செய்தல் .	தர்க்கித்தல் ...	Contention in argument.

பக்கம் 27.

குலையாது ...	கெடாமல் ...	Without diverting from its purpose.
குழிப்பு ...	பாடுவதில் சந்த ஓசையின் கணக்கு அல்லது அளவு.	A peculiar harmonic rhythm in verse.

பக்கம் 28.

ஆதிசேஷன் ...	அநந்தன் எனும் பாம்பு. வடமொழி வியாகரணத்திற்குப் பாஷியம் செய்தவன்.	இவ்வுலகத்தினைப் பாதாளத்தின்கீழிருந்து தாங்கும் சர்ப்பம் என்பது நம்மவர் கொள்கை. King of the serpants. A fabulous serpant supposed to support the earth on his head.
கழுவேற்றல் ...	மனிதரைக் கழுமரத்தில் ஏற்றி முடிவித்தல்..	Impaling.
சமயோசிதம்...	சரியானதருணம் ...	A suitable or proper time or opportunity

அகராதி முறைப்பதம்	பொருள்.	விசேஷக் குறிப்பு.
	பக்கம் 29.	
காளமேகப் புலவன்.	வசைகவி பாடுவதில் ந்தபுலவன், கும்பகோணத்தில் பிறந்த சோழியப் பிராமணன்.	ண்ட அம்மை டம்வரம் பெற்றவன்.
குசலம்வினவல்.	க்ஷேமம்வினுதல் ...	Enquiring welfare, &c.
தண்டன்ஸமர்ப்பித்தல்.	வணங்கல். தண்டம் போற்றரையில் விழுந்து வணங்கலுமாம்.	To make obeisance.
தலயாத்திரை...	தலங்களுக்கு யாத்திரைபோதல்.	A journey to sacred places and shrines.
திருப்பதி ...	யஸ்தலம். திருமால் பாடல்பெற்றுக் கோயில் கொண்டதலம்.	Any one of the one hundred and eight vishnu shrines.
	பக்கம் 30.	
சகுனம்	பட்சிக்குப் பெயராய் அவைகள் வலமிடமவ நன்மை தீமை மெனுங் குறிப்பறிவு.	The science of omens: பறவைகளொழிந்த பிராணிகளிடத்தும் சகுனம் பார்ப்பதுண்டு.
பரிவாரம்	சூழவருபவரும் வருபவைகளும்.	Retinue, attendants.
பிரபுடதேவன்..	ஓர்சிற்றரசன். திருஅ மலையில் ந்தவன்.	A petty king who ruled at Trinamalai in S. Arcot Dt.
	பக்கம் 31.	
கொற்றம் ...	வெற்றி ...	Victory. Success.
வேதியன்	மறையவன். வேதமுணர்ந்தவன். பார்ப்பான்.	A brahmin who read Vedas.

பக்கம் 32.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
அந்தரங்கட	ரகசியம்	What is said in confidence.
	...ம ...மூர்த்திக்குத் திரு...ஞ்சனம் செய்தல்...	Bathing of an idol with water, oil, ghee and milk, &c.
அமைச்சன்	மந்திரி ...	அமாத்தியன் எனும் வடசொல்லடியாய் வந்தது. A minister of state.
ஆகமம்	முதல்வன்வாக்கு. வே...பொருளை விளக்கவந்த நூல்களுக்கும் பெயர்.	வடசொல். The Veda, or Shastras prescribed by the deity.
கொசுகு	...சனர் கொசுஎன்று வழங்குகின்றார்கள். கொதுகு என்பது மிதுவே.	A class of several kinds of small flies including gnats mosquitoes, &c. கோஷ எனும் வடசொல்லடியாய்ச் சிதைந்து வந்தபதம்.
சரபம்..	எட்டுகால்களுள்ள ப...	A large fubulous bird with eight legs, regarded as the foe of the lion, and as inhabiting the snowy mountains.
தெய்வபலம்	தெய்வத்தால் நேரும் சகாயம்.	Divine assistance. வடசொற்றொடர்.

பக்கம் 33.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
அடப்பக்காரன்.	...ப்பை வைத்திருக்கும் வேலைக்காரன்.	A servant who carries the betal pouch. This is slang form. அடைப்பைக்காரன் is correct form. அடை. A leaf.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
ஆந்தகன் ...	குருடன் ...	A blind person.
ஆணவம் ...	இறுமாப்பு. தான் என்னும் அகம்.	Pride.
யமகம் ...	ஓர்வகைப்பாட்டு. இதில் வந்த சொல்லே வந்திருப்பினும் பொருள் வேறுபாடமைந்து ஓசைநிரம்பியிருக்கும். இங்குக்காட்டிய யமககவி "திதத்த" வென்று தொடங்குவது. இது ஏகாக்கரத்தாலமைந்துளது.	A species of alliteration, the repetition of words or syllables of like sound but varying in sense in the different parts of a stanza, as at the beginning, middle or end of each hemistich.

அப்பாடல் வருமாறு.

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாதுத்தித் தத்திதா
திதத்தத்தத் தித்தத்தி தித்தித்த தேதுத்து தித்தித்ததா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே.

பதப்பொருள்.

திதத்தத்தத்தித்த=திதத்தத்தத் தித்த என்னுந் தாள மானங்களை, திதி=திருநடத்தாற் காக்கின்ற, தாதை = பரமசிவனும், தாத = பிரமனும், துத்தி = படப்பொறியினையுடைய, தத்தி=பாம்பினுடைய, தா= இடத்தையும், தித=நிலைபெற்ற, தத்து = ததும்புகின்ற, அந்தி=சமுத்திரத்தையும் பாயலாகக் கொண்டு, ததி = தயிரானது, தித்தித்ததே = தித்திக்கின்றதென்று, து=உண்டகண்ணனும், துதித்து=துதிசெய்துவணங்குகின்ற, இதத்து = பேரின்ப சொரூபியான, ஆதி=முதல்வனே, தத்தத்து=தந்தத்தையுடைய, அத்தி=அயிராவதத்தால்

அகாரதி முறைப்பதம். பொருள். விசேஷக் குறிப்பு.

வளர்க்கப்பெற்ற, தத்தை = கிளிபோன்ற தெய்வயானைக்கு, தாத = தொண்டனே, திதே = தீமையே, துதை=நெருங்கிய, தாது=ஸப்த தாதுக்களால் நிறைந்ததும், அகத்து= மரணத்தோடும், உதி=சனனத்தோடும், தத்து=பலதத்துக்களோடும், அத்து = இசைவுற்றதுமான, அத்தி = எலும்புகளை மூடிய, தித்து = பையாகிய இவ்வுடல், தீ=அக்கினியினுல், தீ=தகிக்கப்படுகின்ற, திதி = அந்நாளிலே, துதி=உன்னைத்துதிக்கும், தீ=புத்தி, தொத்தது=உனக்கே அடிமையாகவேண்டும், எ-று. தீ-எழுவாய், தொத்தது பயனிலை, ஏ-அசை.

கருத்து. திதத்ததத்தித்த எனும் தாளத்தால் நடிக்கும் பரமசிவனும், பிர்மமாவும், தயிரையுண்டு பாற்கடலையும் ஆதிசேடனையும் பாயலாகக்கொண்ட திருமாலும் வணங்குகின்ற முதல்வனே, தெய்வயானை தாசனே ஜனனமரணத்துக் கிடமாய் எலும்புமுதலிய தாதுக்கள் நிறைந்த பொல்லாத இவ்வுடற்பை தீயில்வேகுங்காலுன்னைத் துதிக்கும் என் புத்தியை உனதடியிணைக்கு ஆட்படுத்தவேண்டும் என்பதாம்.

விகடபரிமளம். |வெவ்வேறுவாசனை. |வடசொற்றொடர். இங்கு இதை முதலாக உடைய திருப்புகழாம் பாடலையுணர்த்துகின்றது. அப்பாடல் வருமாறு:—

வயலிநகர்க்குமரன் திருப்புகழ்.

விகட பரிமள மிருகமத இமசல
வகிர படிரமு மளவிய களபமு
மட்டித்தி தழ்த்தொடைமு டித்துத்தெ ருத்தலையில்
உலவி யிளைஞர்கள் பொருளுட னுயிர்கவர்
கலவி விதவிய னரிவையர் மருள்வலை
யிட்டுத்து வக்கியிடர் பட்டுத்தி யக்கியவர்
விரவு நவமணி முகபட எதிர்பொரு
புரண புளகித இளநகி லுரமிசை
தைக்கக்க ழுத்தொடுகை யொக்கப்பி ணித்திறுகி
அன்புகூர. (க)

அகராதி முறைப்பதம் பொருள். விசேஷக் குறிப்பு.

விபுத ரமுதென மதுவென வறுசுவை
அபரி மிதமென இலவிதழ் முறைமுறை
துய்த்துக் களித்துநகம் வைத்துப்ப விற்குறியின்
வரைவு முறைசெய்து முனிவரு மனவலி
கரையு மரிசன பரிசன ப்ரியவுடை
தொட்டுக்கு லைத்துநுதல் பொட்டுப்ப டுத்திமதர்
விழிகள் குழைபொர மதிமுகம் வெயர்வெழ
மொழிகள் பதறிட ரதிபதி கலைவழி
கற்றிட்ட புட்குரல்மி டற்றிற்ப யிற்றிமடு
உந்திழுழ்கி. (உ)

புகழு வெகுவித கரணமு மருவிய
வகையின் முகிலென இருளென வனமென
ஒப்பித்த நெய்த்தபல புஷ்பக்கு ழற்சரிய
அமுத நிலைமல ரடிமுதல் முடிகடை
குமுத பதிகலை குறைகலை நிறைகலை
சித்தத்த ழுத்தியனு வர்க்கத்து ருக்கியோடு
பொழுதும் விடலரி தெனுமனு பவமவை
முழுது மொழிவற மருவிய கலவியி
தத்துப்ரி யப்படந டித்துத்து வட்சியினில்
நைந்துசோர. (ந)

புணரு மிதுசிறு சுகமென இகபரம்
உணரு மறிவிலி ப்ரமைதரு கிரிமலம்
அற்றுக் கருத்தொ ருமையுற்றுப் புலத்தலையில்
மறுகு பொறிகழல் நிறுவியெ சிறுதுமெய்
உணர்வு முணர்வுற வழுவற வொருஜக
வித்தைக்கு ணத்ரயமும் நிர்த்தத்து வைத்துமறை
புகலு மனுபவ வடிவினை யளவறு
அகில வெளியையு மொளியையு மறிசிவ
தத்வப்ர சித்திதனை முத்திச்சி வக்கடலை
யென்று சேர்வேன். (ச)

அகராதி முறைப்பதம். பொருள். விசேஷக் குறிப்பு.

திகுட திகுகுட திகுகுட திகுகுட
தகுட தகுகுட தகுகுட தகுகுட
திக்குத்தி குத்திகுட தக்குத்த குத்தகுட
டிமிட டிமிமிட டிமிமிட டிமிமிட
டமட டமமட டமமட டமமட
டிட்டிட்டி டிட்டிமிட டட்டட்ட டட்டமட
திகுர்தி திகுதிது திகுகுர்தி திகுகுர்தி
தகுர்தி தகுதகு தகுகுர்தி தகுகுர்தி
திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி
என்றுபேரி (௬)

திமிலை காடிகை பதலைச லரிதவில்
தமர முரசுகள் குடமுழ வொடுதுடி
சத்தக்க ணப்பறைகள் மெத்தத்தொ னித்ததிர
அசுரர் குலஅரி அமரர்கள் ஜயபதி
குசல பசுபதி குருவென விருதுகள்
ஓத்தத்தி ரட்பலவு முற்றிக்க விக்கவெழு
சிகர கொடுமுடி கிடுகிடு கிடுவென
மகர சலநிதி மொகுமொகு மொகுவென
எட்டுத்தி சைக்களிறு மட்டற்ற றப்பிளிற
நின்ற சேடன். (௬)

மகுட சிரதலம் நெறுநெறு நெறுவென
அகில புவனமு ஹரஹர ஹரவென
நக்ஷத்ர முக்கிவிழ வக்கிட்ட துட்டகுண
நிருதர் தலையற வடிவெனு மலைசொரி
குருதி யருவியின் முழுகிய கழுகுகள்
பக்கப்ப ழுத்தவுடல் செக்கச்சி வத்துவிட
வயிறு சரிகுடல் நரிதின நிணமவை
எயிறு அலகைகள் நெடுகிய குறளிகள்
பக்ஷித்து நிர்த்தமிட ரக்ஷித்த லைப்பரவி
யும்பர்வாழ். (எ)

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.

மடிய அவுணர்கள் குரகத கஜரத
கடக முடைபட வெடிபட வெழுகிரி
அற்றுப் பறக்கவெகு திக்குப்ப டித்துநவ
நதிகள் குழைதர இபபதி மகிழ்வுற
அமர்செய் தயில்கையில் வெயிலெழ மயில்மிசை
அக்குக் குடர்க்கொடி செருக்கப் பெருக்கமுடன்
வயலி நகருறை சரவண பவகுக
இயலு மிசைகளும் நடனமும் வகைவகை
சத்யப்ப டிக்கினித கத்தியர்க் குணர்த்தியருள்
தம்பிரானே (அ)

பக்கம் 34.

கைவாள	சிறுகத்தி	A Hand knife.
ஜயம்	வெற்றி	Victory.
ெ	சன்மானம்,	Reward.

பக்கம் 35.

அமர்த்து ..	அடக்கு	To make quiet.
காலநிர்ணயம்	காலநிச்சயம்	Chronology.
சாத்தேயன்	சத்திபூசைசெய்வோன்	A person among the persons who worship Sakti and who belong to a sect.
பிரதிநாமம	வேறுபேர்	Name sake.
வாதம்	சர்ச்சைசெய்தல்.விவாதம். சொற்கலகம்...	A disputation.

பக்கம் 36.

உத்தேசம்	நிதானம் ...	To give a guess or estimate.
சம்புடம் ...	ஓர் புத்தகத்தின்ப	A volume of book.
சாசனம் ...	ஆதாரவு. பட்டயம். பட்டோலை.	A royal edict.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
செங்கணான் ...	கோச்செங்கட் சோழன் என்பதும் இவன் பெயர், இவன் சோழ அரசர்களிலொருவன். பல ஆலயங்களைக் கட்டுவித்தவன். தில்லைவாழந்தணர்களுக்கும் கிரகங்கள் நிர்மாணம் செய்தவன்.	A Chola King who reigned about 4500 years ago. He is the son of Subha-deva and his wife Kamalavathy.

பக்கம் 37.

உபயவேதாந்தம்	பிரமசூத்திர பாஷியரூபமான வடமொழி வேதாந்தமும் சடகோபர் திருவாய்மொழி ரூபமான தமிழ்மொழி வேதாந்தமும். இவ்விரண்டும் வைஷ்ணவப்பிராமணர்களுக்குமட்டும் உண்டு.	வடசொற்றொடர் உபய. Double + வேதாந்தம். The end of the Vedas. This is peculiar among Vaishnava Brahmins.
கரிகாற்சோழன்.	இப்பெயர் கொண்ட சோழர் இருவர். இங்குக் குறிப்பிட்டவர் உறையூரிலரசாண்ட சோழனுமல்ல இராமாநுஜர் காலத்தவனுமல்ல. காவிரிப்பூம்பட்டினத்தாண்டவன்.	The Chola whose capital was புகார். காவிரிப்பூம்பட்டினம்.
நிதானம் ...	மதிப்பு ...	Guess.
பட்டம் ...	ஆதிக்கப்பெயர் ...	A title of office.

பக்கம் 38.

சமயாசாரியார்.	ஓர்சமயத்தாரின் குரு	A Spiritual teacher and guide of a sect.
தாரதம்மியம்...	உயர்வுதாழ்வு ...	A Sanskrit compound implying more or less, greater or smaller, superior or inferior.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
பாஷியம் ...	வேதாந்த சூத்திரத்திற்கு இராமாநுஜர் செய்த விரிவுரை.	வடசொல் a commentary on sutras, &c.
பிரபந்தம் ...	வைஷ்ணவர்களுள் ஆழ்வார்பாடல்களுக்குப் பெயர்.	A connected discussion literally but relates here to the Tamil Veda of Vaishnava Saints.
லளிதம் ...	லேசாய் அறியத்தக்கது	வடசொல் Pleasing or simple.

பக்கம் 39.

கண்ஞேக்கம் .	கவனிப்பு ...	Attention.
கலம்பகம் ...	தமிழில் ஓர் பிரபந்தம் பலவகைப்பாடல்சேர்ந்ததால் இப்பெயர் கொண்டது.	A kind of poem composed of various metres.
பாகபேதம் ...	பாஷைநடையின் பேதம்.	Kind of style.
பாகுபாடு ...	பிரிவு. பகுப்பு ...	Division, Sub-division.
வாசனை ...	சம்பந்தத்தால் வந்துள்ள நடை.	Acquired habit.
விஷயசோதனை.	சங்கதியை ஆராய்ச்சி செய்தல்.	Examination of a subject.

பக்கம் 40.

தூர் ...	வேர் ...	Root.
பரிதாபம் ...	அதிகக்கொதிப்பு ...	Excessive heat of body. வடசொல்.
பற்குனன் ...	அர்ச்சுனன் ...	வடசொல் காரணப் பெயர். Arjuna who was born in the 12th lunar mansion.

அகராதி முறைப் பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.

பக்கம் 41.

அணங்கு ...	தெய்வப்பெண் ...	A female inhabitant of Svarga.
கயிரவம் ...	செவ்வாம்பல் ...	வடசொல். Red water lily.
குணதிசை ...	கிழக்குத்திக்கு ...	வடசொற்றொடர். தற்பவம் திசா = திசை. நன்னூல். பதவியல் 20. சூத். ஆவீறு. ஐயும்.
தாரை ...	ஒழுங்கு ...	வடசொல், தாரா = தாரை. Drops of water or a continuous stream.
நிரை ...	வரிசை ...	Arrangement.
விடாய் ...	சோர்வு ...	தற்பவமாய்வந்த வடசொல். (விஷாதம். வடசொல்) faint or weary state.

பக்கம் 42.

கணிகைமாதர்..	வேசையர். பொதுப் பெண்டிர்.	கணிகா = கணிகை Adancing girl.
கற்பனை ...	புனைந்துரை ...	Elegance in poetry. கவியமைப்பு.
குலமாதர் ...	நல்லகுடியிற் பிறந்த பெண்.	A woman of good caste.

பிள்ளைப்பெருமாள்.

பக்கம் 43.

அகராதிமுறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
அமர்த்தி ...	ஏற்படுத்தி, நியோகித்து.	Having engaged.
திவ்யகவி ...	தெய்வப்புலவன் ...	வடசொற்றொடர். தற்சமம். A poet divinely inspired.
நூலாராய்ச்சி ...	கிரந்தபரிசோதனை ...	நூல். A literary or scientific book. ஆராய்ச்சி. Research.
ராயசவேலை ...	சம்பிரதித்தொழில் ...	The post of a public secretary or accountant.

பக்கம் 44.

அகராதிமுறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
அநுஸந்தானம்.	பாராயணம் ...	Recitation of the Veda according to rule.
சிகாமணி ...	முடியிலேதரிக்கும் மணிபோற் சிறந்தவர்.	வடசொற்றொடர் சூடாமணியுமாம். A person like the chief gem in a crown as worn on the head.
பாகவதர் ..	பகவானும் விஷ்ணுவின் பத்தியிற் சிறந்தோர். வைணவர்.	The Vishnu sect, generally applied to such as are more advanced in the system of Visishtadwaitam.
மூலபுருஷர் ...	குலத்தின் அடியில் முதலாய் நிற்பவர்.	வடசொற்றொடர். This first or chief man in genoalogy.
ஸேவாகாலஞ் செய்தல்.	பாராயணஞ்செய்தல், அநுஸந்தானம்.	A peculiar term used among Vaishnava Brahmins.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.

பக்கம் 45.

குறுணி ...	மரக்காலளவுகொண்டது.	A nominal dry-measure, in quantity equal to the மரக்கால். இதையுணர்த்தும் வடசொல் சிவம்.
நிர்ப்பந்தம் ...	தடை, இடையூறு. கட்டாயப்படுத்தல்.	வடசொல். Compulsion.
பதக்கு	இரண்டுமரக்கால்கொண்ட அளவு.	A dry measure of two குறுணி, இதையுணர்த்தும் வடசொல் துரோணம்.

பக்கம் 46.

குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக் கொண்டது போல்.	இது பழமொழி, செய்யப்போனது கைகூடாமையை உணர்த்துவது.	As one smeared himself with mud after bathing.
திரிகரணம் ...	முப்பொறி, (உள்ளம், உரை செயல்).	The three organs. These as instruments for divine worship are: மனம், the mind or source of thought; 2. வாக்கு the mouth, as forming words; 3. காயம் the body, producing action. வடசொற்றொடர். A compound of திரி = Three, adjectively triple, three-fold மூன்று and கரணம் an organ of sense or இந்திரியம்.
சுத்தசத்துவம்.	முக்குணத்திலொன்று, மற்றிரண்டின் சார்பில்லாதது.	வடசொற்றொடர். A compound of சுத்தம் = pureness or purity, and சத்துவம் = The first of three principles in nature.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
வீம்பிற்குவேடங் கொள்ளாதே.	இது ஓர் பழமொழி..	Do not assume a garb for mere show.
வீரவைணவர்.	கடியவைணவர் ...	வடசொற்றொடர். A Sanskrit compound of வீரம். Bravery and வைஷ்ணவர், the follower of Vishnu, a high Vaishnava, opposed to வீரசைவர் high Saivas who worship the Linga; formerly known, as the exterminators of the Jainas.

பக்கம் 47.

ஆதங்கம் ...	ஆபத்து, இடறு ...	Mishap or calamity, vulgarly used as, ஆடங்கம். வடசொல்.
கபிலை ...	காராம்பசு ...	A dimcolored cow. (கருமை கலந்த பொன்மை) வடசொல் கபிலா.
சபதம் ...	ஆணை இட்டுக்கொள்ளுதல்.	A binding of one's self by an oath to a certain action.
ஜயவிஜயூர்கள்...	திருமாலின் வாயில் காக்குமிருவர்.	The two, door-keepers of Vishnu.
பிராதக்காலம்...	விடியற்காலம் ...	Day break. வடசொற்றொடர் (பிராத + காலம்).

பக்கம் 48.

ஆனைக்கா ...	கஜாரணியம் எனும் வடசொற்றொடரின் பெயர்ப்பு, சைவர்களின் முக்கியதலம், அரங்கத்திற்கருகேயுள்ளது.	வெள்ளையானை வழிபட்ட தலம். (யானை வனம்) சுவாமி வெள்ளைநாவல் மரத்தடியில் வீற்றிருப்பதால் ஜம்புகேச்வரம் என்னும் பெயருண்டாயிற்று.

அகாதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
ஆவேசம் ...	சன்னதம். ... மருள்.	A paraxysm of reilgious frenzy, through excessive zeal, வடசொல்.
கபாலம் ...	மண்டையோடு. ... தலைமண்டை.	The scull, the cranium used by Siva as a bowl for begging.
பரப்பிர்ம விவேகம்.	ஓர்சிறுநூல். திருமாலின் சிறப்பைப் பகுத்துநிச்சயிக்கும் பாக்கள்.	A small treatise which establishes the superiority of Vishnu.
விசுவரூப தரிசனம்.	திருக்காப்புத் திறக்கும்போது அதிகாலையில் மூர்த்தியைத் தரிசித்தல். (காட்சிகொள்ளல்.)	The first sight of the idol when the door of the Sanctuary is opened early in the morning.

பக்கம் 49.

கரா ...	ஆண்முதலை ...	A male alligator.
சமயவாதம் ...	சமயச்சார்பான வாக்குவாதம்.	Religious disputation.
மழு ...	காய்ந்தெரியு மிரும்பு.	A testing iron applied red-hot to the hand to prove guilt or innocence.
மனோதிடம் ...	மனதின்வலு ...	Resolution. Firmness of mind.
முறையிடல் ...	குறைகூறிக்கொள்ளல்	Uttering complaints.
மூலம் ...	ஆதிகாரணப்பொருள்.	The primeval deity.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.

பக்கம் 50.

அரங்கர் ...	அரங்கத்தி லிருப்பவனே, எனவிளி. அரங்கம் ஆற்றிடைக்குறை. அங்குள்ளான் அரங்கன்.	An island formed by a river or rivers.
நவநீதம் ...	புதுவெண்ணெய் ...	Fresh butter.
மணவாளன் ...	அரங்கநாதன் அழகிய மணவாளன் என்பவை வழக்கப் பெயர்கள்.	மணம் = Marriage + ஆளன் = மணவாளன் Bride-groom. Here used to represent the God worshipped at Srirangam.
மதிக்கும். ...	கடையும் ...	Sans. மத் = to turn or churn பெயரெச்சம் qualifies நவநீதம்.
வழிபடுகடவுள்.	தினந்தோறும் வழிபடும் மூர்த்தி.	The particular deity worshipped daily.

பக்கம் 51.

கண்டமாலை ...	கழுத்தில் வரிசையாய் உண்டாகும் புடைகள்.	Scrafula, a disease appearing in tumors in the neck, கழுத்தில் வரும்புண். வடசொற்றொடர்.
கனவு ...	சொப்பனம். கனா! ...	A dream oppo. நனவு wakeful state.
குரங்கன் ...	சிவபிரான் ...	வடசொல், காரணப்பெயர் குரங்கம் = மான், அதைக்கையில் உடையவன்.
திருமால் ...	கமலைகாந்தன் ...	திரு - prosperity, wealth, goddess of fortune + மால் = வேட்கை lust திருமகளின் ஆசைக்குரியவன். திருவுக்குந் திருவாய் விளங்குபவன்.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
	பக்கம் 52.	
ஈரைந்து	பத்து. இது பிள்ளைப் பெருமாள் செய்த பிரபந்தங்களின்தொகை.	பின் ஆராய்ச்சியில் இவர் பனிரண்டு பிரபந்தங்களை செய்திருப்பதாய் வெளியாகின்

அவ்விரண்டு பிரபந்தங்களாவன :—

1. திருவரங்கக்கோவை.
2. திருவரங்கவெண்பாமாலை.

கோவையில் ஆறு ஏழுபாடல்கள்மட்டும் இக்காலத்தில் வழங்கிவருகின்றன. வெண்பாமாலையில் நமக்குக் கிடைத்திருப்பது ஒரு வெண்பாவேயாம். மாதிரிக்கு கோவையில் ஒரு கலித்துறையும் அவ்வெண்பா வொன்றும் இங்குக் காட்டப்படுகின்றன.

அரங்கக்கோவை.

அல்லைப் பகல்செய்யு மாலரங் கேச ரணிவரைமேல்
கொல்லைக் குறவர் மடந்தையெங் கேசொலுங் கோலமதன்
வில்லைக் குனிப்பவ ரேயனு ராகம் விளைப்பவரே
கல்லைப்பெண் ணுக்கு பவரேயென் மானத்தைக் காப்பவரே.

தலைவன் பகற்குறிவழியாய்த் தலைவியைத் தினைப்புனத்துக் காணலாமென்று ஆவலோடு சென்றபோது அங்குத் தலைவியைக் காணாது வறும்புனங்கண்டு வருந்தியதை இத்துறை காட்டுகின்றது. அப்புனத்தி னருகிலிருந்த வண்டுகளையும் குயில்களையும், அரிந்துவிட்ட தினைத்தாள்களையும் மான்களையுங்கண்டு, யாம் விரும்பிக்காணவந்த குறப்பெண் எங்கேபோ

யினள் சொல்லுமென்று தலைவன் வினவினான், என்பதே இத்துறையின் பொருள். இச்செய்யுளின் முதலடி அரங்கன் வரையைச் சுட்டிநிற்கின்றது.

ரிப்பவரென்றதால் வண்டுகள் சுட்டப்பட்டன. மதனன்கரும்பு வில்லுக்கு வண்டுகள் நாண்கயிறுவதால் இவ்வாறு சொல்லப்பட்டது. அனுராகம் விளைப்பவரென்றதால் குயில்கள் சுட்டப்பட்டன. குயிலோசை விரகவேதனையை உண்டாக்குதல்பற்றி இது கூறப்பட்டது. கல்லைப் பெண்ணாக்குபவ ரென்றதால் திருமாலின் தாள்கள் கொள்ளப்பட்டன. அரிந்துவிட்ட திணைத்தாள் அரிதாளாகி அரிதிருமாலையுணர்த்துதல்காண்க. அகலிகையின் கல்லுருவைப் பெண்ணுருவாக்கியது தயரதராமன் தாள்கள் என்பதனால் இவ்வாறோதப்பட்டது. மானத்தைக் காப்பவர்: கலையென்பது வஸ்திரம். மானத்தைக்காக்க அது மாந்தர்க்கு ஆடையாய் நின்று உதவுகின்றன. இக்காரணங்கருதி இது எடுத்துக்கொள்ளப்பட்டது. இங்குக் கலையென்பது சிலேடையாய் கலைமானினத்தை விளக்கியது.

அர் எனும் பலர் பால்விகுதி கண்டபொருள்களைச் சிறப்பிக்குந் திருணத்தில் எடுத்தாளப்பட்டது.

திருவரங்கத்து வெண்பாமாலை.

கொம்பா நகிற்சியர்கண் கூறுதமிழ்க் காவிரியும்
அம்பாக மேவு| மரங்கமே..................சம்பாதி
தம்பிக்குத் தீத்தான் தருகிறு ஞைரைவர்
தம்பிக்குத் தீர்த்தான் றலம்.

இதனுள் தலைமகளினது கண்ணின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. "அம்பாகமேவும்" இத்தொடர்மொழியின் பொருள் நயம் வருமாறு :—கண் அம்பு ஆகமேவும். கண்தமிழினிடம்

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.

கூறும் அம்பாகம்போலும். கண்காவிரி அம்பு ஆகமேவும்; அம்பு = நீர்: நீர்போன்ற குளிர்ச்சியையுதவும். அம்புபோல் வன்மையும் தமிழ்போலினிமையும் காவிரிநீர்போல் குளிர்ச்சியுமுள்ளகண் எனக்கொள்க.

சம்பாதி ஜடாயுவின் அண்ணன். தீசம்பாதி தம்பிக்குத் தருகிறான். இராமன் தீக்கடன் செய்தமை சொல்லப்பட்டது. ஓரைவர், பஞ்சபாண்டவர். அவர் பிக்கு கலகத்தைத் தீர்த்தான் கண்ணன். கம்பன் அயோத்தியாகாண்டம் கங்கைப்படலத்து "அருப்பேந்திய * * * மதமாமருப்பேந்திய எனலாம்" என்று நகிலைச் சிறப்பித்திருத்தலால் கொம்பாமென்றதால் ஆனைக்கொம்பெனக்கொள்க.

இவ்விரண்டுபுஸ்தகங்களும் இன்னும் அச்சியந்திரத்தைக் காணவில்லை. ஓலைப்புத்தகவடிவமாய் யாரிடம் எந்நிலையி லுள்ளதோ புலப்படவில்லை. இந்நூல்கள்பாடிய துண்மையென்பது விளங்குகின்றது.

சமயப்பேய்	மதாவேசங் கொண்ட பேய். மதம் = என்பது சித்தாந்தம். தகரம் வல்லோசைகொண்டதாகையால் கொள்கை யெனும் பொருள்கொண்டது.	சமயம் வடசொல். A religious system. பேய் = Devil. Here சமயப்பேய் represents religious frenzy.
திருமாலுக் கடிமைசெய்.	ஆத்திசூடிச் சூத்திரம். காக்கும் கடவுளாம் கமலைகாந்தனை வழிபடு என்பது பொருள்.	Serve Vishnu—the concort of Goddess of wealth.
தெய்வ மிகழேல்.	[illegible]ரம். [illegible]நி[illegible]ந்திக்காதே என்பது பொருள்.	Do not blaspheme God.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக் குறிப்பு.
பக்கம் 53.		
கொற்கை	பாண்டியர்களின் பழயராசதானி. இப்பொழுது சிறிய ஊராக இருக்கின்றது.	Ancient town of Pandian Kings.
பக்கம் 54.		
உத்தியோகம் ...	தொழில் ...	Office. Function. Employment. வடசொல்.
உறசவம ...	திருவிழா ...	வடசொல். A religious festival.
சித்தப்பிரமை .	மனமயக்கம். பிரமை.	Madness or பிரமை stuper. வடசொற்றொடர்.
தேகயாத்திரை	ஜீவனம். சரீரபோஷணை.	Food. Maintenance for the body. Support. வடசொற்றொடர்.
பக்கம் 55.		
சாஷ்டாங்க நமஸ்காரம்.	எட்டங்கங்கள் தரையிற்படும்படி வணங்கல்.	வடசொற்றொடர். எட்டங்கங்களாவன :— ... 2 கால் ... 2 தோள் ... 2 மார்பு ... 1 ... 1 ஆக 8 Prostration by bringing eight parts of the body in contact with the ground.
நியமித்தல் ..	கட்டளையிடல், தீர்மானித்தல்.	வடசொல். Ordering or determining.

அகாதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.
மனோபாவனை...	மனத்திற்பாவிக்கை.	Imagination. Fancy. வடசொற்றொடர்.

பக்கம் 56.

சாதம்.	அன்னம்.	Boiled rice.
தளிகைப் பிரசாதம்.	நைவேத்தியம் செய்த அன்னம்.	A moulded rice cake for the temple. A compound of தளிகை + பிரஸாதம். பிரஸாதம் வடசொல். தளிகை = உண்கலம். An eating vessel.
வழவழ	திடமில்லாத. சோபியாத.	Slippery. To speak without meaning. or அலபப.
வ(	குற்றம	A compound of வழு. An error and விழு to fall off.

பக்கம் 57.

	கவயசான கிழம்.	Very old man.
பொரிகடலை	பொரித்த நெல்லும் வறுத்த கடலையும்.	Fried rice and Bengal gram usually given to young boys.

பக்கம் 58.

சாதுரியம்	சாமர்த்தியம் ...	Cleverness.
நரைதிரை	மயிரின் வெண்மையும தோலின சுருக்கமும். இவையிரண்டும் கிழத்தன்மையையுணர்த்தும் குறிகள்.	Hoariness and wrinkle in the skins caused by age.
புள்ளிக்குறி ...	புள்ளியாக இடும்குறி. வாக்கியத்தின முடிவைக்காட்டும் சங்கேதம்.	A full stop.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு.

பக்கம் 59.

திருநாட்டிற்கு எழுந்தருளல்.	வைகுண்டத்திற்குப் போதல். மரணமடைதல்.	A peculiar expression among Vaishnava Brahmins to represent death. Which means to reach the paradise of Vishnu : செத்தாரைத்துஞ்சினு ரென்பதுபோல இது தகுதி வழக்கில் சேர்ந்த மங்கலமொழியாம்.
துளவம் ...	திருத்துழாய். வழக்கில் துளசி.	Holy basil—afragrant herb held in great veneration by the Hindus.

பக்கம் 60.

ஈடுபடல் ...	கண்ட உண்மையை அநுபவித்தல். தெளிவு.	Clear discernment.
தீராச்கோபம் போராய்முடியும்	நீங்காத கோபம் பிறகு சண்டையாய் முடியும்.	இது கொன்றைவேந்தனில் ஔவைகூறிய சூத்திரம். Inplacable anger will end in a fight.

பக்கம் 61.

நிரந்தரம் ...	எப்பொழுதும் ...	வடசொல். Always.
பெரும ...	பெருமானே ...	விளிவேற்றுமை.
மருங்கு ...	இடை ...	The waist.

பக்கம் 62.

கொண்டல் ...	மேகம் ...	A dark cloud.
மாலை ...	அந்திப்பொழுது அறுவகைச் சிறுபொழுதில் ஒன்று.	Evening. One of the six divisions of the day ; from sun set till ten o'clock.

அகராதி முறைப்பதம்.	பொருள்.	விசேஷக்குறிப்பு
வீடு ...	மோக்ஷம். பிறப்பற்ற நிலை.	பிறவித்துயர் நீங்கிய நிலை. காரணப்பெயர். The happiness of heaven.

பக்கம் 63.

ஆரணத்து அந்தம்.	மறையின் முடிவுப் பொருள்.	
சாபம் ...	இருபொருள் கொண்டசொல். வில். சபித்தல்.	
தானை ...	மகளிராடை ...	A female cloth is meant here.
வாரணத்தந்தம்	ஆனைக்கொம்பு ...	The tusk of the elephant. வடசொற்றொடர்த், தோன்றல் விகாரம்.

அரும்பத விளக்கமும் விசேஷக்குறிப்பும் நிறைவேறின.

ERRATA.

Page 65. *Read* devotees *for* devoties.
,, ,, ,, Brahmins ,, brahmins.
,, 66 ,, mountainous ,, mountaneous.



தூப்புல்

ஸ்ரீ வேங்கடநாதாசார்ய

சரித்திரச் சுருக்கம்

சென்னை
ஸெண்தோம் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்து
இப்பொழுது
கோர்ட்டு ஆப் வார்ட்ஸில்
சாப்டூர் மைனர் ஜமீன்தாரவர்களுக்கு
உபாத்தியாயராயிருக்கும்
தில்லையம்பூர்
வேங்கடராம ஐயங்காரவர்களால்
எழுதப்பட்டு

கும்பகோணம்:
அலெக்ஸாண்ட்ரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.
(முதற் பதிப்பு.)

1909.

Price As. 8. *Copyright Registered.* **Postage Extra.**

INTRODUCTION.

IT is satisfactory to observe that Pandit Venkatarama Aiyangar has continued to devote his time and energy to the cause of Tamil Literature and published this Biographical Sketch of the renowned "Sri Venkatanath" who is generally known as Vedanata Desikar. I am glad that the author has chosen as the subject of the book the life of this eminent philosopher and poet, who is still greatly revered by all the Vaishnavas of the Vadagalai sect throughout India. The efforts made by Pandit Venkatarama Aiyangar in this direction now, when the Indians are generally neglecting their own vernaculars for the study of English are commendable and I hope they will meet with the encouragement they deserve.

SAIDAPET,
16*th Dec.* 1908.

V. RAGAVA CHARLU.

PREFACE.

THIS my humble contribution to modern prose literature in Tamil, which is in the process of formation needs very little preface. In this Biographical Sketch, the readers will find that I have eschewed, as far as possible sectarian disputes and technicalities and I have taken care to write good simple Tamil prose.

The life of Sri Venkatanath who is well known in Southern India as a Sanskrit Poet, Logician and Vadantin and also as a Tamil scholar and poet, is the subject of this treatise. He lived in 13th and 14th centuries and was a contemporary of Sri Vidyaranya.

A few stanzas from his philosophical and devotional treatise in Tamil—Desika Prabhandam, are inserted as samples. Wherever I found it necessary, I have used Sanskrit words. The admixture of Sanskrit with Tamil seems to me to render Tamil Prose nonvirile,

harmonious and attractive. In this I have followed Thayumanavar and the Author of Tamil Panchatantram.

I take this opportunity to offer my best thanks to Dewan Bahadur V. Ragavacharlu Avergal, B.A., Tamil Translator to Government, for his kindness, in writing an Introduction to this book.

MADRAS,
16th Dec. 1908.

T. V. R.

DEDICATED

TO

ALL EARNEST WORKERS

IN THE FIELD OF

TAMIL LITERATURE.

விஷயக் குறிப்பு.


விஷயக் குறிப்பு—(தொடர்ச்சி).

உ

தூப்புல் ஸ்ரீ வேங்கடநாதாசாரியராம்

ஸ்ரீ வேதாந்த தேசிகரின்,

சரித்திரச்சுருக்கம்.



முகவுரை.



ஸ்ரீ வேங்கடநாதாசாரியரின் சரித்திரம் வடமொழியிலும், தென்மொழியிலும், மணிப்பவள நடையிலும் பற்பலரால் எழுதப்பட்டுள்ளது. அவைகளுள் வைபவப் பிரகாசிகை என்பது சோளஸிங்கபுரம் சண்டமாருதம் ஸ்ரீ தொட்டையாசாரியரால் வடமொழியிற் செய்யப்பட்டுள்ளது. இதை இவருடைய சிஷ்யர் மகார்ய தாசரென்கிற பெரியப்பங்கார் மணிப்பவள ரூபமாக எழுதி வெளிப்படுத்தியுள்ளார். வடகலை வைஷ்ணவர்களுள் வழங்கிவரும் குருபரம்பரையெனும் வசன நூலில் தமிழில் இம்மகான் சரித்திரம் எழுதப்பட்டிருக்கின்றது.

அன்றி நாடகத்தமிழ்ப்பாங்காய்க் கீர்த்தனையாகவும், வெண்பா, கலித்துறை, விருத்தப்பா ரூபமாகவும், மத்தியார்ச்சுனம் ஸ்ரீ அனந்தபாரதியார் "ஸ்ரீமத் வேதாந்ததேசிகவைபவப் பிரகாசிகைக் கீர்த்தனை" என்ற ஒரு நூல் செய்துள்ளார். ஸ்ரீரங்கம் மஹாமஹோபாத்தியாயர் கடாமூர் ஸ்ரீ ஸாந்தராசாரியார் ஸ்வாமி

கள் தமிழில் வசனரூபமாக வேதாந்த தேசிகன் வைபவப்பிரகாசிகையெனச் சுருக்கமாகச் செய்து வெளிப்படுத்தியதொன்று முள்ளது.

இதன்றிச் சீனிவாஸகவி வடமொழியில் வேதாந்தாசாரியசரிதமென ஒரு காவியம் செய்துள்ளார். மற்றொரு வேதாந்தசாரியர் விபவமொன்றும் சம்பிரதாயத்தமொன்றும், வழங்கி வருகின்றது. சங்கற்ப சூரியோதய நாடகத்தின் முதலில் முன்பந்தமேலி ஸ்ரீநிவாச கோபால சாரியார் தமிழில் வசனரூபமாய்ச் செய்து ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் சரித்திரச் சுருக்கமெனப் பெயரிட்டு எழுதிச்சேர்த்திருப்பதொன்றும், வழங்கி வருவன.

திருவல்லிக்கேணி ஸ்ரீ பாலகிருஷ்ண முதலியார் தொகுரா எனும் பத்திரமாய்த் தெலுங்கில் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ள ஆழ்வாராசாரியார் வைபவமெனும் கிரந்தத்தில் ஸ்ரீ தேசிகர் வைபவமும் சுருக்கமாய் எழுதப்பட்டுள்ளது. இங்ஙனம் ஸ்ரீ வேதாந்தாசாரியார், ஸ்ரீனிவாச கோபாலாசாரியாரிவர்கள் செய்துள்ள சுருக்கமும் ஆகமொன்றாய், வெளிவந்துள்ளன. மற்றவை விரிவாயும் தமிழ் மட்டு முணர்ந்த அடியார்க்கும் பெண்ணினத்தவர்களுக்கும் இனிது விளங்கும்படியிலிருப்பதாலும், பரிபாஷைகள் நிறைந்திருப்பதாலும், காலநிலைக்கேற்றபடி எளிதாய் தமிழ்நடையில் எல்லோரும் படித்தறியும்படி கடிபாட்டின் சம்பவாதங்களும் தூஷணைகளும் தலை கீட்டாமல் ...

பாஷா கவிசக்ரவர்த்தியாயும், கவிதார்க்கிகர்களுக்குச் சிங்கமாயுமுள்ள இம்மகானின் சரித்திரத்தை எளியேனறிவிலுதித்தபடி ஒழுங்காக்கி வெளிப்படுத்தியிருக்கின்றேன். நமது நாட்டில் முன்னாளில் விளங்கிய மகா பண்டிதர்களின் சரித்திரங்கள் இக்கால நிலைக்கேற்க அமைவுறாது ஒரே கதம்பமாய்ப் பரந்து கிடப்பதால் இச்சரித்திர ஸாரத்தைப்பின் வருமாறு பகுத்துக் கொண்டு எழுதலானேன். மகான்களின் சரித்திரங்களில் நாம் பகுத்தறியும் ஸாரங்களே நம்மை நல்வழியிற் செலுத்துவதற்கு முக்கிய ஸாதனங்களாமாதலால் அவைகளை நாம்பகுத்தறிந்து நம்மாலியன்றமட்டும் அனுஷ்டிப்பது இக்கலி நாளில் நமது கடமையாகின்றது. ஆழ்வார் ஆசாரியார்கள் வீற்றிருந்த காலத்துத் தென்கலை வடகலை யெனு மிருவகையார்களுள்ளும் இக்காலத்துக்காணப்படுவது போல் பிணக்குகள் நேரிட்டிருந்ததாகக் காணப்படவில்லை. அவர்கள் முன் காலத்தில் ஸாதுக்களாய்க் கூடிக்குலாவியதாய் மட்டும் அறிகிறோம். வடகலையாரின் மடாதிபத்தியத்தில் தென்கலை மகான்கள் மடாதிபதிகளாய் விளங்கியதுமுண்டு. கன்மபரிபாகமே காரணமாய் முன்னிற்கும்போது ஸோபானக்கிரமத்தால் பக்தி வழியிலும் பல நிலைகள் காணப்படுகின்றன. அப்பத்தி நெறியுள்ளுமொன்பது பேதங்களுள்ளன. ஞானநெறியிலும், தேறிவிட்டவன், தேறாதவன் எனப் பேதமிரண்டாம். கன்மநெறிகளும் பல பிரிவுள்ளன. திருமால் சமயத்தின் ஸாரமுணர்ந்தோர் மற்றவரைப் பெரியவரென்றும் சிறியவ

ரென்றுஞ் சொல்லிப்போற்றவும் இகழவும் துணிவார். இருகலையாருள்ளும் முன்னோரில் வாழையடி வாழை யாய்க்குலங்கள் விளங்க, விவாதமுறை மூங்கி வந்திருப் பினும் இக்கலிநாளில் அந்நெறியைக்குலைக்கச் சிலர் முயலுகின்றார்கள். விசிஷ்டாத்வைதபாஷ்யம் செய் தருளிய பெரும்பூதூர் ஸ்ரீ ராமாநுஜ முனிவருக்கு இருகலையாரும் ஒருவழித்தொண்டர்களேயாம். ஒரு பிதாவின் புத்திரர்களுள் ஒருவர் கன்ம வழியிலும் மற்றொருவர் பிரபத்தி வழியிலும் மற்றொருவர் பக்தி நெறியிலும் பின்னுமொருவர் உபாஸனை வழியிலும் நிரதராய் விளங்குவதை நாம் காண்பதால் ஆசாரியர் கள் ஆழ்வார்களின் நூல்களில் காணப்படும் கொள்கை களின்படி வழிபடுவோர் நெறி பேதப்படினும் அப் பேத நெறிகளை ஆக்ஷேபனைக்குள்ளாக்காது அதன் படி ஒழுகுபவர்கள் பல கொள்கையராயிருப்பினும் அவர்களை ஸாதுக்களென்றே நாமெண்ணி வழிபடல் வேண்டும். எல்லோரும் ஒருமித்து இக்கலிநாளில் தத் தம் சம்பிரதாய பரம்பரை குருநிர் சரித்திரங்களைத் திரட்டிச் சேர்க்கிப்போற்றுதல் ஸ்ரீ ராமாநுஜ முனி வரரின் வழியடியார்களின் கடமையாமாதலால் அடி யேன் இச்சரித்திரத்தை ஒருவாறு எழுதி வெளியிட லானேன். பெரியோர் பிழைபொறுத்து அடியேனை ஆசீர்வதிப்பரென்றும் நம்புகின்றேன்.

இக்கலிநாளில் க்ஷேத்ரபீஜநியாயங்கள் அந்தணரில் இருகலையாருள் முன்போலடங்காது கலந்து சங்கிரணமாவதற்கு முன்பே இவ்விருகலையாரும் இனிக் கலந்து சிதறார் எனும்படி ஒன்று சேர்ந்து ஸ்ரீ ராமாநுஜ முனிவரின் ஞானஸந்ததியாராய்க் கூடித் தமது கொள்கைகளைப்போற்றில் ஸத்ஸம்பிரதாயமுள்ள வைஷ்ணவ குடும்பங்கள் நிலைகுலையாது சுத்தமுடையவைகளாய் விளங்கும். இதை நம்புங்கள்.

வெண்பா.

குற்றங் குறையிரண்டு கூறுக்கித் தாமறிவார்
கற்றுக் கரைகண்ட கல்வியார்—முற்றுங்
குணமுறை தாங் கொள்கையார் கூட்டுறவு நாடி-
மணமுறை தாக் கொள்வார் மகிழ்ந்து.

இங்ஙனம்,
தில்லையம்பூர் வேங்கடராம ஐயங்கார்
என்று வழங்கிவரும்
வேங்கடேச சர்மா.



உ

ஸ்ரீவேங்கடநாதாசாரியரின்,

சரித்திரச் சுருக்கம்.

முதற்பாகம்.

காப்பு வெண்பா.

வேதமலி தூப்புற் குலமணியாம் வேங்கடஞ்சேர்
நாதன் சரிதமதை நற்றமிழிற்—பாகமுறுங்
கத்தியமாய்ச் செய்வதற்குக் காப்பாந் தமிழ்வேதம்
பத்தியமாய்ச் செய்தான் பதம்.

பெற்றோரின் வாஸஸ்தலமும் காலமும்.

ஸ்ரீ பரதகண்டததில நாம் வ
தில் தெற்குத்திக்கில் தமிழ் வழங்கும் நாட்டில் தொண்டைமண்டலமெனப் பெயர் கொண்ட நாடொன்றுளது. இந்நாட்டெல்லையைக் கவிசக்கிரவர்த்தியாம் கம்பர் ஓர் கவியிற் காட்டியுள்ளார். அது வருமாறு:—

வெண்பா.

மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பிணாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு.

இவ்வெல்லைக்குட்பட்ட நாட்டில் நகரங்களிலெல்லாந்தலைமை பெற்றோங்கும் நகரமொன்றுளது. சென்னைபுரிக்கு மேற்கில் நான்குகாத தூரத்திற்கப்பால் அந்நகரமுளது. நகரங்களுக்குள்ளே காஞ்சிமாநகரமும் நதிகளுக்குள்ளே கங்காநதியும் அரசர்களுக்குள்ளே தசரதராமனும் சிறப்புடையவைகளென்பதை நம் நாட்டில் சிறார் முதல் யாருமறிவர். இக்காஞ்சியெனும் நகரம் முன்னாளில் சோழ பாண்டிய அரசர்களுக்கும் பல்லவ வம்சத்தரசர்களுக்கும் ராஜதானியாக விளங்கியது. மாடமாளிகை கூடகோபுரங்களாலும், வாபீ கூப தடாகங்களாலும், தேவாலய பிர்மாலயங்களாலும் அந்தணர் வணிகர் முதலானோரது வீதிகளாலும், சங்கீத நடன வாத்திய சபாமண்டப முதலிய சாலைகளாலும், அழகிய பூஞ்சோலைகளாலும், மங்கள வாத்திய ஓசை, சங்கநாதம், வேதகோஷம், வாழ்த்தொலி, குதிரைக்கனைப்பு, யானையின் பிளிற்றோசை முதலிய தொனிகளாலும், ஆலயங்களின் மணிமகுடச்சோதியாலும், அழகொழுகும் வடிவமைந்த மங்கையரின் முகவொளியாலும், கன்ம, ஞான, பக்தி மார்க்க நிரதர்களின் குலத்துள்ள மகான்களின் நல்லொழுக்க நெறியாலும், இக்காஞ்சி நகரம் நிலமகளின் அழகிய முகம்போன்று விளங்குகின்றது. இச்சரித்திர நாயகர் தாம் பாடிய அத்திகிரிமான்மியத்துள்பின்வருமாறு இந்நகரத்தைச் சிறப்பித்துள்ளார்.

எண்சீராசிரியம்.

திண்மணிகள் பொன்னுடனே சேர்த லாலுஞ்
சிதையாத நூல்வழியிற் சேர்த்தி யாலும்
வண்மையெழு மீரிரண்டு வண்ணத் தாலும்
வானவர்க்கும் வியப்பான வகுப்பி னாலும்
உண்மையுடை வாசியொளி யோசை யாலு
மொருக்காலு மழியாத வழகி னாலும்
மண்மகளார்க் கலங்கார மென்ன மன்னு
மதிட்கச்சி நகர்கண்டு மகிழ்ந்திட் டேனே.

இவ்வாறு கூறியதுமன்றி முத்திதரும் நகரங்களேழில் முக்கியமாகும் கச்சிதன்னில் அத்திகிரி அருளாளர்க்குத் தாமடைக்கலமடைந்தமையை வேறோரிடத்துஞ்சுட்டியுள்ளார். இந்நகரத்தைக் கலைமகளின் நிலையிடமென்றும் கூறலாம். வேதத்திற்கு பாஷியம் செய்துள்ள வித்தியாரண்ணியர், யாதவப்பிரகாசர் ஸ்ரீ அப்பையதீக்ஷிதர் ஸ்ரீராமானுஜ முனிவர் முதலிய பல மகான்கள் கல்வி கற்றுத்தேர்ந்து பேர் பெற்ற தலமிதுவேயாம். ஸ்ரீ சங்கராசாரியரும் இந்நகரில் தங்கிப் பல சிர்திருத்தம் செய்ததுமுண்டு.

காஞ்சியெனும் பதத்தின் பொருள் யாதெனிலோ "க" எனுமோரெழுத்து மொழியின் பொருளாம் பிரமன் "அஞ்சு" எனும் பதப்பொருளாம் பூஜையைஸ்ரீமந்நாராயணனைக் குறித்துச் செய்தது இத்தலத்திலாதலால் காஞ்சியாயிற்று. தமிழ்க்கலைவாணர்கள் கூறும் வேறுபொருள் யாதெனிலோ, காஞ்சி என்

பது அரைநால்மாலையெனும் எட்டுவடங்கொண்ட ஓரணியாதலால் அவ்வணி, ஆடையின்மேனின்று ஆடைக்கு அழகுண்டாக்குதல் போல் நிலமகட்கு அவ்வணி போன்று விளங்குவதென்பதேயாம். இந்நகரம் வேகவதிநதிக்கு வடபுறமுள்ளது. கலைமகளின் சககளத்தி ரமாம் ஸாவித்திரியைமட்டும் தனக்குத்துணையாக வைத்துக்கொண்டு பிரமன் இந்நகரத்தில் அச்வமேதம் செய்தமை கேட்டு அதனை அழிக்க நதிவடிவமாய் வேகமாக ஸரஸ்வதி வந்தபடியால் வேகவதி என்பது இந்நதிப்பெயராயிற்று. அப்பொழுது கிருபைக்கடலாகிய திருமால் அவ்வாற்றின் குறுக்கே திரு அணையாகச் சயனங்கொண்டு பிரமனது யாகத்தை நிறைவேற்றுவித்தார். இக்காரணம்பற்றி வைணவருள் இந்நகரம் பெருமாள்கோயிலென வழங்கிவருகின்றது. கலைமகளினவதாரமென்று தமிழர் கொண்டாடும் ஔவையாரும் இந் நாட்டைச்சிறப்பித்துக் கூறியிருப்பதுண்டு. அக்கவிவருமாறு :—

வெண்பா.

வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோருடைத்து.

வேறு சமயத்தவர்க்கும் இந்நகரம் சிறப்பு வாய்ந்த தொன்றேயாம. கணிக்கண்ணான் என்பான் இளமைதொட்டுத் திருமழிசை யாழ்வாருடன் வளர்ந்து அவரருள் பெற்று அவரிடம் தமிழ் கற்றுச்சுயம்பாடுங்

திறமை கொண்டு இந்நகரத்தில் அவ்வாழ்வாருடன் வதிந்து கொண்டிருந்தபோது ஓர் நாள் ஓர் கிழவி முற்றமூத்தவளாய் நடை தள்ளாடிக்கொண்டு திருமாலின் ஆலயத்தினுட்புறம் மேடைமேல் அழகுள்ள கோலமிட்டுக் கொண்டிருந்ததைக் கணிக்கண்ணன் கண்டு வாய்கொண்டு மானிடம் பாடுபவனல்லனாயினும் அக்கிழவியின் பத்தி மேலீட்டுக்கு இரங்கி யவள் திருமாலின்கைங்கரியத்தில்திடம் பெறல் வேண்டி ஓர் கவிகூறவே அவள் திடசரீரமுள்ள ஒரு வாலிபப்பெண்ணானாள். இச்சம்பவத்தைக் கேட்டறிந்த அரசன் உடனே கணிக்கண்ணனை வரவழைத்துத் தனது நரைதிரை மாறித்தனக்கும் இளம்பருவமாம்படி பாடவேண்டுமென்று வேண்டிக்கொண்டனன். கணிக்கண்ணன் நரஸ்துதி செய்யமாட்டேனென்று மறுத்துவிடவே அரசன் கடுங்கோபமுற்றுக் கணிக்கண்ணனை நகரத்தெல்லைக்கப்புறத்தே கொண்டுபோம்படி கட்டளையிட்டனன். கணிக்கண்ணன் இதனை ஆழ்வாரிடமறிவித்தான். ஆழ்வாரும் இதனால் இந்நகரம் தமக்கு வாஸயோக்கிய மற்றதாய் விட்டதென்று திருமால் முன்னும் தாம் பின்னும் அதன் பின் கணிக்கண்ணனுமாக வயல்வெளியேறிச்சென்றார்கள். அப்படிச்செல்லுமுன் ஆழ்வார் திருமாலைச்சுட்டிப் பாடியகவி.

வெண்பா.

கணிக்கண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா — துணிவுடனே
செந்நாப் புலவனும் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

இதன்படி திருமால் அந்நகரினின்றெழுந்து சென்றமைக்கறிகுறியாக ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்திலிருந்த எம்பெருமானின் மூலபேரமும் திசைமாறியது. அரசன் இதனைக்கேட்டு நடுக்குற்று வழிமேற்சென்று கணிக்கண்ணனைக் கிட்டிப்பிழை பொறுத்தருளும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டனன். கண்ணனும் ஆழ்வாரை வேண்டிக்கொண்டனன். ஆழ்வாருமதற் கிணங்கித் திருமாலை நடையொழிந்து சயனித்துக்கொள்ளும்படி முன் தாம் கூறியபாடலையே திருப்பிப்பாடிப் பிரார்த்தித்துக்கொண்டனர்.

வெண்பா.

கணிக்கண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும்— துணிவுடைய
செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்.

என்று பிரார்த்தித்தபடியே திருமாலுஞ்சொன்னவண்ணஞ் சயனஞ் செய்தார். "சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள்" "யதோக்தகாரி" யெனும் பெயர்களுண்டாகி அத்தலம் இப்பெயரால் இன்றும் வழங்கிவருகின்றது. இச்சம்பவத்தைச் சுட்டிக் குமரகுருபரர் எனும் சுப்பிரமணியரது வரப்பிரஸாதி தாம்பாடிய மதுரை மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழில் காப்புப்பருவம் முதற்பாட்டில்—"மணிமோண்ட நெடுநேமி + பழமறைகள் முறையிடப்பைந்தமிழ்ப்பின் சென்றபச்சைப்பசுங்கோண்டலே" என்று திருமாலைப் போற்றியிருத்தல் காண்க.

திருக்குறளுக்குச்சிறந்த உரை செய்த பரிமேலழகர் பிறந்த நகரமுமிதுவேயாம். பஞ்சபூத தலங்களுள் இந்நகரம் பிருதிவித்தலமாம்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த இக்காஞ்சி நகரிலேதான் ஸ்ரீ வேங்கடநாதாசாரியரின் முன்னோர்கள் வாஸம் செய்தார்கள். இந்நகரத்திற்குச் சத்தியவிரத க்ஷேத்திரமென்றும் ஒருபெயருண்டு பாபங்களைப்போக்கும் முக்கிய நகரமாதலால் ஸித்தர்களும் சந்தர்வர்களும் வந்து தொழும் நகரமாம். இந்நகரத்தில் புண்டரீகாக்ஷ ஸோமயாஜியாரெனப் பெயர்பூண்டவர் பகவதாராதன ரூபமான பஞ்சகால கிருத்தியங்களையும் செய்துகொண்டு வஸித்து வந்தார். பகவானதுகிருபையால் இவருக்கு ஒரு குமாரர் பிறந்தார். அவர் பெயர் அநந்தாசாரியர். இவர் பிதா இவருக்கு இளவயதிலேயே வேதங்களை யோதுவித்துப்பல சாஸ்திரங்களிலுந் தேர்ச்சி செய்வித்திருந்தார். கிடாம்பி பத்மநாபரென்றுய், ஸ்ரீரங்கராஜப் பிள்ளானுடைய குமாரத்தியும் அப்பிள்ளானுடைய மதனியுமாகிய தோதாரம்மனையை ஸோமயாஜியார் தம் குமாரர் அநந்தாசாரியருக்குக் கலியாணம் செய்வித்தார். இவ்வாசாரியார் பஞ்சகாலபராயணராய் தம் மனையாளோடு பகவத்பாகவத ஆராதனம் செய்துகொண்டு இனிது வாழ்ந்து கொண்டிருந்தார். இத்தம்பதிகளின் காலம் யாதெனிலோ, இச்சரித்திர நாயகர் திருவேங்கடமுடையானுடைய கண்டாம்சமாய் இம்மண்ணுலகில் தோன்றியது இப்பிலவங்க

௵த்திற்கு (கி.பி. 1907)க்கு 637-வருஷம் சென்றிருப்பதால் அதற்கு முன்னுள்ள 30-௵ காலத்தை ஸ்ரீ வேங்கடநாதாசாரியரின் பெற்றோரது வாழ்நாளின் மத்தியகாலமாகக் கொள்ளலாம். இது உத்தேசமாகக் கூறியதாதலால் ஐந்து ஆறு ௵ங்களைக் கூட்டினும் குறைக்கினும் பிழையில்லையாம். ஸ்ரீவேங்கடநாதாசாரியாரின் பாட்டனார் ஸோமயாகம் முதலிய செய்து தீக்ஷா ஸம்பாவனை பெற்றிருந்தவராதலால் அவரது குமாரரும் தம் பத்தினியோடு வைதிகநெறிவழாது குடும்பத்திற்குரித்தான வீடு வாசல் மானிய நிலங்களுள்ளவராய் வாழ்ந்து வந்தாரென்று காணவருகின்றது. இச்சரித்திரநாயகர் ஸ்ரீரங்கத்தில் வடக்குஉத்தரவீதி கிழக்குப்புறம் கோவிலுக்கருகாமையான தெற்குப்பார்த்த தமக்குச் சொந்தமாகியகிரகத்தில் வாஸஞ்செய்ததாய் காணப்படுவதால் இவரது பிதா முன்னில் காஞ்சி நகரில் தனவந்தராய் பிறருதவியை நாடாது காலக்ஷேபம் செய்யும் நிலைமையிலிருந்தாரென்பது நிச்சயம். கதாநாயகரோ பின் காலத்தில் குடும்பதனத்தைவிருத்தி செய்யாமலும் தமக்கு மறுநாளைக்கு என்றுவது யாதொன்றையும் தேடிவைக்காமலும் அதிக விரக்தராய் இருந்தார். தமது குலதனம் அத்திகிரி சிகரத்திலிருப்பதேயென்று நம்பி அதை மட்டும் போற்றிவந்ததால் இவர் செல்வத்தில் சளித்தவரல்லர்.

இதனால் பெற்றோர் காஞ்சிநகரத்தில் ஸ்ரீ ராமாநுஜரது ஸித்தாந்த பரம்பரையில் சுமார் 650-௵ங்களுக்குமுன் வசித்துவந்தாரென்பது மலையிலக்காயின்

றது. பெற்றோரின் வழிபடுகடவுள் கச்சி வரதரும் திருவரங்கநகரப்பனும் திருவேங்கடமுடையானுமேயாம். அவர்கள் காலத்திற்றானே வைணவர்களுள் கோயில் திருமலை பெருமாள்கோவிலெனும் மூன்று தலங்களையும் முக்கிய திருப்பதிகளாய்க்கொண்டு அங்குக் கோவில்கொண்டமூர்த்திகளைக் காலை மாலைகளிலும் பின்னிரவிலும் சிந்தனைசெய்வதும் உத்ஸவ காலங்களில் அத்தல யாத்திரை போவதும் வழக்கத்தில் நடைபெற்றிருந்தன. ஸோமயாஜியார் வம்சத்தில் குலதெய்வமாய் நின்று வரமளித்தவர் திருவேங்கடமுடையானேயாம்.

இரண்டாவது.

புத்திரலாபம் நேர்ந்த காரணம்.

தமிழ் நாட்டின் வடவெல்லையாம் வேங்கடவரை ஸ்ரீராமாநுஜமுனிவரின் காலத்திற்குமுன்பே வைணவத்தலமாய் விளங்கியது. "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" எனும் வழக்குச் சிலப்பதிகாரம் வேனிற்காதையிலே கூறப்படுதலால் அந்நூலின் காலத்திற்குமுன் தமிழ் வழங்கு நாட்டில் தமிழ்க்கெல்லையாம் வேங்கடவரை வைணவத்தலமாகவே இருந்தமை காணப்படுகின்றது. இதன்றி வரைக்கு அதிதேவதை குமரனென்பதைக் கொண்டே சிலர் இவ்வரையைச் சிவபிரானுடைய புராதனதலமென்பர். இது நிற்கக் கலியுகத்தில் பத்திப்பயிரோங்கிப்பவென் பெருந்தாம்பிரபர்ணி தீரத்தில் உணவும் நித்திரையுமின்றி இளவயது தொட்டே புளியின் மரத்தடியில் யோக நிஷ்

டையிலமர்ந்திருந்த மாறனெனும் நம்மாழ்வார் பாடியருளிய திருவாய்மொழியில் பின் வருமாறு வேங்கடவரையைச் சிறப்பித்திருத்தல் காண்க.

திருவாய்மொழி மூன்றாம் பத்து.

வார்புன லந்தண் ணருவி வடதிரு
வேங்கடத் தெந்தை
பேர்பல சொல்லிப் பிதற்றிப் பித்த
ரென்றே பிறர்கூற
ஊர்பல புக்கும் புகாது முலோகர்
சிரிக்க நின்றாடி
ஆர்வம் பெருகிக் குனிப்பா ரமரர்
தொழப்படு வாரே.

நம்மாழ்வார்க்கு நெடுங்காலத்திற்கு முன்பு துவாபர யுகத்தின் கடைசியில் அவதரித்த முதலாழ்வார் மூவரும் திருவேங்கடவரையைத் திருமால் வரையென்றே சிறப்பித்துள்ளார்.

முதல் திருவந்தாதி 38-ம் பாடல்.

வெண்பா.

ஊரும் வரியரவ மொண்குறவர் மால்யானை
பேர வெறிந்த பெருமணியைக் — காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்
எண்ணின்ற மாலதிடம்.

மூன்றாந்திருவந்தாதி 75-ம் பாடல்.

சார்ந்தகடு தேய்ப்பத் தடாவியகோட் டுச்சிவாய்
ஊர்ந்தியங்கும் வெண்மதியி னொண்முயலைப் — பேர்ந்து
சினவேங்கை பார்க்குந் திருமலையே யாயன்
புனவேங்கை நாறும் பொருப்பு.

இவை போன்ற ஆதாரங்கள பலவுள. இதன்றியும் பலராமன் தீர்த்தயாத்திரை போனகாலத்து வேங்கடவரையைக்கண்டு வணங்கியதும் பாகவத புராணத்துட்கூறப்பட்டுள்ளது. வேறு பல புராணங்களிலும் வேங்கடந் திருமால் வரையென்றே கூறப்பட்டிருக்கின்றது. தமிழ் நாவலர் பலர் பிற்காலத்துப் பலபிரபந்தங்கள் வடமொழி தென்மொழி முதலிய பலபாஷைகளிற் பாடியுள்ளார். அப்பிரபந்தங்களிலெல்லாந் திருமால் வரையென்றே கூறியிருத்தல்காண்க. விருஷபன் எனுமசுரன் முதல் யுகத்தில் இவ்வரையிற்றவஞ் செய்தமையால் இம்மலைக்கு விருஷபாத்திரியென ஒரு பெயருமுண்டு. இரண்டாவது யுகத்தில் அஞ்சனாதேவி தவஞ்செய்தமையால் அஞ்சனாசலமென்றும் மூன்றாவது யுகத்தில் ஆதிசேஷன் வாயுதேவனால் அவமதிக்கப்பட்டு இம்மலையில் அந்தர்த்தியானமாயிருந்தமையால் சேஷாசலமென்றும் வழங்கப்படுகின்றது. கலியுகத்தில் பாபங்களைப்போக்கும் மலையெனப்பொருள்படும் வேங்கடாசலமென்றும் வழங்கப்படுகின்றது. புற்றில் மறைந்திருந்த வேங்கடேசர்மேல் கலியுகத்தில் அப்புற்றின்மேல் ஓரிடையன் பாலைச்சொரியவே பசுவை மேய்த்த இடையனால் வேங்கடேசர் உலகோர்க்கு வெளியாக்கப்பட்டுள்ளார். தொண்டமண்டலத்தில் அரசாண்ட ஓர்யாதவ அரசனுக்குத் திருவேங்கடச்செல்வர் தமதாழி சங்கமிவைகளை வெற்றிக்காக அளித்துள்ளார். அவ்வரசன் பல்லவவம்சத்தைச்சேர்ந்தவனென்று காணப்படுகின்றது. அவன் தொண்டைமான்.

பகவற்கீதை வெண்பா.

நல்லார்கடம்மை நலம்புரிந்து காத்தற்கும்
பொல்லாரைப் பொன்றுநெறி போக்கற்கும்—சொல்
முந்தை யறநாட்ட முய்த்தற்கு நான்பிறப்பன் [லாரு
எந்தவுகந் தோறு மிசைந்து.

என்று பகவற்கீதை நான்கா மத்தியாயத்தில் ஸ்ரீ கண்ணன் கூறியிருப்பதன்படியே தாமே முதலில் பல அவதார ரூபத்தால் உலகங்களைக் காத்திருப்ப தன்றித்தம் அம்சபூதரான வியாஸர் முதலானவர் களைக்கொண்டும் அறிவுண்டாக்கி மாந்தர்கள் நற்பதம் பெற வழியேற்படுத்தியிருப்பதுமுண்டு. விசிஷ்டாத்து விதமார்க்கம் வேரூன்றத் தமிழாசாரியர் குகதேவர், பாவருசி, கபர்த்தி, டகாசாரியார், வாக்கியகாரர், பிரம நந்தி இவர்களையுந் தோற்றுவித்தார். இக்கலியில் சேனை முதலியாரது அம்சமாகத் திருக்குருகாபுரியில் [illegible] சியராம் காரியாருக்கும் அவர் மனைவி திருவண்பரி சாரம் உடைய நங்கைக்கும் குமாரராக நம்மாழ்வாரை அவதரிப்பித்தார். இவ்வாழ்வார்க்குப்பிறகு நாதமுனி, உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தாரிவ ர்களும் ஆழ்வாரடித்தொண்டர்களாய் விளங்கினார்கள். இச்சம்பிரதாயம் வியாஸபோதாயனர்களிடம் விதை யாயிருந்தது. ஆழ்வார்களிடம் அவ்விதை முளைத்தது. யாமுனிகளிடத்தில் தளிராகி விளங்கியது. அது மர மாகிக் கிளைக்க ஸ்ரீபெரும்பூதூரில் பாஷ்யகாரர் உதய

மானுர், அவர் வேத வேதாந்தங்களைத்துமோதிப்பல நூல்கள் கற்றுத்தேர்ந்தார். யாதவப்பிரகாசரிடம் கல்விகற்ருர். பெரியநம்பியைத்தமக்காசாரியராக அடைந்தார். ஸ்ரீபாஷ்யம் முதலிய பல தர்சன நூல்களைச்செய்து உலகெங்கும் பரவும்படி செய்தார். தமது மார்க்கம் நிலைகுலையாதோங்க 74-சிங்காஸனுதிபதிகளையும் நியோகித்தார். இவ்விராமானுஜரின் மார்க்கத்தை அழியவிடாது காக்கத் திருவேங்கடமுடையார் தமது ஆராதனத்திற்கு உபகாரணமாயிருந்த திருமணியை உலகில் ஒரு மானிட வடிவாகத் தோற்றுவிக்கத் திருவுளங்கொண்டு அனந்தாசாரியாரின் சொப்பனத்தில் தோன்றி உமக்கு ஸந்தானமளிக்கின்ருேம் நம் திருவடிதொழ வாருமென்றருளிச்செய்தார். இதனைத்தமது மனையாளிடம் அவர் அறிவித்துவிட்டு ப்ரிகவும் களிப்போடு வைஷ்ணவ கோஷ்டியோடும் மனையாளோடும் திருமலை ஏறிச்சென்று திருவேங்கடமுடையாரைத் திருவடி தாழ்ந்து அவர் அளித்த சொப்பனத்தை நினைவில் எண்ணிக்கொண்டே இரவில் சயனித்துக் கொண்டார். இவர் தம் தேவிகளை நோக்கி ஒரு சிறு குழந்தை சொப்பனத்தில் என் முன் வந்து இதோ உமக்கு ஸந்தானம் தருகிருேம் இந்த மணியைக் கைக்கொள்ளுமென்று என்கையில் ஒருமணியைக் கொடுத்தது. நானுமிது நற்பேறென்று நினைத்து அதை வாங்கி உன்னிடம் கொடுத்தேன். நீயுமதைகையிலதை வாங்கிக்கொண்டாய், உடனே அந்தக்குழந்தை உன்னைப்

பார்த்து அதை விழுங்கென்று சொல்லிற்று. நீயும் அச்சொல்லின்படியே விழுங்கிவிட்டாய். இதுதான் நான் கண்ட சொப்பனம் என்று சொன்னார். தேவியாரும் தானுமப்படியே சொப்பனங் கண்டேனென்று விண்ணப்பம் செய்தார். தம்பதிகளிச் சொப்பனச்செய்தியை உறவினருக் கறிவித்தார்கள். திருவேங்கடமுடையார் ஸன்னதியில் மறுநாள் காலையில் அர்ச்சகர்கள் கோயில் மணி காணாமற்போயிற்றென்று மேலதிகாரிகளிடம் தெரிவித்தார்கள். முன் ராத்திரியில் ஸன்னிதியில் உள்ளே வைத்துப் போனதாண்டென்றும் அம்மணி என்றுங்கருப்பக்கிரகத்திற்குள் வழக்கம் போலவே ஒரு பீடத்தின்மேல் வைக்கப்பட்டிருந்ததென்றும் அறிவித்தார்கள். ஆலயத்தின் மேல்விசாரணைக் கர்த்தர்கள் நம்பிமார் பேரிலேயே சந்தேகப்பட்டு அவர்களை ஆலயத்திலிருந்து நீக்கிவிட யோசித்தபோது பெரிய ஜீயருக்கும் திருவேங்கடமுடையான் முன் நிகழ்ந்தசெய்தியை சொப்பனத்தாலறிவித்தார். அந்த ஜீயரும் தம்பதிகளை அழைத்து விசாரிக்கவே அவர்கள் தாங்கள் கண்ட சொப்பனத்தையு மறிவித்தார்கள். மணிகாணாமற்போனது திருவேங்கடமுடையானது அதிமானுஷ்ய க்ருத்தியமென்று நிச்சயித்துக்கொண்டு அன்று முதல் பூஜாகாலத்தில் மணியடிக்காமலே நிறுத்திவிட்டார்கள். நாளதுவரையில் ஸன்னிதானத்தில் மணியடிப்பதே இல்லை. கலியாணத்திற்காய் அங்கு வந்திருந்த எல்லோரும் இந்த தம்பதிகளின்

பூர்வ புண்ணியத்தைக் கொண்டாடினார்கள். தம்பதிகளும் தங்கள் கோரிக்கைநிறைவேறியதென்று பேரானந்தத்தோடு காஞ்சீபுரம் போய்ச் சேர்ந்தார்கள் தோதாரம்மையும் சொப்பனங்கண்ட நாள் முதல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்த்திகழிய ஒளியோடு விளங்கிக்கொண்டிருந்தாள். இதன் காரணம் கருப்பமுற்றிருப்பதுதானென்று எல்லோரும் எண்ணினார்கள். இச்சரித்திர நாயகர் திருவேங்கடவரையைத் தாம் பாடியதேசிகப்ரபந்தத்தில் அதிகார ஸங்கிரகத்துள் பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

வேங்கடவரைச் சிறப்பு.

எண்சீராசிரியம்

கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்பு
கடுவினைய ரிருவினையுங் கடியும் வெற்பு
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகலிதெனப் புகழும் வெற்பு
பொன்னுலகிற் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரு மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும் வேத வெற்பே.

இதுகாறும் எடுத்தோதியதால் திருவேங்கடமுடையான் பரம்பரையாய் நல்லொழுக்க நெறியில் வேரூன்றிப்பழுத்து விளங்கிய பக்தியெனும்பயிரைப்புறச்சமயவாதிகளாம் கால்நடைகள் வேலியைத்தா


ண்டு உள்நுழைந்து கலிநாளில் அழிக்காதிருக்கத் திடமான வேலிபோன்ற ஒருவரை இப்பூவுலகில் ஜனிப்பிக்கச் சங்கற்பம் கொண்டிருந்தாரென்பது காட்டப்பட்டது. இச்சரித்திரநாயகர் தாமியற்றிய பற்பல நூல்களாலும் ஸ்ரீராமானுஜரது கொள்கைகளை அழியவிடாது இவர் காத்திருப்பதாலும் இது வெளியாகின்றது.

ஒருசமயம் ஒருகாலத்தில் தலையெடுத்து மங்கும் பரவுவதும் பரவுதலுக்குக் காரணமாகிய நூல்களையும் போதனைகளையும் பிரசங்கங்களையும் ஆளத்தக்க நிபுணர்கள் தோன்றுவதும் ஈச்வரனது சங்கற்பத்தால் நேருவதேயாம். ஆரம்பாவஸ்தையில் ஓர்சமயம் நியாய பரிசோதனை வகையிற் சிற்சில குறைபாடுள்ளதாய்க் காணப்படும். பின்தோன்றும் சமயத்திற்கு முன்னையது பூருவபக்ஷம்போல் நின்று உதவுவதால் பின்வரும் சமய ஆராய்ச்சி, நியாய சோதனைக்கு வழிகாட்டியாயிருப்பதால் முந்திய அச்சமயத்தையும் நாம் ஒருவாறு போற்றுதலும் வேண்டும். ஸ்ரீராமானுஜ முனிவரின் அடிச்சாயைபற்றிச் செல்லுமிச்சரித்திர நாயகரும் பிறசமயத்தவர் கோட்பாடுகளை முதலில் எடுத்து விளக்கிவிட்டன்றோ பிறகு தமது நியாய சோதனையையும் அதன் முடிவையும் காட்டுகின்றார். பழமை புதுமை என்னுமிக்குணங்களில் நியாய சோதனையின் குறையும் மேம்பாடும் தனித்தனியே தொடர்பு உள்ளதாமாதலின் ஒரு குணத்தை முற்றுந் துறத்தலும் துறவாதிருத்தலும் சாத்தியமேயாம்.

நியாயசோதனையாற் பற்பல ஸந்தேகங்கள் ஜனிப்பதுண்மையாயினும் மூடபத்தியை ஆராச்சியாலும் சுபானுபவத்தாலும் திடமாக்கும்பத்தி சிறப்புள்ளதேயாம். மூடபத்தியுள்ளாரிடம் நல்லொழுக்கந்திடமாய்ச்சலனமின்றி நிற்கக்காண்கின்றோமே அது எப்படி என்பீரேல் நல்லொழுக்கம் வழுவாமைக்கு அவரது முன் ஜன்மபரிபாகமும் ஆராய்ச்சியுமுளதாதலின் அவரது நியாயம் புதிதாய் ஆராயப்புகுவார் நியாயம் போன்றதல்லவென்றே கொள்ளவேண்டும். அப்பியாசமும் வைராக்கியமும் ஒருவருக்கு ஒரு ஜன்மத்தில் நேருமாயின் அவை முன் ஜன்மத்தில் நிகழ்ந்த ஆராய்ச்சி அதையொட்டிய அனுபவங்கள் இவைகளின் பலனென்றே கொள்ளவேண்டும். காரணமின்றிக்காரியமுதிக்காதென்பது யார்க்கும் ஒப்ப முடிவதொன்றேயாம்.

மூன்றாவது.

ஸ்ரீ வேங்கடநாதரின் சன்னிடயே புத்திரப்பேறயிப் பலித்தது.



திருப்பதி யாத்திரைசெய்து தம்மனைக்குத்திரும்பிச்சென்ற தம்பதிகள் தாம் கண்ட சொப்பனத்தை நினைந்து நினைந்து எம்பெருமானது அபார கருணையைக் கொண்டாடிக்கொண்டு காஞ்சி நகரத்துள் தூப்புலில் வாழ்ந்துகொண்டிருந்தனர். கெடுநாளாகியும்

தோதாத்திரி அம்மாளிடம் புத்திரோதயமாகவில்லை. கண்டையை வாங்கி விழுங்கிய நாள் முதல் தேககாந்தியும் மனக்களிப்பும் மென்மேலும் விருத்தியாகிக்கொண்டிருந்தன. அக்கம்பக்கம் மனைகளிலிருந்த பெண்டுகளும் கருப்பசின்னங்கள் நிறைந்திருந்தமை கண்டு பிள்ளைப்பேற்றின் தாமதத்தின் காரணம் விளங்காமையால் திகைத்தனர்கள். அக்ரூரரின் தாய் காந்தினியும் அஷ்டமகனென்னும் ஓர் ராஜரிஷியும் ஸ்ரீ பராசரரும் பன்னிரண்டு வருஷம் கருப்பவாஸம் புரிந்ததுண்டாதலால் காலாந்தரத்திலேனும் புத்திரஸந்தானம் உண்டாகுமென்றே பெரியோர் சொல்லிவந்தார்கள்.

இவர்களது வாக்கின்படியே சாலிவாகன சகாப்தம் ௧௧௯௧. (1191.) விபவ௵ புரட்டாசிமாதம் திருவோண நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் தூப்புல் குலம் மேலோங்கவும் ஸ்ரீ ராமாநுஜரின் தரிசனம் நாடெங்கும் பரவவும் அநந்தசூரியாருக்குத் தோதாத்திரி மங்கையாரிடம் ஒரு ஆண் குழந்தை உதயமாயிற்று.

அவதாரதினம்.

வெண்பா.

சீரார் விபவத்தே சேரும் புரட்டாசி
நோரர் திருவோணம் நேர்ந்தநாள்—காராரும்
வேங்கடத்தார் கண்டையதே பிள்ளையதாய் மேதினி
பாங்குடனே வந்ததினம் பார். [யிற்

இவ்வாறு, விசுவாமித்திரகுலம் விளங்கவும் விசிஷ்டாத்துவிதசித்தாந்தம் மேலோங்கவும் தேவதாமயரூபமாயும் சிஷ்யர்களுக்கு அனுக்கிரகம் செய்யவேண்டியும் கருணையே உருவமைந்த தென்னலாம்படி அவதரித்த இக்குமாரருக்கு அநந்தாசாரியர் ஜாதகர்மஞ்செய்வித்தனர். திருவேங்கடமுடையாரின் திருக்கல்யாணதினத்தில் அவதாரஞ்செய்த குமாரனாதலின் பிறந்த பதினோராம் நாளில் திருவேங்கட நாதனென்று அக்குமாரனுக்கு நாமகரணஞ்செய்தனர். சங்குவாய் வைத்து கர்ணவேதனமுஞ்செய்வித்தார்.

மூன்றும்மாதத்தில் ஆதித்தியதரிசனமும் நான்காம் மாதத்தில் சந்திரதர்சனமும் அன்னதர்சனமும் ஆறும் மாதத்தில் அன்னப்பிராசனமும் செய்வித்தார். முதலாமாண்டு பூர்த்தியானமேல் அப்தபூர்த்தியெனும் ஆண்டின் நிறைவும் செய்வித்தார். அன்றையதினமே தம்குமாரரைப் பெருந்தேவித் தாயாரின் புருஷாகாரமாகப் பேரருளாளரை அடிபணியச்செய்து பிதாமகிழ்வடைந்தார். மாதாவும் உறவினர்குழுவுடன் கண்டுகளித்தாள். பேரருளாளரின் கிருபைக்கு இச்சிறுகுமாரன் அன்றுதொட்டே பாத்திரனானான். இதனைச்சுட்டியே அன்றே அடைக்கலங் கொண்ட நம்மத்திகிரித்திருமால் என்று வேங்டநாதாசாரியர் தாம் பின்பு பாடியருளிய தேசிகப் பிரபந்தத்தில் அடைக்கலப்பத்தில் கூறியிருத்தல்காண்க. மூன்றுமாண்டில் சௌளம் செய்விக்கப்பட்டது. தமிழர் இந்தக்கிரியைக்குடுமிவைத்தலென்பர்.

*

26

வித்தியாப்பியாசம்.

ஐந்தாம் வருஷத்தில் அக்ஷராரம்பம் செய்விக்கத் மேல் உலகரீதிப்படி பள்ளிக்கூடத்தில் இச்சிறுவன் வாசித்துக்கொண்டிருந்தான். விளையும்பயிர் முளையிலே என்று யாரும் பருத்தறியும்படி இச்சிறுவன் முகவொளியாலும் அமுதத்துளியென்னலாம்படி மெல்லிய தொனியுடன் வாய் விண்டு மொழிந்த சிறு மொழிகளாலும் புன்சிரிப்பினாலும் சுற்றத்தவரையும் மற்றவரையும் மகிழ்வித்ததை காஞ்சி நகரத்துள் அப்புண்ய ஸ்தலத்தில் கர்ண பரம்பரையாய் நடைபெறும் ஓர் உண்மைச்சம்பவமேயாம்.

அநந்தாசாரியர் இச்சிறு குமாரனை தம்முடைய அம்மான் கிடாம்பி அப்புள்ளாரோடு ஒருநாள் நடாதூர் பெரிய அம்மாளுடைய வியாக்கியான கோஷ்டிக்கு அழைத்துப்போனார்; அக்கோஷ்டியில் நடாதூர்பெரிய அம்மாளுக்கு ஓரிடத்தில் திடீரென்று தாம் எடுத்தோதிய விஷயத்தில் தவறுதல் நேரவே எல்லோரும் சற்றுத்தயங்கின்று அதைக்குறித்து ஆலோசித்துக்கொண்டிருக்கையில் இச்சிறுவன் ஐயுற்ற விடத்தைச்சுட்டி ஈதன்றோ நீங்கள் கருதத்தக்கது மயக்கமேன் என்று சுட்டிக்காட்டினன். உடனே இச்சிறுவனது புத்தி நுட்பத்தைக் கண்டறிந்த கோஷ்டித்தலைவராம் அம்மாள் அச்சிறுவனை எடுத்தணைத்துக் கட்டி முத்தமிட்டு மடியில் வைத்துக்கொண்டு உனக்குந் தெரியா

உண்மை புலப்படுவதாக. புராதனமாகிய இதிகாஸபுரா ண ஸாகரங்களைக்கண்டு தெளிந்து நீ நூல் செய்யும் சதுரனுகுக. என்று கூறிப் புலஸ்தியர் பராசரரை அனுக்கிரகித்தாற்போல அனுக்கிரகம் செய்தருளினர். இச்சிறுவன் அவதாரவிசேஷமுள்ளவன். இவனை நாமிதுவரை பயிர்ச்சி செய்வியாதது சரியன்று என்று கூறி நமக்காக இச்சிறுவனை நீர் கல்வி பயிற்றுவித்துச்சகல அர்த்தங்களையும் போதியுமென்று கிடாம்பி அப்புள்ளார் கையில் ஒப்புவித்தனர். இப்படி இச்சிறுவன், வரதகுருவாம் நடாதூரம்மாள் கிருபைக்குப் பாத்திரனானதை அப்பிள்ளார் தாம் செய்த கிரந்தாரம்பத்தில் கூறியுள்ளார். கிடாம்பி அப்புள்ளார் இச்சிறுவனுக்கு மாதுலர். நடாதூரம்மாளின் முக்கிய சிஷ்யர். இவ்வம்மாள் வயோதிகராயிருந்தமையால் தான் தமது சிஷ்யரிடம் இச்சிறுவனை நியோகித்தார்.

இச்சிறுவனுக்குப் பின்பு உபநயனம் தகப்பனுரால் ஏழாவது வயதில் செய்விக்கப்பட்டது. வேதாத்தியயனம் பண்ணுவிக்கத்தொடங்கி முதல் நாள்சொல்லுவித்ததை மறுநாளிலும் சொல்லஆரம்பிக்கவே இச்சிறுவன் நேற்றுச்சொன்னதை மற்றும் திரும்பச் சொல்லுவானேன் மேலே சொல்லியருளுகவென்று கிடாம்பி அப்புள்ளாரை வேண்டிக்கொண்டனன். முதனுள் சொல்லுவித்ததை ஒரு பிழையுமின்றி இச்சிறுவன் சொல்லி முடித்தான். இச்சிறுவன் கருவிலே திருவுடையவனுகலினுல் ஏகஸந்தைக்கிராகி அதாவது ஒரு

முறை சொன்னதைக் கொண்டே முற்றும் பிழையுறு அறிபவனென்பதைக்கிடாம்பி அப்புள்ளார் கண்டு களிப்புற்றனர். பிறகு நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் வியாகரணம், நியாயம், காவிய முதலிய சகல சாஸ்திரங்களையும் அதிசீக்கிரமாகவே அப்பியாஸம் செய்வித்தார். ஸமாச்ரயணமும் (திருவிலச்சினை) செய்வித்துத் திவ்யப்பிரபந்தாத்தியனமும் இச்சிறுவற்குச் செய்தருளினர். சிறுவனோ வேதங்களில் ஜடைவர்ணக் கிரமமுதலிய அநேக விஷயங்களையும் அவைகளின் லக்ஷணங்களையும் நன்றாய்த் தெரிந்து வேதப்பொருள் விளக்கமாம் பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸையாம் இரண்டு சாஸ்திரங்களிலும் அதாவது கர்மகாண்டத்திலும் ஞானகாண்டத்திலும் எதிர்ப்பக்ஷமான பாட்ட, குரு, சங்கர, பாஸ்கர, யாதவ மதங்களிலும் ஸாங்கிய, யோக, சைவ சாக்த, ஜைன, பௌத்த சாஸ்திரங்களிலும் விசேஷ பாண்டித்தியமடைந்து மனு முதலிய ஸ்மிருதிகள் இதிகாஸம் புராணமுதலியவைகளின் உதவியாலே பிடிகருத்தான சூக்குமப்பொருள்களை நன்காராய்ந்து பின்பு ஸ்ரீபாஷ்யம் முதலிய வேதாந்தக் கிரந்தங்கள் ஓராண் வழியாய் இரகசியமாய் நடைபெறும் கிரந்தங்கள் ஸ்ரீகீதாபாஷ்யம் ஆறுயிரப்படி முதலிய பகவத் விஷயப்பிரபந்தங்கள் (திருவாய்மொழி முதலிய ஆழ்வார்களருளிய தமிழ்ப் பிரபந்தங்கள்) மற்றுமுள்ள பல வித்தைகளையும் இச்சிறுவர் இருபது வருஷத்திற்கு

ள ளாகவே ஐயமறக் கற்றுணர்ந்தனர். பிர்மசரிய விருதத்தை இவர் சாஸ்திரமுறைப்படி தப்பாமல் அனுட்டித்து வந்ததுமன்றி கிரமப்படி ஸமாவர்த்தமுனம் செய்துகொண்டார்.

விவாகம்.

இவருக்கொத்த உருவமும் அழகும் வாய்ந்த மகா குலீனையான ஒரு கன்னிகையை இவர் திருக் கல்யாணம் செய்துகொண்டு இல்லற தருமம் வழுவாது நடாத்திக்கொண்டு காஞ்சிபுரியில் வீற்றிருந்தார். பிறகு கிரகஸ்த தருமத்திலிருக்கையில் நல்ல பல சிஷ்யர்களுக்கு வேதாந்தசாஸ்திரங்களை இவர்முப்பது முறைகால க்ஷேபம ஸாதித்துக்கொண்டிருந்தார்.

திருவயிந்திரபுரவாஸமும் கருடன், அயக்கிரீவர் வரப்பிரஸாதங்களும்.

பிறகு வேங்கடநாதாசாரியர் தமக்குத் தம்மாசாரியருபதேசம் செய்தருளிய கருடமந்திரம் ஸித்தியாகத்தக்க இடமாம் திருவயிந்திர புரத்திற்குச்சென்றனர். தமது ஜனன பூமியிலிருந்து முதல் முதலாக இவர் பிரயாணம் செய்து சென்ற இடமாம் இவ்வூர் காஞ்சி நகரத்திற்குத்தெற்கே எட்டுக்காத தூரத்திலிருக்கின்றது. அங்குள்ள கருடநதியில் காலையில் அனுஷ்டானம் செய்துகொண்டு ஔஷதாத்திரி என்னு மலையின் தாழ்வரையில் எழுந்தருளி இருக்கும் தேவநாதஸ்வாமியை மங்களா சாஸனம் செய்துகொண்டு அம்மலையின் சிகரத்திலுள்ள அழகியசிங்கர் ஸந்நிதியி

அங்குள்ள அரசமரத்தடியில் நிழலிலிருந்துகொண்டு கருடனைத்தியானம் பண்ணிக்கொண்டே இவர் கருடமந்திரத்தை ஜபஞ்செய்துகொண்டிருந்தார். அப்போது வேதவடிவமான கருட பகவான் இவர் முன் பிரசன்னராகி இவரைக்கொண்டு இராமாநுஜ ஸித்தாந்தத்தை வளர்க்கக்கருதி வித்தியா மூர்த்தியான அயக்கிரீவ பகவானுடைய மந்திரத்தை உபதேசம் செய்ததுமன்றி இவர் நித்திய ஆராதனைக்கு ஒரு அயக்கிரீவமூர்த்தியையும் பிரஸாதித்துவிட்டு மறைந்தருளினர். இம்மூர்த்தி சிறிய ஸாளக்கிராம வடிவமுள்ளதென்பது சிலரது அபிப்பிராயம். இங்கே இவர் முதல் முதல் வடமொழியில் செய்தருளிய நூல் (1) கருட பஞ்சாசத் என்பது. இது கருடஸ்தோத்திர ரூபமாய் ஐம்பது சுலோகங்கள் கொண்டது. பிறகு கருடபகவான் உபதேசித்த அயக்கிரீவ மந்திரத்தை ஜபஞ்செய்துகொண்டே அயக்கிரீவரைத் தியானம் செய்தார். அவரும் பிரத்தியக்ஷமானார். அவர் குதிரை ரூபமாகிய தமது முகத்தினின்றும் பெருகிய அமுதத்தை இவருக்களித்துப் பானம் செய்விக்க அப்போது இவர் அந்த அயக்கிரீவர் தோத்திர ரூபமாக வடமொழியில் (2) அயக்கிரீவஸ்தோத்திரமென்னுமிரண்டாவது பிரபந்தம் செய்தருளினர். அம்மூர்த்தியின் வரபிரஸாதத்தால் சகலகலைகளிலும் அம்மூர்த்திக்கு இணையான ஸம்பூர்ணமான ஞானத்தையடைந்தார். பிறகு இத்தலவாஸம் செய்துகொண்டிருக்கையிலேயே தேவநாயகஸ்வாமி விஷயமாக மூன்றாவதாம் (3) தேவநாயக பஞ்சாசத் எனும் ஸ்தோ

த்திரத்தை வடமொழியிற் செய்தருளினர். நான்கா வதாக (4) அச்சுத சதகஸ்தோத்திரத்தையும் அவ்வாறு கச்செய்தருளினர். தமிழிலும் (1) மும்மணிக்கோர் வை, (2) நவரத்னமாலை, (3) ஊசற்பா, (4) பந்துப் பா (5) கழற்பா (6) அம்மானைப்பா (7) ஏசற்பா எனும் பிரபந்தங்களையும் செய்தருளினர். இத்தமிழ்ப்பிரப ந்தங்கள் எழினுள் இக்காலத்தில் வழங்குவன. முதலிர ண்டேயாம். மற்றவைகள் ஐந்தும் முன்னுள்ளோரால் சாதாரணப் பாடல்களென் றெண்ணப்பட்டமையாலோ காலமெனும் கள்வன் கைப்பட்டோ ஒளித்தன.

அயிந்தை நகரில் ஓர் பொழுது பதினெட்டு மதத்தவர்களும் வந்து தங்கள் தங்கள் மதங்களின் சி றுஞ்சிறப்புமே சிறந்தவையென்று வாதிக்கவே அவர்க ளது வாத நெறிகளையெல்லாம் நியாயசோதனையாம் தரா சில் வைத்து நிறுத்துக்காட்டி இவர் ஜயங்கொண்டார். இதனைத்தமிழ்ப் பாட்டுகளும் மணிப்பவள உரையும் சேர்ந்த பரமதபங்கமெனும் (8) எட்டாவது பிரபந்தத் தைச்செய்தருளினர். சக்கிரவர்த்தி திருமகனர் விஷய மாக (5) ரகுவீரகத்தியம் எனும் வடமொழி வசன நூலையும் செய்தருளினர். இது இராமயண கதாஸார மாயுள்ளது. கண்ணன் விஷயமாக (6) கோபாலவிம்சதி யையும் செய்தருளினர் இது கண்ணன் ஸ்தோத்திர ரூப மாயுள்ளது. இவ்வாறாக ஸ்ரீவேங்கடநாதாசாரியர் சகலக லா வல்லுநராய் விளங்குதலைப்பொறாது சிற்சிலர் ஒரு கொழுந்தை அழைத்து அவர் முன்போய்ப் பின்வரு

மாறு கூறியவரை அடக்கவேண்டுமென்று நியோகித்த னர். அக்கொத்தனும் அவ்வாறே சென்று அவர் முன் நின்று "ஐயரே என்னுடன் சரியாக யாதொரு குறைவுமின்றி ஒரு கிணறு கட்ட வல்லீரானால் நீர் சர்வ சுதந்திரரென்பது தகும். அப்படிக்கன்றேல் தகாதென்று சொன்னான்" கொத்தன் கூறியதைக் கேட்டவுடனே வேங்கடநாதாசாரியர் அவனைக் கர்வபங்கம் செய்யக் கருதிக்கிணறு கட்டத்தொடங்கி "கண் கண்டதை செய்யும்" என்கிறபடியே இவர் ஒரு பாதியும் அவன் ஒரு பாதியுமாகக்கட்டும்பொழுது நல்ல கற்களைக்கொத்தனுக்குக்கொடுத்துவந்து தாம் சிறு கற்களை வைத்துக்கொண்டு கட்டியும் இவர் கட்டிய பாதி அவன் கட்டிய பாதியைவிட வட்டமாயும் வேலைப்பாடாயுமிருந்திருப்பதைக்கண்டு "கண்டது கற்கிற் பண்டிதராவார்" எனும் பழமொழிப்படியே இவர் மகா வல்லவரே யென்று புகழ்ந்து தான் செய்த பிழைக்கு மன்னிக்கருள வேண்டுமென்று வணங்கிக் கேட்டுக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கினான். இக்கிணறு இன்றும் திருவஹீந்திரபுரத்தில் நெடுங்காலமாய்விட்டதால் இப்போதைய தரை மட்டத்திற்குக் கீழாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக எத்தொழிலும் வல்லவராய் அங்கேயே சில காலம் வாஸஞ்செய்தார்.

அப்பால் இரண்டாவது முறை தல யாத்திரையாக அவ்வூர்க்கு வடமேற்கில் காததூரத்திலுள்ள திருக்கோவலூருக்கு எழுந்தருளி ஆயனாயனரை மங்களா சா

ளைப் செய்தார் அவர் விஷயமாக (7) தேகளீசஸ் துதி
என்கிற வடமொழிக்கிரந்தத்தைச் செய்தார் அங்கிரு
ந்து தமது ஜனன பூமியாம் காஞ்சிபுரிக்குத் திரும்பி
வந்து பேரருளாளன் பெருந்தேவித்தாயார்களை ஸே
வைசெய்துகொண்டும் சில சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம்
ஸாதித்துக்கொண்டும் சிலகாலம் எழுந்தருளியிருந்தார்
அப்பொழுது (8) வடமொழியில் வரதராஜ பஞ்சாசத்
என்கிறஸ்தோத்திரத்தை தேவ ராஜன் விஷயமாகச்
செய்தருளினர். தமிழிலும் (9) திருச்சின்னமாலை (10)
அடைக்கலப்பத்து (11) பன்னிரு நாமப்பாட்டு (12)
ஸ்ரீவைணவதினசரி (13) அத்திகிரிமாகாத்மியம் (14)
அர்த்த பஞ்சகம் எனும் பிரபந்தங்களையும் செய்து பக
ரித்தார் பின்னும் வடமொழியில் அஷ்டபுஜத்தெம்
பெருமான் விஷயமாக (9) அஷ்டபுஜாஷ்டகம் என
னும் ஸ்தோத்திரத்தையும் யதோக்தகாரி எம்பெரு
மான் விஷயமாக (10) யதோக்தகாரிஸ்துதியையும்
காமாஸிகா நரஸிம்மனை விஷயமாக (11) காமாஸிகா
ஷ்டகஸ்துதியையும் தூப்புல் விளக்கொளிப்பெருமாள்
விஷயமாக (12) சரணாகதி தீபகை என்னும் ஸ்தோத்தி
ரத்தையும் திருப்புட்குழியில் கோவில் கொண்டெழுந்
தருளியிருக்கும் ரணபுங்கவஸ்வாமி விஷயமாக (13)
பரமார்த்தஸ்துதியையும் அப்பொழுது திருப்புட்குழி
யில் பலரும் சீத சுரத்தால் வருந்தியதுகண்டு அது நீங்
குமாறு அவ்வூர்த்திருவாழியாழ்வான் விஷயமாக (14)
சுதர்சன அஷ்டகத்தையும் அவரது பரிவாரங்களாம்

ஆயுதங்கள் விஷயமாக (15) ஷோடசாயுதஸ்துதியையும் செய்தருளினார். இங்கே கோயில் கொண்டருளிய பல திவ்ய தேசத்தெம்பெருமான்களையும் மங்களா சாஸனஞ்செய்துகொண்டு இங்கு சில நாள் வஸித்தார்.

பிறகு வடமலையாந் திருமலைக்கு முன் முதலாம் தலயாத்திரைபோகச் சங்கற்பங்கொண்டு பிரயாணப்பட்டு மார்க்கத்திலுள்ள சோளசிங்கபுரம் போய்ச்சேர்ந்தார். அங்கு கடிகாசலத்தில் யெழுந்தருளியிருக்கும் அழகிய சிங்கரைச் சேவித்து (16) கடிகாஸ்துதியென்னும் ஸ்தோத்திரத்தைச் செய்தருளினார். அங்கிருந்து திருமலைக்குப்பிரயாணமானார். வழியில் கனகமுகலிநதியில் நீராட்டம் செய்து அனுஷ்டானங்களைச்செய்து கொண்டு பிறகு அலர்மேல்மங்கைத்தாயாரைத் தரிசனம் ஸமர்ப்பித்து கீழ்த்திருப்பதியில் கோவிந்தராஜனை சேவித்து சக்கரத் தீர்த்தம் ஆழ்வார் தீர்த்தங்களில் நீராட்டம் செய்து ஆழ்வார்களையும் சேவித்துக்கொண்டு ஆதிசேஷன் வடிவமாகிய திருமலையைக்கிட்டித் தண்டன் ஸமர்ப்பித்துவிட்டு மலைமேல் ஏறினார். வழியில் அழகிய சிங்கரைச் சேவித்துவிட்டுத்திருவேங்கடமுடையான் ஸந்நிதியைக்கிட்டி. ஆனந்த நிலயமாம் விமானத்தைக்கண்டு தொழுது கோபுரவாசலில் முகப்பில் தண்டனிட்டுப்பிறகு பிரதக்ஷிணமாக வந்து மகா தீர்த்தமான ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி அனுஷ்டானம் செய்தார். பிறகு ஞானப்பிரான் என்கிற வராக நயினாரை சேவித்துக்கொண்டு கோயிலுக்குள் வந்து

தருளினார். ஸேனாக்கிரபத்தின்படி அங்கங்கேதண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டு பிரதக்ஷணமாகக் கொட்டாரம் வாகனசாலை சப்பாரசாலை திரவியசாலை பாகசாலை யாகசாலை முதலிய இடங்களையெல்லாம் ஸேவித்து அங்குள்ள நீளாதேவியென்னும் நாச்சியாரை வழிபட்டு வணங்கினார். ஸ்ரீரங்கத்தில் துருக்கர் கலகமும் கொலைகளும் நேர்ந்தநாளில் ஸ்ரீரங்கனுதனை அங்கிருந்து அபியுக்தர்கள் யெழுந்தருளப்பண்ணியதால் அவ்வழகிய மணவாளன் எழுந்தருளியிருந்த மண்டபத்தையும் ஸேவித்தார். உள்ளே சென்று திருமடைப்பள்ளி நாச்சியாரையும் ஸ்ரீ பாஷ்யகாரரையும் தண்டம் ஸமர்ப்பித்து நியமனம்பெற்று அங்கெழுந்தருளியிருக்கிற வேங்கடாத்திரி என்னும் அழகிய சிங்கரையும் எதிரே கோவில்கொண்ட பெரிய திருவடியையும் வழிபாடு செய்து முன்மண்டபத்தில் ஜய விஜயர்கள் என்கிற துவாரபாலகரைப் பணிந்து அனுமதி பெற்று ஆலயத்தினுட்புகுந்தார். அங்கே சக்கிரவர்த்தித் திருமகனைத் துதித்து கர்ப்பக்கிரகத்தில் குலசேகரன் படியருகே சென்று அகலகில்லேனிறையும் என்கின்ற ஆழ்வார் பாசுரத்தை அனுஸந்தித்தார். திருவேங்கிடமுடையானை அடிமுதல் முடியளவும் (ஆபாதசூடம்) கண்டு களித்து மங்களாசாஸம் செய்தார். அவ்வெம்பெருமானது ஒவ்வொரு அவயவங்களிலும் அவைகளின் மேலொளி வீசும் ஆபரணங்களிலும் சௌந்தரிய முதலியவிக்கிரக குணங்க

ளிலும் தயை ஞானம் சக்தி முதலிய ஸ்வரூபகுணங்களிலும் இவரது மனம் லயிக்க வைத்தகண் வாங்க வழியின்றி அடிமுதல் முடியளவும் திருமுடிமுதல் திருவடியளவும் மாறி மாறி யனுபவித்தும் திவ்ய குணங்களில் ஆழங்கால் பட்டு மெய்மறந்து சுகவடிவமாய்ச்சொக்கி நின்றனர். பிறகு அக்குணக்கடலிலெழுந்து கண் விழித்து அகிஞ்சனரான சேதனர்களுக்கு முத்தியளிக்க முக்கிய காரணமாய்த் திருமலையில் யாவர்க்கும் காட்சி கொடுத்துக்கொண்டு கலிநாளில் விளங்கும் மங்கள மூர்த்தியின் பலகுணங்களில் தலைமையாய் நின்று பயனளிப்பது தயாகுண மொன்றேயென்று துணிந்து அக்குணமொன்றனையே யடியாக வைத்து ஸ்தோத்திரம் செய்தார். அஸ்தோத்திரத்தின் பெயர் (17) தயாசதகம். வடமொழியில் ஸாரதமமாயுள்ளது. இஸ்தோத்திரம் திருவாய்மொழிபோலப் பத்துப்பத்தாக அதிகாரத்தமுள்ளதாய்ச் செவிக்கும் மனதிற்கும் இன்பந்தருமொன்றாம். இஸ்தோத்திரத்தின் அநுஸந்தான நெறி யாதெனிலோ:—

முதலாவது தசகத்தில் அவன் முக்தியருள்பவன் என்பதும்.

2-வதில் முற்றுமுணர்ந்த ஸர்வசக்தனென்பதும்

3-வதில் மோக்ஷவிரோதிகளைப் போக்குகையும்.

4-வதில் ஒருவழியுமின்றி யடைபவர்க்கு அவனே சகலமுமென்றும்.

5-வதில் அவன்தானே பிரயோஜன ரூபமென்றும்.

6-வதில் பிரபத்தியே முக்கிய உபாயமென்றும்.

7-வதில் வேடன் வேடச்சி இடைச்சி குரங்கெனும் பேதமின்றிக்கலந்து நின்றளிப்பது அவனது ஸௌசீல்யமென்பதும்.

8-வதில் அவன் பரனுமென்பதுவும்.

9-வதில் அவன் அவதாரம் புரிந்துதவுவதும்.

10-வதில் தனக்கு முத்தியளிப்பவனவனே என்பதும் கூறப்பட்டுள்ளன.

இச்சதகத்தைக் கேட்டருளிய ஸ்ரீ வேங்கடமுடையார்பேரு உகந்தருளித் தீர்த்தம் பிரஸாதம் முதலிய ஸகலவரிசைகளுங் கொடுத்தருளி ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஸ்தாபகராய் நீர் விளங்குவீரென்றும் இக்கிரந்த கர்த்தாவினிடம் மேல் திவ்யகடாக்ஷம் செய்தருளினர்.

தம்மணியையே கனவிலீந்து அம்மணியே உருப்பெற்று வந்து இவ்வாறு இனிய ஸ்தோத்திரஞ்செய்ய அதைத்தாம் இவிட கண்டா நாதமிவையோ வென்னலாம் படிகேட்டானந்திக்கப்பெற்றால் அவரது கருணைக்கிலக்காவார் வேறுயாவர். தயாசதகத்தின் அநுபவ பரீவாகமும் மேன்மையும் உலகில் வடமொழி வல்லார் யாரையும் மயக்கித்தன்வசப் படுத்துவதாய் விளங்குகின்றது. அந்நூல் செய்தவரால் ஸ்ரீராமானுஜ சித்தாந்தம் பிற்காலத்தில் பல்லாற்றானும் காக்கப்பெற்றிருப்பதால் திருவேங்கடமுடையாரின் கடாக்ஷம் முதலிற்பெரு

ன்றி பிறகு பெரும்பயனளித்தமையை யாமிங்கெடுத்தோதவும் வேண்டுமோ. இக்குச்சிலநாள் வாஸஞ்செய்து பலர்க்குப் பலரகசியார்த்தங்களையும் உபதேசஞ்செய்தார். பிறகு இவர்க்கு உத்தரதேசயாத்திரையில் மனஞ்சென்றது. இனித்தமிழ்ப் பிரபந்தங்களின் வரிசைதொகையும் முக்கியமாகிய வடமொழிப் பிரபந்தப்பெயர்களும் மட்டுங் காட்டப்படும்.

உத்தரதேச ஸஞ்சாரம்.

உத்தரதேச ஸஞ்சாரத்திற்கு விடையளிக்கும்படித் திருவேங்கடமுடையானை வேங்கடநாதசூரியர் ஒரு சுலோகங்கூறிப் பிரார்த்தித்தார் அப்படியே அநுமதியும் பெற்றுக்கொண்டார். அதன்கருத்து யாதெனில் ஐசுவரியம் வேங்கடவரையில் கலியுக வேதாந்தாசாரியர்கா டி ஸம்பூர்ண போகரூப ஆநந்தமாய் பாக்கியமாகவும் சிறந்த குணங்கள் பொருந்தியும் நல்ல ஆசாரத்துடன் கூடியும் வந்தடைந்த ஜனங்களாலே கொண்டாடப்படுகின்றதாயும் வர்ணோத்தமமாயும் இலங்காநின்று விளங்கிக்கொண்டிருக்கும்படி தேவரீர் அபிவிர்த்திசெய்யவேணுமென்பதே. உத்தரதேசயாத்திரையில் பெரிய வைராக்கியமுள்ள அவர்கள் கோரிக்கொண்ட விஷயங்களை எல்லாம் போதித்துக்கொண்டு அங்கங்குள்ள நதிக்கரை போய்ச்சேர்ந்தார். அங்குள்ள பக்தராயப்பட்டணத்தில் ஒரு பெருமாள் ஸந்நிதியில் இராமாநுஜபாஷியத்தில் கூட்டியுத்தமான தவிரம்பான ஸங்

யாஸம் செய்துகொண்டு வித்யாரண்ணியரெனும் பெயர் பூண்டு தீர்த்த யாத்திரை செய்தபோது தற்செயலாய் வந்துசேர்ந்து இருவரும் சந்தித்தார்கள். ஓர் பிரமராக்ஷஸம் புக்கராயன் பெண்ணைப் பிடித்துக்கொண்டு ஒருவராலும் ஓட்டமுடியாமலிருந்தது இவ்விரண்டு மகான்களின் வரவைக்கேட்டறிந்து அவ்வரசன் உடனே அவ்விருவர் முன்சென்றுவணங்கி நீங்கள் அப்பிசாசைப்போக்குவீர்களாகில் அளவிறந்த பொருள் தருவேனென்று பிரார்த்தித்தனன். கோயில் எம்பெருமானிருக்க அவருக்கடிமையான நாம் மற்றொருவரை நாடுவது தன் பர்த்தாவின் முன்னே ஒரு பாரியை மற்றொருவனை அபேக்ஷிப்பதுபோலாமென்று கூறி ஸ்ரீ வெங்கடநாதாசாரியார் அரசன் கோரிக்கைக்கு உடன்படாமல் மறுத்துவிட்டார். மற்றவரோ ஸந்நியாஸியாயிருந்து மிவ்வித வைராக்கியமில்லாமையினால் அவ்வரசன் அரண்மனையேறிச்சென்று அவ்வரசனது மகளின் பேயை ஓட்டி வெகுமானம் பெற்று விஜய நகரத்தில் அந்த அரசனுக்கு மந்திரியாயிருந்தார்.

பிறகு வேங்கடநாதாசாரியார் துவாரகை வடமதுரை, ஸ்ரீ கோவர்த்தனம், பிருந்தாவனம், புஷ்கரம், நைமிசாரணியம், பதரிகாச்ரமம், ஸாளக்கிராமம், திருவயோத்தி முதலிய திவ்ய தேசங்களில் கோயில் கொண்ட எம்பெருமான்களைப் பணிந்துகொண்டு காசி நகரையடைந்தார். அங்கே கங்கையில் நீராடி அநுஷ்

டானஞ் செய்தார். அங்கே சாருந் தருணத்தில் சிவபிரான் ஞானமில்லாதவர்களுக்கும் பரமரகசியமாகிய தாரகத்தை உபதேசித்து நற்பேறு பெறும்படி செய்கிறாரென்கிற அத்தல மகிமையைக்கேட்டு மகிழ்ந்தார். பிறகு புருஷோத்தமனை யடிபணிந்து ஸ்ரீ கூர்மம், ஸிம்மாத்திரி, அஹோபிலம் முதலிய பௌராணிகக்ஷேத்திரங்களையும் தரிசித்துக்கொண்டு மறுபடியும் திருமலைக்குத்திரும்பி வந்து திருவேங்கடமுடையானை வலம்வந்து பணிந்து களித்தார். அங்கிருந்து கிளம்பி திருவெவ்வுளூரில் வீரராகவனையும் திருநின்றவூர் திருஅல்லிக்கேணி திருநீர்மலை, திருவிடவெந்தை திருக்கடன்மல்லை முதலிய க்ஷேத்திரங்களின் எம்பெருமான்களையும் மங்களாசாஸனம் செய்துகொண்டு ஸ்ரீ பெரும்பூதூர் சென்று ஸ்ரீ பாஷ்யகாரரைத் திருவடிதொழுது தோத்திரம் செய்து பெருமாள்கோயிலுக்குச் சென்று பேரருளாளனை அடிபணிந்து காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா என்று அநுஸந்தித்துக்கொண்டுவடமொழி வேதம் தமிழ் வேதமெனும் உபயவேதாந்தங்களையும் தம்மை நாடி வந்தவர்களுக்கு முன்னினும் பதின்மடங்கு அதிகமான களிப்போடும் குதூகலத்தோடும் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு பஞ்சகால பராயணராய் ஒழுக்கநெறியில் வழுவுதலின்றி மண்ணுலக வாழ்க்கையில் மனமழுந்தாது வெகு விரக்தராய் வடமொழி தென்மொழி யென்னுமிரண்டுகடல்

களின் கரைகண்டு விளங்கும் கலா வல்லபராய் விளங்கிக்கொண்டிருந்தார்.

காஞ்சி நகரத்திற்கு ஒரு அத்வைதஸன்னியாசி வந்தார். அவரிச்சரித்திர நாயகரின் கல்வித்திறத்தையும் ஞானம் விரக்திபிவைகளின் மேம்பாட்டையும் கேட்டிறிந்து பொருமையாகி இவருடன்வந்து தம்மாலியன்றமட்டும் வாதம் செய்தும் கடைசியில் தோல்வியடைந்தார். அவர் கொடிய மந்திரஸித்தி பெற்று க்ஷுத்திரம் வல்லவரானதால் ஒரு குளத்தருகிற்சென்று முழுகித் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தார். அவர் குடித்த தண்ணீர் எல்லாம் தம் வயிற்றில் நிறம்பி வயிறு பெருக்கக்காரணமாயதென்று ஸ்ரீ வெங்கடநாதாசாரியர் ஆராயவே இது தோல்வியுற்ற ஸன்னியாசியின் சூதென்றறிந்த உடனே காலக்ஷேபகூடத்திலிருந்த ஒரு கம்பத்தை ஆயுதத்தால் கீற தண்ணீரெல்லாம் அக்கம்பத்தினின்றும் வெள்ளமாய்ப்பெருகியோடிற்று. அச்சன்னியாசியோ குளமெல்லாங்குடித்து இவர் வயிறு வெடித்துப்போயிருக்குமென்று நினைந்து, வந்துபார்த்தளவில் கம்பத்திலிருந்து நீர் பெருகியோடுவதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு கர்வம் நீங்கி வெங்கடநாதாசாரியரைத் துதித்து விட்டு, தலைகாட்டாது புறத்தேயொதுங்கிப்போனார்.

நாம் முன்பு சன்னியாசியாயிருந்து மந்திரியாயினென்று கூறிய வித்யாரண்யர் நம்முடைய ராஜ்ய

*

சினேகிதராகிய ஸ்ரீ வெங்கடநாதர் கைப்பொருளற்ற விரக்தராய் உபாதானம் செய்து காலக்ஷேபம் செய்வதைக்கேட்டு இவர்க்கு உபகாரம் செய்யவேணுமென்று யோசித்துத் தேவரீர் இவ்விடம் எழுந்தருளுவீராகில் அரசர் வெகு பிரயோஜனம் செய்வாரென்று பத்திரிகை யெழுதி அந்தரங்கமான ஒருவனிடம் அதையிவரிடம் கொடுத்தனுப்பினார். இவரும் அதைவாங்கிக் கடாக்ஷித்து அதற்கு விடையாக வைராக்கிய பஞ்சகம் என்கிற ஐந்து சுலோகங்களை எழுதியனுப்பினார். சரித்திரம் கூறுமிடத்துச் சரித்திரநாயகர் செய்த கவிகளின் பொருள்களை விளக்குவது மிகையென்று சிலர் சொல்லத்துணியினும், அவரது வைராக்கிய நிலையும் மனோபாவமும் இத்தன்மையவென்று காட்டும் வகையில் சரித்திரநாயகரின் தன்மையை யுணர்த்தின்று சரித்திரத்திற் கின்றியமையாததாமன்றோ. இந்த வைராக்கிய பஞ்சகமென்னும் வடமொழிச் சுலோகங்களின் ஸாரத்தைத் தமிழ்க் கவியாக்கி இங்கு எழுதுகின்றோம்.

வைராக்கிய பஞ்சரத்தினம்.

ஆறுசீராசிரியம்.

வயிற்றினெரும் பசித்தணியும் வயலுதிர்த்த
நெற்பொறுக்கி யுண்ப தாலும்
கயத்தினிறை நீரினொரு கையெடுத்துக்
குடித்திடவே தாகந் தீரும்

அயத்தினமாய்க் குப்பைதருங் கந்தையொன்றே
    கோவணமாய் உடுத்தற் காகும்
வியப்பிதுகாண் கற்றவரும் வயிற்றினுக்கா
    வேந்தரிட முழைப்ப தேதோ. (1)

அவனிதனி லாயிரத்தி லொருகோணந்
    தரசரிடங் கருவங் கண்டுஞ்
சுவைமிகுத்த கவிபுனைந்தே யவரையேத்திச்
    சுகிப்பதொரு தன்மை நாடோம்
அவற்பிடிக்கே குசேலர்க்கு வித்தேசர்
    நிலையளித்தா ரடிகள் நாடி
அவர்ப்பணித லொன்றனையே நிச்சயமா
    வெண்ணியுளே மவனி மீதே. (2)

கொடுங்கோல ரரண்மனையின் றிண்ணையிடந்
    துக்கமுடன் கூசிநின்றே
நடமாடு நிலைநாடேம் வந்தனமு
    மதற்களித்தேம் நாட மாட்டேம்
கொடிவாடு மருச்சுனன்றன் றோமீதே
    யலங்கார மாக நின்ற
வடிவாருங் கண்ணபிரா னென்றனுக்கே
    வற்றாத தனம துண்டே. (3)

நடுக்கடலி னடிநின்று மேலெழும்பு
    வடவனலின் நாவீ தென்ன
மிடுக்குடைய சுவாலைகொடு சாடரமா
    மக்கனலு மேவிட் டாலும்

அடுத்தராசர் தம்மிடத்தே திரணமதாம்
பெறல்வேண்டேன் மலர்ந்த மல்லி
விடுத்தமனை மாலைதனிற் கமழ்ந்தலைப்பாம்
வாக்குநயம் விலைக்கு விற்றே. (4)

நாட்டரசர் தமைப்போற்றி யாமடையுந்
தனமிதுவு நம்மை விட்டே
யோட்டமிடுந் தனஞ்சயனு முதரத்தீ
யணைக்கவென்றே யுலகிற் கண்ணன்
சேட்டமிகு தனஞ்சத்தாந் தனஞ்சயற்குந்
திடமளித்தே மலையுந் தாங்கும்
நாட்டமுடன் பெருமுற்கரும் பேருதவிக்
கொருமுதலாய் நிலவ லாமே. (5)

தமக்குக் குலதனமாய்த் தம் பாட்டனார் தேடி வைத்திருப்பது அத்திகிரி மேலிருப்பதாகவொன்றும் சமொழியத் தான் தேடியதும் தன் பிதா தேடியதும் யாதும் தமக்கில்லையென்றும் மற்றொரு கவலைகளும் செய்துள்ளார். அதன் கருத்து அத்திகிரி சிகரத்தி லொளிரும் பேரருளாளரின் குணங்களைத் தாம் போற்றிக்களித்தலே தேடிவைத்த குலதனத்தைத் தாம் காப்பதுபோலா மென்பதே.

அறுசீராசிரியம். (தோங்கல்)

பாம்படைத்த தனமிலை யாதுமிலை
தந்தையதாம் அயத்தின் மேதம்

தாம்முடித்தே யத்திகிரி சிகரத்தே
    தேடிவைத்தார் தந்தை தந்தை
யெம்விடுப்பே மித்தனத்தை வேறுதன
    மெமக்கில்லை குலத்தோர் வைத்த
தாம்மிருக்குந் தனங்காத்தல் அருளாளர்
    குணம்போற்றி வாழ்த லொன்றே.

கரிகிரி மேல் விளங்கும் வரதரை வணங்கி நித்தம் வழிபாடு செய்து கொண்டிருப்பதன்றித் தமக்கு வேறு தனமுமில்லை அதன்காப்புமில்லை யென்று கூறியிருத்தல்காண்க.

இந்த வைராக்கிய பஞ்சகத்தை வித்தியாரண்ணியர் படித்துப்பார்த்து இவருடைய சலன மற்றவைராக்கியததைக் கண்டு இவருக்கிணையுள்ளார் யாருமில்லை யென்று மிகவும் கொண்டாடினர்.

கோயிற் கெழுந்தருளியது.

இக்காலத்தில் ஸகல சாஸ்திர வல்லவனான ஒருவன் தனது சிஷர்களுடன் வடநாட்டிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு வந்து அங்குள்ள வைஷ்ணவர்களை வாதுக்கழைத்து ஸ்ரீ ராமானுஜரின் வேதாந்த மார்க்கத்தை நிலை நிறுத்திக்கொள்ளுங்களென்று கூறி அவ்வாறு செய்யத் திறமில்லையேயானால் உங்களில் பலருக்கு ஏற்பட்டு நடைபெறும் மரியாதைகளும் வரிசைகளும் நீக்கப்படுமென்றார் வற்புறுத்தினன். ஸ்ரீரங்கத்தாருள்

இப்புதிய சாஸ்திர ஸம்பன்னனை வாயடக்கி விசிஷ்டாத்துவித வேதாந்தத்தை நிலை நிறுத்தற்குரிய வாக்கு வல்லபமும் திரமுமுள்ளாரில்லாக் குறையால் பேரருளாளன் ஸன்னதியிலிருந்த இக்கதா நாயகராம் ஸ்ரீ வெங்கடநாதாசாரியருக்கு ஒரு பத்திரிகை விரைமாக வெழுதியனுப்பி ஸ்ரீரங்கத்திற்கு வந்து வாதியை வென்று ஸித்தாந்தத்தை நிலை நிறுத்த வேண்டுமென்று ஸ்ரீரங்கஸ்தலத்து வைஷ்ணவர்கள் பிரார்த்திக்கார்கள். அப்பத்திரிகையை அரங்கநகரப்பன் நியமனமெனக்கொண்டு சிஷ்யவர்க்கத்தாருடன் விரைவாகத்திருவரங்க யாத்திரையாகி வழியில் தங்கிப்பிறகு கரம்பனூர் வந்துசேர்ந்து திருக்காவேரியில் நீராடி உத்தமனைத்திருவடி தொழுது ஸ்ரீரங்கநாதனை நோக்கிச்சிரமேற் கரங்குவித்து நிற்கையில் அங்குள்ளாரிற் சிலர் வந்து எதிர்கொள்ளாக காவேரியைக் கடந்து சென்று ஆதிகேசவனைத் தொழுதனராகி வடக்குத் திருவாசல்வழியாய்க் கோவிலுக்கெழுந்தருளி நான்முகன் திருக்கோபுரவாசலில் தண்டஞ் சமர்ப்பித்துப் பிறகு நாதமுனிகளையும் சூடிக்கொடுத்த நாச்சியாரையும் மன்னனையும் பெரியாழ்வாரையும் தொண்டரடிப்பொடியாழ்வாரையும் பார்த்தஸாரதியையும் ஸேவித்து ஸ்ரீ பாஷ்யகாரரையுந் தண்டஞ்சமர்ப்பித்து அவர் புருஷகாரமாய்ப் பெரிய பெருமாளைத் திருவடி தொழுதவராய்க் கோபுர நயினாரைச் சார்ந்து திருவாழியாழ்வானைத் திருவடிதொழுது ஸ்ரீரங்கநாச்சியாரைப் பணிந்து

எடுத்தகை நயினாரைத்தொழுது வாசலுட் புகுந்து வலமாகத்திரும்பிச் சந்திரபுஷ்கரணியில் தீர்த்தம்ஸ்வீகரித்து தீர்த்தரக்ஷகரான குமுதாதியரையும் ஸ்ரீ வேதவியாஸரையும் ஸ்ரீ வைகுண்டநாதனையும் அங்குள்ள ஆழ்வார்களையும் திருவடி தொழுது பெரிய திருவடியைத் தண்டஞ்சமர்ப்பித்து ஆழ்வாரைத் தொழுது அங்கு நின்று திருகோட்டகர மெழுந்தருளிச் செங்கமல நாச்சியாரைத்தொழுது முதலாழ்வார்களையும் வாசுதேவனையுஞ் ஸேவித்து அணியரங்கன் திருமுற்றத்தில் புகுந்து பலிபீடத்திற்குத்தெற்கே ஸாஷ்டாங்கமாகப்பிரணாமஞ் செய்து அத்திருச்சுற்றிலுள்ள ஞானப்பிரான் தசமூர்த்திகள் லக்ஷ்மீநாராயணன் இவர்களைத்தொழுது பிரணவாகாரமான வேதசிருங்கவிமானத்தையும் ஸேவித்துக்கொண்டு அழகியமணவாளன் திருமண்டபத்திலேறித்தண்டஞ் சமர்ப்பித்தார். உட்சென்று திரு நடைமாளிகைச் சுற்றிலெழுந்தருளியிருக்கிற நாபீநளினன் நாகசயனன் நரசிங்கன் நாராயணன் இவர்களைத்தொழுது திருமணத்தூணருகே நின்று "ஏழையேதிலேன்" என்கிறபாசுரத்தை யனுசந்தித்துத் திருவடிகளை வணங்கி அமலனாதிப்பிரானில் தொண்டரடிப்பொடி யாழ்வார் அரங்கன் வடிவழகைப் பாதாதிகேசபளவும் அனுபவித்து மகிழ்ந்ததுபோல அரங்கன் வடிவழகை நேரிற்கண்டுகரைந்து களித்தனர். இவர் அழகிய மணவாளனை நேர்த்தியில் அனுபவித்தது தமது திருவுள்ளத்தில் தேக்கிக்கொ

ண்டனர். ஆனந்த பரவசரானார். ஆனந்த பாஷ்பமும் மயிர்க்கூச்சலுமுண்டாயிருந்தன. இவர் தமது அனுபவத்திறத்தை வடமொழியில் நான்கு சுலோகங்களால் வெளியிட்டிருக்கின்றனர். அதனை பகவத்தியான சோபானமென்று நம்மவர் வழங்கி வருகின்றார்கள். நித்திய நைமித்திக ததியாராதனங்களில் கல்லெருங்கோஷ்டியில் முதல் முதலில் இத்தியான சோபானத்தை யனுஸந்திப்பது முறை. கதாநாயகரின் தியானக்கிரமம் திருப்பாணாழ்வாரின் அமலனாதிபிரான் எனும் பதிகத்தின்படி நிகழ்வதாயிற்றாம். வடமொழிக் கவிகளாலதன் ஸாரத்தை வெளியிட்டார்போலும். வடமொழி வல்லார்க்கும் தமிழ் மொழி வகையிற்காட்டிய அனுபவம் சிறப்புடையதேயாம். பெரியபெருமாளும் வேங்கடநாதாசாரியரைக் குளிரக் கடாக்ஷித்து எம்பெருமானாரைப்போல நீரும் அவைதிகமதங்களையெல்லாம் நியாயசோதனை செய்து கண்டித்து ஸ்ரீராமானுஜரது விசிஷ்டாத்வைத வேதாந்த மார்க்கத்தை நிலை நிறுத்திப் புகழ் பெற்று வெகுகாலம் வாழக்கடவீரென்று நியமித்தருளினார். அதனை சிரமேற்றாங்கிக் கொண்டு வெளியே வந்து சிஷ்யர்களோடு பெரிய திருமண்டபமாம் கருடமண்டபத்திற்போய் உட்கார்ந்தார்.

சமயவாதத்தில் தன்னிலும் கலைவல்லவருமுள்ளார் தமிழ் நாட்டிலில்லையென்று செருக்கிய வடதேசத்துப் பண்டிதர் இச்சமயம் வாதத்துக்கென்று அங்கு

வந்து வேங்கடநாதாசாரியரைப் பார்த்து "உமது கீர்த்தியோ பெரிதாயிருப்பினும் ஆகாரம் சிறியதாயிருக்கிறதென்று" கூறிச் சிறிது அலக்ஷியமாகப் பேசினார். அவர் கூறிய வாக்கியத்தையே ஓர் விஷயமாக வைத்துக்கொண்டு அவரை நோக்கி ஆகாரம் தீர்க்கமாயிருக்க அதைக்குறுகியதென்று நீவிர் எப்படிச் சொல்லக்கூடுமென்று கூறி வாதம் தொடங்கக் கதா நாயகர் வழியுண்டாக்கிக்கொண்டார். வலுவில் சண்டைக்கு வந்தவரிடம் பாஷா வல்லமையும் நியாய சோதனைத் திறமும் எவ்விதம் நிலைத்துள்ளனவென்று கண்டுகொண்டு பிறகு அவர் எடுத்துக்காட்டிய நியாயங்களையெல்லாம் கண்டித்துக்கொண்டே வந்ததில் இவ்விருவர்க்கும் சில நாள் வாதம் நடந்து வந்தது. சிஷ்யர்கள் உடனிருந்து கவனமாய்க்கேட்டு அன்றுடகம் நடந்த வாதங்களை ஓலையில் எழுதிவைத்துக்கொண்டு தினந்தோறும் ராத்திரியில் வேங்கடநாதரிடம் படித்துக்காட்டிச்சொற்பிழை முதலியவைகளை நீக்கி வேறு சுத்தப்பிரதியுஞ் செய்துவைத்தார்கள். அது ஒரு பிரபல வாதக்கிரந்தமாய் ஏற்பட்டது. அதன் பேர் "சததூஷணி" என்பதே. வந்தவர் எடுத்து ஸ்தாபிக்க முயன்ற அத்துவித மத கண்டனத்தோடு வேறு பல மதங்களின் கண்டனமும் அதிற் கூறப்பட்டுள்ளது. பிறகு ஒரு நாளிரவில் வட நாட்டுப் பண்டிதர் தாம் வாத நெறியில் தோல்வி யடைந்ததை ஒப்புக்கொண்டு தாம் தலத்திலுள்ள மற்றையோர்களிலும் சிறந்த

பண்டிதராகையால் வேங்கடநாதாசாரியராம் தங்களுக்குக் கோவிலில் தீர்த்தம் முதலிய மரியாதைகள் நடத்தப்பட்டமேல் தமக்கு நடத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். வேங்கடநாதர் அதன்படியே நடத்தப்படுமென்று கூறி ஒரு தந்திரம் செய்தார். கோவிலிலிருந்த அனந்த பரி ஜனங்களுக்கும் முதல் முதலில் தீர்த்தம் முதலிய மரியாதைகளை நடப்பித்துப்பிறகு தாம் அவைகளைப்பெற்றுக்கொண்டு தமக்குப்பிறகுவந்தபண்டிதருக்கு மரியாதை செய்வித்தார். இப்படிச் செய்ததினால் வந்தவரின் சக்திகளை எல்லாம் சதுரவாகக்கண்டித்துச் சதூஷணியை வெளியிட்டதைக்காட்டினும் அதிக பெருமையுண்டாயிற்று. வாதத்தின் பேர் கற்று வல்லவரான பண்டிதர்க்கே புலப்படும். மரியாதை விஷயத்தில் நடத்திய சாதுரியமோ கற்றவர் கல்லாதவர் யார்க்கும் களிப்பையுண்டாக்கியது. வந்தவர்க்கோ அவமானத்தை விளைத்தது. வந்தவர் வெட்கிப்போய் வேங்கடநாதரைக்கட்டித்தழுவித்தேவரீரை யாரும் எந்த விஷயத்திலும் ஜயிக்கமுடியாதென்று கூறிப்புகழ்ந்துவிட்டுத் திரும்பித் தம்மூர்க்கேகினார். வேங்கடநாதரும் சிறிது காலம் ஸ்ரீரங்க வாசம் செய்துகொண்டு பெரியபெருமாளை நாடோறும் வணங்கி வழிபட்டுக்கொண்டும் உபயவேதாந்த காலக்ஷேபம் பலர்க்கும் சாதித்துக்கொண்டிருந்தார். இப்பொழுது பெரிய ஆச்சான் பிள்ளையும், சுருதப்பிரகாசிகாபட்டர் முதலானோரும் வேங்கடநாதரின் கல்வித்திறத்தையும் நல்லொழுக்கத்தையும் கண்டு மகிழ்ந்த

கள். வேதாந்த குருவென்றும் வேங்கடநாதாசாரிய ரென்றும் கூறி இவரை அக்காலத்தில் அரங்க நகரில் எல்லோரும் கொண்டாடினார்கள்.

ஆப்புற்குலமணி இவ்வாறு திருவரங்க நகரில் வாஸம் செய்துகொண்டிருந்தபோது ஓர் நாளிரவில் இவரது சொற்பனத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் தோன்றி, இவர் சிரசில் தம்திருவடிகளை வைத்தருளி நீவிர் உபய வேதாந்த நெறிகளையும் போதித்துக்கொண்டும் பல நூல்களைச்செய்து பெரியோர்களை ஸந்தோஷிப்பித்து க்கொண்டும் நல்லொழுக்க நெறியை நிச்சயித்து அத னால் பிராகிருத ஜனங்களைக் கண்டித்தும் பிரம ஞா னிகளின் அபராதத்திற்குள்ளாகாமல் வேறு மதங்களை க்கண்டித்தும் மேன்மையடையுமென்று நியமித்தரு ளினார். நித்திரை தெளிந்த வுடனே இவர் ஆச்சரிய மாகச் சொப்பனம் நேர்ந்ததைக் கொண்டாடினார்.

எண்சீர்க்கழி நெடிலாசிரியம்.

ஆராத வருளமுதம் பொதிந்த கோவில்
அம்புயத்தோ னயோத்திமன்னர்க் களித்த கோயில்
தோராத தனிவீரன் றொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாங் கோயில்
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்
தீராத வினையனைத்துந் தீர்க்குங் கோயில்
திருவரங்க மெனத்திகழுங் கோயில் தானே.

இரகஸியம் முதலிய கிரந்தங்கள் செய்தருளியது.

புற நாட்டாரும் சோழ நாட்டாரும் வேங்கட நாதாசாரியரைக் கண்டு களித்து அவரது கலைவல்லபத்தையும் நல்லொழுக்கத்தையும் அவைகளால் நேர்ந்த மகிமையையும் புகழ்ந்தனர். பெரிய பெருமாள் ஒரு நாள் இவர் தமது கோஷ்டியில் எழுந்தருளியிருந்தபோது இவரை நோக்கி ஸ்ரீபாஷியார்த்தத்தை எடுத்துக்காட்டிப் பிரசங்கம் செய்ய நியமித்தார். இதுவும் கண்ட சொப்பனத்திற்கிணங்கலாகக் கிடைத்த மகாப்பிரஸாதமென்று ஸந்தோஷித்து அக்கட்டளைப்படியே வேதாந்தப்பொருளை ஸ்ரீபாஷ்யத்தின் கருத்தின்படி தெளிவாய் எடுத்துக்காட்டிப் பிரசங்கஞ்செய்தார். இப்பிரசங்கங்களின் ஸாரத்தை எல்லாம் சேர்த்து ஐந்நூற்றைம்பத்தைந்து பெரிய ச்லோகங்களாக்கி அதிகரணஸாராவளி யெனும் கிரந்தமாகச் செய்தனர். ஸ்ரீராமாநுஜ பாஷியத்தின் ஒவ்வொரு பிரகரணத்திலுமடங்கியுள்ள விஷயங்களையெல்லாம் ஸெளகரியமாயறிந்துகொள்ளும் சிறப்புவாய்ந்த நூலிதுவே. இச்சிறந்த நூல் வெளிப்படவே இவர் ஸ்ரீபாஷ்யகாரரது அவதாரமோ அல்லது பட்டருடைய அவதாரந்தானோவென்று எல்லோரும் கொண்டாடினார்கள். இதையொட்டியே பெரிய பெருமாளும் உகந்து இவருக்கு உபயவேதாந்தாசாரியரென்று திருநாமம் சாற்றி இவ

ருக்கு வெகுமானம் செய்யவே ஸ்ரீரங்கநாச்சியாரும் பிரீதியுடன் ஸர்வதந்திர ஸ்வதந்திரர் என்று திருநாம முஞ்சாற்றினர். இந்நாமத்தின் பொருள் சகல கலைகளிலும் வித்தைகளிலும் வல்லவரென்பதாம். இவ்விரண்டு நாமங்களும் உலகெங்கும் விளங்கும் சூரிய சந்திரர்கள் போல விளங்கிவருகின்ற இக்கதா நாயகரும் தாம் செய்தருளிய நூல்களிலும் இவ்விரு பெயர்களைச் சுட்டியுள்ளார். திருவரங்க நகருள் இவர் செய்தருளிய மற்றைய நூல்களாவன:—

ஸ்ரீரங்கநாச்சியார்பேரில் ஸ்ரீஸ்துதி, பூஸ்துதி, நீளாஸ்துதி, திருமங்கை மன்னன் அரங்க நகரில் பிரதிஷ்டை செய்தருளியிருக்கிற தசாவதார எம்பெருமான் விஷயமாகச்செய்த தசாவதார ஸ்தோத்திரம்.

பின்பொருக்கால் ஸ்ரீபாஷியகாரர் திருநக்ஷத்திர உற்சவ தினத்தில் யதிராஜ ஸப்ததியெனும் ஸ்தோத்திரத்தையும் செய்தருளினர். இத்தோத்திரம் சொல்லழகிற்கும் பொருட்பொலிவிற்கும் இணையற்றதொன்றேயாம். இவர் தமது ஸித்தாந்தத்தை நிலைநிறுத்துவதற்கென்றே பின்வரும் சிறந்த நூல்களையும் செய்துள்ளார். அவையாவன:—

1. தத்துவ முக்தா கலாபம்.
2. ஸர்வார்த்த ஸித்தி.
3. நியாய ஸித்தாஞ்சனம்.
4. நியாய பரிசுத்தி.
5. சேச்வர மீமாம்ஸை.
6. மீமாம்ஸா பாதுகை.

7. தத்துவ டீகை.
8. அதிகரண தர்ப்பணம்.
9 வாதித்திரய கண்டனம்.
10. தாற்பரிய சந்திரிகை.
(கீதா பாஷியத்தின் உரை
11. ஈசாவாஸ்ய பாஷியம்.
12. கீதார்த்த சங்கிரக ரக்ஷை.
13. சச்சரித்திர ரக்ஷை.
14. நிக்ஷேப ரக்ஷை.
15. இரகசிய ரக்ஷை.
16. பாஞ்சராத்திர ரக்ஷை.
17. ஹரிதின திலகம்.

இப்பதினேழும் பதியையுணர்ந்த பரமபக்தர்களுக்கு வழிகாட்டிகளாம் நூல்கள். சமய சம்பந்தமாயுள்ள அர்த்தங்களையும் பொதிந்து கொண்டுள்ள நியாஸ திலகம் எனும் நூலையும் பெரிய வாச்சான் பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி நியாயஸவிம்சதி என்னும் நூலையும் அதன் உரையையும் அதிலுள்ள சுருக்கமான நியாஸதசகத்தையும் அரங்க நகரத்தில் வசித்துக்கொண்டிருக்கும்போதே செய்தருளினர்.

எழுதிவிடுத்த சமய வாதங்களைப் பரிசோதித்து முடிபுரை கூறியது.

அக்காலத்தில் வித்யா நகரம் என்று பெயர் பெற்ற விஜயநகரத்தில் பிரவுடதேவராஜன் சபையில் மாத்துவ மதஸ்தரான அக்ஷோப்பிய முனிக்கும் அத்வைத மதஸ்தரான வித்யாரண்யருக்கும் வாதம் நடந்தது. அதில் இவ்விருவரும் தங்கள் தங்கள் மதவுண்மையையே

சரியென்று வாதம் செய்தார்கள். இவ்விருவரின் வாத நெறியை நியாய சோதனைப்படி ஆராய்ந்து முடிவு கூறத்தக்க சிறந்த பண்டிதரான மத்தியஸ்தர் அங்கே யாருமில்லாமையால் அவ்விருவரும் தங்கள் தங்கள் வாதங்களைப் பட்டோலையிலெழுதி இரண்டு சுருணை களாக்கி அரசன் முன் வைத்தார்கள். ஸ்ரீரங்கத்தில் விரக்தராயும் சிறந்த வித்யா வல்லபராயும் விளங்கும் வேதாந்தாசாரியருக்கு லிகித ரூபமான அவ்வாதரவு களையனுப்பி அவைகளைப் பரிசோதித்து அபிப்பிரா யத்தை எழுதியனுப்பும்படி வேண்டிக்கொண்டால் அவ்வபிப்பிராயம் தங்களிருவருக்கும் சம்மதமென் றும் அறிவித்துக்கொண்டார்கள். அரசனும் அவ்வா றே வேண்டிக்கொண்டனன். ஆசாரியரும் பக்ஷ பாதமில்லாமல் இருதிறத்தாரது வாதங்களிலடங்கிய நியாயங்களைச் சீர்தூக்கித் தமது முடிவை ஒரு வட மொழிச் சுலோகத்தால் வெளிப்படுத்தினர். அச் சுலோகமாவது :—

அஸிநா த்த்வமஸிநா பரஜீவ ப்ரபேதிநா
வித்யாரண்யம் மகாரண்ய மக்ஷோப்யமுனி ரச்சினத்.

இதன்பொருள்.

இருவர்களும் விவாதப்படுகிற ஜீவாத்ம பர மாத்மாக்களின் பேதா பேதங்களில் பேதத்தையே காட்டுகிற தத்துவமஸியென்னும் சுருதியாகிய கத்தி யினாலே அக்ஷோப்ய முனியானவர் அபேதம் சொல்லு

கிற வித்தியாரண்யரென்றும் பெருங்காட்டை வெட்டினர் என்பதே. இதை முன் கூறிய அரசன் சபையில் படித்துக்காட்டியபோது வித்யாரண்யர் தம் தலை குனிந்தார். அக்ஷோப்ய முனியோ மிகவும் களிப்புற்று வேதாந்தாசாரியரைக் கொண்டாடினார். வித்யாரண்யர் இவ்வாசாரியார்க்கு பால்ய ஸகாவாயிருந்தும் அவர் பக்கம் சாராது முகமறியாத மற்ற முனிவரது நியாய வல்லமையை நன்காராய்ந்து தமது உட்கருத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார். அத்வைதசித்தாந்தம் இவ்வாறு கண்டிக்கப்பட்ட தென்பதை ஒப்புக்கொள்ளில் தமக்கு அது இழிவாம் என்று எண்ணி அத்வைதிகள் இச்சலோகத்தின் பிற்பாதியை மட்டும்

அக்ஷோப்யம் க்ஷோப்யா மாஸ

வித்யாரண்யோ மகா முனி:

என்று மாற்றிக் கூறுகின்றார்கள். இதன் கருத்து வித்யாரண்யரென்னும் மகா முனிவர் அக்ஷோப்ய முனிவரை தோற்கடித்துவிட்டார் என்பதே. அத்வைதஸித்தாந்தம் தலை கவிழ்ந்துவிடுமென்றுணர்ந்து வேதாந்தத்தால் இவ்வாறு சிலர் தந்திரமாகச் சுலோகத்தின் பிற்பாதியை மாற்றிக் கூறத் துணிந்தாலும் சைவ சமயத்திலும் வைணவசமயத்திலும் தமிழ் நாட்டில் ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், ஸ்ரீராமாநுஜர், இந்நூல் நாயகர் முதலிய பலர் தோன்றி விசிஷ்டாத்துவித ஸித்தாந்தத்தை வளர்த்தார், வைஷ்ணவ

எனு மிரண்டுவகையாகப் பற்பல நூல்களாலும் சுவானுபவத்தால் எடுத்துக்காட்டி ஜீவ ஈசுவர ஜகத்துக்கள் அதாவது சித்தும், அசித்தும், அவைகட் கிறைவனுமாம் மூவகைத் தத்துவங்களென்று நிலை நிறுத்தி மாயாவாதமாம் அத்வைதக் கோட்பாட்டைப் பற்பல வகையாகக் கண்டித்து அது தலையெடுத்தோங்காவண்ணம் செய்தமைக்கு எவ்வகையான பரிகாரம் தேடுவரோ யாமறியோம். இதன்றி நமது கதா நாயகர் ஸ்ரீராமானுஜரது அடிச்சுவட்டின்பேரிலே நடையாடி அவரது கோட்பாடுகளையே நியாய சோதனையாற் பல படியாய் நிலை நிறுத்தியவராகையால் வித்யாரண்யரது பழய நட்பைக்கருதி அவர் பக்கமே சார்ந்திருப்பாரென்பது சற்றும் நம்புவதற்குரித்தாகாது. இதன்றி இவ்வாறு பழய நண்பினராம் வேதாந்ததேசிகர் தமது வாக்கம் பிழைபட்டுளதென்று கூறியதுதொடங்கி வித்யாரண்யர் அவரிடம் பொறுமைகொண்டு அவர் செய்த சதுதூஷணியின்பேரில் தாம் கண்டனம் எழுதுவதாயும் அக்கோசத்தைத் தமக்கு அனுப்புவிக்கவேண்டுமென்றும் அவரைக் கேட்டுக்கொண்டார். அதன்படியே அக்கோசம் கைக்கெட்டியவுடனே அதனை ஆதியோடந்தமாக வெகு ஜாக்கிரதையாகத் தம்மாலியன்றமட்டும் ஆராய்ந்தும் குறை கூறவிடமின்மையைக்கண்டு ஓரிடத்தில் (ச) என்று கூறியதில் பிரயோஜனம் இல்லையென்றுகொண்டு அச்சகரத்தின் மீது ஒரு குத்துப்போட்டு அக்கிரந்தத்தைத் திருப்பியனுப்பினர். வேதாந்த

சாரியரும் அக்குத்திட்டிருப்பதைக் கூர்மையாய்ப்பார்த்துச் "சகார ஸமர்த்தனம்" என ஒரு சிறு நூல் செய்து சகாரத்திற்கு விசேஷ பிரயோஜனத்தை எடுத்துக்காட்டி அவர் குத்தின்மேல் மற்றொரு குத்துங் குத்தி இரண்டையும் வித்யாரண்யரிடம் அனுப்பினார். அதனைப் படித்துப்பார்த்துப் பிரயோஜனத்தின் சீரை எடுத்துக்காட்டிய திறமைக்கு வியந்து, அன்றுதொட்டு வேங்கடநாதாசாரியரிடம் விசுவாசமுள்ளவராயிருந்தார். இவ்வாறு உண்டான விசுவாசமிருந்தமைக்கு வேறொரு சாக்ஷியமுமுண்டு. அதாவது வித்யாரண்யர் தாம் செய்துள்ள சமயத்தொகுதியாம் ஸர்வதர்சன சங்கிரகமெனும் நூலில் வேங்கடநாதரின் கொள்கையென்று ஒரு பிரகரணம் கூறி அதில் இக்கதா நாயகரது நியாய வல்லபத்தை எடுத்து விளக்கியிருப்பதேயாம். சென்னைக்கு வடமேற்கில் பல்லாரி ஜில்லாவில் ஹொஸ்பேட்டை யென்னும் நகரத்திற்கு ஏழு மைல் தூரத்தில் காமலாபுரம் என்கின்ற கிராமம் ஒன்றிருக்கின்றது. அதற்கடுத்தாற்போல் துங்கபத்திரா தீரத்திலுள்ளதுதான் நாம் சொன்ன விஜயநகரம். அது இப்பொழுது ஜீர்ணமாய்க்கிடக்கும் "ஹம்பி" என்னும்பட்டணமிருந்த இடத்தில்முன்பு கட்டப்பட்டிருந்த நகரந்தான். இந்நகரம் அக்காலத்தில் முப்பத்தாறு சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயிருந்ததென்று தெரியவருகின்றது. விஜயநகரமெனப்பெயர்கொண்ட மற்றொரு நகரம் இக்காலத்தில் விசாகப்பட்டணம் ஜில்

லாவில் பிரசித்திபெற்று விளங்குகின்றது. இது சென்னைக்கு வடகிழக்கில் கடற்கரைக்குச் சமீபத்திலுள்ளது. இதை விஜயநகரம் ஜமீன்தாரின் முன்னோர் வகையிற் சேர்ந்த "விஜயராமராஜா" கி. பி. 1714-ம் வருஷம் கட்டுவித்தார். முன் நாம் கூறிய பிரபுடதேவராயன் எனும் பெயர் பண்டை நாளில் "ஹம்பி" யில் அரசாண்ட அரசர்களுக்குப் பொதுப்பெயராய் வழங்கி வந்தது "அரிகரராயன்" அவன்றம்பி "புக்கராயன்" இவர்கள் காலத்தில்தானிங்கே காட்டிய சமய வாதம் நடந்திருக்கவேண்டுமென்பது நிச்சயம்.

கிருஷ்ண மிச்சிரரையும் டிண்டிமகவி முதலினோரையும் வென்றது.

இவ்வாறு கதா நாயகர் அதிக மேன்மையுடன் கோவிலிலே வாழ்ந்துகொண்டிருந்த நாளிலே வடநாட்டிலிருந்து சில கௌட வித்வான்கள் வந்து தமிழில் ஆழ்வார்கள்பாடிய பிரபந்தங்களையும் ஆழ்வார்களையும் தூஷித்துச் சில குதர்க்கங்கள் செய்தார்கள். கண்டாவதாரர் அநேக பிரமாணங்களாலும் வைதிக யுக்திகளாலும் அவர்களை ஜயித்தார். தமிழ்வேதம் வடமொழி வேதஸாரமாய்த் தெளிபொருள் கொண்டு விளங்குவதென்றும் நிரூபித்தார். உபயவேதாந்தமஹிந்தார்க்கே மறைப்பொருள் விளங்குவதால் வைணவருள் உபயவேதாந்தம் வழங்கி வருகின்றதென்றும் காட்டினார்.

இதைக்கேட்டுக் கிருஷ்ண மிச்சிரன் என்னும் ஓர் பெரிய வித்வான், கவிதார்க்கிகஸிம்மர், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர், என்னும் இருபிருதுகளுடன் விளங்குபவனைத் கேட்டுப்பொறுமைகொண்டு தாம்புரப்பிள்ளையை வாதுக்கழைத்தனன். இவ்விருவரும் தத்தம் கல்வி வல்லமையின் வாயிலாக பல நாள் வாதம் செய்தார்கள். கடைசியில் மிச்சிரனைக் கச்சி நகர்ப் பிங்கலர் மதித்தென்று தர்க்கித்தது. மிச்சிரனும் தான் செய்த பிரபோத சந்திரோதயமென்னும் அத்வைத நாடகக்கிரந்தத்தை இச்சிங்கத்தின்முன் படித்துக்காட்டினார். அதற்கு மாறாக விசிஷ்டாத்வைதக் கொள்கைகளை நன்கு விளக்கிச் சங்கற்பசூரியோதயமென்ற ஒரு நாடகத்தைச் செய்து காட்டி மிச்சிரர் தாமியற்றிய யாவற்றையும் மெச்சாவண்ணம் வெளிப்படுத்தினார். சூரியன் உதிக்குங்கால் சந்திரன் ஒளி மழுங்கி மறைதல்போல மிச்சிரர் தாமும் ஒளிமழுங்கி நிலைகுலைந்தது.

இச்சபையத்தைக் கேட்ட டிண்டிமன் என்னும் கவிசேகரன் பின்னாளில் பெருக்குடன் அலங்கிய மாகத்தில சுலோகங்கள் கூடித் தொடுத்து கவி பாடுந்திறத்தை வெளியிட்டான். பின்னையும் அதனுக்கு விடையாக வேறு கவிகள் அறிவாந்தகையின் வாய்மைச் செந்தமிழொடு பொலியச் செய்தார். பிறகு அவன் சாஸ்திரப்போரில் மண்டி பின்னிடல் செய்யலானான். அவன் சாஸ்திரப்போரும் காவ்யப்போரும் புரிந்

தது. பிறகு அவன் தான் செய்த ராகவாப்யுதயம் எனும் காவியத்தின் சீரை எடுத்துக்காட்டினன். கவிகளுக்குள் சிங்கமாம் மணிப்பிள்ளையும் யாதவாப்யுதயம் எனும் ஓர் மகா காவியத்தை உடனே செய்து காட்டி அவ்வகையாலும் அக்கவிஞனை தலையெடுக்கவொட்டாது தலை வணங்கச்செய்து அவன்றனூர்புகச்செய்தனர். இவரதுமடங்காத கல்வித்திறத்தையும் புத்தி கூர்மையையும் ஸகல கலாவல்லபத்தையும் கண்டு வந்த கவிஞன் பேரானந்தமுற்றுத் தன் னூர்க்கேகினன்.

இதுகாறும் நடந்த வாதங்களாலும் பல துறைகளிலும் உண்மை விளங்கச்செய்துள்ள பல நூல்களாலும் உபயபாஷா வல்லமையையும் வேதாந்த நூலுணர்ச்சியும் நன்னடக்கையும் கவிகளுக்கும் தார்க்கிகர்களுக்குஞ் சிங்கம் போன்று விளங்குகையும் ஆப்புப் பிள்ளையிடம் குடிகொண்டமை விளங்குகின்றன.

இவ்வாறு அறிவுசான்ற மகனைப் பெற்ற தாய் தந்தையரின் சிறப்பைத் திருவள்ளுவரும் பின்வருமாறு கூறியுள்ளார்.

குறள்,

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மானிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

திவ்ய தேச மங்களா சாஸனத்திற் கெழுந்தருளியது.

அப்பால் ஸ்ரீ தேசிகன் தென்தேசத் திருப்பதிகளை ஸேவிக்கப்புறப்பட்டார். மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையே தரிசித்தும் தங்கியும் ஆடியும் களித்தனர். மெய்யம், கோட்டியூர், மாலிருஞ்சோலை, திருமோகூர், மதுரை, திருப்புல்லாணித் தலங்களிற் கோயில்கொண்ட எம்பெருமான்களை மங்களாசாஸனஞ் செய்துகொண்டு திருவணங்கேகினர். அங்குக் கடலோடிப் பிரயாணப்பட்டுத் தென்கால் வில்லிபுத்தூர்க் கெழுந்தேகினர். ஆண்டாளை வணங்கி வழிபட்டுக் கோதாஸ்துதி யென்னும் ஒரு ஸ்தோத்திரத்தை அங்குவடபெரும்புரியில், செய்தருளினர். பிறகு திருநகரிக்கேகி ஆழ்வாரை வணங்கி வழிபட்டு அப்பிராந்தியத்திலுள்ள நவதிருப்பதிகளில் வீற்றிருக்கும் எம்பெருமான்களையும் ஸேவித்துக்கொண்டு வானமாமலை, திருக்குறுங்குடி, வண்பரிசாரம், வாட்டாறு இத்தலங்களின் எம்பெருமானையும் தரிசித்துக்கொண்டு திருவனந்தபுரத்திற்கேகி அந்த மூர்த்தியைப் பணிந்து வழிபட்டு அருகிலுள்ள திவ்ய தேசங்களின் எம்பெருமான்களையும் தியானரூபமாய் வணங்கிக்கொண்டு மீண்டும் கோயிலுக்கெழுந்தருளினார்.

பிறகு சோணாட்டுத் திருப்பதிகளின் எம்பெருமான்களையும்வழிபட்டு வணங்கிக்கொண்டு வீரநாராயணபுரத்தில் நாதமுனிகளையும் குருகைகாவலப்பனையும் ஆளவந்தாரையும் ஸேவித்துவிட்டு ஸ்ரீமுஷ்ணம், திருவதிகைவழியாகப் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளி வேகவதியில் தினந்தோறும் நீராடிப் பேரருளாளனைத்தொழுதுகொண்டும் தமது திருமாளிகையில் வஸித்துக்கொண்டும் பல சிஷர்களுக்கு உபய வேதாந்த காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டும் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார்.

நான்காவது

பாம்பாட்டியைக் கருவமழித்தல்.

விருத்தம்.

தாம்பாண்டி நாடுமலை நாடுஞ் சோழ
தரணியினு முளதிவ்ய தேச மேயெல்
லாம்பாண்டித் தியஞ்சிறந்த பிள்ளை தாமுல்
லாசமதாய்த் தொழுதுகொண்டு காஞ்சி சேர்ந்தார்
வீம்பாண் டிறமைசொல்லும் வாதி மாரை
வென்றடக்கி வேதாந்தம் விளக்கு நாளில்
பாம்பாண்டி யொருவன் வந்து வாது சொல்லப்
பார்க்கின்றார் ஜயவிருதை பெற்கின்றாரே.

ஒரு நாள் மகா மாந்திரிகனான ஒரு பாம்பாட்டி சிலரது ஏவுதலின்படி தேசிகனது திருமாளிகை வா

சல் முன்னே வந்து, ஒரு நாள் உபவாஸம் செய்துவி
ட்டு வந்தவனுடைய தலையால் கோபுரமண்டு தேவிகளைக் கட்டி
ச்சொல்லுகின்றான். நீங்களோ சருவ தந்திரங்களும்
விருது பெற்று விளங்கும் வித்வான்கள். என்னை எப்படி
யானால் உமது சித்திரமோ முன்னிருக்கிறதைப் பார்க்
கும் பாவம். பாம்பு பக்ஷியும் ஆசிரியராகும் பிடாரன்
தெருக்களைக் கண்டும் நாகங்களின் குரு முகங்களை
யுங்கண்டும் நடை கட்டுப்படியும் பார்ப்போமென்றான்.
என்னை ஜயிக்காமல் விருது கைக்கொண்டு போகின்றா
கூறி விவாதத்தொடுத்தான். பண்டிதர் சபையிலே
வாதம் செய்து யஜமானனென்று பெயரினை
யிருக்க அப்பிடாரனே தன் தேசத்து வாதத்தைத்
தெரிவித்தெனன்று கூறிக்கொண்டு பாம்பின் பெட்டி
யெடுத்தான். பிறகு அப்பிடாரன் பகிரங்கமாய்ப் பல
காலமாய்ப் பழகின அவனைத் தேடிக் கட்டிக்கொண்டு
கோயிலின் வடபாகத்தில் சுற்றுப் பிரகாரத்தின் மத்தி
யத்தில் ஒரு புற்றிலிருந்து நல்ல பாம்பை எடுத்துக்கொ
ண்டு குடத்தைத் திறந்துவிட்டு வாது செய்யத்தொ
டங்கையில் குடத்துக்காக முன்பின் சொல்லுகிற
பாம்பாட்டியைப் பார்த்து உன்னிடமுள்ள பாம்புக
ளெல்லாம் என்மேல் ஏவிவிடு என்று கூறினான். அப்
படியே அவனும் சில பாம்புகளை ஏவினான். அவை
கள் கோபங்களைக் காட்டாது தாழ்ந்தன. பிறகு
அவைகளினுங் கொடிய வேறு பாம்புகளைக் கோபா
வேசத்துடன் ஏவினான். அவைகளும் அப்படியே

க்கடந்து வந்தும் முழுதும் தாண்டிச் செல்ல வகை காணாது ஓய்ந்து தலை சாய்ந்தன. படங்களுமாட்டமின்றி யொடுங்கின. பிடாரனின் கோபமோ முன்னினும் பதின்மடங்கதிகமாயிற்று. தனக்கு மூலதனமாய் அவன் வைத்திருந்த சங்கபாலனெனும் நாகத்தை ஏவினான். அந்நாகம் எல்லாக் கோடுகளையும் தாண்டித் தேசிகர்க்கருகே வருந்தருணத்தில் பெரியதிருவடியைத்தேசிகர் தியானம் செய்தார். உடனே நாகவைரியாகிய கருடன் அங்குச் சீக்கிரமாகப் பறந்துவந்து சங்கபாலனை எங்கும் யாரும் காணாதபடி மூக்கினால் கவ்விக்கொண்டு ஆகாயத்திற் பறந்து கண்காணாத தூரத்திற் சென்றுவிட்டான். உடனே பாம்பாட்டியின் கர்வம் அடங்கி அவன் தேசிகர் திருவடிகளிற் சரணமடைந்தான். சங்கபாலனை மீட்டும் வரவழைத்துக் கொடுத்தாலன்றித் தனது ஜீவனம் நடக்காதென்றும் கூறிப் பலவாறாக வணங்கிக் கேட்டுக்கொண்டான்.

தேசிகரும் பிடாரனது பரிதாப நிலைக்கிரங்கிக் கருடன் விஷயமாக ஒரு தண்டகம் வடமொழியில் துதி ரூபமாகச் செய்து போற்றவே வைநதேயனும் அங்குச் சங்கபாலனை ஒரு நொடியிற் கொணர்ந்து கொடுத்துவிட்டேகினன். அப்பாம்பாட்டியும் ஆச்சரியத்துடன் தேசிகரது மந்திரவித்தியைப் பலபடியாய்ப் புகழ்ந்து தலைகுனிந்து மறைந்துபோனான். சாதாரணமாக எண்ணிச் சிலபேர் கூறிய பேச்சைக் கேட்டு

வந்ததனால் இவ்வகை அபராதம் நேர்ந்ததென்று கூறி உண்மையை வெளிப்படுத்திவிட்டுச் சென்றான். இச் சம்பவத்தால் தேசிகரது மந்திரப்பிரபாவம் உலகறியத் தக்கதாயது. கருட மந்திரம் பலித்தமையை வைண வரும் ஏனையோரும் காஞ்சி நகரில் அன்று கண்டு களித்தனர்.

கட்டளைக் கலித்துறை.

வடத்தேறு கண்டுயில் கொண்டான்
மடுவின் மணியரவின்
படத்தேறு தாள்மிதித் தாடியுங்
கோவியர் பாரமுலைக்
குடத்தேறு மார்பர்தங் கண்டாமை
தாரரைக் கூப்புகையர்
கடைத்தேறு வார்கள் கவிவாதி
சிங்கரைக் கண்டவரே.

அயக்கிரீவர் வெண்குதிரை வடிவாய்வந்து தேசிகர்க்கருள் புரிந்தது.

பிறகு சிலகாலம் பெருமாள் கோயிலிலே தேசி கர் எழுந்தருளியிருந்தார். மற்றுமொருமுறை திருமலைக்கேகித் திருவேங்கடச்செல்வரை மங்களாசாஸனம் செய்துவிட்டு, திருவரங்கஸ்தலத்திற்குப் பிரயாணப்ப

ட்டார். சோளுட்டிற்குப்போகப் பிரயாணம் செய்த போது காட்டுவழியில் நீராடி அனுஷ்டானம் செய்து அயக்கிரீவருச்கு ஆராதனே செய்ய வஸதியில்லாமை யால் தளிகையும் பண்ணக்கூடாமல் உபவாஸமாயிருந் துவிட்டார். இவர் தங்கியிருந்த அந்த ஊரில் நள்ளிர வில் இவரது ஆராதனமூர்த்தியாகிய அயக்கிரீவர் ஒரு வெள்ளைக் குதிரை ரூபமெடுத்துக்கொண்டு அவ்வூர்க் கடைவீதியில் ஒரு வர்த்தகன் கடையருகிற் சென்று கடைத்தட்டியை இழுத்துவிட்டுக் கடைக்குள் தலையை நீட்டி அங்குக்கூடையில் வைத்திருந்த கடலை, அவரை, துவரை, கொள்ளு முதலிய தானிய ங்களைத்தின்பதைக் கடைக்காரன் கண்டு அக்குதிரை யாருடையதென்று விசாரித்தபோது வழிப்போக்க ராக வந்திருக்கும் தேசிகருடையதாயிருக்கலாமென்று சிலர் கூறவே அவன் தேசிகரிடம் வந்து உமது வெள் ளைக் குதிரை கடையிலுள்ளவைகளைத் தின்றுவிடு கின்றது அதட்டி ஓட்டினும் போவதில்லை சீக்கிர மாக வந்து பிடித்துக் கட்டிவிடுங்களென்று வேண் டிக்கொண்டனன்.

தேசிகரும் தாம் அயக்கிரீவரை இன்று பட்டினி போட்டபடியால் அவர் இப்படிக்காக்ஷி தந்தனரென்று ஊகித்தறிந்து அந்த வியாபாரியினிடத்தில் கொஞ்சம் பால்கேட்டுவாங்கிக்கொணர்ந்து அதை அயக்கிரீவமூர் த்திக்குக் கண்டருளப்பண்ணித் தாமும் சிஷியர்களும்

உட்கொண்டு நித்திரை செய்தார்கள். வெள்ளைக் குதிரையினியாதொரு தீங்கும் புரியாதென்று தேசிகர் வர்த்தகனிடம் சொல்லியனுப்பிவிட்டார். வர்த்தகன் கடைக்கருகில் சென்று மறுபடியும் பார்த்தபோது அக்குதிரைமறைந்துவிட்டது.

பொழுது விடிந்தவுடனே வர்த்தகர் கடையிலிருந்த தானியக் கடைகளில் குதிரை வாய் வைத்துத் தின்ற கடைகளைப் பார்க்கவே அக்கடைகளிலிருந்தவைகளெல்லாம் சுவர்ணமயமாக விளங்கின. அயக்கிரீவரது பிரசாதத்தால் வர்த்தகனும் தனவானாயினான். இச்சம்பவத்தினால் தெய்வம் தம்மை வழிபடும் பக்தருக்கிரங்கித் தாமே வடிவில் வந்து மறைபொருளான கோலங்காட்டிப் பூசை கொள்ளுமென்பதும் இச்சார பாகவே அவ்விடத்திலே [illegible] பொருளளிப்பதும் வெளியாகின்றன. தெய்வ வல்லமையால் தானியமணிகளும் பொன்மயமாக மாறி விடுமென்பதும் வெளியாகின்றன. முன் ஒருக்கால் ஒரு பழக்காரியின் கூடையைக் கண்ணன் தன் கைகளால் தொட்டவுடனே அக்கூடை பொன்மயமாயிற்றென்பதையும் [illegible]. அது போலவே அயக்கிரீவரது பிரசாதத்தினாலே வர்த்தகனுக்குப் பொன்குவைகள் கிட்டின.

தேசிகர் பிறகு அயிந்திர [illegible] திரு [illegible]

ந்து பிறகு திருக்காவேரியில் நீராடிக் கோயிலுக்கெழு ந்தருளி ஸேவாக்கிரமப்படி பெரிய பெருமாளை மங்க ளாசாஸனம் செய்து தமது திருமாளிகைக்கேகி ஸ்ரீ ராமானுஜரது தரிசனப்பிரவர்த்தனம் செய்துகொண் டிருந்தார். தினந்தோறும் தமது தினசரியில் வழு வாது அரங்க நகரப்பனை வழிபட்டுக்கொண்டு களித் திருந்தனர்.

வெண்பா.

வாக்குமிக வுண்டாம் வரத னருள்பெறுவர்
தாக்கு மவர்கருணை யாநந்தம்—தேக்கும்
வனசரிகை யைச்சொல்லி வாழ்த்துந் தூப் புல்லார்
தினசரிகை யைச்சொல்வ தே.

ஸ்ரீ ராமானுஜரது தர்சனத்தைத் தெளிவாக யாரும் பருகத்தறிய ரகஸியப் பிரபந்தங்கள் செய்தது.

வித்யாரண்யர் கட்டுவித்தநகரமாம் விஜய நகரத் திற்கருகிலுள்ள வைஷ்ணவர்களுள் முக்கியஸ்தரான சிலரும் இராஜமகேந்திரத்திலிருந்த அரசனாகிய ஸர்வ ஜ்ஞஸிம்மநாயக்கரும் தேசிகரைத் தெளிவான நடை யில் தினந்தோறும யாரும் பருகத்தறிந்துகொள்ளும் படி ஸித்தாந்த ஸாரமா முண்மைப்பொருளைப் பிர பந்தரூபமாக எழுதி வெளிப்படுத்தி உபகாரஞ் செ

ய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டனர். அவ் வேண்டுகோளுக்கிணங்கி டணிப்பமான ரூபமாகத் தேசிகர் ரகஸியக்கிரந்தங்களைச் செய்தனர். அவைகளெல்லாம் ஸித்தாந்தஸாரமான உண்மைகள். வடமொழி தென்மொழிகளிற் றேர்ச்சிபெறாத யாவரும் கேட்டறிந்துகொண்டு அவைகளின்படி நடந்து நல்வழிக் கொள்ள இவைகள் சிறந்த வழிகாட்டிகளேயாம். ஆண்மக்கள் பெண்மக்களிருவர்க்கும் பயன்படுபவைகளாயின.

அவைகளாவன:—

1. தத்துவத்திரய சுளகம்.
2. ரகஸ்யத்திரய சுளகம்.
3. தத்துவ பதவி.
4. ரகஸ்ய பதவி.
5. தத்துவ நவநீதம்.
6 ரகஸ்ய நவநீதம்.
7. தத்துவ மாத்ருகை.
8. ரகஸ்ய மாத்ருகை.
9. தத்துவ ரத்நாவலி.
10. ரகஸ்ய ரத்நாவலி.
11. தத்துவ ரத்நாவலி ஸங்கிரகம்.
12. ரகஸ்ய ரத்நாவலி ஹ்ருதயம்.
13. ரகஸ்ய சிகாமணி.
14. அஞ்சலி வைபவம்.

15. பிரதான சதகம்.
16. பரமபத ஸோபானம். (தமிழ்)
17. அபயப் பிரதான ஸாரம்.
18. ஸம்பிரதாய பரிசுத்தி.
19. உபகார ஸங்கிரகம்.
20. ஸார ஸங்கிரகம்.
21. திருமுடி யடைவு. முதலியவைகளே.

பெரியோர்கள் இந்நூல்களை யெல்லாம் பார்த்தும் கேட்டும் ஸ்ரீபாஷ்யகாரரின் சித்தாந்தம் அவரது கருத்தின்படி இன்றுதான் நிலைபெற்றதென்றும், வைராக்கியத்தில் தேசிகர் கூரத்தாழ்வானைப் போலவும், கலாவல்லபத்தில் பட்டரைப்போலவும், ஞானத்தில் ஆழ்வாரைப்போலவும், எடுத்துக்காட்டிப் போதிப்பதில் ஸ்ரீபாஷ்யகாரரைப்போலவும், விரக்தியே ஒரு வடிவுகொண்டதுபோலவும், பொறுமையில் பூமிதேவியைப்போலவும் வீற்றிருக்கின்றாரென்று பலரும் கொண்டாடினார்கள். தார்க்கிகர்களும், கவிகளும், வேதாந்திகளும், மற்றுமுள்ள கலைவல்லவரும், சமயவாதிகளும் தேசிகர் எனுந்திருநாமங் காதிற் கேட்டவுடனே ஓடி ஒளித்தார்கள். கவி தார்க்கிக சிம்மமாகிய இவர் விளங்கவே சாஸ்திரங்களும் இவர் இட்ட வழக்காகவே நடைபெற்றன. வேதாந்த போதகர்க்கு இவரே ஆசாரியராகி விளங்கியதால் வேதாந்ததேசிகரெனும் பெயர் இவர்க்குக் காரணப்பெயராயிற்று. இவர் போதித்த

வேதாந்தம் மற்றையோர் வேதாந்தம்போலிராது, உபய வேத சம்மதமாய் விளங்கியது. இவர் ஸர்வதந்திரங்களிலும் வல்லவராய் எட்டுத் திக்குகளிலும் ஸ்ரீபாஷ்யகாரதர்சன ஜயஸ்தம்பங்களை நாட்டிப் பரமதங்களை வேரறுத்து விளக்கின காரணத்தால் ஸர்வதந்திரஸ்வதந்திரராகவும் விளங்கினார். ஸ்ரீ வைஷ்ணவர் விஷயத்தில் அவர்கள் தம்மை விற்கவும் பெறுவார்களென்னும்படி விநயமுடையவராகவும் விளங்கினார். ஸம்பாஷணத்தை விஷமென்றும் இள மாதர்களைப் பிணமென்றும் ஜனங்களின் கூட்டத்தைப் பாம்பென்றும் ராஜதானியை நரகமென்றும் எண்ணி அவைகளினின்றும் விலகித் தமது பெருமைகளை மறைத்துக்கொண்டு பிறரால் வரும் புகழ்ச்சியையும் லாபத்தையும் பூஜைக்க வரும் பொருள்களையும் வேண்டாது பொறுமை முதலிய குணபூர்ணராய் சற்பிராமணராகக் கோயிலில் இவர் வீற்றிருந்தார். இவர் வாழ்நாளில் அரங்கநகரில் வீற்றிருந்த இக்காலம் நற்காலமேயாம். இவரது தினசரியும் ஸ்ரீசரித்திரத் தினந்தோறும் நடைபெற்றுவந்தது.

ஐந்தாவது.

தேசிகரின் தினசரியின் வகை.

இரவில் நான்காவது யாமத்தில் பிராம்ம முகூர்த்தத்திற்கு முன் எழுந்து திருவாய் விளக்கஞ் செய்து

கொண்டு ஆசமனம் செய்தருளி குருபரம்பரையை மனதில் நினைந்துப்பிறகு பகவானது தியானரூபமான யோகம் செய்தருளுவர். இது தினசரிக்கு ஆணிவேர் போன்று வெகு முக்கியமானது. பிறகு ஸ்தோத்திரங்களை அநுஸந்தானம் செய்து அபிகமனத்தைச் சங்கற்பிப்பர். பிறகு காவேரிக்குச் சென்று செய்யக்கடவதை முன்செய்து நீராடு முறைப்படி நீராடி திருப்பரிவட்டம் ஊர்த்துவபுண்டரங்களைத்தரித்துக்கொள்வர். திருப்பவித்திரமும் சாற்றிக்கொண்டு அநுஷ்டானம் செய்தருளிப் பெரியபெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளி அபராதங்களொன்றும் புகாதபடி முறைப்படி ஸேவித்து ஸம்ஸ்கிருத த்ராவிட ஸ்தோத்திரங்களை அநுஸந்திப்பார். பிறகு தீர்த்தம் திருத்துழாய் முதலியபிரஸாதங்களை ஸ்வீகரித்துத் திருமாளிகைக்கு எழுந்தருளுவர். தமது ஆராதன மூர்த்தியாம் அயக்கிரீவரைத்தண்டம் ஸமர்ப்பித்து ஔபாஸநம் செய்தருளி அபிகமனத்தைப் பூர்த்திசெய்வர். பஞ்சகால பாராயணத்தில் இது முதலாவது. பரமபுருஷனை மனம் வாக்கு, காயம் எனும் திரிகரண சுத்தியோடு ஜப தியானஸ்தோத்திரவகைகளால் எதிர்கொள்ளல்தான் அபிகமனம், இதுதான் முதலாவது வழிபாடு.

இரண்டாவதன் பெயர் உபாதானம், கிரமவழியாகப் பகவதாராதனத்திற்கு யோக்கியமான பொருள்களைச்சேகரித்தல் என்பதே இதன் பொருளாம்.

*

இதற்காக வெளியே செல்வதற்குமுன் காலக்ஷேபகூட த்திற்சென்று ஸ்ரீபாஷ்யம் முதலிய வேதாந்த நூல்களையும் ஆறாயிரப்படி முதலான பகவத் விஷயங்களையும் ரகஸ்யக் கிரந்தங்களையும் சிஷ்யர்களுக்குப் பொருள் விளக்கிக்காட்டுவார். பிறகு வீதிகளில் உஞ்ச விருத்திக்கு எழுந்தருளுவார். வைஷ்ணவர்களும் பெரியவர்க் கந்தாமும் பகிர்ந்தளிக்க அமுதுபடி காய் கறிகளை அந்தினத்திற்கு வேண்டிய அளவு கைப்பற்றிக்கொண்டு தமது திருமாளிகைக்குத் திரும்புவார்.

தேவபூஜைக்காக மத்தியானம் நீராடி அனுஷ்டானஞ்செய்தருளிப் பிரீதியுடன், திருவடிகைப் பற்றுதிக்காகப் பரிசுத்தமான பாத்திரங்களாலும் சுலபமாய்க் கிடைக்கக்கூடிய திருத்துழாய் முதலான சாஸ்திரோக்தமான திரவியங்களாலும் திருவாராதனம் செய்தருளி அர்க்கிய முதலான ஸாத்விக சாதனங்களுடன் தளிகை ஸமர்ப்பித்து வைச்வதேவம்பண்ணிக் காயத்ரயம் இவைகளைச் செய்தருளி அதிதிகளை முதலிந்தவைருக்குத் தாமுமவருடன் அமுதுசெய்வார்.

இஜ்யை என்பது தேவபூஜைக்குப் பெயர் இது மூன்றாவது வழிபாடாம்.

நான்காவதின் பெயர் ஸ்வாத்தியாயம் இதன் பொருள் தாம் ஓதுதல் என்பதாம். முதலில் பத்திய ஜபம் செய்துவிட்டுப் பிறகு இதிகாச புராண பாகவத்

விஷயாதிகளைப் பாராயணம் செய்து கேட்பவர்களுக்குப்பொருள் விளக்குவார். ஸாயங்காலத்தில் அனுஷ்டானம் செய்தருளுவர். பிறகு அயக்கிரீவரை எதிர்கொண்டு ஸேவித்து யோகமெனும் ஐந்தாவது வழிபாட்டிற்குச் சங்கற்பம் செய்வர்.

பிறகு த்வயானுஸந்தானம்பண்ணிப் பகவானது தியானரூபமான யோகானுஷ்டானம் செய்தருளுவர். பிறகு பரிசுத்தமான திருப்பள்ளியில் எம்பெருமானைத்தியானித்துக்கொண்டு யோக நித்திரை செய்வர். இதுதான் யோகம் யோக நித்திரையாவது தன்னறிவு குலையாது குருபதேச முறைப்படி தியானம் செய்துகொண்டே மனமொடுங்கி நிற்றல். "பிறந்தபின் மறந்திலேன்" என்பது குருபதேச நெறியாதலால் தன்னை மறவாது தூங்கும் தூக்கம் இவ்வகைப்பத்தியோகிகளுக்குக் கிடைக்குமென்றுணர்க. இப்படித் தூங்குமவர்களை யாரேனும் வந்து கூப்பிட்டால் விழித்திருப்பவர்கள்போலப் பதில் மொழி கூறுவார்கள். சுவானுபவிகளுக்கே இதனுண்மை நேரிற் புலப்படும்.

தேசிகர் திருவடிகளில் தொடர்புடையோர்.

ஸ்ரீ பாஷ்யகாரராம் இராமானுஜருக்கு கூரத்தாழ்வான் சேர்ந்ததுபோல் இவரிடத்தும் ஒரு சிஷ்யர்

விளங்கினர். இவர் பெயர் பேரருளாளர். பஞ்சஸம்ஸ்காரம் முதலிய அநுக்கிரகங்களையும் பெற்றுச் சிஷர்களுக்குள் இவர் தலைமை பெற்றவராயிருந்தார். ஆசாரியபக்தியுடையவராய் இவர் மஹா மேதாவியாகி உபய வேதாந்த நிர்வாகராய் விளங்கினார். தேசிகர் இவரது நற்குணத்தையும் ஒழுக்கத்தையுங்கண்டு இவர்க்குப் பிரம்மதந்திர ஸ்வதந்திரரென்ற ஞானசந்ததிப் பெயரை நாமகரணஞ்செய்தனர். இந்த ஞான புத்திரர் பிறகு வைராக்கிய முதிர்ந்து துறவியானார். இவரைப் போலவே வேறு அநேக சிஷ்யர்களும் உபயவேதாந்த நூல்களையும் கர்ம மீமாம்ஸை முதலிய சாஸ்திரங்களையும் கேட்டுணர்ந்து நல்லொழுக்கமுள்ளவரானார்கள்.

அவர்களாவார் :—

1. பிரபாகரஜீயர்.
2. வெண்ணெய்க்கூத்தஜீயர்.
3. விஞ்சிமூர் ராமாநுஜாசாரியர்.

முதலியவர்களே. தேசிகன் மகிமையை நேரிற்பார்த்துப்பிள்ளைலோகாசாரியர் அவர் ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் செய்தருளினார். இந்த லோகாசாரியர் வடக்குத்திருவீதிப் பிள்ளையினுடைய குமாரர். இவ்வாறு தேசிகர் மகிமை பிறர் பார்த்துச் சகிக்க முடியாதென்னலாம்படி மேன்மை பெற்றோங்கியது.

ஆருவது
தரிசனத்தார் அசூயை கொள்ளல்.

இவரது புகழையும் வைபவங்களையும் கலாவ ல்லமையையும் கேட்டும் பார்த்தும் இவரது வித்தா ந்தத்திற்குரியாரான சிலர் பொருமராகி அசூயை கொ ண்டு இவரை வாதத்திற்கு அழைத்தார்கள். இவர் யதிராஜராம் ஸ்ரீராமானுஜர் விஷயமாக ஸ்தோத்திர மாகச் செய்துள்ள "யதிராஜஸப்ததி" எனும் கிரந்த த்தில் ஸ்ரீபாஷியகாரர் சம்பிரதாயத்தவர்களின் திருவ டிகளைத் தமது சிரஸின்மேல்த்தாங்குகின்றேனென்று கூறியிருப்பவராதலால் பாகவதர்களின் அபசாரத்தி ற்குப் பயந்து வாதத்திற்குப்போகாமல் இருந்துவிட் டார். இவர் வாராமைக்குக்காரணம் வாதம் செய்ய த்திறமின்மைதானென்று பலருமறிய வாதுக்கழைத் தவர்கள் வெளியிட்டார்கள். இதுமட்டில் நில்லாது இவர் திருமாளிகையின் வாயிலிலே ஒரு ஜோடி பாத ரக்ஷையைக் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். கதா நாயகர் இதைப் பார்த்துக் கொஞ்சமும் சித்த விகாரமின்றிப் பின்வரும் சுலோகத்தைக் கூறியருளி னார்.

கர்மா வலம்பகாக் கேகித்
கேசித் ஜ்ஞாந வலம்பகா:
வயந்து ஹரிதா ஸாநாம்
பாதரக்ஷா வலம்பகா:

(கருத்து) சிலர் கர்மத்தைத் தஞ்சமென்று பற்று கின்றார்கள். சிலர் ஞானத்தைத் தஞ்சமென்று பற்று கின்றார்கள். நாமோ பாகவதர்களது பாதரேணுக்களை ப்பற்றினவராகின்றோம்.

வாதுக்கழைத்தோர் இவரது சாந்த குணத்தைக் கண்டு மகிழ்ந்து இவர் திறத்தில் தாங்கள் நடந்து கொண்டது பாதகமென்றெண்ணி நினைந்துத் தாஞ்செய்த அபராதத்தைப் பொறுத்தருளும்படி வேண்டிக்கொ ண்டனர். சாந்த விப்பிரரும் அப்படியே பின்னையும் அவ் வேண்டுகோளுக்கிசைந்தனர்.

கட்டளைக்கலித்துறை.

தவிராதி சிங்க மெனவே
திருமாலன் கர்த்திவீரும்
தவியாக் கியானம் பயில்கின்ற
தாவி மைந்தாபரிஞர்
செய்யாதன முன்னைக் கவையுறுத்தார்கள்
வாதிற் றரிசனத்தை
யிவர் தாம் பொறுமையேற் புரிவோன்
றேதெனச்சொல்லு மெங்குருவே.

இவர் தாம் செய்த நூல்களில் தென்கலை ஆசாரியர்க ளின் கோட்பாடுகளுக்கு மாறாகச் சில விஷயங்களை எடுத்துக் கூறியிருப்பினும் அவ்வாசாரியர்களிடத்து நேசம் பாராட்டி வந்தனர். முக்கியமானது சில விஷயா

ங்களில் மாறுதல்களுண்டாயிருப்பினும் அதை இவர் ஓர் பெரிய விஷயமாகக் கொள்ளாது ஒற்றுமையையே பெரிதெனக்கொண்டனர்.

நயினாராசாரியரின் பிறப்பு.

நம் கதாநாயகரில்லறத்திலிருந்தும் வைராக்கிய நிதியாயிருந்தமையால் விஷயானுபவங்களிலிழியாதிருந்தார். இப்படியிருந்துகொண்டிருக்கையில் ஓர் நாளிரவில் இவரது சொப்பனத்தில் பேரருளாளர் தோன்றி உமது வைராக்கிய நிலையைக்கண்டு நாம் மிகவும் களிப்புறுகிறோம். ஒரு அம்சத்தாலே நாம் உமக்குக் குமாரராய் அவதரிக்கிறோம். அக்குமாரருக்கு வரதன் என்று நாமகரணம் செய்யும். இதற்காகநீர் ஒருநாள் கர்ப்பாதானஞ் செய்யுமென்று நியமித்துவிட்டு மறைந்துவிட்டார். அந்நியமனப்படி ஒரு நாளிரவில் நம் தேசிகர் நல்வேளையில் கர்ப்பாதானம் செய்தருளினர். அது முதலவரது தேவியாரும் கர்ப்பம் தரித்தார். பிரஸவ காலமும் நெருங்கியது.

தேசிகர்க்கு நாற்பத்தெட்டாவது திருநக்ஷத்திரத்தில் நள ௵ ஆவணி ௴ ரோகிணீ நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஓர் குமாரர் உதயஞ்செய்தார். இக்குமாரருக்கு ஜாதகருமம் செய்து பேரருளாளரின் நியமனப்படி பனிரண்டாம் நாளில் வரதன் என்று நாமகரண

மும் செய்தனர். குமாரருக்கு ஆண்டின் நிறைவாகி இரண்டாவது வயதும் பூர்த்தியாயது.

வெண்பா.

கற்பனைசேர் பாமாலை கண்ணனடிக் கேசாற்று
மற்புதமே தாந்தா ரியரவர்தம்—சொற்பயனாற்றில்
வந்தருளுங் கச்சி வரதர் திருவருளாற்
றந்தருளுஞ் செல்வரைப் பெற்றார்.

ஸ்ரீ ஹயக்ரீவர் நிமந்த்ரணத்துக்கு எழுந்தருளியது.

தேசிகரது தகப்பனாருக்குப் [illegible] திருவத்யயனதினம் வந்தது. முதல் நாளிலேயே நிமந்த்ரணத்திற்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இந்தத் திருவத்யயனத்தைத் தடுக்க அஸூயையாலே சிலர் கெடுத்துவிட எண்ணங்கொண்டு பெரிய திரவியத்தைக் கொடுத்து முன் சொல்லியிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களைத் தங்கள் கிரகத்திலேயே போஜனம் செய்துவிடும்படி திட்டஞ்செய்துவிட்டார்கள். அவர்களுமப்படியே போஜனஞ்செய்துவிட்டுத் தாம்பூலம் கையில் தரித்துக்கொண்டு வெளியே வந்துவிட்டார்கள்.

இதனைக் கண்டு தேசிகர் ஒருவாறு கவலைகொண்டனர். வேறு வைஷ்ணவர்கள் அவ்வேளையில் நேர்வது சாத்தியப்படாமலும்போயிற்று. உடனே தேசிகர் ஒருவாறு மனத்திடங்கொண்டு நமக்குப் பேரருளாளரும் அயக்கிரீவரும் ஆராதனமூர்த்திகளாய் வாய்ந்திருக்க நமக்கு என்ன குறையுளதென்று தைரியங்கொண்டு அநுஷ்டானம் புரிந்து ஆராதனமும் செய்தருளித்தளிகையும் ஸமர்ப்பித்தார். பிறகு ஓமம் முதலிய சிராத்தக்கிரியைகளை முறைப்படி செய்து இலைத்தளிகையில் அவிசு முதலிய ஸகல பதார்த்தங்களையும் பரிமாறித் தத்தமும் பண்ணினார். திரைபோட்டுவிட்டு வெளியேயிருந்துகொண்டு மந்திரஜபம் செய்துகொண்டிருந்தார். மேற்கூறிய இரண்டு எம்பெருமான்களும் பரமை காந்திகள் ஸமர்ப்பிக்கிற அவ்விய கவ்வியங்களையெல்லாம் பிராம்மண அந்தர்யாமியாயிருந்து அமுது செய்கிற வழக்கத்திற்கு மாறாக இப்போது இவர் விஷயத்தில் அவ்விரு மூர்த்திகளும் தாமாகவே நேரில் வந்து அமுது செய்தார்கள். அவர்கள் அமுது செய்கிற சப்தத்தைக்கேட்டுச் சந்துஷ்டராய் இவர் அன்ன சேஷானுமதி பரியந்தமான சிராத்தக்கிரயங்களை எல்லாம் நடத்தி அடைக்காயமுது சமர்ப்பித்து எழுந்தருளப்பண்ணினார். இரண்டு எம்பெருமான்களும் திருமாளிகையினின்றும் வெளியே புறப்பட்டார்கள். இவர்களைப் பார்க்கவேணுமென்று அருமைப்பட்டவர்கள் வெளியே வந்து காத்துக்கொண்டிருந்

நார்கள். இன்றென்ற [illegible] [illegible] வைந்து பார்க்கும் முன்பே [illegible] வரிற்புலப்பட்டது பாயபாய் [illegible] விட்டார்கள்.

பிறகு ரேங்கர் அயக்கின்னர் [illegible] த்தில் இந்திருந்த [illegible] ([illegible] க்கை) ஒரு பாத்திரத்தில் [illegible] கையில் கொடுக்க, பிறகு தான் [illegible] டபடி சொல்லியிருந்தார். [illegible] இவர்களுக்கும் தெரியாமல் [illegible] பண்ணிவிட்டார். பிறகு ரேங்கர் [illegible] அமுதுசெய்யப்போகு [illegible] துக்கைக்கொண்டுவரும்படி [illegible] யாமல் ருசாதன [illegible] வியார் [illegible] தென்று ரேங்கர் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] ண்டார்கள். [illegible] யாசின் உடம்பும் [illegible] [illegible] [illegible]

ளாற் பெற்றுத்தேர்ந்து பிதாவைப்போலவே ஒழுக்கத்தோடு மகா வல்லமைசாலியாய் எழுந்தருளியிருந்தார்.

பிரமசாரியின் விவாகத்திற்குச் சுவர்ண தாரை அளித்தது.

ஓர் பிரமசாரி தனக்கு விவாகம் செய்துகொள்ளக் கருதிக் கையிற் பணமில்லாமையால் அங்கங்கே யாசகம் செய்துகொண்டு வந்தான். அநேகமாய் யாரோ தேசிகரை அவமானம் செய்விக்கக் கருதிச் சிலர் ஒன்று சேர்ந்து இந்தப் பிரமசாரியை அழைத்து ஓய் பிரமசாரி, இந்த ஊர் வைதிகரில் ஸ்ரீ வேதாந்த தேசிகரை யாசித்தால் வேண்டுந் திரவியந் தருவரென்று கூறித் தேசிகர் திருமாளிகையையுங் காட்டிவிட்டார்கள். அப்பிரமசாரியும் வீட்டிற்குள் நுழைந்து தேசிகரைக் கண்டு நமஸ்கரித்துப் பொருள் வேண்டுமென்றும் அடியேனைத் தேவரீர் ஸன்னிதிக்கு [illegible] அனுப்பித்தார்கள் மற்று [illegible] விண்ணப்பம் செய்தான். இதனைக் கேட்டுச் செவி சாற்றியவுடனே தேசிகர் பாகவதர்கள் பிரார்த்திருந்தால் பெரியபிராட்டியார் அருள் செய்வார் என்று கூறி "ஸ்ரீஸ்துதி" என்னும் ஸ்தோத்திரத்தை அனுஸந்தித்தார். பக்தியையும் பாகவத விசுவாசத்தையும் பார்த்துப் பெரிய பிராட்டியார் பிரமசாரி [illegible] தங்கக்காசுகளை [illegible] மழைபோல் பொழிவித்தார். [illegible]

யே எடுத்துக்கொள்ளும்படி தேசிகர் பிரசாதித்தா நியோகித்தார். அதனால் தன் வசிஷ்டர்படியே வாரிதியை எடுத்துக்கொண்டு மந்திரத்தைத் தேடு கலையும் முட்டையாக வெளியே செய்தான். பிரமாணிகளை முன்பு போகும்படி அநுஷ்டிப்பவர்களெல்லாம் திக்கிலிருந்து ங்கித் தங்களை மன்னிக்கும்படி தேசிகராகவுமிவ் விர்ந்து வேண்டிக்கொண்டனர். யோகவசிஷ்டர் பெரியோர் தங்களுக்கு நியமம் முதலியவைகளை போதிக்கும்படி கோடாலைாற்றலும் வந்து சேருமென்பது யோகசாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இதனை ஸ்ரீ தேசிகர் ஸ்ரீஸ்துதியில் "யோகாரம்ப" என்று தொடங்கும் சுலோத்துள்ள சுலோகத்தில் கூறியிருக்கின்றார். அதன்படியே ஆகாசத்திலிருந்து கனகதாரை வர்ஷித்ததோற்றதால் இந்த ஸ்ரீஸ்துதிக்கு "கனகதாரா ஸ்துதி" என்று மற்றொரு பெயருமுண்டு.

கட்டளைக் கலித்துறை.

மோகா டவிதன்னை நீக்கின்ற
தீர முமுக்ஷுவினர்
யோகா நியம முதன்மை
லவாமின் ஞலகத்தினை
தேகாபி மானங்க ளின்றி
நின்றுரெங்கள் தேசிகரே
ஏகா தசிவிர தந்த
னொழுமை விருந்தனரே.

பின்பொருநாள் வேறு சிலர் தேசிகரது ஏகாதசி நியமத்தைக் கெடுக்கக் கருதிக் கோயிலர்ச்சகருக்குப் பரிதானங் கொடுத்துத் திட்டம் செய்தார்கள். தேசிகரும் வழக்கப்படி மங்களாசாஸனத்திற்குக் கோயிலுட் சென்றனர். அர்ச்சகரொருவர் ததியன்னத்தை அவர் கையில் கொடுத்துத் தேவரீர் அமுது செய்யும்படி பெரிய பெருமாள் நியமிக்கிறாரென்று சொன்னார். தேசிகரும் மகா பிரசாதமென்று அதனை ஏற்றுக்கொண்டார்.

சுருதிஸ்மிருதிகளிரண்டும் நம்முடைய கட்டளைகளே அவைகளை மீறி நடப்பவன் நமக்குத் துரோகி என்று சாஸ்திரமுறைமையாய் நியமித்தருளிய தேவரீரே இப்பொழுது அர்ச்சகமுகமாக இப்படி நியமிப்பது விசேஷமே யென்று தேசிகர் பெரிய பெருமாளைச் சுட்டி விண்ணப்பஞ்செய்துகொண்டார். உடனே பெரிய பெருமாள் அர்ச்சகர்மேல் ஆவேசித்தருளி நாம் சாஸ்திரத்திற் கூறிய நியமந்தான் நியமம். இது நம்முடைய நியமனமல்லவென்று கூறித் ததியன்னத்தை அவர் கையினின்றும் பறித்துக்கொண்டார். பிறகு அர்ச்சகருக்குச் சரியான சிந்தையுதிக்கவே யவ்வாறு அடியேன் பணத்திலாசையாலே இப்படிச் செய்ததை மன்னிக்கருளவேண்டுமென்று தேசிகரிடம் பிரார்த்தித்துக்கொண்டார்.

உபாதான அறுதாபுயில் பொன் வெள்ளிக் காசுகளை மறைத்து வைத்தது.

மற்றொருநாள் பிரசங்கம் [illegible] செய்திக வேறு இனி [illegible] கொண்டிருந்தார்கள். வந்திராத்திர பட்டணத்தை சேர்ந்த [illegible] உபாதானத்திற்கு [illegible] யில் அறுதாபுயில் பொன் வெள்ளி [illegible] காசுகளைச் சேர்த்து உபாதானம் [illegible] படிச் சூசையப்பன் செய்த [illegible] த்திருந்தபோது அந்த அறுதாபுயைப் [illegible] வியாபாரம் அறுதாபுயை [illegible] டியோடே அந்த காசுகளை [illegible] பிரிக்கொடுக்க [illegible] செய்து [illegible]. அறுதாபுயைப் [illegible] ட்டுப் பிரித்துக்கொண்டு அந்த [illegible] சிறு காசுகளை [illegible] படி [illegible] அப்படி [illegible]. அன்றைக்கு [illegible] அறுதாபுயை [illegible] பார்த்துக்கொண்டிருந்தார்கள். [illegible]

யத்தைக்கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். இவை யாது நோக்கம் வைராக்கியத்தை சோதித் தறிவதற் காகவிருப்பினும் வேறு சிலர் அபிப்பிராயம் தம் சொத்து பரம ஸாதுவும் ஏழையுமான தேசிகர்க்கு உபகாரமாகவேண்டு மென்பதாகவுமிருந்தது. சரீர தாரணைக்கிற்குமட்டும் தினந்தோறும் உபாதான வழியாய்க் கிடைக்கும் அமுதுபடியைமட்டும் ஸாத்விக ஆகாரத் தினிமித்தம் கைப்பற்றிக்கொண்டாரேயன்றி மற்றதை அவர் வேண்டினாரில்லை. இது இவரது வைராக்கிய நிலையை தெற்றெனப் புலப்படுத்தியது.

பாதுகா ஸகஸ்ரம் அருளிச்செய்தது

வெண்பா.

பழயனைத்த செங்கமல பாதத்தைச் சொல்ல
அடியேற்கு முண்டோ அறிவு—நெடிய தாம
திருவடி நன்னிலைமேற் செய்குமோ வென்று
குருவடியைக் கைமேற் கொள்.

இக்காலத்தில் திருவரங்க நகரில் அழகிய மணவாளப்பெருமாள் கவிராஜ் என்கிற ஒரு மகா வித்வான் கவிதை செய்வதில் வல்லவராயிருந்தார். அவருக்கு அவருடைய சிஷ்யர்களும் பிரசித்தமாக கவிதார்க்கிக சிங்கமென்னும் பிருதை வழங்கிவந்தனர் [illegible] கள். ஒரு நாள் பெருமாள் ஸந்நிதியில் திருவாய்மொழி [illegible] [illegible]. [illegible] இருவர்களுமையும்

தேசிகரையும் அழைத்து இன்றையதினம் [illegible] ராத்திரிகாலத்திற்குள்ளாகவே பெரியபெருமாள் வி[illegible] யமாக ஆயிரம் சுலோகங்களை [illegible] செய்து அதையார் தீர்மானிக்கிறார்களோ [illegible] கவிதார்க்கிகசிம்மமென்று பெயர் [illegible] திருவரங்கனை நோக்கிப் பிரார்த்தித்து [illegible] தார்கள். இதனை இருவர்களும் [illegible] ன்று அங்கீகரித்தார்கள். பெரியபெருமாள் [illegible] விஷயமாக அழகியமணவாளப்பெருமாள் [illegible] கமலஸகஸ்ரம்” என்று [illegible] கரும் அதற்குமேலே போகத் [illegible] டோமென்று கருதி “பாதுகாஸகஸ்ரம்” [illegible] கிறேமென்றார். பிறகு இருவர்களும் [illegible] ளிகைக்கேகினார்கள். [illegible] பட்டு ஜக்[illegible] செய்தருளினார். [illegible] தமது கிரகத்தில் நிலாக்கோடி [illegible] போலவே நித்திரை கொண்டிருந்தார். [illegible] ஒரு சிறிய வடிவங்கொண்டு ஆய[illegible] ளித் தேசிகரை எழுப்பி [illegible] பாதுகாஸஹஸ்ரம் செய்யவேண்டுமென்று [illegible] னர். உடனே தேசிகர் எழுந்திருந்து [illegible] ட்டும் நான் சொல்லியருளின் [illegible] டுவாவென்று அச்சிட[illegible] நியமிக்க நாலாம் யாமம் [illegible]

க்கொண்ட பட்டோலைத் திருப்பணி பூர்த்தியாய்விட்டது. பிறகு இருவரும் பிரிந்துபோனார்கள்.

மறுநாள் காலையில் பெரிய பெருமாள் ஸன்னிதியில் கூடியிருந்த கோஷ்டிக்கிடையில் இரண்டு கவிகளும் போய்ச்சேர்ந்தார்கள். தேசிகர் முன்னிரவில் பட்டோலை கொண்ட சிஷியரை நோக்கி அந்த ஓலையிலெழுதிய கிரந்தத்தைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். அச்சிஷ்யன் ஒன்றுமறியானாய்த் திகைத்து நின்றான். இது ஹயக்கிரீவன் செய்த காரியமென்று கண்டுகொண்டு அச்சிஷ்யனை விளித்து புஸ்தகம் இன்ன இடத்தில் வைத்திருக்கிறது போய்க்கொண்டு வாவென்று தேசிகர் நியமித்தார். அப்படியே புஸ்தகம் கொண்டுவரப்பட்டது. தேசிகர் கோஷ்டியில் அக்கிரந்தத்தை ஆதியோடந்தமாகப் படித்துப் பூர்த்தி செய்தனர். இதை நேரிலிருந்து கேட்ட அழகிய மணவாளநயினாரும் வெட்கி வெறுமனே மௌனமாயிருந்தனர். அப்பொழுது பெரிய பெருமாளுவந்து ஸ்ரீ கவிதார்க்கிக சிங்கமென்று அருள் பாடிட்டுத் தேசிகருக்குப் பகுமானம் பண்ணுவித்தார். தேசிகரும் நயினாருடைய லஜ்ஜையைப்போக்கி ஸமாதானம் செய்யும்பொருட்டு அவரைக்குறித்து ஒரு சுலோகம் சொன்னார். அதுவருமாறு:—

சுலோகம்.

ஸம்தேஸமகரயுவதீஸம்பதசதமத்யந்ததுர்ப்பசம்ஜடிதி
கரிஷ்சிராய ஸஃ தேஸகலமகிபாலலாளிதம்களபம்.

*

இதன்பொருள்.

ஒரு பெண்பன்றி மிகவும் அதிகமான நூறு குட்டிகளைச் சீக்கிரம் பெறுகின்றது. பெண்யானையோ வெகு நாள்கழித்து ஒரு குட்டியைப் பெறுகின்றது. அக் குட்டி அரசர்களால் கொண்டாடப்படுகின்றது.

சீக்கிரத்தில் செய்த பாட்டுகளெல்லாம் பன்றிக் குட்டிபோல் சிறப்புடையதல்லவென்று தேசிகர் தம் மைத் தூற்றிக்கொண்டார். இதனால் இவர் பாடல் எப்பொழுதும் யாவரையும் கவர்ந்து அமைதிப் படுத்தும் கூடுமென்பது விளங்குகின்றது. தேசிகரது ஒருசுலோகத்திற்கு முக்கூறுபொருள் பொருளுடையனவாகச் சுலோ கங்களெல்லாம் என்று தேசிகர் அறியாதவராய் வெளியாகி ன்றது. அறிய மனமாரப் பெருமாள் கவிதைத் தேசிகரது விநயத்தைக்கண்டு களித்து அன்று முதல் அவரிடத்தில் அதிகப்பிரியம் கொண்டவரானார்.

பதகமலஸஹஸ்ராம். இதுவரையில் அச்சுப்பெ ளியாகவில்லை. பாதுகாஸஹஸ்ரம் மட்டும் இரண்டு புஸ் தகங்களாக டீகைபொருளுடனும் தமிழ்க்குறிப்பு டனும் அச்சாகிவெளிப்படுத்தப்பட்டது. அப்புஸ்தக மும் இப்பொழுது கிடைப்பதரிது. தேசிகர் நூல்களில் யாரேனுமிவைகளை பொறுப்பாக வெளிப்படுத்துவது பெருமுக்கியம். சமீருதம் சுலோகங்களையும் கிடைத்த மட்டில் சேகரித்து அச்சுப்போட்டு வெளியாக்க நம்ம வரில் யாரேனும் ஸங்கற்பங் கொள்வாராகில் அதுவும் சிறந்த

தேயாம். பழைய நூல்களைப் பாதுகாத்து அச்சிடப் பெருந்தொகை வேண்டுமாதலால் செல்வவான்களான நம்மவருள் யாரேனும் இப்பணியைக் கைக்கொள்ளில் அவர் தனம் சற்பாத்திர விநியோகமாகி அவ்வகையாய்ப் புகழையும் உண்டாக்கும்.

தேசிகரது கவிபாடுந் திறத்தையும் ஒருவாறு சோதித்தறியவேண்டுமென்று சிலர் அரை குறையாய் பல சுலோகங்களைச் செய்து அவரிடம் கொடுத்து அவைகளைப் பூர்த்தி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அவர்கள் வேண்டுகோளுக்குடன்பட்டு, கொடுத்த சுலோகங்களையெல்லாந் திரட்டிப் பூர்த்திசெய்து "ஸமஸ்யாஸகஸ்ரம்" என்கின்ற பெயர்வைத்து தேசிகர் அவர்களிடம் கொடுத்தார். அவர்கள் பிறகுதேசிகர் திருவடிகளில் முன்னிலும் அதிக பிரவணராயிருந்தார்கள். ஸமஸ்யை (ஸமஸ்யா) என்பது ஒருவர் அரை குறையாய்ச் சொன்ன சுலோகம் அல்லது கவியை இனிய கருத்தமைந்துள்ளதாகப் பூர்த்திசெய்வதேயாம்.

திருவாய்மொழிக்கு ஓர் விரிவுரை செய்தது.

மற்றொரு காலத்தில் தேசிகர் பிள்ளைலோகாசாரியரை அவர் தகப்பனார் வடக்குத்திருவீதிப்பிள்ளை செய்துள்ள முப்பத்தாறாயிரப்படியென்னும் திருவாய்

மொழியுரையை அனுப்புவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரோ தமது சிஷ்யர்களின் நிர்ப்பந்தத்தால் அதை அனுப்புவிக்கமாட்டாதவரானார். இதனை வெளியிடாது புஸ்தகத்தைக்கொண்டு பார்த்தறிதல் கூடுமோ! குருமுகமாகவன்றோ கேட்டறிதல்வேண்டுமென்று விடையளித்தார். தேசிகரும் தம்மிடத்தில் வேதாந்த சிரவணம் செய்தவர்களிடத்து இதனைச் சிரவணம் செய்யாது கூடாதென்று சொல்லியனுப்பி விட்டுத் திருவாய்மொழியின் பாடல்களிலடங்கிய பொருள்களை எல்லாம் நன்காராய்ந்து எண்பதினாயிரப்படியாம் "நிகமபரிமளம்" என்கின்ற திருவாய்மொழியின் பேருரையைச் செய்தருளினார். இவ்வுரை இக்காலத்தில் எங்கும் கிடைப்பதில்லை. இந்தப்பிரபந்தங்கள் காலகதியில் அழிந்தனபோலவே இப்பேருரையும் அழிந்தொழிந்துவிட்டது. "திராவிடோபநிஷத்தின்ஸாரம்" "திரவிடோபனிஷத்தின் தாற்பரிய ரத்நாவலி" என்கின்ற ஸம்ஸ்கிருத சுலோக ரூபமான இரண்டு கிரந்தங்களைச் செய்துள்ளார். எண்பதினாயிரப்படிக்கு அப்புள்ளார் செய்துள்ள அருமையிரப்படி விதை போன்றதாயினும் அவ்விதைகளினின்றெழுந்த எண்பதினாயிரப்படியாம் பெரிய விருக்ஷத்தின் கிளைகள்போன்ற பேர்பெற்ற இரண்டு வடமொழி நூலான சிறு கிரந்தங்கள் விளங்குகின்றன. இவையிரு சிறு நூல்களும் தமிழ் வாசனையறியாத வடமொழிப் பண்டிதர்களுக்கு நம்மாழ்வாரின் பாடல்களில் இனிது

விளங்கும் ஸித்தாந்தப் பொருளிஃதென்பதை விளக்குகின்றன. வடமொழி வேதாந்தத்தி லடங்காத பல நுட்பங்கள் திருவாய்மொழியிற் காணப்படுகின்றன. அவை ஆழ்வாரின் சுவானுபூதியிற் கண்டுணர்ந்தவைகளேயாம. உபய வேதாந்தம் வைஷ்ணவப் பிராமணர்களிடம் மட்டுமே ஏற்பட்டதற்கு நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலடங்கிய ஸித்தாந்த ஸாரமே காரணமாம். தேசிகர் இஃதன்றித் திருப்பாணாழ்வாரின் பாடல்களாம் அமலனாதிப்பிரானுக்கு முனிவாகன போகம் என்று ஒரு வியாக்கியானமும் மதுரகவிகளின் பாடல்களாம் கண்ணிநுண் சிறுத்தாம்புக்கு மதுரகவி இருதயம் என ஒரு வியாக்கியானமும் செய்துள்ளார். இவ்விரண்டு வியாக்கியானங்களும் ரகஸ்யப் பிரபந்தங்களாக மணிப்பவள நடையில் எழுதப்பட்டுள்ளன. பிறகு திரு ஆராதனக் கிரமம் எனும் சிறு நூலை வடமொழியிற் செய்தனர். தமிழில் ஆழ்வார்களுடைய ஊர் நாள் திங்கள் திருநாமம் பிரபந்தங்களின் பெயர் அவைகளின் பாடற்றொகை இவைகளைக் காட்டுகிற (16) பிரபந்தஸாரமெனும் பிரபந்தத்தையும் (17) ஆகாரநியமம் (18) திருமந்திரச்சுருக்கு (19) துவயச்சுருக்கு (20) சரமச்லோகச் சுருக்கு (21) கீதார்த்த சங்கிரகம் என்கின்ற பிரபந்தங்களையும் ஹம்ஸ ஸந்தேச மென்கிற காவியத்தையும், யக்ஞோபவீதப் பிரதிஷ்டை என்னும் ச்லோகங்களையும் தேசிகர் செய்த

ருளினர். இராஜமஹேந்திர பட்டணத்திற்கு அரச
னை ஸர்வஜ்ஞ ஸிம்ம நாயகர் இராமாநுஜ ஸித்தா
ந்தத்தில் மிகவும் விருப்பமுள்ளவராய் அதனை ஸித்
துக்காட்ட வல்லவர் எங்குளாரென்று விசாரித்தார்.
நம் கதா நாயகரது ஸித்தாந்த ஸ்தாபனத் திறத்
தையும் கலா வல்லபத்தையும் கேட்டுணர்ந்து அவரி
டம் தக்க சில ஸ்ரீவைஷ்ணவர்களை யனுப்பித் தத்து
வத்திரய விஷயமாகவும் ரகஸ்யத்திரய விஷயமாயும்
தமக்குத் தெளிவான ஞானமுண்டாகும்படி சொல்லிக்
கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். தேசிகரும்
அவ்வரசனது அபேக்ஷையை நன்றாய்ச் சோதித்தருளி
அவர் மனம் தெளியும்படி ஸுபாஷிதநீவி என்கிற கிர
ந்தத்தையும் தத்துவசந்தேசம், ரகஸியசந்தேசம், ரக
ஸியசந்தேஸவிவரணம் என்று மூன்று ரகஸ்யக் கிரந்
தங்களையும் செய்தருளி முடிவில் ஒரு ச்லோகமும்
சொல்லியருளினார் "ஸத்வஸ்தான்" என்றுபக்ரமமான
ச்லோகமதுவே.

கருத்து.

ஸாத்விகர்களை எப்பொழுதும் அபேக்ஷிக்கவேண்
டும். பிரம்மஜ்ஞானிகளுடைய அபராதத்திற்குப் பயப்
படவேண்டும். பிரம்மஜ்ஞானமில்லாத ஸம்பத்தைத் திர
ஸ்கரிக்கவேண்டும். தன்னுடைய பாரத்தைப் பகவா
ந்தன் பக்கல் ஸமர்ப்பித்துவிட்டு மோக்ஷத்தினுடைய வரு
கை பார்த்திருக்கும் சாதக பக்ஷியைப் போல் இருக்க
வேண்டும் என்பதே. இக்கிரந்தங்களைத் தேசிகர் அரு

ப்பியருளா ஸர்வஜ்ஞ ஸிம்மநாயக்கராம் அரசன் அவைகளினுண்மைப் பொருளை அனுதினங் கருதி வந்து தேசிகர் திருவடியில் பரமபக்தனானான்.

விருத்தம்.

கதிர்கொண்டு வீசுநில வென்னுங் கீர்த்திக்
கவிவாதி சிங்கரருள் பிரபந்தங் கண்டே
சதிர்கொண்டு விளங்கியமா தவன்றன் செல்வன்
சருவஜ்ஞ சிங்கநா யகனுந் தானே
எதிர்கொண்டு பணிந்து வந்து சாதனத்தை
யேற்றுமிக ஞானியா யிருந்தா னய்யா
முதிர்கொண்டு மதமிலா ரவர்மு முக்கு
முத்தர்தாம் பணிவண்ணர் பத்தர் தாமே.

லக்ஷ்மணாசாரியாரது சிஷ்யர்களின் அகங்காரச் செயல்.

இவ்வாறு சிறப்புற்றிருக்க தேசிகர் ஓர் நாள் தம் வாசல் திண்ணையில் வியாக்யானம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது கந்தாடை, தோழப்பர் குமாரர் லக்ஷ்மணாசாரிய ரென்பவர் வீதியில் நவசங்க முதலிய வாத்தியங்கள் முழங்கப் பல்லக்கில் சென்றுகொண்டிருந்தார். அவருடன் பின்பற்றிச்சென்ற சாத்தாதவர்கள் தேசிகர் எழுந்திருந்து மரியாதை செய்யவில்லையென்பதற்காக அவர் காலைப் பிடித்

திழுத்தார்கள். நம்மாசாரியர் எழுந்தருளும்போது நீர் எழுந்திராமலிருப்பதென்னவென்று சொல்லி இழுத்தார்கள். காலக்ஷேபத்தில் ஊற்றம் மிகுந்திருந்ததினால் வீதியிற் பல்லக்கில் ஆசாரிய புருஷர் செல்வதைத் தேசிகர் நாடாதிருந்தார். இவர் தம் காலைப்பிடித்திழுத்தவுடனே அதிக பரபரப்புடன் எழுந்திருந்து அவ்வாசாரியரைப் பின் தொடர்ந்துபோய்த் தாம் செய்த பிழையை மன்னித்தருளும்படி வேண்டிக்கொண்டார். அப்பொழுது "அகந்தே" என்று ஆரம்பமாகும் ஒரு சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே இவ்வாறு வேண்டிக்கொண்டார். அதன் கருத்து:—

நீலமேகமனைய உருக்கொண்டு ஜகத்தனில் ஆதாரமாகி அதிபதியாம் அரவின்மேற் பள்ளிகொண்டருளும் பகவானை அனுதினமுங் கண்டுகந்த தேசிகருடைய வாக்குகளே எம் மனத்தில் யாதொரு ஐயப்பாடுமின்றி உறுதியாகவிருப்பதுண்டு. ஆதலால் அகந்தையே உனது விளையாடலுக்கு இடம் நானல்லவோவென்று கூறி ஆணைமொழிந்திருந்தார். நிறை குடம் தளும்பாதென்னும் உலகப்பழமொழிக்கு இவர் இலக்காக விளங்கினார். இனி நாம் இவ்வூரிலிருப்பில் இச்சம்பவத்தால் அநேகருக்குப் பொறாமை மிகும் அது காரணமாய்ப் பாகவதாபசாரம் நேரிடுமென்றெண்ணிக் கோயிலினின்று வெளியேறி மேல் தேசத்திற்காப்பரிரத்திற் போய்த் தங்க நிச்சயித்தார்.

சத்தியகாலத்திற்கு எழுந்தருளியது.

தேசிகர் கொள்ளைகாலத்திற்குமுன் காவேரிதீரமாம் "ஸத்தியகாலம் என்னும் அக்கிரகாரம் வாஸ யோக்கியமான இடமென்றெண்ணிச் சமீபித்து அங்குப் போய் வாஸம் செய்தார். நித்தியகர்மாநுஷ்டான உபாஸனை காந்தகாலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு அங்கிருந்து வந்தார். போகும் வழியிலுள்ள க்ஷேத்திரங்களைத் [illegible] சிலர் தேசிகர் வாஸம் செய்ததென்று சொல்லுகிறார்கள். இது பிழை. இதற்கு அநேகத்தில் [illegible] [illegible] கந்தாடை [illegible] [illegible] [illegible] [illegible] உண்டாயிற்று. [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] பார்த்தானை நோக்கிக் கூறியதாவது. —

"தேவரீருக்கு இங்கு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வேதாந்தாசாரியர் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] உமக்கு [illegible] [illegible] [illegible] றார்"

இதற்குடன்பட்டுத் [illegible] [illegible] [illegible] ஆடம்பரங்களில்லாமல் [illegible] [illegible] [illegible] [illegible] தேசிகர் [illegible] [illegible] [illegible]

ளக்கியகாலத்திற் செய்தார். அவ்விருவரையும் தேசிகர் தம் திருமாளிகைக்கு அழைத்துப்போய் நன்கு உபசரித்தார். அப்பால் அதிதிகளிருவரும் வந்தகாரியத்தைத் தேசிகரிடம் விண்ணப்பம் செய்துகொண்டார்கள். தேசிகரும் அதற்குடன்பட்டு அவ்விருவருக்கும் ஒரு மருந்தைக் காலமங்கேயே தயார் செய்துகொண்டு அழைத்தனர் காலக்ஷேபத்தின் பிறகு தேசிகருடைய ஸ்ரீபாததீர்த்தத்தை உட்கொண்டு அவரிடத்தில் அதிக பக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். இப்படிச் சில நாள் சென்றபின் சென்றவர் வியாதியும் போயொழிந்தது. அவர் ஸ்திரியார்க்கும் கர்ப்பமுண்டாயிற்று. இருவரும் ஸ்ரீபாதத்துடையவர்களாகித் தேசிகர் ஸன்னிதியில் நியமமாய்ப் பெற்றுக்கொண்டு அவர்களுக்குத் திரும்பிவந்தார்கள். சிலநாள் கழித்துப் பிரஸவகாலம் சமீபிக்கவே நல்ல காலத்தில் அவர்களுக்கு ஒரு குமாரன் பிறந்தான். அக்குமாரன் தேசிகருடைய தீர்த்தப் பிரபாவத்தால் பிறந்தமையால் அவனுக்கு "தீர்த்தப்பிள்ளை" என்று பெற்றோரியாப் பெயருஞ் செய்தார். இதனை விரும்பிய மன்னர் இனி நாம் வெளிப்படுத்தும் தீர்த்தப்பிள்ளை திருமுடியடைவில் ... த்தியாய்ப்பார்த்துக்கொள்க.

கட்டளைக்கலித்துறை.

பகரத்தி ...

ப ... பாதம் ...

துகராந்தி றைற்கொண் டெட்டியே
காந்த தலைத்தையவிடவோரிக்
குகரக் தபல்முன் விரிஞற்ந்த
சத்திய காலமென்னுஞ்
அகாத்திலேதே சிகர்வாச முஞ்செய்வ
தாகினர்.

தேசிகர் கோயிலுக்குத் திரும்பிவந்தது.

கொச்சகக்கலிப்பா.

பாபுகிர் பொலன்னிருந்த பதிசத்ய காலமென்னுமே
மேனிலா வக்கிரகாரத் தேசாந்த மிசைசுதிரின்றி
மாயிரு ஞாலத்தியாழ் வார்கடாம் பதின்மர்பாலே
கோயிலில் நின்மைபெருஞ்சீற் கொண்டிட்டார் கண்
[டிடாதே.]

வெகு காலப் தேசிகர் பெரிய பெருமாளு
டைய ஸ்ரீவிஜ்ஞேய கோயிலிலே நின்றுகொண்டு மிக
வருந்தி மற்றுமொருமுறை அரங்கனைக்கண்டு களிக்
கத் தேசியாரையும் நமாமையும் வைத்திய காலத்திலே
யேயிட்டு விட்டுச்சில சீஷர்களுடனே கோயிலுக்கெ
ழுந்தருளிப் பெரியபெருமாளை மங்களாசாஸனஞ்செய்
துகொண்டிருந்தார். பெரியபெருமாள் ஜூகன் திரு
க்காவேரியருகில் பெரிய மண்டபத்தில் திருவோல
க்கத்திலெழுந்தருளியிருக்கார். அப்போது சில புலவ

கள் ஓடிவந்து துருக்கர்களின் பட்டாளங்கள் அநேகம் வருகின்றனவென்று தேவஸ்தான அதிகாரிகளிடம் தெரிவித்தார்கள். உடனே அவ்வதிகாரிகள் ஒன்று சேர்ந்து ஆலோசித்துப் பெரிய பெருமாளின் கர்ப்பக்கிரகத்திற்கு ஒரு கல் திரை போட்டுவிட்டு வெளியே திருமண்டபத்தில் திருவாராதனம் நடப்பது போலச் சாடை காட்டித் திருத்திரை போட்டிருந்தார்கள். அந்தரங்கரான பரிஜனங்களைக்கொண்டு பெருமாள் நாச்சிமார்களை ஒரு பெட்டியிலே எழுந்தருளப்பண்ணிக் கொண்டு காட்டகத்தில் வெளியேற்றினார்கள். பிள்ளை லோகாசாரியரும் கூடச் சென்றார். உடனே குதிரைப்படைகள் நாலாபக்கமும் கோயிலில் வந்து சூழ்ந்துகொண்டன.

மிகவிருத்தரான சுருதப்பிரகாசிகாபட்டர் தாம் செய்தருளிய சுருதப்பிரகாசிகையெனும் ஸ்ரீபாஷ்யத்தின் வியாக்கியானத்தைத் தேசிகர் கையில் கொடுத்து தேவரீர் ஜீவித்திருந்து இதைப் பரிசோதித்து ஜகத்தில் எங்கும் பரவும்படி செய்து தம் குமாரர்களான வேதவியாஸபட்டர் பராசரபட்டரிருவரையும் ரக்ஷிக்கவேண்டுமென்றவரிடமே அவர்களை ஒப்புவித்து விட்டார். பிறகு குதிரைப்படையோடு வந்தவர்கள் கையிலகப்பட்டு அவர் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தார். தேசிகர் எப்படியோ தந்திரமாய்க் குதிரைப்பட்டாளத்தார் கையிலகப்படாமல் தப்பி அடையாளமான

ஓரிடத்தில் ஆற்றுமணலில் சுருதப்பிரகாசிகையைப் புதைத்து வைத்தார். கும்பல் கும்பலாய்வெட்டுண்ட மனிதர்களின் பிணங்கள் அங்கே கிடந்தமையால் தம்மிடம் ஒப்படைத்த இரண்டு பிள்ளைகளையும் அக்குபல்களினிடையே மறைத்து வைத்தார். தாமும் உயிரிழந்தவர் போலவே பிணங்களைவாரிமேலே போட்டுக்கொண்டு கிடந்தார். கொடிய துருக்கர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களுள் பலரையும் கொன்றொழித்துவிட்டுப்போய் விட்டார்கள். உடனே தேசிகர் ஸ்ரீ பாஷ்யத்திற்குரையான ஸ்ரீ கோசத்தை மணலிலிருந்து தோண்டியெடுத்துக்கொண்டார். முன்சொன்னவாஸியப்பட்டர்களா மிருவரையும் அழைத்துக்கொண்டார். பிறகு பிரயாணப்பட்டு அக்குமாரர்களுடனும் ஸ்ரீ கோசத்துடனும் தேசிகர் ஸத்தியகாலம்போய்ச் சேர்ந்தார். பிறகு சுருதப்பிரகாசிகையைப் பிழையறச் சோதித்துப் பெயர்த்தெழுதி வைத்துக்கொண்டு பல சிஷ்யர்களுக்கும் போதித்து வந்தார். அவ்விருகுமாரர்களாம் பட்டர்களுக்கும் உபநயனம் செய்வித்து அவர்களுக்குச் சாஸ்திராப்பியாசமும் செய்வித்தார்.

ஸ்ரீரங்கம் சுமார் 50௵ காலம் மிலேச்சர் கையிலிருந்து வந்ததால் ஸத்திய காலத்திலேயே தேசிகர் அப்பொழுது சுகமாக வீற்றிருந்தார். அங்கிருந்து மைசூருக்கருகிலுள்ள திருநாராயணபுரத்திற்கெழுந்தருளினார். அங்கே ஸ்ரீ பாஷ்யகாரரை முதலில்

திருவடி தொழுது பிறகு திருநாராயணனையும் செல்வப்பிள்ளையையும் (சம்பத்குமாரர்) யதுகிரிநாச்சியாரையும் தண்டம் சமர்ப்பித்துக்கொண்டு கொஞ்சகாலம் அங்கேயே தங்கியிருந்தார். வைணவர்களுக்குத் திருநாராயணபுரம் நான்காவதாம் முக்கியஸ்தலமாகையால் தான் அவ்வாறு தேசிகரங்கும் போய்த்தங்கினர். பிறகு ஸத்தியகாலத்திற்குத் திரும்பிவந்துவிட்டார். கோயிலில் சத்துருக்கள் எல்லாம் அழிந்து அழகிய மணவாளன் முன்போல் தம்மிடத்தில் எழுந்தருளியிருந்து உலகத்தவர்க்குக் காக்ஷி தரவேண்டுமென்று ஆவலோடு ஒரு தோத்திரம் செய்தருளினர். அபீதிஸ்தவம் என்பது அதன் பெயர். அதனைத்தினந்தோறும் சொல்லிப்பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்.

அழகிய மணவாளன் காடேற எழுந்தருளியது.

அழகிய மணவாளனை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோன அதிகாரிகள் திருடர்களாலடிபட்டுச் சொத்துக்களையும் பறிகொடுத்து விட்டு நடுநாட்டில் சோதிடபுரம் என்னுங்கிராமத்தில் சிலகாலந் தங்கினார்கள். உதவிக்காக உடன்சென்ற பிள்ளை லோகாசாரியருக்கு அங்கே சுரங்கண்டு அதனாற்பரமபதமேறினர். அவரது உத்தரக்கிரியைகள் நிறைவேறியபின் அபி

யுத்தர்கள் அழகிய மணவாளனை மாலிருஞ்சோலை மலைக்கு எழுந்தருளப் பண்ணினார்கள். அங்கிருந்து கொல்லம், கொச்சி முதலான கேரள தேசங்களிலெழுந் தருளப்பண்ணிக்கொண்டு கோழிக்கோட்டிற்கருகிலுள்ள நம்மாழ்வார் மங்களாசாஸனம்பெற்ற தலங்களின் எம்பெருமான்களோடும் எழுந்தருளித்திருக்கோலங்காணும்படிசெய்து அங்கிருந்து திருநாராயணபுரத்தில் செல்வப்பிள்ளையுடன் சேர்த்தியில் எழுந்தருளும்படிசெய்து அங்கிருந்து அழகியமணவாளனைத் திருமலைக்கு எழுந்தருளுவித்துத் திருவேங்கடமுடையானுடன் ஸகல போகங்களையும் நுகர்ந்துகொண்டு அங்கே சிலகாலம் தங்கும்படி செய்தார்கள்.

ஏழாவது.

அழகிய மணவாளன் திருமலையிலிருந்து செஞ்சிக்கேகியது.

அக்காலத்தில் செஞ்சியில் கொப்பணாரியன் அரசாண்டுகொண்டு வந்தான். அவன் திருவேங்கடமுடையானை வழிபடப்போனவிடத்து அழகிய மணவாளன் அங்கு எழுந்தருளியிருக்கக்கண்டு தண்டம் ஸமர்ப்பித்து மிகவும் அநுதாபத்துடன் கோயிலிலே முன்போல அழகிய மணவாளனை வைபவங்கண்டருளும்படி செய்விக்கச் சங்கற்பங்கொண்டு அநேக

சேனைகளுடன் அழகிய மணவாளனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு செஞ்சியில் சிங்கபுரத்தில் ஒரு கோயில் கட்டிக்குளமும் வெட்டி அங்கே சிலகாலம் ஆராதனம் கண்டருளும்படி செய்வித்தான். அப்பொழுது கோயிலோ மிலேச்சர் கைவசத்திலிருந்தது.

அழகிய மணவாளன் முன்னிடமாம் கோயில் போய்ச்சேர்ந்தது.

அப்போது அழகிய மணவாளம் என்கிற கிராமத்தில் திருமணத்தூண் சிங்கப்பிரான் என்கிற ஒரு காணியாளரிருந்தார். இவர் பெருமாளிடம் பக்தியுள்ளவர். முன் சங்கதிகளைக் கேட்டுணர்ந்து அவர் துருக்க அதிகாரியிடம் சென்று நம்மை நீங்கள் பிரதானியாக வைத்துக்கொண்டால் இந்த நாட்டிலுள்ள திரவியமனைத்தையும் சேர்த்துக்கொண்டுவந்து கொடுப்பேனென்று சொல்லவே அவ்வதிகாரியும் அதற்கிணங்கி அவரைப்பிரதானியாக வைத்துக்கொண்டார். துருக்கர் சேனையெல்லாம் காணியாளர் சுவாதீனமாயிற்று. சொத்துக்களையும் இவ்வுடன்படிக்கையின்படியே காணியாளர் சேகரித்துக்கொடுத்துக்கொண்டிருந்தார். துருக்கரின் தலைமையதிகாரியும் காணியாளர் மீது நம்பிக்கை வைத்தார். இது இவ்வாறிருக்கக்காணியாளர் செஞ்சி அரசனுக்கு ஒரு ரகசியமான கடிதம் எழுதி

யனுப்பினர். அதன் கருத்து யாதெனில் கோயி லுக்கு வருங்காலமிது வென்று குறிப்பிட்டுப்பதில் எழுதுவதானல்நானே உங்களுக்குச்சகாயமாயிருந்து கோட்டைவாசல்களைத்திறந்து வைத்திருந்து நீங்கள் எல்லோரும் உள்ளே தாராளமாய் அச்சமில்லாது பிர வேசிக்க உதவிபுரியச் சித்தமாயிருக்கின்றேனென்ப தேயாம்.

இக்கடிதத்திற்குச் செஞ்சி அரசன் உடனேபதி ல் அனுப்பிவிட்டு அதில்தாம் குறித்தனுப்பிய காலத்தி லேயே ஸ்ரீரங்கம்வந்து சேர்ந்தார். இத்தருணத்தில் துருக்க அதிகாரிகளுக்கெல்லாம் கண்ணனூரில் மத் தியபானம் செய்வித்து அவர்கள் மயக்கத்திலாழ்ந்து கிடக்கும்படி காணியாளர் தந்திரம் செய்திருந்தார். இவர்தன் சொந்த ஜனங்களை எல்லாம் கோவிலுக்குள் ளே வைத்துக்கொண்டு கோட்டைவாசல்களை எல்லாம் திறந்து வைத்திருந்தார். செஞ்சிஅரசன் சேனைகளுட ன் கோவிலுக்குள்ளே கோட்டைவாசல்கள் வழியாக வந்து சேர்ந்தார். உள்ளேயிருந்த மிலேச்சர்களை யெ ல்லாம் அவர் அடித்து வெளியே துரத்திவிட்டார். கோவில் முழுவதையும் சுவாதீனப்படுத்திக்கொண் டார். முன் கலைந்து வெளியேறிய வைணவர்களும் வரவ ழைக்கப்பட்டார்கள். கோயில் முழுவதும் சுத்திசெ ய்யப்பட்டதுமன்றி அலங்காரமும் செய்யப்பட்டது. கோயிலை இவ்வாறு முன்னிருந்தபடியே சிறக்கினைத்

*

துவிட்டு அவ்வரசர் தாமேசென்று அழகிய மணவா ளனை உபயநாச்சியாரோடுகோயிலுக்குள் எழுந்தருள ப்பண்ணிக் கல்திரையை நீக்கி ஆஸ்தானத்தில் பெரிய பெருமாளோடு சேர்த்து ப்ராணப்ரதிஷ்டை செய்வி த்து நித்தியத்திருவிழா விசேஷதிருவிழாக்களெல் லாம் முன்போல் நடைபெறும்படி செய்துவிட்டுத்தா மும்சிலநாள் ஸ்ரீரங்கஸ்தலவாஸம் செய்துபெற்றுக்கோ யிலரங்கனைப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு தம்மு டைய ராச்சியம்போய்ச்சேர்ந்தார்.

நம்கதாநாயகர், அரங்கத்தில் நடந்த இவ்விரு த்தாந்தங்களையெல்லாம் கேட்டறிந்து ஆனந்தபரவ சராய் அழகியமணவாளனது திருமேனிலக்ஷணத்தையும் விபவத்தையும் முன்போற் கண்ணாரக் கண்டு களிக்க தம்பரிவாரத்தோடும் தம்மடியேயோடும் குமாரரோ டும் சத்தியகாலத்திலிருந்து பிரயாணப்பட்டு வெகுசீக் கிரமாகவே கோயில் வந்து சேர்ந்தார். ஸ்ரீரங்கநாச் சியார் முன்னிலையாகப்பெரிய பெருமாள் அழகியமண வாளன் இவர்களைத் தண்டன் ஸமர்ப்பித்துத் தம்மு டைய தோத்திரப்பிரார்த்தனையின்படியே தம் மனோர தம் நிறைவேறியதென்று இதுவரையிலும் தாங்கண் டிராத ஸந்தோஷக்கடலிலமிழ்ந்து களித்தார்.

அப்பொழுது கோயிலில் இருந்தபட்டரின் வே ண்டுகோளுக்கிணங்கி நம்கதாநாயகர் இரண்டு சுலோக ங்களால் கோப்பணாரியர் விசேஷ கைங்கரியங்களை

ஸ்ரீரங்கத்தில் செய்து கிருதயுகதருமம் நிலைக்கச்செய்தாரென்று விளக்கியிருக்கின்றார். இக்கொப்பணாரியர் விஜயநகரம் அரசர்களின் கீழ்த் தலைமை பெற்று நாடாண்டவர்களில் ஒருவர். அவ்விரண்டு சுலோகங்களும் பட்டர் ஸேனை முதலியார் பிரகாரத்தில் சிலாசாஸனமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் பொருள்:—

"நீல நிறமான சிகரங்களோடு கூடிச்சனங்களுக்குப் பிரீதியை யுண்டாக்குகிற திருமலையிலிருந்து அழகிய மணவாளனை உபய நாச்சிமாருடனும் எழுந்தருளப்பண்ணிச் செஞ்சிராஜ்யத்தில் சிலநாள் ஆராதனம் செய்வித்துப்பிறகு கோயிலுக்கு வந்து வல்லாளர்களான துருக்கரை ஜயித்துப் பெருமாளை அவரது ஸ்வஸ்தானத்தில் எழுந்தருளப்பண்ணிக் கண்ணாடி போல் நிர்மலமான புகழுடைந்த கொப்பணாரியர் விசேஷமான கைங்கரியங்களைச்செய்து ஸ்ரீரங்கத்தில் கிருதயுகம் பிறந்ததுபோல் செய்வித்தார்."

தேசிகர் பிறகு தமது வாழ்நாளுள்ளளவும் தினந்தோறும் அழகியமணவாளனுக்கு மங்களாசாஸனஞ்செய்துகொண்டு சுகமாக அரங்கத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார்.

சிற்பியை ஜயித்தது.

ஒருநாள் சிற்பி யொருவன் தேசிகரிடம் வந்து நீங்கள் சிற்ப நூலிலும் வல்லவர் தாமோ என்னை ஜயிப்பீராகிலன்றோ உமது சருவதந்திர சுதந்திரமெனும் பிருதும் நிலைக்கும் என்று கர்வங்கொண்டு மொழிவதானான். இவன் பிறரது தூண்டுதலினாலே வந்தவனேயொழியத் தானாகவந்தவனல்லன் பிறரதுமேன்மைகண்டு பொறாமை கொள்வது இழிசனர்களின்றன்மையாம். அவர்களுக்குச் சிற்பியும் இப்பொழுது உதவியாக வந்தான். தேசிகர் சிற்பியைப்பார்த்து நீ குறிப்பிடும் ஒரு விக்கிரகத்தை நாம் செய்து தருகிறோம் அதற்கேற்ற பீடமொன்றுண்டாக்கி அதில் அவ்விக்கிரகத்தை நீ இணக்கித் தரவேண்டுமென்று சொன்னார். அதற்கவன் உங்களுடைய வடிவமமைந்த விக்கிரகத்தையே செய்துகொடுத்தால் நான் பீடஞ்செய்து இணக்கித் தருகிறேனென்றான். தமதுவடிவை எவ்விதமாக அமைப்பதென்று சிந்தித்தபோது ஆவேசமுகத்தாலிவரைப் பார்த்து இடதுகையில் ஸ்ரீ கோசமும் வலதுகையில் ஞானமுத்திரையுமாக இருந்துகாலக்ஷேபம் ஸாதிக்கிற அவஸரமுள்ளதாகச் செய்யுமென்று ஸ்ரீரங்கநாதர் நியமித்தார். அப்படியே தேசிகர் விக்கிரகஞ்செய்து கொடுத்தார். அவ்வடிவத்தில் கண்பார்வை

சரியாகவில்லையென்று அதைச்சரிப்படுத்தச்சிற்பி விக்கிரகத்தின் கன்னத்தில்ஆயுதத்தால் கொஞ்சம் திருத்தினன் உடனே எதிரிலிருந்த தேசிகர் கன்னத்தில் கொஞ்சம் இரத்தம் கசிந்தது. அங்கிருந்தோர்கண்டுவிக்கிரகம்சரியாக அமைந்துளது அதில் தேசிகரும் ஆவேசித்துவிட்டார். பீடத்தின்பிசகாலேயே கண்பார்வை ஒழுங்காக அமையவில்லையென்று அங்குள்ளார்கூறவே தேசிகர் உடனே பீடத்தைவாங்கிச்சரிசெய்து அதிலே தம்விக்கிரகத்தை இணக்கிச்சீராக்கினர். சிற்பி பிறகு தலைவணங்கி பிழைபொறுத் தருளும்படி தேசிகரைக் கேட்டுக்கொண்டு விலகிப்போனன். இந்த விக்கிரகத்தையும் தாம்செய்தருளிய சிற்பார்த்தஸாரமென்னும் சிறுநூலையும்தமது குமாரரிடம் தேசிகர் ஒப்புவித்தார்.

தேசிகரும் முற்ற மூத்துச்சரமதசையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

தாவி வையங் கொண்ட தடந்தா மரைகட்கே
கூவிக் கொள்ளுங் கால மின்னுங் குறுகாதோ.

என்று நம்மாழ்வாரும் "கதா" "கதா" வென்று ஆளவந்தார் பாஷ்யகாரர் முதலியோரும் தன்னுடைச் சோதியில் பரிபூர்ணனுபவ கைங்கர்யத்தில் ஆசை கொண்டிருந்தது போலவே இவரும் அதற்கு ஆசை கொண்டிருந்தார்.

இரகஸ்யத்திரயஸாரம் அருளிச்செய்தது.

மூன்று மந்திரங்கள் வைஷ்ணவர்களுக்குக் கண்கள் போன்றன. அவைகளின் கருத்தை ஸம்பிரதாயக் கிரமப்படி உபதேச முறையாகக் கிரஹணஞ் செய்து அதன் படியே நல்லொழுக்க நெறியில் வழுவாது நடை கொள்ளில் வீட்டின்பம் கிட்டுமென்பது திண்ணம். தேசிகர் இதற்கென்றே ஒரு நூல் செய்தார். இச்சிறந்த நூல் முப்பத்திரண்டு அதிகாரங்கள் கொண்டது. மேற்கோள்கள் இதிகாஸம், புராணம், கீதை, உபநிடதம் முதலிய பகவத்சாஸ்திரங்களிலிருந் தெடுக்கப் பட்டவைகளே. தமிழ் மறையாம் திவ்யப்பிரபந்தங்களிலிருந்தும் ஆதாரங்ங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஸம்பிரதாயம் கிடாம்பி ஆச்சான் வழியாகக்கிடாம்பி அப்புள்ளாரிடம் தங்கி நந்தேசிகருக்கு வாய்த்திருப்பதால் இந்நூலில் ராமாநுஜஸித்தாந்த ஸாரம் நிரம்பியுள்ளதென்று நாம் கூறவும் வேண்டுமோ. பிறவிப்பிணி போக்க இம்மூன்று மந்திரங்களின் ஸாரமுணர்ந்து நன்னடை கொள்ளல் வைஷ்ணவர்களுக்கு முக்கியமென்பதை நந்தேசிகர் ஓர் குறள் பாவில் அமிருதரஞ்சனியில் கூறியிருத்தல் காண்க.

குறள்.

மூன்றி லொருமூன்று மூவிரண்டு முந்நான்கு
தோன்றத் தொலையுந் துயர்.

தமது நல்லொழுக்க நெறிக்கு ஆதாரமாயும் தமது ஸகல கலாவல்லபத்தின் சின்னமாயும் வேத உபநிடத இதிகாஸ திவியப்பிரபந்தங்களின் மர்மமாயுமுள்ள இவ்விணையில்லாத நூலைப்பிற்காலத்தவர்க்குப்பயன்படுமாறு செய்து அதைத்தமது குமாரருக்கும் பிரிய சிஷ்யரான பிரம தந்திர சுதந்திரஜீயருக்கும் மற்றுமுள்ளாருக்கும் நம்தேசிகர் வெளியிட்டருளினர். இதன்பெயர் ரகஸ்யத்ரய ஸாரம். வேறிரண்டு நூல்களையும் செய்து உபதேச முறைப்படி விளக்கியுள்ளார். அவைகளின் பெயர்கள்.

1. விரோதிபரிகாரம்.

* 2. ஸாரஸாரம்

(22) அதிகார ஸங்கிரகம் (ரகஸ்யத்ரயஸாரம்)

மூன்று மந்திரங்களும் வடசொற்றொடராயமைந்திருப்பினும் அவைகளின் ஸாரத்தைத் தமிழ்க்கவிகளாக ஸாரஸாரத்தில் விளக்கிக்காட்டியதாமே அதற்கும் மணிப்பவள ரூபமாகப் பொருளை விள

* குறிப்பு:=(23) அமிர்தரஞ்சனி (24). அமிர்தாஸ்வாதினி. நந்தேசிகர் பாடிய பிரபந்தங்கள். 24 இப்தம் 5-போக இப்போ வழங்குவன 19.

க்கிக்காட்டி யுமிருக்கின்றமைக்கேற்ப ரகஸ்யத்திரய ஸாரமெனும் முக்கிய நூலுக்குந் தமிழ்ப்பாடல்களையே மூலமாக்கி அப்பாடல்களுக்கு அதிகாரஸங்கிரகம் எனப்பெயர் வைத்திருத்தல் காண்க. இதன் காரணம் யாதெனிலோ கூறுதும். பொய்கை முனி முதலிய ஆழ்வார்கள் மகிழ்ந்து பாடும்:—

“செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய ஓதித்தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே” என்று முதல்முதலில் குருபரம்பரைப்பாட்டை வைத்திருப்பதால் தமிழ்மறை அதற்குக் காரணமாகிய வடமொழி வேதத்தைக் காட்டிலும் சிறந்த தென்பதாதலாலும் தமிழ் நாட்டிலுள்ள நம்மவர்க்கு இக்கலிநாளில் கரைந்துருகிப் பாடிக் களிக்கத் தமிழ்ப்பாக்கள், பொருள் இனிது விளங்குஞ்சீரால் முதன்மையாய் நிற்கிறதாதலாலும் தமிழ்ப்பாக்களையே முதன்மையாக்கி மணிப்பவள ரூபமாய் அப்பாக்களுக்குத்தாம் செய்துள்ள விரிவுரையையும் வடமொழிச் சுலோகங்களையும் இரண்டாம் படியாகவும் வைத்துள்ளார் நந்தேசிகர். இதனால் வடமொழி வேதத்தையும் வடமொழிரூபமான மந்திரங்களையும் இழித்துக் கூறியதாகயாரும் எண்ணக்கூடாது. பெண்ணினத்தாரையும் சூத்திரரையும் விலக்காது எல்லார்க்கும் ஞானஸாதன வகையால் பிறிதோரிடத்தும் காணப்பெறாத சிறப்பு தமிழுக்குண்டென்று காட்டப்பட்டது. சிலர்

"வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்" என்பதுண்டாதலால், வடமொழிச் சுலோகங்களை இச்சிறந்த நூலுக்கு மூலமாகத் தடையில்லை யென்பர். இவ்வாதம் ஆழ்வாரின் தமிழ் வேதம் சகல வேதஸாரமாயும் சகல புராண உபநிடத இதிகாஸங்களின் ஸாரமாயும் இருப்பதால் முதன்மை பெற்றதாகின்றதென்று தேசிகர் தாமே கூறிய வாக்கிற்கு மாறுபடுதல் காண்க. இம்முதன்மையைப் பாஷாநீதி என்றுரைப்பதாகும் வடமொழிச் சுலோகத்தால் தேசிகர் விளக்கியிருப்பதனாலே இந்நயம் வடமொழி வல்லாரின் பொருட்டே யெட்டியிருத்தல் புலப்படுகின்றது. வைணவர்களுக்கு உபய வேதாந்தம் கூறப்பட்டிருப்பதால் ஒரு காலத்து வலது கண்ணாயிருந்தது மற்றொரு காலத்து இடது கண்போல் நின்று பயன்படுவதுமுண்டு. இந்த நியாயம் வைஷ்ணவப் பிராமணர்கள் விஷயத்தில் மட்டும் நடைபெறுகின்றது. சைவப் பிராமணர்களோ தமிழ் வேதத்தை வடமொழியோடொக்கப் பாராயணம் செய்வதில்லை. வேதப்பயனைக் கைக்கொள்ளும் விஷயத்தில் வைணவப் பிராமணர்கள் சைவர்களை விடத் தாராளமுள்ளவர்களாகின்றார்கள். அதாவது தமிழ் மறையினும் ஞானமுண்டாகி முத்திபதம் பெறுதல் கூடுமென்பதே "அறியக்கற்று வல்லார் வைணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே" என்பது திருக்குறுங்குடி விஷயமாய் நம்மாழ்வார் பாடிய தலைக்கட்டுப் பாட்டு. இதுவும் தமிழ் மறையின் சிறப்பை விளக்குகின்றது.

கலா வல்லபம் அல்லது கல்வித்திறம்.

நம் கதா நாயகரின் கல்வித்திறம் பலபடித்தா மென்பது இதுவரை கூறிய சரித்திரத்தால் வெளியாகின்றது. தருக்கம், வியாகரணம், பூர்வ உத்தர வேதாந்தம், வேதம், வேதாங்கம், வேத உபாங்கம் முதலிய வித்தியாஸ்தானங்கள் பதினெட்டிலும் தேர்ந்தமையன்றி அவைகளனைத்திலும் வேறாய்க்கிடைத்தற்கரிய நாதம் ஸமயாசிரியரிடத்த தனி நிலையும் வாய்ந்தவர். அச்சமயாசிரியரின் சிறப்பு யாதெனிலோ எட்டிரண்டும் அறிவித்து எட்டவொண்ணாப்பதம் பெறுவித்ததேயாம். எட்டிரண்டெனவது தாலத்தில் அட்டாக்கரமும் தவாதசாக்கரமுமாம். [illegible]க்குமத்தில், அகாரம், உகாரம், ம், இம்மூன்றிணைலாகும் ஓங்காரமாம் பிரணவம். இப்பிரணவப்பொருள், வேதங்களுக்கும் மேலாய்க்காரண குருவினால் தொட்டுக் காட்டினாலன்றிப் பகுத்தறியப்படாத பெரிய பிரமவித்தையென்று பெரியோர் விளக்கியுள்ளார். சகல வேதஸாரமாய் ஸகல கலைகளுக்கும் வித்தாய் விளங்கும் அறிவோ பிரணவப்பொருளாம். இதனையறிந்தாரிடம் எவ்வகைக்கல்வியும் உண்டாம். இக்கல்வி, மானிடமுயற்சியால் சேருவதன்று. வித்திலாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லையென்பது பெரியோர்களின் மார்க்கமாகையால் ஒருவர் பிறக்கும்போதே இச் சந்தோடு பிறந்தி

ருத்தல்வேண்டும். அச்சத்தும் இவர் இறந்து திருவேங்கடமுடையாரின் சங்கற்பவழியாய் நாதமுதிக்கும் கண்டையெனும் வியாஜத்தால் சேர்ந்தனன்றோ! நாதம் சோதி இவைகளின் வழியாய் மெய்யறிவு உதிப்பதற்கு இதுவும் ஒரு சங்கேதமாம். யோகஸித்தி பெற்றோர் முதலில் தசநாதங்களைத் தம்முள் காண்பரன்றோ "கனகதாரை" அளித்தமையால் யோகஸித்தியும், சங்கபாலனைக் கருடனால் மறைந்தருளி, மறுபடியும் பாம்பாட்டிக்கு வருவித்துக்கொடுத்தமையால் மந்திர வித்தியும், சிற்பியின் கர்வபங்கத்தால் சிற்பநூலுணர்ச்சியும் நந்தேசிகரிடம் வாய்ந்தமை மலையிலக்கேயாமன்றோ.

இலக்கண இலக்கிய அலங்கார நியாய சம்பந்தமாய்ப் பல பாஷைகளிலும் இம்மகானுக்கு வல்லமையுண்டென்பதைக் கூறுதலும் வேண்டுமோ! கூறாதேயமையுமாயினும் சுருக்கமாய் இவர்க்குத் தமிழ் வடமொழி பிராகிருதமிவைகளிலுள்ள இணையில்லாத வல்லமையைச் சிறிது கூறுவாம். இவர் தமிழ்த்திறம் ஏனையோரது திறம்போலாது வேதாந்த உண்மையையும் நல்லொழுக்கத்தின் ஸாரமாம் தத்துவ போதனையையும் பிரதானமாய்க்கொண்டு விளங்குவதொன்றாம். தமிழில் பாரகாவியங்களிலும் சிறு காவியங்களிலும் பலநாட் பழகினோர்க்கும் எளிதில் பொருள்படுத்தரிய இயலாத பலபாக்கள் கொண்ட இவரது தமிழ்ப்

பிரபந்தம் பெருந்தொகையாது ஆராய்ச்சிக்கிலக்கா காது விலகி நிற்கின்றது. பாரதராமாயண பாகவதங் களின் மர்மமாகிய உட்கருத்துக்களோடு வேத உபநிடத புராண ஆகமஸாரமாயுமிருப்பதினால் தான் இவரது நூலின் சிறப்பு விசேஷமுள்ளதாகின்றது. இவர் செய்த தமிழ்ப்பிரபந்தமோ, வடமொழி வேதாந்த நூல் களில் பலநாள் பழகியிருப்பவருக்கும் இனிது விளங் காத பல உண்மைகள் பொதிந்த ஒரு பூங்கொத்துப் போன்றதாம். இத்தமிழ்ப் பிரபந்தம், ஞானஸந்ததி தமிழ்நாட்டிலினிது விளங்கவே அமைந்துளது. அந் தணருள்ளும் பலர்க்கும் இத்தமிழ் நூலின் மேன்மை யும் பயனும் புலப்படாதென்றால் எனையோர் திற த்து நாம் கூறவாமேனம்.

நந்துவிசாரணை வழியால் மெய்யறிவு (பிரம்ம ஞானம்) உதித்துப் பிறர் பொருட்கருத்தறுத்த தன்ன டைகொண்டு குருவருளால் ஸ்வாநுபூதியடைந்தவரின் நிலை, உலகவழியில் வேரூன்றி ஆசாபாசத்தாற் பிணிப் புண்டவரின் நிலைக்கு மாறாய் விசித்திரமாயிருக்குமெ ன்பதற்கு நம் கதா நாயகரே சான்றாதல் காண்க. இவர் திருவாய் மலர்ந்து உலகோர்க்களித்த தமிழ்ப் பாடல்களில் பெரும்பான்மையாய்ச் சித்தாந்த வேதா ந்த பரிபாஷைகளும் உண்மைகளும் மலிந்திருப்பதால் அவ்வகைப்பாக்களை இங்கே ஒழித்து விட்டுத் தமிழ் ப்பாஷா வல்லபமுள்ளார் பார்த்துச் சொற்சுவை பொ

ருட்சுவை மலிந்தவைகளென்று போற்றத் தக்க சில பாடல்களை மட்டும் மாதிரிக்காக நாம் இங்கு எடுத்துக்காட்டுகின்றோம். இலளிதமான செய்யுள் நடையில் நோக்கமுள்ளார் இச்சரித்திரத்தின் 9-வது பக்கத்திலுள்ள (திண்மணிகள்+ மகிழ்ந்திட்டானே) என்கிற செய்யுளையும் 21-ம் பக்கத்தில் (கண்ணனடி+வெற்பே) என்கிற பாட்டையும் 51-ம் பக்கத்தில் (ஆராதவருள்+கோயில்தானே) என்கிற கவியையும் முதல் முதலில் படித்துணர்ந்து கொள்க. இசையிலும் சொற்கட்டிலுஞ் சந்த நயத்திலும் நோக்கமுள்ளார் பின்வரும் கவிகளைப் பார்த்துத் தெளிந்துகொள்க.

அத்திகிரிமான்மியம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரியச் சந்த விருத்தம்.

உத்தம வமர்த்தல மமைத்ததொ ரெழிற்றனு
உயர்த்த கணையால்
அத்திர வரக்கன்முடி பத்துமொரு கொத்தென
உதிர்த்த திறலோன் [றது
மத்தறு மிகுத்ததயிர் மொய்த்தவெணெய் வைத்தது
மத்த னிடமாம்
அத்திகிரி பத்தர்வினை தொத்தற வறுக்குமணி
அத்தி கிரியே. (9)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியச் சந்த விருத்தம்.

அன்னவடி வாளசையு மன்னநடை யாளுருவ
மன்னவர சேறிவருவா
ளத்தனய னத்தனய னுத்திதனை யத்திறனா
வுத்தி புரியாள்
நன்னடை விடா நடாரி தென்னநட வாகமெய்ள்
நண்ணுறுகுட கெடயிபிரியா
னற்பதிக ளற்பதிகள் கற்புரள வற்புக
மருக்க தியிறைல்
கன்னடைவி டாவிடயி லுன்னதிசி றுவிகட
மன்னுகிரி கூடாரிடியக்
கட்டவிடை பிற்றுவிழ முற்றாய்விபுரி பற்றடைய
விட்ட ருத்ற
அன்னநய சிரயணி தென்மொகா விபுராபார்
மன்னுபதி யெழிமகிழ
வச்சுத னணைத்தனுவி லத்திசை வரத்தகைய
வற்ற னுகிறாள். (12)

பதினான்கு சீர்ஆசிரியச்சந்த விருத்தம்.

பெடையி ரண்டையொ ரனம டைந்துபி
ரிந்தி டாவகை பேசலாம்
பெருகு மருவிக ளருகு மருவிய
பெரிய மணிவரை யயிலெலாம்
பிடியி ரண்டொடுகளப மொன்று
பிணைந்த போரு மோராய்

பிரிவி லொளியொடு நிழலு மருகுற
மிரவி யிலகுதல் பரவலாம்
கொடியி ரண்டொடு விடபி யொன்றுகு
ளிர்ந்த வாறுகு லாவலாங்
முறைறவில் சுருதியு நினைவு மிலகிய
தரும வருநிலை யென்னலாம்
அடியி ரண்டையு மடையு மன்ப
ரறிந்த பேரரு ளாளனு
ரணுகு மலர்மக ளவனி மகளொடு
கரடி கிரிநிலை கவர்தலே (21)

குறிப்பு:—ஒளி=சுவர்ச்சலாதேவி
நிழல்=சாயாதேவி
விடபி=மரம்
கரடிகிரி=யானைமலை. அத்திகிரி.

தோத்திரப்பாக்களில் நாட்டமுள்ளார் பின்வரு மிரண்டு பாக்களைப்பார்த்துத் தெளிவாராக

அதிகாரசங்கிரகம்.

பதினறு சீராசிரிய வண்ணவிருத்தம்.

உறுசகட முடையவொரு காலுற் றணைந்தன
உடன்மருத முடையவொரு போதிற் றவழ்ந்தன
உறிதடவு மளவிலுர லூடுற்று நின்றன
உறுநெறியோர் தருமன்விடு தூதுக் குகந்தன
மறநெறியா முரியபி[illegible] காணர்ந்து வந்தன

மலர்மகள்கை வருடமலர் போதிற் சிவந்தன
மறுபிறவி யறுமுனிவர் மாலுக் கிசைந்தன
மனுமுறையில் வருவதொர் விமானத் துறைந்தன
அறமுடைய விசயனமர் தேரிற் றிகழ்ந்தன
அடலுரக படமடிய வாடிக் கடிந்தன
அறுசமய மறிவரிய ஞானத் தமர்ந்தன
அணிகுருகை நகர்முனிவர் நாவுக் கமைந்தன
வெறியுடைய துளவமலர் வீறுக் கணிந்தன
விழுகரியொர் குமரனென மௌலிச் சிறந்தன
விறலசுரர் படையுடைய வீயத் தொடர்ந்தன
விடலரிய பெரியபெரு மாள்மெய்ப்ப தங்களே (15)

நவரத்நமாலை.

பதினறுசீர்க்கழி நெடிலாசிரியச்சந்த விருத்தம்.

ஒருமதி யன்ப ருளங்க வர்ந்தன
உலக மடங்க வளர்ந்த ளந்தன
ஒருசடை யொன்றிய கங்கை தந்தன
உரக படங்க ளரங்கு கொண்டன
தருமமு யர்ந்த திதென்ன நின்றன
தருமனி ரந்த திசைந்து சென்றன
சகட முடைந்து கலங்க வென்றன
தமர்க ளருந்து மருந்தி தென்பன
திருமகள் செய்ய கரங்க ளொன்றின
திகழ்துள வுந்து மணங்க மழ்ந்தன
செழுமணி கொண்ட சிலம்பி லங்கின

சிலைதனி லன்றோ ரணங்க ளிழ்ந்தன
அருமறை யந்த மமர்ந்த பண்பின
அயன்முடி தன்னி லமர்ந்து யர்ந்தன
அருடர வெண்ணி யயிர்த்தை வந்தன
அடியவர் மெய்யர் மலர்ப்ப தங்களே. (1)

பொருட்செறிவும் தெளிவுமுள்ள சொன்னடையிற்பிரியமுள்ளார் பின்வருமிரண்டு பாடல்களைப்பார்த்துணர்க.

அத்திகிரிமான்மியம்.
எண்சீராசிரிய விருத்தம்.

வேரொப்பார் விண்முதலாங் காவுக் கெல்லாம்
விழியொப்பார் வேதமெனுங் கண்ட னக்குக்
காரொப்பார் கருணைமழை பொழிந்தி டுங்கால்
கடலொப்பார் கண்டிடினுங் காணக் கூற்றால்
நீரொப்பார் நிலமளிக்குந் தன்மை தன்னை
நிலமொப்பார் நெடும்பிழைகள் பொறுக்கு நேரால்
ஆரொப்பா ரிவர்குணங்க ளனைத்துங் கண்டால்
அருளாளர் தாமெனினுந் தமக்கொவ் வாரே. (22)

பரமபதஸோபானம்.
எண்சீராசிரிய விருத்தம்.

அடலுரக முண்டிருந்த மருக்கன் போல
அழுக்கடைந்த கூழியாற் றரளம் போலக்

கடலொழுகிக் கரைசேர்ந்த கலமே போலக்
காட்டுத்தீக் கலந்தொழிந்த களிறே போல
மடல்கவரு பயல்கழிந்த மாதர் போல
வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றோர் போல
உடல்முதலா வுயிர்மறைக்கு மாயை நீங்கி
யுயர்ந்தபத மேவியுனைக் கொண்டிட்டேனே. (19)

மும்மணிக்கோர்வை.

நிலமண்டில ஆசிரியப்பா.

பயின்மதி நீயே பயன்மதி தருதலின்
வெளியும் நீயே வெளியுற நிற்றலின்
தாயு நீயே சாயைதந் தாக்கலின்
தந்தையு நீயே முந்திநின் றளித்தலின்
உறவு நீயே துறவா தொழிதலின்
உற்றது நீயே சிறந்தன் பின்மையின்
ஆறு நீயே யாற்றாக் கருடலின்
அறமும் நீயே மறநிலை மாய்த்தலின்
துணைவனு நீயே யிணையில்லை யாதலின்
துய்யனு நீயே செய்யா ளுறைதலின்
காரண நீயே நாரண னுறைதலின்
கற்பக நீயே நற்பதந் தருதலின்
இறைவனு நீயே குறையொன் றிலாமையின்
இன்பமு நீயே துன்பந் துடைத்தலின்
யாவும் நீயே என்னு ளுறைதலின்

எனது நீயே யுனதன்றி யின்மையின்
நல்லாய் நீயே பொல்லாங் கிளைமையின்
வல்லாய் நீயே வையமுண் டுமிழ்தலின்
எங்கனு மாகு மெய்யறிவின் வியப்போ
அங்ஙனே பொக்க வறிவ தாரணமே.

இவ்வரிய கவிதையில் அத்துவித வுண்மை விளக்கப்பட்டிருத்தல் காண்க.

இதுகாறும் எடுத்துக்காட்டிய மாதிரிப் பாக்களைக்கொண்டே நம் கதா நாயகருக்குத் தமிழிலும் கவி பாடுந்திறம் இயற்கையாகவே அமைந்திருத்தல் காண்க.

காலமெனுங் கள்வன் கைப்பட்டு மறைந்தவை போக இக்காலத்து நமக்கு வாய்த்துள்ள தமிழ்ப்பாடல்களின் தொகை நான்கு நூறேயாம். அவைகள் பத்தொன்பது பிரபந்தங்களிலுள்ளன. ஐந்து பிரபந்தங்களின் ஐம்பது பாடல்கள் கால கதியால்மறைந்தன.

வைணவர்களின் மனம் பக்குவமாகி நல்லொழுக்க நெறி மேலூன்ற, நம் கதாநாயகர், நியாய சோதனையாலும் போதனைத்திறத்தாலும், தமக்கே சொந்தமான வழியாய்த் தொட்டுக்காட்டிய வுண்மை பலவாற்றாலும் வடமொழி, தமிழ், பிராகிருதம், மணிப்பிரவாள ரூபமாகப் பல நூல்கள் செய்து வைத்துப் பிற்காலத்து

வர்க்குப்பேருபகாரஞ்செய்திருப்பினும், மெய்யறிவுதித்து அது குலையாது அநுபவத்தில் நாள்தோறும் நிலைபெறுவதற்கு இன்றியமையாத பரம கோப்பியமான ருக்ரமத்தைத் தமது நூல்களில் இவர் தெரிவித்தாரில்லை. இதன் காரணம் பிரமவித்தைகளெவ்வித்தையிலும் மேலானதாகலின் அதனைக் காரண குரு மூலமாகவே ரகசியமாகக் கைக்கொள்ள வேண்டுமென்பதேயாம்.

இவர் தாமே திருமந்திரச்சுருக்கின் தலைக்கட்டுப்பாட்டிலே

"கல்லடவர் விள்ளார் விள்ளக்
கருதுவார் காண்கிலாரே".

என்று சுட்டியிருத்தல் காண்க. தாம் செய்த நூல்களெல்லாம் வழிகாட்டிகளாய் ஒருவரைக் காரண குருவிடம் சேர்ப்பிக்குமென்பதே நம் கதாநாயகரினுட்கருத்தெனக்கொள்க. நம் கதாநாயகர் தமிழ்ப்பாடல்கள் ரூபமாம் பல் பிரபந்தங்களுக்கும் மணிப்பவள ரூபமாய் விரிவுரை செய்திருப்பதென்னெனிலோ, வடமொழிப்பாங்கு கலிநாளில் அதோகதியடைந்து வருவதாலும், தமிழ்ப் பாடல்களாயிருந்தால் தமிழ்நாட்டிலுள்ளார்க்கு அவைகளின் பொருளினிது விளங்குமாதலாலும் ஆழ்வார் பிரபந்தங்கட்கு வடமொழி வேதங்களும், உபநிடதங்களும், பாஞ்சராத்திரமும், காரணமாதலாலும், உபயவேதாந்த மார்க்கமனைவர்களுக்

ஏற்பட்டிருப்பதாலும் வடமொழியை முற்றுந்துறக்காது இருமொழித்திறமாம் மணிப்பவளவுரைசெய்துள்ளார்.

இவ்வாறு சமய நூல்கள் பலர்க்கும் இனிது விளங்க மணிப்பவளநடை முன்னாளில் கச்சிநகரில் நடைபெற்றிருந்தது. அது ஜைனர்களால் ஏற்பட்டிருந்தது. காலநிலை கருதித் தமிழ்நாட்டில் அவ்வகை நடைபெரும் பயனளிப்பதாக அவர்களும் நம்மவரும் எண்ணினார்கள். சமயக்கோட்பாடுகள் வேறுபடினும் போதனைக்குரியதாய் இவ்வகை நடை தென்னாட்டிலுள்ளாரைச் சேர்க்க உரியதாமென்பது எச்சமயத்தார்க்கும் உடன்பாடாம். நம் கதாநாயகரும் அந்நயங் கருதியே மணிப் பவளநடையைக் கைக்கொண்டுள்ளார்.

மணிப்பவள வுரையேற்ற தமிழ்ப் பிரபந்தங்கள் ஆறு. அவையாவன :—

1.	அமிர்தரஞ்சனி ரகசியம் பாடல்கள்.		(39)
2.	அமிர்தாஸ்வாதினி ரகசியம்	௸	(37)
3.	அதிகாரஸங்கிரகம் (ரகஸ்யத்திரயஸாரம்)		(56)
4.	பரமபத ஸோபானம்	பாடல்	(21)
5.	பரமதபங்கம்	௸	(54)
6.	அத்திகிரிமான்மியம்	௸	(29)
		ஆக பாடல்கள்	(236)

மூலபாடம்.

7. அடைக்கலப்பத்து பாடல் (11)
8. அர்த்த பஞ்சகம் ஷை (11)
9. ஸ்ரீ வைஷ்ணவ தினசரி ஷை (10)
10. திருச்சின்னமாலை ஷை (11)
11. பன்னிரு நாமம் ஷை (13)
12. திருமந்திரச் சுருக்கு ஷை (10)
13. த்வயச் சுருக்கு ஷை (12)
14. சரமச்லோகச் சுருக்கு ஷை (11)

ஆக மொத்தம் (89)

---

15 கீதார்த்த ஸங்க்ரஹம் பாடல் (21)

இது ஆளவந்தார் வடமொழியில் செய்தருளின ௩௨ ச்லோகங்களின் மொழிபெயர்ப்பேயாம்.

16. மும்மணிக்கோவை பாடல் (10)
17. நவரத்தினமாலை பாடல் (10)
18. ஆகார நியமம் பாடல் (21)

இது பல ஸ்ம்ருதிகளின் ஸாரமாய், ஸாத்விக, ராஜஸ, தாமஸ, உணவுகளை உணர்த்துகின்றது. ஸத்துவ உணவுகளால் ஸத்துவம் மேலோங்கி மூர்த்தியின் தியானம் கிடைப்பதுமென்பது உபநிடதங் கூறுமுண்மையாதலாலிது முக்கிய பிரபந்தமாதல் காண்க.

19. பிரபந்தஸாரம் பாடல் (18)

இது ஆழ்வாரவதரித்த நாளும் மாதங்களையும் பாடற்றொகையையும் விளக்குகின்றது.

ஆக (80)

ஆக மொத்தம் பாடல்கள் 236+89+80= (405)

நம் கதா நாயகர் வடமொழியிலும் நூற்றிற்கு அதிகமாக நூல்கள் செய்துள்ளார். அவைகளில் முக்கியமானவைகளை மட்டும் இங்குக் காட்டுகின்றோம். இவரது பாஷாநடை வடமொழியில், லளிதமாயும் கடினமாயும் காணப்படுகின்றது. கருத்தின் நுட்பத்திலும் இலக்கணப்போக்கிலும் குறைபாடின்றி விளங்குமது. ஹம்ஸஸந்தேசம் கோபாலவிம்சதி, யதிராஜஸப்ததி வரதராஜபஞ்சாசத், பாதுகாஸஹஸ்ரம் முதலியன லளிதமானவை. தத்துவமுக்தாகலாபம், ஸர்வார்த்தஸித்தி, ந்யாயபரிசுத்தி, ந்யாயஸித்தாஞ்ஜனம், அதிகரணஸாராவளி, சுபாஷிதநீவி சங்கல்பசூர்யோதயம் முதலியன கடினநடையுள்ளன. உத்தமமான ஜாதிக் குதிரையின் கதி அதன் மேலேறி அதனை நடாத்தும் வீரர்களுக்கு மட்டும் நன்கு விளங்குவதுபோல நம் கதா நாயகரின் பாஷைநடை, கல்விப் பயிற்சியில் மேலான நூல்களைக் கற்றுணர்ந்தவர்களுக்குத் தான் விளங்கும் ஏனையோர்களுக்கு விளங்காது.

கீதைக்கு ஸ்ரீராமாநுஜர் செய்த பாஷ்யத்திற்கு விவரணமாக நந்தேசிகர் செய்துள்ள உரைதான் தாற்

பரியசந்திரிகை. பிரபோத சந்திரோதயத்திற்கு மறுப்பாகச் செய்த நாடகம் சங்கற்பசூரியோதயம். அதிகரணஸாராவளி என்பது ஸ்ரீராமானுஜ பாஷியத்தின் அதிகரணங்களின் பொருளை இனிது விளக்கும் பெருநூல். நியாய ஸித்தாஞ்சனமென்பது நியாயநெறியின் சோதனைகள் நிரம்பியது. சகல கலா வல்லபத்தை யுணர்த்துவது, தத்துவமுக்தாகலாபம்.

ஈதன்றித் தேசிகர் ஈசாவாஸியம் எனும் உபநிடதத்திற்கு ஓர் பாஷியமும் செய்துள்ளார். திருப்பாணாழ்வார் பாடிய பிரபந்தமாம் "அமலனாதிப்பிரான்" பாடல்கள் பத்திற்கும் ஓர் சிறந்த மணிப்பவளவுரை செய்துள்ளார். அதன் பெயர் முனிவாகன போகம். பரமதபங்கத்திற்கு இவர் செய்துள்ள மணிப்பவளவுரை நியாயசோதனை வழியில் சிறந்ததாம். நமது நாட்டில் நடைபெற்ற பல சமயங்களின் ஸாரத்தை யறிந்து அவைகளிலடங்கிய நியாயங்களை நன்காராய்ந்து தமது வசிஷ்டாத்துவித சமயத்திலடங்கிய நியாய நெறிகளோடு சீர்தூக்கித் தமது கொள்கையை இந்நூலில் நிலைநிறுத்தியுள்ளார். இவர் பிராகிருதத்தில் செய்துள்ளது அச்சுதசதகம். சங்கற்பசூரியோதய நாடகத்துள்ளும் பிராகிருதம் சில இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆளவந்தார் தோத்திரத்திற்கு இவர் வடமொழியிற் சிறந்த பாஷியமொன்று செய்துள்ளார். இதனை நம்மவர் ஸ்ரீராமானுஜர் நெறியிலுள்ளார்க்குக் குட்டிபாஷியம் என்பர். காசிகரத்தின்

கண்ணும் மேற்கு நாடுகளிலும் நம் கதா நாயகரின் நூல்கள் இப்பொழுதுதான் நாகர எழுத்திலச்சாகிப் பரவுகின்றன. பெரு நூல்களனைத்தும் தமிழ் நாட்டில் தொண்டமண்டல வாஸிகளுக்குமட்டும் கிடைப்பவைகளேயாம். அந்தர் ஜோதி க்கும் பாஷ்யம செய்துள்ளார்.

கலையில் வல்லவர்களல்லவா கலாவல்லபர்களின் நூல்களைப் பார்த்துக் களித்தற்குரியார். நம்போலியர் தூல விசாரணையுள்ளவர்களேயாம். ஆன்றோர் மூலமாய் நாம்கேட்டறிதலே மேலாம். அப்பைய தீக்ஷிதர், வேதத்திற்கு பாஷ்யம் செய்த மாதவாசாரியர், முதலினோர்களாற் போற்றப்படும் மகானின் கலாவல்லபம் சிறப்புடையதொன்றேயாம். பாதுகாசஹஸ்ரமென்பது ஸ்ரீரங்க நாதனது பாதுகை விஷயமாய் ஸ்தோத்திர ரூபமாகச் செய்யப்பெற்ற ஆயிரம் சுலோகம் கொண்ட ஒரு நூல். இந்த நூலைப்பரிசோதித்த மேல், சாண்கட்டையில் ஆயிரம் துளை துளைத்த பிள்ளையே பிள்ளை மற்றையோர் எல்லாம் அணிப்பிள்ளை தென்னம்பிள்ளைகளேயாம் என்று அப்பைய தீக்ஷிதர் நூலாசாரியரைப் புகழ்ந்துள்ளாரென்பது கர்ண பரம்பரையாய்நாம் கேட்டுணர்ந்த உண்மை. இத் தீக்ஷிதரவர்கள் தேசிகர் காலத்தில் இருந்தவரல்லர். பிற்காலத்தில் தேசிகர் நூல்கட்குரை செய்த மகான்.

காலக்குறிப்பும் வேறு குறிப்பும் முடிவுரையும்.

நம் கதாநாயகரின் ஜனனகாலத்தை நாம் முன்பே விளக்கியிருக்கின்றோம். இவரோடு கச்சி நகரில் கல்விகற்றவரும் பிறகு வேத பாஷ்யம் செய்தவருமாகிய வித்யாரண்ணியர் தேசிகர் காலத்தவர். அவரைத் தேசிகர் பிறகு சந்தித்ததைக் குறித்தும் அவரோடு வாதப்போக்கு வரத்துண்டான காரணத்தைக் குறித்தும் இச்சரித்திரத்தில் காட்டியுள்ளோம். வித்யாரண்ணியரும் நெடுங்காலம் இம்மண்ணுலகில் பேரிசையுடன் வாழ்ந்துவந்ததாக விளங்குகின்றது. முன்னாளில் விஜயநகர இராச்சியம் கிருஷ்ணாநதி தொடங்கித் தெற்கில் கன்னியாகுமரி வரை வியாபித்திருந்ததாகக் காணப்படுகின்றது. வித்யாரண்ணியர் வடமொழியிலே சகல சாஸ்திரங்களிலும் வல்லவராய்ப் பல நூல்கள் செய்து விளங்கிய பிரசித்தபண்டிதர். பராசரமாதவீயம் செய்தவரிவரே. இவர் விஜய நகரத்தரசனைப் பிரஸித்தி பெற்ற புக்கணன் என்பவனிடம் மந்திரியாக இருந்தவர். 1-வது அரிகரராய அரசன் காலத்திலிருந்தவர். அவ்வரசன் நாளது இ. பி. 1908-ம் வருடத்திற்குச்சுமார் ஐந்நூற்றுஇருபத்து நான்கு வருஷங்களுக்கு முன்னே அரசாண்டவன். புக்கணன் முதலில் காட்டிற் பசுக்களை மேய்த்துக்கொண்டிருந்தான். அக்காலத்தில் வனத்தில் தவம்புரிந்துகொண்டிருந்த வித்யார

ண்யருக்கு அவன் பாலனித்துக்கொண்டிருந்தான். அச்சார்யாவிருவரும் நண்பு பூண்டொழுகலானுர். கலைமகளுந் திருமகளும் புக்கணன் கனவிற்றோன்றிவித்யாரணியருக்கு அவர் கோரியது இப்பிறவியில் நிறைவேறுதென்று கூறலே, இதைக்கேள்வியுற்ற வித்யாரணியர் மனஞ்சலிப்புற்றுத் துறவு பூண்டனர். பிறகுபுக்கணன் நல்வினைப்பயனுல் அரசனுன மேல் அவனிடம் முன்பழக்கமே பற்றுசாக மந்திரி யாயினுர். நம் கதாநாயகரின் ஜனனம் ஹூ கி. பி. 1268-மாதம் ஸெப்டம்பர் (விபவ ஹூ கன்னி) 14-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் கி. பி. 1310-ல் மாலிக் கபூர் என்னும் தளகர்த்தன் டில்லி அரசனும் அலாவுதீன் கட்டளைப்படி மதுரையைக்கைப்பற்றிக் கொண்டான். அவன் படைகள் மதுரைக்குப் போகும்போது ஸ்ரீரங்கத்தில் புகுந்து கலகஞ்செய்து அங்குள்ளார் பலரையும் கொன்றுழித்துக் கோயிலையும் கைப்பற்றிக்கொண்டார்கள். 13-வது நூற்றுண்டில் ஸ்ரீரங்கம் பாண்டிய அரசர், மைசூர் அரசர்களின் கீழிருந்தது. முதலாவது ஜடாவர்மனும் சுந்தர பாண்டியன் (1251–1261 கி. பி.) அரங்க விமானத்திற்குத் தங்கத் தகடு போடுவித்தான். விஜயநகர ராச்சியம் (கி. பி. 1335)ல் வித்யாரணிய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்டது. விஜயநகரத் தரசன் படையாளர்கள் கி. பி. 1365ல் மகமதிய வம்சத்தாரை அடித்தோட்டி மதுரையைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பிறகு இருநூறு வருஷகாலம் தென் இந்

தியா தேசம் மகமதியர் கொடுமை நீங்கி அமைதியாயிருந்தது. விஜயநகரராச்சியமானது கி. பி. 1565 வருஷம் மட்டும் உயர்ந்த பதத்திலிருந்தது. அதே வருஷம் தளிக்கோட்டையில்நடந்த யுத்தத்தின் பிறகு அந்த ராச்சியம் நிலைகுலைந்து போயிற்று. விஜயநகர ராச்சியம் நல்ல நிலையிலிருந்தபோது செஞ்சிக்கோட்டை அதில் ஒரு முக்கிய இடமாகவிருந்தது. இந்த விஜயநகர ராச்சியம் நிலைபெற்றிருந்த காலம் கி. பி. 1336 முதல் 1565 வரையுந்தான். இந்த ராச்சியம் சுமார் இருநூற்று முப்பது வருஷ காலம் நல்ல ஸ்திதியிலிருந்தது. கி.பி. 1104௵ முதல் கி.பி. 1141 வரை மைசூரில் அரசாண்ட பிட்டிதேவன் எனும் ஜயினை அரசனை ஸ்ரீராமாநுஜர் வைஷ்ணவ சமயத்தில் சேர்த்துவிட்டார். இவன்பிறகு விஷ்ணுவர்த்தனன் எனும் பெயர்பெற்றான். ஸ்ரீராமாநுஜரின் ஜனனம் கி. பி. 1017௵ இவர் நூற்றிருபது வருஷம் இம்மண்ணுலகில் வாழ்ந்திருந்தார். ஸ்ரீராமாநுஜர் வைகுண்ட நிலையடைந்து 131-வருஷங்களுக்குப்பின் நம் கதாநாயகர் இம் மண்ணுலகில் தோன்றியருளினர்

இக்கதா நாயகர் மண்ணுலகிற்றோன்றியதையும் விண்ணுலகம் புக்கதையும் சாலிவாகன சகத்தின்படி நம்மவர் கடபயாதி வழியாகக் கால நிர்ணயம் செய்கின்றார்கள். அதற்காதாரமாக நம்முன்னோர் ஒரு சுலோகமும் செய்துள்ளார்.

சுலோகம்.

ச்ரீதீயோக்யேசகே சுக்ல
உதபூத்வேங்கடேச்வர:
லப்தப்ராயேசகேப்ராயாத்
சௌம்யேநபரமம்பதம்.

இதன்படி.

தோற்றம் (ச்ரீதீயோக்கியே) = 2911
விண்புகுதல் (லப்தபராயே) = 3921
இவ்விரு தொகைகளையும் தலைகீழாகமாற்றில்:—

முறையே 1192
1293 ஆகின்றன.

இவ்விரண்டில் ஒன்றில்	1293
மற்றொன்றைக்கழிக்க	1192
நூற்றொன்று	101

பாக்கியாவதால், கதாநாயகரிவ்வுலக வாழ்க்கையில் 101 வரு வீற்றிருந்து 102-ம் ஆண்டில் தமது சரீரத்தை ஒழித்தது தெளிவாகின்றது. இவர் வேதநூற்பிராயம் நூற்றையுங்கடந்து முற்றமூத்து, எல்லைக்கப்புறத்தும் ஓராண்டு ஜீவித்திருந்து, பிறகு தம்முடைச் சேர்தியிற் கலந்துள்ளார்.

நம் கதா நாயகரின் சரித்திரஸாரம்.

இவர் காஞ்சி நகரத்தில் தூப்புல் குலத்தில் பிறந்தவர். புண்டரீகாக்ஷரைப் பாட்டனாராகவும் அநந்தாசாரியரைத் தந்தையாகவும் பெற்றவர். சிரவுதஸ்மார்த்த நித்தியகர்மங்களில் வழுவாத வைதிக குடும்பத்திற்பிறந்தவர். இராமாநுஜமுனிவரிடம் திடபக்தியுள்ளவர். வெகு நுட்பமான புத்தியுள்ளவர். வேதவேதாந்தங்களில் நன்கு தேர்ந்தவர். சகல சாஸ்திரங்களிலும் வல்லவர். ஆழ்வார் பிரபந்தங்களையும் அதிகரித்து அவைகளின் ஸாரமுணர்ந்தவர். தத்துவ விசாரணையிலும் பிர்ம்மஞானத்திலும் இணையற்றவர். கஞ்சி வரதராஜரைக் குலதெய்வமாகக் கொண்டவர். பொன் வெள்ளி முதலியவைகளை ஓட்டின் சில்லிகளைப்போலவும், கற்களைப்போலவும், எண்ணியவர். இளமாதர்களைச் சவம்போலவும் அரசர்களின் சபையைச் சர்ப்பம் போலவும் எண்ணிச் சாமளவும் அவைகளையணுகாதிருந்தவர். அரசர்கள் பிரபுக்களின் தலைவாசல்களை எதைக்கருதியேனும் என்றுமணுகாதவர். வைதிக கருமங்களிலும் நித்திய கன்மங்களிலும் வழுவாது நடந்தமையால் பரம வைதிகரென யாவராலும் புகழப் பெற்றவர். அகங்கார விகாரங்களைக் கனவிலும் கண்டிலர். பரம பாகவதர்களிடம் பற்றுள்ளவர். திருமகள் காந்தனொருவனையே திரிகரண

ங்களாலும் மூன்றவஸ்தையிலும் தாரகமாகவும் போக்கியமாகவுங்கொண்டு தமது சரீரபாதமளவும் வழிப்பட்டவர். வடமொழி, தமிழ்மொழி, எனுமிருகடல்களின் கரைகண்ட கலாவல்லபர். இவ்வளவு சிறப்பு வாய்ந்தமையால் முதலில் வேங்கட நாதராயிருந்தவர் பிறகு வேங்கடநாதாசாரியாராகி கவிதார்க்கிகசிங்கராகி சர்வ தந்திரச்சுதந்திரராகிப் பிறகு வேதாந்த தேசிகராயினர். இப்பெயர்களனைத்தும் உபசார வாழ்க்காகாமல் அவரது இயற்கையாம் குணத்தையும் வல்லமையையும் தூய்மையையும் உண்மையாகவே உணர்த்தும் அபிதானங்களேயாகின்றன. திருமகள் காந்தனெம்பெருமானையே இருவினைப் பாசங்கழலத் திரிகரணத்தோடும் நான்மறைகளின் முடியுணர்ந்து ஐம்புலனடக்கி ஆறு பகைகளையும் வென்று சப்தபங்கிமத முதலிய மதங்களைப் பங்கஞ்செய்தெருந்து அஷ்டாங்க யோக நிலையில் நின்று, நவ விதபத்திகளிலும் நடையாடிப் பத்துத் திசையிலுமிசை பரப்பி ஏகாதச வாயிலைக்கடந்து, துவாதசாந்த வழியாய் விண்ணிலேறி வாழிற் பதம் பெற்றவர்.

இவர் கைக்கொண்டது விசிட்டாத்துவிதமா பிராமாநுசரது கொள்கை. இக்கொள்கையார்க்குத் தத்துவம் மூன்று. (சித்து, அசித்து, இறைவன்.) உபாயம் இரண்டு. (பத்தி, சரணாகதி.) நாராயணனொருவனே காரணப்பொருள் வேதபிரமாணம். (தமிழ்

வேதம், வடமொழி வேதம்.) வேதாந்தமுமப்படியே. ஆகமமிரண்டு. (பாஞ்சராத்திரம், வைகாநஸம்.)

இம்மகான் பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரர் எனும் மூர்த்திகளின் ஸ்வரூபமித் தன்மைத்தென்பதை நன்குபகுத்தறிந்தவராகையால் இம்மூன்று மூர்த்திகளையும் விரிவுசத்தி, மத்தியசத்தி, குவிவுசத்தி யெனப் பகுத்தறிந்துகொண்டு மத்தியசத்தியாம் திருமாலையே முதற்காரண வஸ்துவென நிச்சயித்து மறந்தும் பிற தெய்வங்களைத் தொழாராகிப் பரம பக்தராயும் விரக்தராயும் விளங்கியவர். இதற்கொரு நிதர்சனமுண்டு. சிறு ஓட்டாஞ்சில்லியை எடுத்து ஓர் தடாகத்தில் நீரில் காற்றின்றி அமர்ந்திருக்கையில் எறிந்த உடனே ஒரு சத்தி உண்டாகி அதற்கு வெளியில் பல வட்டங்கள் விரிந்து சென்று பிறகு திரும்பித் தோன்றிய விடத்தில் வநதொடுங் கதல் காண்க. நீர்ப்பரப்பின் மேலிப்படிக் காணுந்தோறறத்தை நமது சிறுவர் தவளை விளையாட்டென்பர். மத்திய சத்தியிலேயே தோற்றமும், ஒடுக்கமும் காண்க. தமது சன்மார்க்க போதனையைத தமது முக்கிய சிஷர்களுக்கும் விளக்கிக்காட்டி அதற்கென்றே வடமொழி, தமிழ், பிராகிருதம், மணிப்பிரவாள நடைகளிற் பல நூல் செய்துள்ளார். நல்லொழுக்கத்திற்கு இவர் தென்னாட்டில் ஒரு முக்கிய திருஷ்டாந்தமாக விளங்குகின்றார். இவர் வடிவத்தை, காஞ்சி, சென்னை, வெவ்வுளூர், அரங்கம், குடந்தை,

வில்லிபுத்தூர், குறுங்குடி முதலிய பலதலங்களிலும் பல பாகவதோத்தமர்கள் விக்கிரக ரூபமாக வைத்து ஆசாரியராக வணங்குதலும் போற்றலு முண்டென்றா லிவரது மகிமையை நாம் எமது புல்லறிவாற் கிரகித்து எழுதி வெளிப்படுத்தல் எங்ஙனம் சுலபமாகும்.

இவர் தமது பூதவுடலைவிட்டுப் பிரிந்த பின்பு சுமார் 50-வருஷங்களுக்குள்ளாகவே இவரது சன்மார்க்கம் தமிழ்நாட்டில் நன்கு வேரூன்றியது.

சரமகவி.

எண்சீராசிரியம்.

ஆண்டு சவும்யம் வாரமு மன்னதே
    தாண்டு பொன்னி யரங்கத் தலமதிற்
பூண்ட பூரணைக் கார்த்திகைக் கார்த்திகை
    யோங்கு சோலைக் கொடுமுடி யோங்கடத்
தாண்ட மாதவர் கண்டைத் தனுவதை
    ஆதி வேதத் திருமுடித் தேசிகர்
ஈண்டு நீத்தனர் தோமி லெதிபதி
    மார்க்க மோங்கிட நூல்பல செய்தரோ. (1)

அத்தியயன தினம்.

வெண்பா.

சீராரும் பொன்னரங்கஞ் சேருமுவாச் செவ்வயிற்
காராருங் கார்த்திகையிற் கார்த்திகைநாள் — பாரோரது
வேதாந்த தேசிகனார் விண்ணு டடைந்திட்ட
போதாரு சவுரியத்தைப் போற்று. (2)

சுருக்கிக் கூறுவோமாஞல் இவரை வைதிக சார்வபௌமரெனவும், பரம பாகவதரெனவும், மகா விரக்தரெனவும் சாரதாபீடமெனவும், வேதவேதாந்த தத்துவமுணர்ந்த மகா வேதாந்தி யெனவும் கூறலாம்.

இவர் அவதாரம் யாதெனிலோ தேவதா மயமான ரூபமாகவும் சிஷியர்களுக்கு அநுக்கிரகஞ் செய் காரணமாகவும் கருணைமிகுந்த வராகவும் இம்மண்ணுலகில் தோன்றியுள்ளாரெனக்கொள்க. இக்கருத்தை நம்மவர் ஒரு முதுமொழிச் சுலோகத்தில் விளக்கியுள்ளார். தேசிகர் எனும் சொல்லின் பிரத்தியாகாரத்தை அது விளக்குகின்றது.

தேவதா மய ரூபத்வாத்
சிஷ்யாநுக்கிரக காரணாத்
கருணா மய ரூபத்வாத்
தேசிகப்ரோச்யதே புதை:

இதன் கருத்து.

வெண்பா.

தேவதா ரூபத்தாற் சீடருக்குக் காமுதவற்
காவலாங் காரணத்தா லார்கருணை—மேவலாம் [ரப்
பாவத்தாற் தேசிகரென் சொற்பொருளைப் பார்த்துணை
பூவைத்தார் முன்னோர் புகழ்ந்து. (3)

3-வது பிரமதந்திர ஜீயரருளியது.

வாழித்திருநாமம்.

உத்தமமாம் புரட்டாசி யோணத்தான் வாழியே
ஓர்மதுர கவிபதுவ லுள்ளுரைத்தான் வாழியே
தித்தில் முனி வாகனபோ கம்மிசைத்தான் வாழியே
தமிழ் மறைக்கெண் பதிற்று யிரமுரைத்தான் வாழியே
எத்திசையு மெதிவரர்போ லேத்தநின்றான் வாழியே
எழிலரங்க ரின்னருளுக் கிலக்கானான் வாழியே
தொத்தறவே வாத்களைத் தொலைத்திட்டான் வாழியே
தூப்புற்கோன் றிருவடிகள் துலங்கவென்றும் வாழி
யே. (1)

கவிவாதி சிங்கமெனக் கண்ணுற்றான் வாழியே
கலங்காதித் தரிசனத்தைக் காத்தளித்தான் வாழியே
நவில்தருவே தாந்தத்தி னல்லாசான் வாழியே
நவையிலாத் தந்திரத்தின் சுதந்திரத்தான் வாழியே
புவிகுளிர நால்பலவும் புகன்றிட்டான் வாழியே
புகரிலா ரகசியப் பொருளுரைத்தான் வாழியே
கவிபாப்வேங் கடத்திருமால் கவின்கண்டை வாழியே
கவியானா குணத்தூப்புற் காவலன்றான் வாழியே. (2)

பிள்ளை லோகம் ஜீயரருளியது.

சீரொன்று தூப்புற் றிருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் — ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு. (1)

இச்சரித்திர மெழுதியவர் மாபுங் காலமுமிடமும்.

ஆசிரியம்.

பத்திமிகு பாவலர்க்காப் பருந்தூணிற் பரிந்துதித்த
பரமனும் நாரசிங்கர்
இத்தரையிற் பூசைகொளத் தடியவரு ளீடேயி
வீடேற வகோபிலத்தோர்
ஒத்தமடத் ததிவண்மைச் சடகோப ருடனான
ஆரியர்கள் முப்பானோ டைம்பின்னர்
வைத்தவழி தழைத்திடவே வையத்தருள் ஸ்ரீனிவாச
சடகோபரடிகள் காலே (1)
அவ்வடிகள் பற்பலருள் ளோரேழை யருந்தமிழை
வளர்க்கவந்த வேங்கடேசன்
தெய்வமேராய் தேசிகன்றன் சரிதந்தனைத்
தெழுந்தரிதின் றெளிதலையின் வினைத்தவச் சீராய்
நவ்விபோல் விழிமடவார் பணிகுடந்தை யழுந்தற்பே
ரானனநா ளுதயங்கொண்
அவ்வழுந்தற் குறவோன் றிருவம்பூர் தனில்வந்தோன்
சென்னைதனி லமைத்ததமே. (2)

வெண்பா.

ஆண்டுகளே ஐயா யிரத்தோடு மீரைந்தே
யீண்டுவரு கலைத்தே கூறியதாம்—நீண்டமுடி
வேங்கடத்தார் கண்டையதே மெதினியிற் றேசிகராய்
ஓங்கவந்தார் தஞ்சரித மோது. (3)

ஸ்ரீவேங்கடநாதாசாரியர் சரித்திரசாரம்
நிறைவேறியது.

ஸ்ரீ நிகமாந்தமகா தேசிகன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ ஸ்ரீனிவாஸ சடகோப யதீந்த்ரர்கள்
திருவடிகளே சரணம்

முற்றிற்று.

சரித்திர மெழுதியவர் பாடிய பாடல்கள்.

ஸ்வைபவப்பிரகாசிகைப் பாடற்குறிப்பு

மேற்கோட் பாக்கள்.

வடமொழிச் சுலோகங்கள்.

பிழை திருத்தம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
10	20	முதது	முத்து
11	24	போவென் ...	போகின்
12	23	மொண்ட	கொண்ட
24	23	நோரர்	நேரார்
30	22	வரபபி	வரப்பி
31	20	இராமயண ...	இராமாயண
33	3	பூமிபாம்	பூமியாம்
35	25	சாஸம்	சாஸனம்
36	7	அகிஞ்னசரான ...	அகிஞ்சனராம
37	14	மேல்	,,
38	1	னைபை	னையை
41	6	கேட்டி	கேட்ட
48	2	னுபவ	அனுபவ
48	3	நான்கு	முந்நான்கு
65	3	கொப	கோப
68	23	திரு	த்திரு
69	12	சர்கை	சர்கைய
87	10	தெற	த்தெற
96	5	நாடாத்	நாடா
101	4	அக்கு	அக்குப்
104	3	அக்கே	அங்கே
122	6	கோன்றி	தொன்றி